# யாழ்ப்பாணத்தான்

(23 சிறுகதைகள்)



பொன்குலேந்திரன்
(கனடா)

# *யாழ்ப்பாணத்தான்*

*(23 சிறுகதைகள்)*

*பொன் குலேந்திரன் (கனடா)*

*யாழ்ப்பாணத்தான்*

*(23 சிறுகதைகள்)*

*பொன் குலேந்திரன் (கனடா)*

*© ஆசிரியர் | முதல்பதிப்பு: ஜூன் 2020*

*Designed by*

மின்கவி
படித்திடு ! படைத்திடு !!

## *அணிந்துரை*

*பொன் குலேந்திரனின் ஒவ்வொரு சிறுகதைகளின் அடி நாதத்திலும் இந்தத் தேச வழமை ஒட்டிக்கொண்டிருக்கிறது.*

*கதைகளினூடு அந்தந்தப் பிரதேசங்களின் புவியியல், வரலாற்றுப் பின்புலன்களையும் கொடுப்பதைப்படிப்பதும் புதுமையானதொரு அனுபவம். யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கையோ, நடைமுறை வாழ்வில் கொள்ளும் சொல்லாடலையோ தன் கதைகளில் கொண்டு வரும் போது இயன்றவரை அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளையும் பகிர்கிறார்.*

*சில இடங்களில் அப்படியே விடுகிறார், காரணம் அதை அப்படியே வாசகன் உள்வாங்கிப் புரியக் கூடியமொழி நடை என்ற உய்த்துணர்வில்.*

*இந்த மாதிரியான பின்னணியோடு சிறுகதைகள் எழுதுவது மரபை உடைத்தல் என்று விமர்சக ரீதியில் பார்த்தாலும் இந்தத் தொகுப்பினைப் படிக்கும் போது எழுத்தாளரின் வாழ்வியல் அனுபவங்கள், நிஜங்களின் தரிசனங்களே பதிவாகியிருப்பது போன்றதொரு உணர்வு எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. ஆகவே இதுவொரு சுயவரலாற்றின் கூறாகக் கூட இருக்க முடியும்.*

*என்னுடைய தனிப்பட்ட அனுபவத்தில் அண்மையில் இருபது வயது மதிக்கத்தக்க யாழ்ப்பாணத்து இளைஞனோடு பேசிக் கொண்டிருக்கும் போது நாம் அங்கு சகஜமாகப் புழங்கும் ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டேன். அதற்கு அர்த்தம் தெரியாது அந்த இளைஞன் யோசித்தார். அப்போது தான் எங்கள் பேச்சு வழக்கும் அதன் தனித்துவமும் தென்னிந்திய சினிமாக்களின் ஊடுருவலால் சிதைக்கப்படும் அபாயம் கண்டு உள்ளூரக் கவலையும் எழுந்தது. ஏனெனில் அந்த யாழ்ப்பாணத்து இளைஞனின் பேச்சில் நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் சொல்லாடல் தான் மிகுதியாக இருந்தது.*

*பொன்.குலேந்திரன் அவர்களது சிறுகதைகளைப் படிக்கும் போது இந்த நிகழ்வு தான் நினைவுக்கு வந்தது. நாம் எத்தனை அரிய, எம் மண்ணுக்கே உரித்தான கலைச் சொற்களை, மருவிப் போன தூய தமிழ்ச் சொற்களை நம் அன்றாடப் பேச்சில் தொலைத்து விட்டோம். இந்த உணர்வெல்லாம் ''யாழ்ப்பாணத்தான்'' சிறுகதைத் தொகுதியைப் படித்த போது எழுந்தது.*

*'புதுச் சுருட்டு'' கதையின் களம் எங்கள் இணுவில் மண்ணை ஞாபகப்படுத்தியது, ஊரெல்லாம் சுருட்டுக் கொட்டிலும், புகையிலைத் தோட்டமுமாக விளைந்த நம் ஊரின் பண்பின் மறு பக்கத்தில் அது எவ்வளவு தூரம் ஆட்கொல்லி நோயாக இருக்கிறது என்ற செய்தியோடு கதையைச் சுருட்டியிருக்கிறார்.*

யுத்தம் முடிந்த காலத்துக்குப் பின்னரும் ஏன் இந்தத் தொழில் நுட்பம் விளைந்த காலத்திலும் வேலிச் சண்டையோடு நிற்கும் யாழ்ப்பாணத்தாரைத் தினசரிப் பத்திரிகைகளில் படித்து வருகிறோம். "வேலி" சிறுகதை இம்மாதிரியானதொரு கதையோட்டம் கொண்டது. ஆளில்லா ஊரில் இனி எங்கே வேலிச் சண்டை என்ற யதார்த்தமும் எழுந்து மெல்ல வலியெழுப்பியது.

கல்வித் தரப்படுத்தல், போன்ற ஈழத்துச் சமூகம் எதிர் நோக்கும் சவால்களையும், சகுனம் பார்த்தல், கோயில்களில் நேர்த்திக் கடன் கழிக்கும் உயிர்ப்பலி கொடுக்கும் பண்பு, புலம் பெயர் சூழலிலும் கூடவே கொண்டு வந்திருக்கும் சீட்டுக் கட்டும் மரபு, சீதனப் பிரச்சனை போன்ற நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் கதைகளில் காவும் ஆசிரியர் தீண்டாமைக் கொடுமையால் எழுந்த ஆலயப் பிரவேச மறுப்பையும் கையில் எடுத்திருக்கிறார்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகையில் "இப்படியும் நடக்கிறது" என்றொரு பகுதி வரும். இப்படியும் நடந்திருக்கிறதா என்று எண்ண வைக்கும் பல கதைகளின் யதார்த்தங்களோடு வாழ்ந்து பழகிய யாழ்ப்பாணத்தாருக்கு இவை பழகிப் போனவை. ஆச்சரியம் என்னவெனில் ஒவ்வொரு கதைகளிலும் ஒவ்வொரு சமுதாயச் சிக்கல்களைக் கையிலெடுத்துக் கதைகளாகச் சமைத்த ஆசிரியர் யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் முழுமையான பரிமாணத்தைக் காட்டி நிற்கின்றார். "யாழ்ப்பாணத்தான்" வெறும் சிறுகதைகள் அல்ல இவை நம் வாழ்வியலின் கோலங்கள்.

**கானா பிரபா**

**சிட்னி**

**அவுஸ்திரேலியா**

# எழுத்தாளரின் முகவுரை

யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கைத்தீவின் வடக்கு அந்தலையில் அமைந்துள்ளது. இதன் வடக்கிலும், கிழக்கிலும் வங்காள விரிகுடாவும், மற்றும் மேற்கிலும், தெற்கிலும் யாழ்ப்பாணக் கடலேரியும் அமைந்துள்ளது. இந்தக் குடாநாடு, ஆனையிறவு என்ற இடத்தில் ஒரு ஒடுங்கிய நிலப்பகுதி மூலம் தெற்கேயுள்ள தாய் நிலமான வன்னிப் பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதேபோல் கிழக்குக் கரையோரத்திலும் ஓர் ஒடுக்கமான நில இணைப்பு உண்டு.

யாழ்ப்பாணக் குடாநாடு, உப்பாறு கடல்நீரேரி, தொண்டைமானாறு கடல்நீரேரி என்பவற்றால் கிட்டத்தட்ட மூன்று தீவுகளாகப் பிரிக்கப்பட்டது போல் தோற்றமளிக்கிறது. இந்த இயற்கைப்பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு, யாழ் குடாநாடு, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுகள் என நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாண குடாநாடு இலங்கை தீவின் வடக்கு பகுதியில் உள்ளது. 16 ஆம் நூற்றாண்டில் மேற்கு காலனித்துவ ஆட்சியாளர்கள் இப்பகுதியை ஆக்கிரமிப்பதற்கு முன்னர் இந்த தீபகற்பம் யாழ்ப்பாண இராச்சியத்தில் இருந்தது. Jaffna என்ற பெயர் ஒரு போர்த்துகீசிய தழுவல் தமிழ் வார்த்தையின் தழுவல் ஆகும். அதன் அர்த்தம் "யாழ் துறைமுகம்" ( Port of the lyre) டச்சு காலத்திலிருந்து ஒரு கோட்டையும் தேவாலயமும் உள்ளன, கோட்டையின் அருகே புகழ்பெற்ற இந்து கோவிலான நல்லூர் கந்தசாமி கோவில் உள்ளது. 1795 இல் இருந்து 1948 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண இராச்சியம் ஆங்கிலேயர்கள் கட்டுப் பாட்டில் இருந்தது. நான்கு நூற்றாண்டு கால இடைக்கால யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இருந்த யாழ்ப்பாணத்தின் புறநகர்ப் பகுதியான நல்லூர் வரலாற்று ரீதியாக, யாழ்ப்பாணம் ஒரு போர்க்களமாக இருந்துவந்தது .

1619 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண தீபகற்பத்தில் போர்த்துகீசிய ஆக்கிரமிப்பின் போது இது ஒரு காலனித்துவ துறைமுக நகரமாக மாற்றப்பட்டது, அவர்கள் யாழ்ப்பாணத்தை டச்சுக்காரர்களிடம் இழந்தார்கள், 17965இல் பிரிட்டிஷாரிடம் டச்சுக்காரர்கள் ஆட்சியை இழந்தார்கள். இவர்களின் மதம் கத்தோலிக்க மதமும் கிறிஸ்தவ மதமும். சலுகைகள். வேலைகள் கொடுத்து யாழ்ப்பாண இராச்சியத்தின் இந்து மக்களை மதமாற்றினர் . கோவில்களை இடித்து கோட்டை. சேர்ச்சுகள். கட்டினர். கிறிஸ்தவ கத்தோலிக்க கல்லூரிகள் தோன்றின. மதம் மாறியவர்கள். தங்கள் இந்து பெயர்களையும் மாற்றிக் கொண்டனர் .

உள்நாட்டுப் போரின்போது, தமிழீழ விடுதலை புலிகள் (LTTE) 1986 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தது. இந்திய அமைதி காக்கும் படை (IPKF) 1987 ஆம் ஆண்டில் விரைவாக நகரத்தை ஆக்கிரமித்தது. இலங்கை இராணுவம் மீண்டும் கட்டுப்பாட்டை அடைந்த 1989 முதல் 1995 வரை எல்.ரீ.ரீ.ஈ மீண்டும் நகரத்தை ஆக்கிரமித்தது. ஆப்கானிஸ்தானைப் போலவே யாழ்ப்பாணம் அடிக்கடி ஆக்கிரமிக்கப்பட்ட இராச்சியமாக இருந்தது. விஜயநகர சாம்ராஜ்யத்தின் 15 ஆம் நூற்றாண்டின் கல்வெட்டு இந்த இடத்தை யாழ்ப்பாண பட்டினம் என்று குறிப்பிடுகிறது. - பட்டினம் என்ற பின்னொட்டு ஒரு துறைமுக நகரமாக இருந்த இடத்தைக் குறிக்கிறது

பெயரின் தோற்றம் நகரத்தின் சொற்பிறப்பியல் பற்றிய ஒரு புராணக்கதை ஒன்று உண்டு. உக்கிரசிங்கன் என்ற சோழ மன்னன், குருட்டு பாணன் இசைக்கலைஞன் ஒருவனின் குரல் இசையில் மயங்கி அவருக்கு ஒரு மணல் சமவெளியை வழங்கினார். அப்பாணன் தமிழ் நாட்டுக்கு திரும்பி, தனது கோத்திரத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்களை கொண்டு வந்து குடியேற்றினர் மேலும் அவர்கள் குடியேறிய இடம் நகரத்தின் ஒரு பகுதியாகும், இது தற்போது பாசையூர் மற்றும் குருநகர் என அழைக்கப்படுகிறது. கொழும்புத்துறையில் அமைந்துள்ள வணிகத் துறைமுகமும், முன்பு குருநகர் பகுதியில் அமைந்திருந்த 'அலுப்பந்தி' என அழைக்கப்படும் துறைமுகமும் அதன் சான்றுகளாகத் தெரிகிறது.

. இந்த ஊரைஆங்கிலத்தில் Jaffna என்பர்; இந்த . தீபகற்பத்தில் வாழ்ந்த பூர்வ குடியினர் யக்கர்கள் மற்றும் நாகர்கள் அதனால் இன்று இயக்கச்சி, நாகர் கோவில் நாகதீபம் என்ற பெயர்கள் உள்ள ஊர்கள் உண்டு

. யாழ்ப்பாணத் தீபகற்பத்தினை போர்த்துகீசிய மற்றும் டச்சு .ஆங்கிலேயர் ஆட்சி பல மிஷனரி பள்ளிகளை நிறுவப் பட்டது . அதனால் யாழ்ப்பாண குடா நாடு நல்ல கல்வியை பெற்றது. அதன் காரணமாக அவர்களுக்கு அரசாங்க சேவையில் வேலை செய்ய சந்தர்ப்பம் கிடைத்தது , அவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்று இருந்தனர் .ஒரு காலத்தில் அரசாங்கத்தில் ஒரு அதிகாரியாக பணியாற்றுவதால் சமூகத்தில் நல்ல மதிப்பு கிடைத்தது . ஸ்டேஷன் மாஸ்டர்ஸ் மற்றும் சர்வேயர்களாக பணியாற்றுவதற்காக ஆங்கிலம் தெரிந்த பல யாழ்ப்பாண ஆண்கள் மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கு குடிபெயர்ந்தனர். அரசு சேவையில் பணிபுரிந்த ஒரு மணமகன் திருமண சந்தையில் அதிக சந்தை மதிப்பைக் கொண்டிருந்தார்.

படித்த பல ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டனர்.

எல்.ரீ.ரீ.ஈ என்ற , விடுதலைப் புலிகள் ஈழத்திற்குப் பிறகு யாழ்ப்பாண தீபகற்பத்தின் பெயர் உலக ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்றது. இந்த தமிழ் போர்க்குணமிக்க அமைப்பு வடகிழக்கு இலங்கையில் அமைந்தது, இது 1976 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழீழத்தின் சுதந்திரமான

அரசைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டது. அடுத்தடுத்த இலங்கை அரசாங்கங்களின் அடக்குமுறை மாநிலக் கொள்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் தமிழர்களை நோக்கி. தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரங்கள் குறித்த கதைகளை பத்து வயதில் கதைகளைக் கேட்டபின், அர்ப்பணிப்புள்ள மற்றும் அர்ப்பணிப்புள்ள போர்க்குணமிக்க இளைஞரான வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்களால் புலிகள் உருவாக்கப்பட்டது. 1948 இல் சுதந்திரத்திற்குப் பிறகு. தமிழர்களுக்கு எதிரான தொடர்ச்சியான கலவரங்கள் மற்றும் தரப்படுத்தலின் கல்விக் கொள்கை, சிங்களம் மட்டுமே சட்டம் . தமிழ் மூதாதையர் பகுதிகளில் சிங்கள காலனித்துவம் போன்றவை விடுதலை புலிகள் இயக்கம் தோன்ற விதை விதைத்தது . வடக்கு மற்றும் கிழக்கில் ஆங்கிலேயர்கள் இந்தியா போன்று சமஷ்டி ஆட்சியை கொடுத்த பின் வெளியேறி இருந்தால் விடுதலை இயக்கம் தோன்றி இருக்காது மனித உரிமை மீறல்கள் தீவில் வளர்ந்திருக்காது

எல்.ரீ.ரீ.ஈ பிறப்பதற்கு முன்னும் பின்னும் வெவ்வேறு சமூக கலாசாரங்கள், யாழ்ப்பாண மக்களின் நடத்தை மற்றும் அணுகுமுறை ஆகியவை இருந்தன. உதாரணமாக, ஆண் பேரினவாதம் பிரதானமாக இருந்தது, ஈழப் போருக்கு முன்பு பெண்கள் சமூகத்தில் மதிக்கப்படவில்லை. மிகவும் அரிதாகவே, பெண்கள் சமுதாயத்தில் உயர் பதவியில் இருந்தனர் அல்லது அரிதாகவே அரசியலில் ஈடுபட்டனர். அவர்களில் பலர் சமையலறையில் மட்டுப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் முக்கியமாக இல்லத்தரசிகள். ஆனால் யாழ்ப்பாண பெண்கள் விடுதலைஇயக்கத்தில் போர்வீரர்களாக கரும்புலிகளாக ஈழத் தமிழர்களின் உரிமைக்கு போராடினர் . விடுதலைப் புலிகளின் பிறப்புக்கு முன்னர் நிலவிய சாதி அமைப்பு காரணமாக, மதிக்கப்படாத தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் இயக்கத்தில் இணைந்தனர். ஒல்லாந்தர் காலத்தில் இருந்து குடிமகன் என்ற தேச வழமை முறை இன்றும் செயலில் இருந்து வருகிறது . இதனை குடிமகனின் மகன் என்ற கதை எடுத்து சொல்கிறது .

கல்வியில் தரப்படுத்தல் கொள்கை மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகளில் தமிழ் மாணவர்கள் சேர முட்டுக் கட்டடையாக இருந்தது. தமிழருக்கு அரசாங்க வேலை கிடைப்பது கூட மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தது, தமிழ் அதிகாரிகளின் பதவி உயர்வு அரிதாக இருந்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல அரசு ஊழியர்கள் இரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் பணிபுரிந்த கொழும்பில் பிரமச்சாரிகளாக வாழ்ந்தார்கள், வார இறுதியில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தங்கள் வீட்டிற்கு எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்து மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை செலவிடுகிறார்கள். கொழும்பில், மலையாளி சமையல்காரருடன் சமமெரி என்ற விடுதியில் நண்பர்களோடு வசித்து வந்தனர். பல தமிழர்கள் வாழ்ந்த புறநகர் பகுதியான வெள்ளவத்தை, பம்பலபிட்டி, கொட்டான் சேனை ஆகிய இடங்களில் பிரபலமான

சம்மரிகள் இருந்தன. இந்த தொகுப்பில் உள்ள ஒரு கதை கொழும்பின் சமரி வாழ்க்கையை எடுத்து சொல்கிறது இன்னொரு கதை சீதனம் திருணத்துக்கு கொடுக்க வழி இல்லாததால் விடுதலை புலிகள் இயக்கத்தில் சேர வேண்டிய நிலை உருவாகியது .

இந்தத் தொகுப்பில் உள்ள இருபத்தி இரண்டு கதைகள் கடந்த சில தசாப்தங்களில் யாழ்ப்பாண சமுதாயத்தை வெவ்வேறு கோணங்களின் பார்வையில் எழுதப் பெற்றவை . இவற்றில் சில மரபுகள் மற்றும் கலாசாரங்கள் பல மாற்றங்களை எடுத்து சொல்கின்றன., முக்கியமாக 1983 கருப்பு ஜூலை இனக் கலவரம், பல தமிழர்கள் ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் தமிழ் நாடு இந்தியாவுக்கு குடிபெயரச் செய்தன. வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்த சுமார் ஒரு மில்லியன் ஈழத் தமிர்கள் பொருளாதார ரீதியாக சிறப்பாக செயல்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் பலர் தொழில், தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், கல்வி, பொழுதுபோக்கு, காப்பீடு, ரியல் எஸ்டேட், ஹோட்டல், இலக்கியம் மற்றும் ஊடகத் துறைகள். ஆகியவற்றில் சிறந்து விளங்குகின்றனர் கனடாவில், மூன்று லட்சத்துக்கும் மேல் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஒன்ராறியோ மாகாண மற்றும் மத்திய அரசியலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஜனவரி தமிழ் பாரம்பரிய மாதமாக கனடா மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது; ஒன்ராறியோவில் சமூக ரீதியாக தீவிரமாக செயல்படும் பதினாறு தமிழ் முதியோர் சங்கங்கள் உள்ளன.

உலகில் உள்ள தமிழர்களின் மூன்று லட்சத்திற்கும் அதிகமான மக்களை உருவாக்கியது. வெளிநாடுகளில் வசிக்கும் சில குழந்தைகள் மரபுகளை மீறி சீனர்கள், இந்தியர்கள், ஐரோப்பியர்கள் மற்றும் கனடியர்கள் போன்ற பிற சமூகங்களில் திருமணம் செய்து கொண்டதால் பல குடும்பங்கள் பொருளாதார ரீதியாக தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த உதவியது.

கதைகள் புனைகதையுடன் கலந்த உண்மையான சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை. படித்து மகிழுங்கள்.

****

யாழ்ப்பாண இராச்சியத்தில் நெடுங்காலமாக நிலவி வந்த வழமைகளை அடிப்படையாகக் கொண்டு உருவானது தேச வழமையாகும். அது சட்ட ரீதியாக இன்றும் நடை முறையில் உள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட நீதி மன்றங்கள் தேச வழமை அடிப்படையிலே வழக்குகளை விசாரித்து தீர்ப்புகளை வழங்கின. இந்த வழமையானது ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில், அதாவது 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் சட்டமாகத் தொகுக்கப்பட்டது. இத்தேச வழமையானது இலங்கையில் வாழும் தமிழர்களுக்கான சட்ட நெறியாக இன்றும் நடைமுறையில் இருக்கிறது

****

# பொருளடக்கம்


1. புதுச் சுருட்டு
2. வேலி
3. முடிவு
4. சகுனம்
5. கோவில் பிரவேசம்
6. ஆணாதிக்கம்
7. வேள்வி
8. குளைக்காட்டான் குஞ்சன்
9. நன்கொடை
10. சீட்டு
11. மாற்றுத் திருமணம்
12. விவசாயி
13. சிவப்பு நாடா
14. பென்சன்
15. சின்னமேளம் சந்திரவதனி
16. சந்திக் கடை சங்கரப்பிள்ளை
17. சண்முகம் சம்மரி ( விடுதி)
18. கண்ணம்மா
19. ஓடிப்போனவள்
20. தையல் நாயகி
21. முத்து வளவு
22. குடிமகனின் மகன்
23. என் அப்பு ஆச்சி

## கதை 1

## புதுச் சுருட்டு

யாழ்ப்பாணத்து சுருட்டு வியாபாரி துரைராசாவை தெரியாத சிங்கள, தமிழ், முஸ்லீம் வியாபாரிகள் இலங்கையில்இல்லை என்றே சொல்லலாம் . இலங்கையில் புது சுருட்டை தேடி, வாங்கி, ரசித்து, குடித்தவர்கள் ஏராளம். புது சுருட்டு கனகலிங்கம், வைசிசிகு சுருட்டுகளையும், சொக்கலால் பீடியையும் விற்பனையில் வென்று விட்டது அந்த சுருட்டுக்கு "புது" என்ற பிராண்ட் பெயர் வரக் காரணக் கதை சுவாரஸ்சியமானது சுன்னாகத்தில் பிறந்த துரைராசா என்ற துரை தன் தந்தையின் நண்பர் புண்ணியம் என்ற புண்ணியமூர்த்தியின் பத்துபேர் வேலை செய்த சுருட்டுக் கொட்டிலில் பல காலம் சுருட்டு சுத்தும் தொழில் செய்தவர். துரை மேல் நம்பிக்கை வைத்து சுருட்டு கொட்டிலை துரையின் பொறுப்பில் சில சமயம் புண்ணியமூர்த்தி விட்டுச் செல்வார். புண்ணியமூர்த்திக்கு. பிள்ளைகள் இல்லாத படியால் துரையின் நேர்மையையும் உழைப்பையும் கண்ட புண்ணியமூர்த்தி தான் இறக்க முன்பு தன் சொத்தில் அரைப் பங்கையும் தன் சுருட்டு கொட்டிலையும் துரையின் பெயரில் எழுதி வைத்து விட்டு இறந்தார். அவர் இறந்த பின் தன் முதலாளி புண்ணியமூர்த்தி என்ற பெயரின் முதல் எழுத்து பு வையும் தன் பெயரின் முதல் எழுத்து து வையும் சேர்த்து புது என்று பிராண்ட் பெயர் வைத்து சுருட்டை தயாரித்தார். அவரின் சுருட்டுத் தொழிற்சாலையில் முப்பது பேர் வேலை செய்தனர். தென் இந்தியாவுக்கும் சுருட்டு ஏற்றுமதி செய்தார். அவர் தொழிற்சாலையில் தயாரித்த கோடா போட்ட "புது" சுருட்டுக்கு இலங்கை முழுவதும் தனி மவுசு இருந்தது அதை முதியவர்கள் தேடிப் போய் வாங்கினார்கள். கியூபா சுருட்டை விட சிறந்தது என்று பலர் பேசிக்கொண்டனர்

****

துரையைசெல்வம் தேடி வந்தது. சொந்தத்தில் பார்வதி என்பவளை திருமணம் செய்தார் . துரை பார்வதி தம்பதிகளுக்கு சிவராசா என்ற மகன் பிறந்தான். சிவராசா படித்து டாக்டராகி சிறந்த புற்று நோய் நிபுணராகத் திகழ்ந்தான். பார்வதியின் மரணத்தின் பின் தன் கவலையைப் போக்க தன் தொழிற்சாலையில் தயாரித் சுருட்டை துரை புகைக்க ஆரம்பித்தார். தான் சுருட்டு புகைக்கும் படத்தை விளம்பரங்களில் போட்டார். தந்தைக்கும் மகனுக்கும் அடிக்கடி வாக்கு வாதம்ஏற்பட்டது, அதோடு துரை தன்னிலும் இருபது வயது குறைந்த வறிய இளம் உறவின பெண் லட்சுமியை திருமணம் செய்ததை டாக்டர் சிவா ஏற்றுக் கொள்ளவில்லை.

“அப்பா, என் அம்மா இருக்கும் மட்டும் நல்ல குணத்தோடு நீங்கள் இருந்தீர்கள். இந்த வயது வந்த காலத்தில் உங்களுக்கு இரண்டாம் திருமணம் அவசியமா? ஊர் என்ன சொல்லும்”? டாக்டர் சிவா சொன்னார்.

“நான் உன் அம்மாவை பிரிந்த பின் என்னை கவனிக்க உன் சின்னம்மா லட்சுமியை திருமணம் செய்தேன். அதுக்கு அவள் சம்மதித்தாள். அதோடு அது என் விருப்பம். அவள் ஒரு ஏழை குடும்பத்தில் இருந்து வந்தவள். அவர்கள் கேட்ட பணம் கொடுத்தேன் அதோடு உன் அம்மாவை என்னால் மறக்க முடியவில்லை அதனால் சுருட்டு குடிக்கிறேன். இதை நீ தடுக்க முடியாது” கோபத்தோடு மகனுக்கு துரை சொன்னார்.

“அப்பா நான் சொல்லுறதை சற்று பொறுமையாகக் கேளுங்கள் உங்களுக்கும் சின்னம்மாவுக்கும் இருபது வயது வித்தியாசம். அவ எனக்கு இரண்டு வருஷம் மூப்பு அவ தன் உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொண்டு உங்களோடு வாழ்கிற காரணம் நீங்கள் அவ குடும்பத்துக்கு கொடுத்த ஏராளமான பணம். அதோடு வெகு விரைவில் சின்னம்மா விதவை ஆகக் கூடிய சாதியக் கூறுகள் உண்டு அப்பா”.

“நீ என்ன சொல்ல வருகிறாய் சிவா”?

“அப்பா உங்களுக்கு தெரியும் நான் புற்று நோய்த் துறையில் வைத்தியம் பார்ப்பவன் என்று சுருட்டு புகைப்பதின் தீமைகள் உங்களுக்கு தெரிந்து இருக்கும்”.

“புகை பிடிப்பது உடலுக்கு கூடாது என்கிறாயா”?

“புகையிலை, நிக்கொட்டீனா என்னும் பேரினத்தைச் சேர்ந்த தாவரத்தின்.

இது நிக்கொட்டீனா எனும் பேரினத்துள் அடங்கும். பல புகையிலை இனங்களும் இதில் உண்டு..

இதனைப் பயன்படுத்தும் முறையையும், அளவையும் பொறுத்து மனித உடலில் இது ஏற்படுத்தும் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இதனைப் பயன் படுத்துவதனால் ஏற்படக்கூடிய முக்கியமான உடல்நலக் கேடு குருதிச் சுற்றோட்டத்தொகுதியில் ஏற்படக்கூடிய நோய்கள் ஆகும். புகைத்தல் காலப்போக்கில், வாய், தொண்டை, நுரையீரல் ஆகிய பகுதிகளில் பெருமளவு புற்று நோயைத் தூண்டும் பொருட்களைப் படியச் செய்கிறது.

நீங்கள் தயாரிக்கும் சுருட்டு மற்றவர்களின் உயிருக்கு ஆபத்தை கொடுக்க கூடியது. சுருட்டு குடித்தால் இருதய தாக்கம், புற்று நோயால் இறக்க கூடும். இறந்தவர்களின் குடும்பம் உங்களை திட்டும் அப்பா ”’

“சுருட்டு தொழில் செய்து எனக்கு பணம்வருகிறது உன்னை டாக்டருக்கு படிப்பிக்க முடிந்தது”

“நான் அந்த பணத்தில் படித்ததுக்கு வெட்கப்படுகிறேன் அப்பா பாவம் சின்னம்மா. வெகு விரைவில் அவ விதவையாகும் சாத்தியக் கூறு உண்டு. நல்ல காலம் எனக்கு சகோதரங்கள் இல்லை”.

“உனக்குத் தெரியும் நான் எவ்வளவு தர்மம் செய்கிறேன் என்று என் சுருட்டு தொழிற் சாலையில் சுமார் முப்பது பேர் வேலை செய்யினம் அதனால் அவர்கள் குடும்பம் வாழ்கிறது”.

“வேறு என்ன செய்தீர்கள் “?

“நான் எங்கள் ஊர் முருகன் கோவிலுக்கு, கோபுரம் என் சொந்த பணத்தில் கட்டினேன் தேர் செய்து கொடுத்தேன்” பெருமையாக துரை சொன்னார்.

“அப்பா நீங்கள் எவ்ளவு தர்மம் செய்தாலும் உங்கள் சுருட்டு தொழில் பலரின் உயிரை எடுப்பதால் அந்த கர்மா உங்களைச் சேரும் . நீங்கள் செய்யும் சுருட்டு தொழிலை மருத்துவ ரீதியாக் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் சனங்களுக்கு இதன் விளைவு தெரியாது. சுருட்டு புகைப்பது ஈரல் புற்று நோய் மாத்திரம் இல்லை இருதயத்தையும் பாதிக்கும் “

“எனக்கு உன் மருத்துவ விளக்கம் தேவை இல்லை சிவா”

“அப்பா புகைப்பதை கட்டுப் படுத்த வரி மூலம் சட்டம் உள்ளது விளம்பரங்களில் பார்த்து இருப்பீர்களே”

“சிவா நான் தயாரிக்கும் சுருட்டை ஏன்குறை சொல்லுகிறாய்?. சிகரெட் தயாரிக்கும் பெரிய வெளி நாட்டு நிறுவனங்களை குறை சொல்லேன்”.

“அப்பா நான் உங்கள் மகன் என்ற உரிமையோடு உங்களுக்கு அறிவுரை சொல்லுகிறேன் உங்கள் சுருட்டு தயாரிக்கும் தொழிற்சாலையை மூடி விடுங்கள். உங்களுக்கு இருக்கிற செல்வம் நீங்கள் இறக்கும் மட்டும் போதும் அப்பா . ஆட்களை வைத்து விவசாயம் செய்யுங்கள்”.

துரைக்கு மகன் டாக்டர் சிவர் ஆலோசனை சொன்னது பிடிக்கவில்லை முகத்தை நீட்டி வைத்துக் கொண்டு தன் அறைக்குள் துரை போய் விட்டார்.

அந்த வாக்குவாதம் நடந்து சில மாதங்களில் துரை அடிக்கடி நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்த டாக்டர் துரையின் இருதயத்துக்கு செல்லும் நான்கு இரத்த குழாய்களில் அடைப்பு ஏற்பட்டிருப்பதால் வெகு விரைவில் இருதய ஆபரேஷன் செய்ய செய்யவேண்டும் வற்புறுத்தி சொன்னார்கள். துரை பிடிவாதக்காரரர் மகனும் லட்சுமியும் எவ்வளவோ சொல்லியும் துரை கேட்கவில்லை. துரை லட்சுமிக்கும் மகனுக்கும் தெரியாமல் உயில் ஒன்றை எழுதி வைத்தார் அந்த உயிலில் தன் சொத்தை

இரண்டாகப் பிரித்து டாக்டர் சிவாவுக்கும், லட்சுமிக்கும் எழுதினர். அவருக்கு தெரியம் தான் அதிக காலம்வாழப் போவதில்லை என்று.

ஒரு நாள் இரவு படுத்தவர் காலையில் எழும்பவில்லை லட்சுமி முப்பது வயதில் விதவையானாள் டாக்டர் சிவா தன் தந்தைக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்து விட்டு அதன் பின் லட்சுமியோடு கலந்து ஆலோசித்து துரையின் சுருட்டு நிறுவனத்தை மூடினார். துரையின் புது சுருட்டு நிறுவனத்தில் வேலை செய்த முப்பது பேருக்கும் தனக்கு கிடைத்த சொத்தை பகிர்ந்து கொடுத்தார், அதனால் திருப்தி அடைந்தார்.

*****

## *கதை 2*

## வேலி

***(யாழ்ப்பாணத்தில் வேலிகளைக் கொண்டு எல்லைகளை நிர்ணயிப்பார்கள். குடும்பங்களுக்கிடையே சண்டைகள் உருவாக வேலிகளும் ஒருகாரணம். இதை மையமாக வைத்த எழுதப்பட்ட கதையிது.)***

*பரமு என்ற பரமலிங்கம் மீசாலையில் பத்துப் பரப்புக் காணிக்குச் சொந்தக்காரன். காணியில் இரண்டறைகளைக் கொண்ட உள்ள ஐம்பதில் கட்டிய கல்வீடு. வீட்டின் முன் ஒரு சடைத்து வளர்ந்த வெப்பம் மரம். கண்டி-யாழ்ப்பாணம் A9 வீதியை நோக்கிய வாசல். சாவகச்சேரியில் இருந்து கிழக்கே நான்கு மைல்; தூரத்தில் உள்ள கிராமம்; மீசாலை. "மீ" என்பது இலுப்பையைக் குறிக்கும். இலுப்பை மரங்கள் செறிந்து காணப்படும் இவ்வூரில், இலுப்பை எண்ணை தயாரிக்கும் ஆலைகள் இருந்தபடியால் அவ்வூருக்கு மீசாலையெனப் பெயர் வந்திருக்கலாம்.*

*மீசாலை ரயில்வே ஸ்டேசன் கூப்பிடு தூரத்திலிருந்தது. காணிக்குள்; வேலி ஓரமாக ஒரு நல்ல தண்ணீர்க் கிணறு. மா, பலா, நெல்லி, நாவல், விளா மரங்கள் பரமுவின் காணிக்குள் நல்ல நிழலையும், பயனையும்; கொடுத்தன.*

*கோடை காலத்தில் ஒருநாள், வியர்வை சொட்டச் சொட்ட கொடிகாமம் சந்தையிலிருந்து 6 கி.மீ தூரத்துக்கு தனது ரெலி சைக்கிளை ஓட்டி வந்த பரமு, வீட்டுப் படலையைத் திறந்து தனது வளவுக்குள் சைக்கிளை ஓரமாக வேப்பமரத்துக்கு கீழ் நிறுத்தினான்.*

*"அப்பாடா என்ன வெக்கை. காத்து கூட வீசுதில்லை", என்று வியர்வையைத் தனது சால்வையால் துடைத்தபடி வீட்டுக்குள் போனான். பரமு மீசாலையில் ஒரு சின்ன கடைவைத்து பல சரக்கு சாமான்கள்? மரக்கரி, பழவகைகள். உணவு வகைகள் போன்றவற்றை வியாபாரம் செய்துவந்தான். அவனது கடை ரயில்வே ஸ்டேசனுக்கு அருகாமையில் யாழ்ப்பாணம்-கண்டி பெரும் பாதையில் இருந்ததால் நல்ல வியாபாரம். அவனுடைய கடையில் மீசாலை கறுத்த கொழும்பான், அம்பலவி, செம்பாட்டு மாம்பழங்களும், பலாப்பழமும் வாங்குவதற்காக சாவகச்சேரி, கொடிகாமத்தில், கச்சாய், சரசாலை ஆகிய ஊர்களிலிருந்து சனங்கள் வருவார்கள். அவனது மனைவி சரஸ்வதி சுவையாக சமைக்கக் கூடியவள். அவன் தயாரித்த சுண்டல், உழுந்துவடை, சூசியம் அகியவற்றிற்கு சனங்களிடம் நல்ல மதிப்பிருந்தது. அதுவல்லாமல் அவள் தயாரித்த ஊறுகாய், வேப்பம்பூ வடகம் , மோர் மிளகாய் ஆகியவற்றிற்கு கோவில் திருவிழாக்காலங்களில் விரதம் இருப்போர் பரமுவின் கடையைத் தேடி வந்து வாங்குவார்கள். அதனாலை பரமுவுக்கு கடையில் நல்ல வியாபாரம். தன் மனைவியின்*

அண்ணன் மகன் செல்வம் என்ற செல்லத்துரையை தனக்கு உதவியாக வைத்திருந்தான். செல்வத்துக்கு மதிய சாப்பாடும் கொடுத்து கடையைக் கவனிப்பதற்கு சிறு தொகையை மாதம் மாதம் பரமு கொடுத்துவந்தான். படிப்பை பாதியில் குளப்பிக் கொண்டு வந்த செல்வத்துக்கு, மாமாவிடம் வேலை செய்வது பெருமையாக இருந்தது.

“இஞ்ஞாரும் எனக்கு கொஞ்சம் மோர் கொண்டுவாரும். வெய்யிலிலை வெளியே போட்டு வந்தது ஒரே தாகமாய் இருக்கு”, வீட்டிள் முன் விராந்தையில் அமர்ந்தவாறே மனைவியிடம் பணிவாக வேண்டினான்.

மோரும் கையுமாக பரமுவிடம் வந்த சரஸ்வதி “ கேட்டியளே கதையை?. பக்கத்து வீட்டு பங்கஜம் புது கிளுவை மரக் கதியால்களைப் போட்டு வேலி அடைக்கப்போறாளாம். இரண்டு வருஷத்துக்கு முதல் வேலி அடைத்த போது எங்கடை காணியிலை ஆறு அங்குலத்த எடுத்துப்போட்டாள். இந்த முறை நான் அவளை அவள் விருப்பத்துக்கு வேலி அடைக்க விடப்போவதில்லை” . என்றாள் சரசு என்ற பரமுவின மனைவி சரஸ்வதி.

பரமு வெளியே போய் வந்த களைப்பு தீர மோரை மடக் மடக் என்று குடித்தான்.

“நான் முக்கியமான விசயம் கதைக்கிறன், நீங்கள் என்ன பேசாமல் இருக்கிறியள்.” பரமு பேசாமல் இருந்தது சரசுவுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

“நான் என்னத்தை சரசு கதைக்கிறது. எங்கடை கிழக்கு பக்கத்து வேலி இவ்வளவு காலமும் பங்கஜம் தான் அடைத்து வந்தவள். அதைத் தான் எங்கடை காணி உறுதியிலையும் எழுதியிருக்குது. அந்த வேலியை பராமரிப்பது அவள் பொறுப்பு. தெரிஞ்சிருந்தும் ஏன் நீ வீணாக அவளோடை போய் சண்டைக்குப் போகிறாய் ?”

“சண்டை போடுகிறேனோ? இப்படி ஒவ்வொரு முறையும் வேலி அடைக்கக்கை எங்கடை காணியிலை அங்குலம் அங்குலமாக கொஞ்ச காணியை எடுத்துப்போடுவாள். அதுமட்டுமே..” என்று இழுத்தாள சரசு.

“வேறே என்ன பிரச்சனை”?

“வேலியிலை இருக்கிற பூவரசம் மரத்திலை ஒரே மசுக்குட்டி. அந்த இலைகள் மசுக்குட்டியோடு எங்கடை கிணத்துக்குள்ளை விழுகிது. அந்த கிணத்துத் தண்ணியை எப்படி நாங்கள் குடிக்கிறது? இலைகளை வெட்டு என்று சொன்னால் கேட்கிறாள் இல்லை.”

“வேலியோடு சம்பந்தமான பல பிரச்சனைகள் உனக்கு இருக்குது போல தெரியுது” பரமு கேட்டான்.

“இன்னொரு பிரச்சனையும் இருக்குது.”

“என்னது மூன்றாவது பிரச்சனை. சொல்லு ?”

"பங்கஜத்து வீட்டு நாய் ஜம்மி, எங்கடை வளவைத்தான் மலசலம் கழிக்கப் பாவிக்குது. அண்டைக்கு பாத்தனான் வேலியிலை ஓட்டை ஒன்றை செய்து எங்கடை வளவுக்குள்ளை அது வந்து போவதை. இதை எத்தனை முறை பங்கஜத்துக்கு முறையிட்டாலும் அவள் கேட்கிறாள் இல்லை. நீங்கள் அவளின்றை மனுசன் செல்லரோடை நீங்கள் கதையுங்கோ".

"பங்கஜம் வேலி அடைப்பது எங்களை எப்படிப் பாதிக்கிறது?" பரமு கேட்டான்.

"என்ன விசர் கதை கதைக்கிறியள். இரண்டு வருஷத்துக்கு முந்தி கதியால் போடுகின எண்டு எங்கடை காணியிலை ஆறு அங்குலம் எடுத்துப்போட்டாள். இந்த வருஷமும் அதை செய்தாலும் செய்வாள். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக எங்கடை காணியைப் பறித்துப் போடுவாள். பேராசைக்காரி.; இதைப்பற்றி பங்கஜத்தின்றை மனுசனோடை உங்களைக் கதைக்கச் சொல்லுகிறன்," அதுக்குத்தான் என்றாள் கோபத்தோடு சரசு.

வேலிப் பிரச்சனையை சரசு தன் பக்கம் திசை திருப்புவதை பரமு கண்டான்;. பங்கஜத்தின் கணவன் செல்லையாவும் தானும் நல்ல கூட்டாளிகள். ஒன்றாக மார்க்கண்டுவின் கள்ளுக் கொட்டிலுக்குப்; போய் வருபவர்கள். தான் எப்படி செல்லையரோடை வேலியைப் பற்றி கதைக்கிறது, பரமு யோசித்தான்;.

சரஸ்வதிக்கு ஊரிலை "சண்டைக் கோழி சரசு" என்று பெயர். சிறு விஷயங்களுக்கு எல்லாம், சுற்றாரோடு சண்டை போடுவாள். ஆனால் சீனி , கோப்பி, மிளகாய் தூள் கடனாக அயலாளரிடம் கேட்டு வாங்கும், போது அன்பாகப் பேசி தனக்கு வேண்டியதை வாங்கிக் கொள்வாள். தன்றை மகன் நடராசா, யாழ்ப்பாண பொலீசிலை கிளார்க்காக வேலை செய்கிறான் என்ற திமிர் சரசுவுக்கு. ஊர்ச்சனங்களுக்கு சரசுவின் மகனுக்கு பொலிசின் ஆதரவு இருக்கிறதாக பயம் வேறு. சரசுவுக்கு இருபது வயதுடைய ஒரு பெண் மகேஸ்வரி. அவள் தாயைப்போல் அல்லாது அமைதியானவள். சங்கத்தானை இந்துக் கல்லூரியில் ஏலெவல் படித்துவந்தாள். ஊர்ச் சனங்களோடு தாய் பிடித்த பல சண்டைகளைப் சமரசம் பேசி தீர்த்துவைத்தவள். அதனால் அவளுக்கு ஊரில் நல்ல மரியாதை இருந்தது.

"என்ன உங்கடை கூட்டாளி செல்லரோடை வேலியைப் பற்றி கதைக்கிறியளே"?. சரசு பரமுவை விட்டதாக இல்லை.

"சரி சரி நேரம் வரும் போது கதைக்கிறன். இப்ப நான் குளித்திட்டு வாறன் சாப்பாட்டை எடுத்து வை. பசிக்கிது" என்று வேலிக் கதையைத் திசை திருப்பிவிட்டு எழும்பி வீட்டுக்குள் போனான் பரமு.

*****

வேலிச்சண்டைகள் யாழ்ப்பாண குடா நாட்டில் ஏராளம். அதோடு பங்கு கிணற்றுச் சண்டைகள் ஒரு புறம். சில சமயங்களில் கோர்ட் கேசில் போய் முடியும். லோயர்களுக்கு ஆயிரக் கணக்கில் செலவு செய்வார்கள். சரசுவின் வளவையும் பங்கஜத்தின் வளவையும்

பிரிக்கிற வேலி தென்னங்கிடுகால் அடைக்கப்பட்டது. மூன்று வருஷத்துக்கு ஒரு தடவை கிடுகை மாற்றுவதும், புதுக் கதியால்கள் போடுவதும் பங்கஜத்தின் பொறுப்பு. கதியால்களில் உள்ள பூவரசம் மர இலைகளை புகையிலைத் தோட்டக்காரர்களுக்கு மொத்தமாக தீர்த்து பங்கஜம் பணம் வாங்குவது சரசுவுக்கு வயிற்றெரிச்சலைக் கொடுத்தது. சரசுவின் காணி உறுதியில் வேலியை பராமரிப்பது அவள் பொறுப்பல்ல என்று எழுதப்பட்டிருந்தது, அது சரசுவுக்கு ஒரு பின்னடைவு.

''மகன் கனடாவிலை நல்ல வேலை. மாதம் மாதம் சுளையாக பணம் அனுப்புகிறான். அந்த பணத் திமிர் அவள் பங்கஜத்துக்கு. அவள் காணிக்குப் பக்கத்துக் காணியை வீட்டோடை வாங்கப்போறதாக கதை அடிபடுகிறது'', சரசு கணவனிடம் பங்கஜத்தின் மேல் உள்ள பொறாமையைக் கொட்டித் தீர்த்தாள்.;

''பங்கஜத்தின காணிக்குப் பக்கத்துக் காணி, மாமரங்களும் பலாமரங்களும் உள்ள பெரிய பதினைந்து பரப்பு காணியாச்சே. அவுஸ்திரேலியாவிலை இருக்கிற காணி சொந்தக்காரர் மகேந்திரன் ஏன் அதை விற்கப்போறார்?.'' பரமு ஊர்விஷயம் தெரிந்து வைத்திருந்த சரசுவிடம் கேட்டான்.

''மகேந்திரன், அவுஸ்திரேலியாவிலை இருந்து திரும்பி ஊருக்கு வரப்போவதில்லையாம். உந்த காணியை விற்று வருகிற காசை பாவித்து அவுஸ்திரேலியாவில் உள்ள தன் வீட்டு மோர்ட்கேஜ் கடனைத் தீர்க்கப் போறார் போல கிடக்கு. பங்கஜத்திடம் சீட்டு போட்ட காசு இருக்கு. தேவைப்பட்டால் மகன் கனடாவிலை இருந்து காசு அனுப்புவான். வாங்கிற காணியிலை தன்றை இரு மகள்மாருக்கும் வீடுகள் கட்டி குடுக்கிறதாக பிளான் போல இருக்கு.'' சரசு விபரம் தெரிந்தவள் போல் சொன்னாள்.

''அப்ப இரண்டு காணிகளையும் பிரிக்கிற வேலிக்கு என்ன நடக்கப்போகுது?'', பச்சை மிளகாயைக் கடித்தவாரே பரமு கேட்டான்.

''பங்கஜம் இரண்டு காணிகளையும் பிரிக்கும் வேலியை எடுத்துப்போட்டு வாங்கிற காணியையும் தன்ரை காணியோடை சேர்த்து பெரிய இருபத்தைந்து பரப்பு காணியாக்கிப் போடுவாள். பிள்ளையள் கலியாணம் முடிச்ச பிறகும் தனக்குப் பக்கத்திலை இருக்க வேண்டும் என்பது அவள் ஆசை''.

''அவள் இருக்கிற வீடு ஆருக்காம கொடுக்கப் போறாள்;?''

''அந்த வீடு அவள் மகனுக்காம். அவன் இயக்கத்தை விட்டு கனடா போனவன். தான் யாழ்ப்பாணத்திலை தான் முடிப்பானாம் என்று தாயுக்கு எழுதியிருக்கிறான். இங்கை படிச்ச பெண் வேண்டுமாம். கனடாவிலை படிச்ச பெண் சரிப் பட்டு வராதாம்;. இன்னும் கொஞ்ச காலம் அங்கை வேலை செய்து நாலு காசு சம்பாதித்துப் போட்டு ஊரோடை வந்து வாழ அவனுடைய திட்டமாம்.''

“உமக்கு உதெல்லாம் யார் சொன்னது?”, மாங்காய் ஊறுகாயை சுவைத்தபடி பரமு கேட்டான்.

“வேறை யார். எங்கடை பொன்னம்மா ஆச்சிதான். அவவுக்கு ஊரிலை தெரியாத விஷயம் இல்லை”.

“நீர் பங்கஜத்தோடை மிண்டாதையும் அவுளுடைய மகன் இயக்கத்திலை இருந்தவன். அதாலை பங்கஜத்துக்கு பல பெடியன்களைத் தெரியும். அவள் இயக்கத்துக்கு உம்மைப் பற்றி முறையிட்டால், பிறகு நடக்கிற விஷயம் வேறு”. சாப்பாட்டை முடித்துவிட்டு கையை கழுவியபடியே பரமு மனைவியை எச்சரித்தான்.

“ஒண்டு மட்டும் சொல்லுறன் அவள் பூர்வீகம் தீவு. புங்கிடுதீவிலை இருந்து இங்கை வந்து குடியேறினவள். ஆனால் எங்கடை பாட்டன் பூட்டன் எல்லாம் பிறந்து வளர்ந்தது மீசாலையிலை. நாங்கள் இருக்கிற வீடும் வளவும் என்றை அப்பாவுக்கு, அவருடைய அப்பா கொடுத்தது. அதை என்றை அப்பா எனக்கு சீதனமாக எழுதினவர். இனி இந்தக் காணி எங்களுக்குப் பிறகு மகேஸ்வரிக்கு. அதுக்கு முதலிலை காணியை கொஞ்சம் கொஞ்சமாய் பங்கஜம் விழுங்கி போடுவாள் போலக் கிடக்கு. நல்ல காலம் எங்கடை கிணறு பங்குக் கிணறில்லை. இல்லாட்டால் அதிலை வேறு பிரச்சனை வந்திருக்கும்”.

“சரி சரி சரசு. நான் செல்லத்துரையரோடை இதைப்பற்றி பேசுகிறன். அவர் நல்ல மனுசன். நீர் பங்கஜத்தோடை சண்டை பிடிக்கிறதை நிற்பாட்டும்”. பரமு அறைக்குள் சுருட்டொன்றை பற்றவைக்கப் போனான்.

*****

வேலிச் சண்டை ஓய்ந்து ஒரு மாதத்துக்குள் யாழ்குடா நாட்டின் நிலமை மாறியது. ஆர்மியின் கட்டுப்பாட்டுக்குள் கிராமங்கள் ஒவ்வொன்றாக் வரத்தொடங்கின. மீசாலை, இயக்கத்து பெடியன்கள் பலர் வசிக்கும் ஊர். அதனால் மிசாலைக் கிராமத்தை தங்கள் கட்டுப்பாடடுக்குள் கொண்டு வர ஆர்மி தீர்மானித்தது. அதன் விளைவாக தங்கள் வாகனங்களும், டாங்கிகளும் இலகுவாக போய் வரக் கூடியதாக, பல வேலிகளை வெட்டி எறிந்தார்களா. அப்படி ஆர்மியின் ஆக்கிரமிப்புக்கு பலியான வேலிகளில் சரசுவின் வளவையும்,, பங்கஜத்தின் வளவையும பிரிக்கும் வேலியும் ஒன்று. இனி வேலிச் சண்டை வராது. ஆர்மி மீசாலைக்கு வர முன்னரே சரசு குடும்பம் கிளிநொச்சிக்கும்;, பங்களும் குடும்பம் கொழும்புக்கும் புலம் பெயர்ந்தன. மீசாலைக் காணியை விட்டுப் போகமுன், சரசு தனது காணியை ஒரு தடவை பார்வைவியிட்டாள். வேலியைக் காணவில்லை. கீழே வெட்டப்பட்ட பூவரசம் மரக் கதியால்கள் கவனிப்பார் அற்று கிடந்தன.

“இனி யாரோடை சண்டைபிடிக்கப் போகிறாய்? என்று அவை தன்னைக் கேட்பது போல் அவளுக்குப் பட்டது.

*****

## *கதை 3*

## *முடிவு*

*"அம்மா நான் இண்டைக்கு ஸ்கூலிலை இருந்து சுணங்கித்தான் வருவன். என்னைத் தேடவேண்டாம்" தாய்க்குச் சாந்தன் சொன்னான்*

*"ஏன்டா ராசா அப்படி என்ன விசேசம் ஸ்கூலிலை நடக்குது? செல்லம்மா மகனை கேட்டாள்*

*"இண்டைக்கு எண்டை ஏ லெவல் பௌதிக பாடத்தில் பரீட்சைக்கு வரக்கூடிய கேள்விகளையும்' அதற்கான விடைகளையும் ஸ்டுடன்சுக்கு சொல்லப் போறார் எங்கடை பௌதிக மாஸ்டர் நாதன். போன வருஷம் அவர் சொன்ன கேள்விகள் பல வந்தது. நான் அந்த கிளாசை மிஸ் பண்ணக்கூடாது. பௌதிக படத்திலை நல்ல மார்க்கஸ் நான் எடுத்தால் நிட்சயம் மெடிக்கல் கல்லூரிக்கு போக எனக்கு இடம் கிடைக்கும். மற்றைய பாடங்களில் எனக்குப் பிரச்சனை இல்லை" சாந்தன் திடமாகச் சொன்னான்.*

*"அப்ப சரி ராசா. உனக்கு பிடித்த புட்டும், கோழி இறச்சிக் கறியும், முட்டை பொரியலும் செய்து வைக்கிறன். போகக்கை டோர்ச் லைட்டையும் கொண்டு போ. உன் சைக்கில் டைனமோ வேலை செய்யுதில்லை என்று உன் அப்பா சொன்னார்"*

*" சரி அம்மா" என்று அறைக்குள் போய் டோர்ச் லைட்டையும் நோட் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு தன் சைக்கிளில் சாந்தன் எறிப்போனான்.*

*சாந்தன், மாணிக்கம் செல்லம்மா தம்பதிகளின் ஏக புத்திரன். மாணிக்கம் வைத்திய சாலையில் மருந்து தயாரிக்கும் கொம்பௌன்டர் வேலை செய்பவர். செல்லம்மா அரச வைத்தியசாலையில் நேர்ஸ். மருத்துவர் முதலில் மருந்துகளை பரிந்துரைக்கிறார், அதன் பின்னர் கொம்பௌன்டர் அவசியமான பொருட்கள், கலவைகள் ஆகியவற்றை எடுத்துக்கொள்கிறார், மேலும் முழுமையான டாக்டரின் ஆலோசனையின் பேரில் நோயாளிக்கு மருந்தை வழங்குகிறார்.*

*மாணிக்கம் தம்பதிகளுக்கு டாக்டர்களோடு நெருங்கிய தொடர்புண்டு. இருவரும் தங்கள் மகன் வெள்ளை யுனிபோர்ம் அணிந்து, கழுத்தில் ஸ்டேதஸ்கோப் தொங்க நடந்து வரும் காட்சியை எப்போது காணலாம் எனக் கனவு கண்டனர். அவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்யவோ என்னவோ சாந்தன் படிப்பில் கெட்டிக்காரனாக திகழ்ந்தான். தனது தாய் மாமன் தன் மகன் சுகுமார் ஒரு டாக்டர் என்பதை அடிக்கடி பெருமையாக பலருக்கு சொல்வதை சாந்தன் .கேட்டபோது தானும் படித்து டாக்டராக வேண்டும் என் முழு மூச்சாக படித்தான். தாயும் தகப்பனும் அவனுக்குத் தேவையான புத்தகங்களை செலவு*

பாராது வாங்கிக் கொடுத்தார்கள். சாந்தனும் தன் அறையில் மருத்துவம், படிப்பு.. இலக்கியம் சம்பந்தப்பட்ட நூல்களை அழகாக பிரோவில் அடுக்கி வைத்திருந்தான்.

சாந்தன் படித்த கல்லூரி பிரின்சிபல் சிவலிங்கம், மாணிக்கத்தை சந்தித்த போது "மாணிக்கம் எங்கடை கல்லூரில் இந்த முறை மருத்துவக் கல்லூரிக்கு தேர்வாகும் மாணவர்கள் மூவர் என்பதை ஆசிரியர்கள் எதிர்பாக்கினம். அந்த இருவரில் உம்முடைய மகன் சாந்தனும் ஒருவன். ஆனால் ஒன்று மட்டும் உமக்கு சொல்லவிரும்புகிறன்;"

"என்ன சேர் அந்த விஷயம்" மாணிக்கம்

"எவ்வளவு கடுமையாகப் படித்தாலும் மருத்துவக் கல்லூரிக்கு தேர்வாகுவது அவ்வளவு இலேசு இல்லை. போட்டி அதிகம். அதோடு புதிதாக அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட தரப்படுத்தல் கொள்கையால் பல கெட்டிக்கார தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதை உமக்கு சொல்லி வைக்க விரும்புகிறேன்"

"அதென்ன அரசாங்கத்தின் கொள்கை சேர்"

"ஒரு காலத்தில் இந்த தரப்படுத்தல் கொள்கை இல்லாதபோது படித்து மருத்துவக்கல்லூரிக்கும், பொறியியல் கல்லூரிக்கும் எடுபட்டவர்கள் பெரும்பாலோர். தமிழ் மாணவர்கள். அதோடு பரீட்சைக்குப்பின் பௌதிகம். இரசாயனம், விலங்கியல். தாவரவியல் ஆகிய பாடங்களில் பரிசோதனை பரீட்சைகள் நடப்பதுண்டு. அது இப்பொது அரசால் நிறுத்தப்பட்டு விட்டது.. காரணம் நல்ல கல்லூரிகள் தமிழ் பகுதிகளில் மிஷனேரிகள் உருவாக்கியதே. கிராமத்துக் கல்லூரிகளில் லப் வசதி குறைவு. இதை காரணம் காட்டி பின் தங்கிய பகுதிகளில் வாழும் சிங்கள மாணவர்கள் டாக்டராக வேண்டும் என்பதால் அப் பகுதிகளில் படிக்கும் சிங்கள மாணவர்களுக்காக சிங்கள அரசியல் வாதிகள் கொண்டுவந்தது தரப்படுத்தல் சட்டம். இதனால் குறைந்த புள்ளிகள் எடுத்த கிராமப்புற சிங்கள மாணவர்கள் டாக்டர் ஆகும் வாய்புண்டு"

"இது சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் அரசாங்க ஊழியர்களைப் போல் அல்லவா இருக்கிறது. நானும் அதனால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியன் சேர்" மாணிக்கம் சொன்னான்

"சரியாகச் சொன்னீர் மாணிக்கம். ஆனால் சாந்தன் கெட்டிக்காரன். அவன் உமது கனவை நிறைவேற்றுவான் என்ற நம்பிக்கை எனக்குண்டு.. நீர் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம்" பிரின்சிபல் சொன்னார்.

****

மனிதன் நினைப்பது ஒன்று கடவுள் தீர்மானிப்பது வேறொண்டு. பரீட்சை முடிவுகள் வந்தவுடன் சாந்தன் கல்லூரியில் முதல் மாணவனாக சித்தியடைந்திருந்தான். ஆசிரியர்கள் எல்லோரும் சாந்தன் கல்லூரியில் இருந்து நிச்சயம் மருத்துவக் கல்லூரிக்கு தேர்வாகுவான்

என எதிர்பார்த்தனர். ஈழத்து போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அரச விமானப்படை ஈவிரக்கம் பாராது குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தது.

கல்லூரி பிரின்சிபல் சாந்தனை தன் ஒபீசுக்கு அழைத்தார். 'எதோ நாள் செய்தி பிரின்சிபல் சொல்லப்போகிற' என்ற ஆர்வத்தில் சாந்தன். ஒபீசுக்கு போனபோது பிரின்சிபல் சொன்னது அவனுக்கு ஏமாற்றத்தை கொடுத்த்து

"சாந்தன் நீ மருத்துவக் கல்லூரிக்கு தேர்ந்து எடுக்கப்படவில்லை"

"என்ன சேர் சொல்லுறியள்"

"எங்கடை கல்லூரியில் இருந்து ஒருவரும் மருத்துவக் கல்லூரிக்கு தேர்ந்து எடுக்கப்படவில்லை"

"ஏன் சேர்"

"இது அரசின் தரப்படுத்தல் கொள்கையின் பாதிப்பு. உம்மிலும்; பார்க்க குறைந்த மார்க்ஸ் எடுத்த சிங்கள கிராமப்புற மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்கு எடுபட்டிருக்கலாம். அடுத்த முறையும் முயற்சித்துப் பாரும்"

சாந்தன் அதை கேட்டு அதிர்ந்து போனான். ஒன்றும் பேசாமல் வீட்டுக்கு சென்ற போது விமான குண்டு வீச்சின் சத்தம் கேட்ட படி இருந்தது. சனங்கள் பதறி அடித்து ஓடுவதைக் கண்டான். அந்தக் கூட்டத்தோடு தன் தாயும் தகப்பனும் சேர்ந்து ஓடுவதைக் கண்டான்

"அப்பா எங்கை இப்படி ஓடுகிறீர்கள்" சாந்தன் அவர்களைப் பார்த்துப் பதறியபடி கேட்டான்.

"சாந்தன் இங்கை நிற்காதே. குண்டு உன் தலையில் எப்போது விழும் என்று தெரியாது. எங்கள் வீட்டில் விழுந்து வீடு எரிகிறது. இங்கை நிற்காதே வா பாதுகாப்பான ஊருக்குப் போவோம்" என்றான் மாணிக்கம்.

"அப்பா என் புத்தகங்களுக்கு என்ன நடந்தது"

"அதை பற்றி யோசிக்க இப்ப நேரமில்லை. அவையும் வீட்டோடு எங்கள் மத்திய நூலகத்தைப் போல் தீக்கு இரையாகி இருக்கலாம். பேசிக் கொண்டிருக்காமல் வா எங்களோடை" என்றார் மாணிக்கம்.

" அப்ப நான் படித்து டாக்டராக முடியதா"?

"அதைப்பற்றி பிறகு யோசிப்பம்." என்றாள் தாய்.

மாணிக்கம் குடும்பம் உயிரைக் காப்பாற்ற மக்களோடு மக்களாய் பாதுகாப்பு தேடி ஓடினார்கள்

''கொழும்பிலை சிங்களவனிடம் அடி வாங்கி, கப்பலில் இங்கை சொந்த ஊருக்கு வந்தோம். இங்கையும் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லையா.. இந்த அடக்குமுறையை நிறுத்த வழியில்லையா. அடிமைகளாக நாம் வாழ வேண்டுமா அப்பா'' விசனத்தோடு சாந்தன் கேட்டான். அவனது பேச்சில் விரக்தி தெரிந்தது

''நீ இப்ப அதிகம் பேசாமல் வரப்போகிறாயா இல்லையா''? மகனை மாணிக்கம் அதட்டினார்.

*****

பல மாதங்கள் சென்றன. வெளிநாடுகளின் அழுத்தம் காரணமாக குண்டுவீச்சு நிறுத்தப்பட்டாலும் இராணுவத்தால் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தன. சாந்தனோடு ஒரே வகுப்பில் படித்த இரு மாணவிகள் இராணுவத்தால் கடத்தப்பட்டனர். ஊர் மக்கள் பலர் வன்னி நோக்கி புலம் பெயர்ந்தனர்.

ஒரு நாள் சாந்தனின் கல்லூரி பிரின்சிபல் மாணிகத்தை சந்தித்தார்.

''என்ன மாணிக்கம் இப்ப ஏன் உமது கெட்டிக்கார மகன் சாந்தன் ஸ்கூலுக்கு வருவதில்லை பிரின்சிபல் மாணிக்கத்தை கேட்டார்

''அதை ஏன் சேர் கேட்குறீர்கள். சாந்தன் மேலும் படிப்பை தொடர விருபவில்லை. சாந்தனும்அவனோடு படித்த மூன்று நண்பர்களும் இனி படித்து பிரயோசனம் இல்லை. எமது தமிழ் இனத்தைப் பாதுகாக்க வேண்டும். எமது உரிமைகளைப் பெற வேண்டும். பேனாவல்ல துவக்கு தான் தனக்கு என்று முடிவு செய்து தமிழர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் எங்களுக்குச் சொல்லாமல் தன்னோடு படித்த நண்பர்களோடு சேர்ந்து விட்டான் சேர். அவன் முடிவு சரியென நான் நினைக்கிறன்'' என்றார் அமைதியாக.

*****

## *கதை 4*

## *சகுனம்*

*வாக்கிய பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்தாள் தங்கம்மா. எதையோ அதிசயமாக கண்டுபிடித்தவள் போல் "இண்டைக்கு அட்டமி. நீங்கள் திலகாவின் கலியாண விஷயமாய் பேச தரகரை வரச் சொல்லியிருக்கிறியள். வருகிற வெள்ளிக்கிழமை நல்ல நாள். அது வரை தள்ளிப் போடுங்கோ அட்டமியில் ஆரம்பிக்கிற காரியம் உருப்படாது." மனைவி தங்கம்மாவின் கட்டளையை வடிவேலுவால் தாண்டிப் போக முடியவில்லை.*

*"உனக்கு எதுக்கெடுத்தாலும் சாத்திரமும் சகுனமும் தான். நேற்று முற்றத்திலை ஒரு காகம் விடாமல் கரைந்த போது வீட்டுக்கு விருந்தாளிகள் வரப்போகினம் என்று உலையிலை இரண்டு சுண்டு அரிசி கூடப் போட்டாய் கடைசியிலை ஒருத்தரும் வராமல் சோறு மிச்சம் இருந்து இண்டைக்கு அதைப் பழம் சோறாக்கி எனக்குத் தள்ளிப்போட்டாய். எப்பத்தான் நீ உந்த சகுனம் பாக்கிறதை விடப் போறாயோ தெரியாது," அலுத்துக் கொண்டார் வடிவேலு. தங்கம்மாவை திருமணம் செய்து முப்பது வருஷத்திலை அவள் சகுனம் பார்ப்பதில் ஒரு வித மாற்றத்தையும் அவர் காணவில்லை. ஊர் சனங்கள் கனவு கண்டால் அடுத்த நாள் தங்கம்மாவைத் தேடிவந்து நல்லது நடக்குமோ அல்லது கெட்டது நடக்குமோ என்று விளக்கம் கேட்பார்கள். மூன்று பேராய் ஒரு காரியத்துக்கு போகப்படாது. வெளியே புறப்படும் போது யாரும் தும்மினால் அது போதும் தங்கம்மாவுக்கு. குறுக்கே வெள்ளைச் சீலையுடன் விதவை ஒருத்தி முன்னுக்கு வந்தால் வந்தால் அது போதும் அவளுக்கு விளக்கம் கொடுப்பதற்கு. எதையோ காணக் கூடாததொன்றை கண்டு விட்டமாதிரி பதட்டப்படுவாள். "இப்ப போகாதை -யுங்கோ. சகுனம் சரியில்லை. போகிற காரியம் சரிப்பட்டு வராது" என்று தடுத்து விடுவாள்.*

*தங்கம்மாவின் தாய் நாகம்மாவும் எதையும் நாள் நட்சத்திரம் நேரம் பார்த்துத் தான் செய்வாள். வியாழக்கிழமைகளில் முதல் முறையாக யாரும் வீட்டுக்கு வருவதை அவள் விரும்புவதில்லை. கள்ள வியாழன் கழுத்தறுப்பான், செவ்வாய் வெறுவாய், ஞாயிறு நோயறு என்று ஒவ்வொரு தினங்களுக்கும் ஒரு அடைமொழி சொல்வதில் கெட்டிக்காரி நாகம்மா. தனக்கு தெரிந்த சகுனங்களைத் தன் மகளுக்கும் போதித்தாள். நாகம்மாவின் கணவன் பஸ் விபத்தொன்றில் இறப்பதற்கு ஒரு கிழமைக்கு முன், முற்றத்தில் இருந்த மாமரத்தில் ஆந்தை ஒன்று ஊக் ஊக் என்று அலறியதைக் கேட்ட நாகம்மா அது எத்தனை தடவை அலறுகிறது எனக் கணக்கு வைத்து ஏதோ வீட்டிலை நடக்கக் கூடாதொன்று நடக்கப் போகிறது என்று கணவனுக்குச் சொல்லிப் பயந்தாள். "அதொன்றுமில்லை அது தனது துணையைத் தேடி அலறுதாக்கும் நீ போய் தேவையில்லாமல் எத்தனை தடவை அது கத்துகிறது என்று எண்ணி ஒரு விளக்கம் கொடுக்கிறாய் என்று*

பேசிவிட்டுப்போய்விட்டார். ஆனால் திடீரென்று ஒரு நாள்; பஸ் விபத்தில் இறந்த பத்து பேரில் நாகம்மாவின் கணவனும் ஒருவர். ஒரு கிழமைக்கு முன் ஆந்தை அலறியதை ஞாபகத்தில் வைத்திருந்து இழவு வீட்டுக்கு வந்த பலருக்கு சொல்லி தான் நினைத்த மாதிரி நடந்துவிட்டது என ஒப்பாரி வைத்தாள் நாகம்மா. ஆனால் பஸ் விபத்தில் இறந்த மற்ற ஒன்பது பேரின் வீட்டிலும் ஆந்தை அலறியதா என்று ஒருவரும் துணிந்து அவளைக் கேட்கவில்லை.

தங்கம்மாவின் மூத்த மகள் குடும்பம் புதுவருஷத்துக்குப் பிறகு தங்கள் வீட்டை ஒரு நல்ல நாள் பார்த்து வராததால் தான் மருமகனோடை சீதனம் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் பிரச்சனை ஏற்பட்டு இரண்டு குடும்பங்களும் பிரியவேண்டிய நிலை வந்தது என்று அடிக்கடி கணவனுக்கச் சொல்லி குறைப்படுவாள். வடிவேலுக்கு மனைவியைப் போல் சாஸ்திரம் சம்பிரதாயத்தில் அவ்வளவுக்கு நம்பிக்கையில்லை. காரணம் அவரின் நண்பர் வைத்திலிங்கம் மாஸ்டர் ஒரு பொதுவுடமைவாதி. அவரின் போதனைகள் சில வடிவேலுவையும் பாதித்துவிட்டது. ஆனால் மனைவி சொல்லும் விளக்கத்துக்கு எதிர்த்து நின்று பதில் சொல்லும் தைரியம் அவருக்கில்லை. குடும்பத்துக்குள் ஏன் வீண்சச்சரவு என்பது அவர் எண்ணம். மகள் திலகாவும் தாயின் பக்கம் இருந்தாலும் மகன் ரவி மட்டும் தனது கருத்துக்களை வெளிப்படையாக சொல்லாமல் போவான். அவர் என்ன செய்வார்?

ரவி படித்து பட்டம் பெற்றபின் வேலைகளுக்கு மனுக்கள் பல போட்டும் பதில் ஒன்றும் கிடையாது மன விரக்தியோடு இருந்தான். "உனக்கு இப்ப காலம் சரியில்லை. எட்டிலை வியாழன். அதனாலை வியாழ சுகமுமில்லை. வருகிற மாதம் வியாழன் எட்டிலை இருந்து ஒன்பதுக்கு மாறியபிறகுதான் எதாவது உத்தியோகம் கை கூடும்" என்று மகனுக்கு உத்தியோகம் கைகூடாத காரணத்தை விளக்கினாள் தங்கம். அவளது விளக்கம் அவனுக்கு எரிச்சலைத் தான் தூண்டியது. ஏன் தாயுடன் வீணாக வாக்குவாதப்படுவான் என மனதுக்கு நினைத்து அங்கிருந்து மெதுவாக நகர்ந்தான். " அம்மா எனக்கு இப்ப காலம் எப்படி?. அட்வான்ஸ் லெவல் சோதனை பாஸ் பண்ணி யூனிவேசிட்டிக்கு போகமுடியுமா? என்று தாயிடம் கேட்டாள் திலகா. மகளும் தன்னைப் போல் சாஸ்திரம் சகுனம் பார்ப்பது போன்றவற்றில் அதிக நம்பிக்கை உள்ளவள் என்பதை தெரிந்த தங்கத்திற்கு உள்ளுக்குள் மகிழ்ச்சி. மகளின் சாதகம் தங்கத்தின் மனதில் அப்படியே பதிந்திருந்தது. "உனக்கு ஒரு குறையுமில்லை நல்ல வியாழ சுகம் வேறை. புதன் திசை இப்பதான் துவங்கியிருக்கு. புதன் நல்ல இடத்திலை வேறு கிரகங்களின் பார்வை படாமல் இருக்குது. இனி படிப்புக்கு என்ன குறை.". என்றாள் தங்கம். தாயின் நாக்கு கருநாக்கு. அவள் எது சொன்னாலும் நடந்துவிடும் என்பது திலகாவின் மனதில் பதிந்த முழு நம்பிக்கை.

****

வாசலில் தபால்காரன்; மணி அடிப்பது கேட்டது. ஓடிப்போய் அவன் கொண்டு வந்த கடிதத்தை வாங்கினாள் திலகா. ரவியின் பெயருக்கு ஒரு கொம்பெனியில் இருந்து கடிதம் வந்திருந்தது.

"அண்ணா உனக்கு தான் கடிதம்" என்று சத்தம் போட்டு கூப்பிட்டாள் அவள். அறையில் வேலையாக இருந்த ரவி வெளியே வந்து திலகாவிடம் இருந்து கடிதத்தை வாங்கி பிரித்து வாசித்தான். அவன் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது . ஏதோ நல்ல செய்தியாக்கும் என்று திலகா நினைத்து "என்ன அண்ணா எதாவது இண்டர்வீயுவூக்கு கூப்பிட்டு கடிதம் வந்திருக்கா?" என்று கேட்டாள்.

"ஓம்" என்று சுருக்கமாக பதிலுக்கு தலையாட்டினான் ரவி

"அம்மா இங்கை வாயேன் அண்ணாவுக்கு இண்டர்வியூவுக்கு கடிதம் வந்திருக்கு." என்று தாயைக் கூப்பிட்டாள் திலகா.

அடுப்படியிலிருந்து அகப்பையும் கையுமாக வந்த தங்கம் "என்னடா ரவி. எந்த கொம்பெனியடா இண்டர்வியூவுக்கு வரும்படி உன்னை கூப்பிட்டிருக்குது" என்று கேட்டாள்.

"ஒரு பெரிய ஏற்றுமதி இறக்குமதி கம்பனி அம்மா. வருகிற புதன் கிழமை காலை பத்து மணிக்கு இண்டர்வியூ" என்றான் ரவி

"வருகிற புதன் கிழமையா?. அய்யய்யோ. அண்டைக்கு முழு நாளும் கரிநாளாச்சே. எடுத்த காரியம் கை கூடாதேயடா. வேறு நாள் தரச் சொல்லிக் கேட்டு பாரேன்" என்றாள்.

"இது தான் எனக்கு வந்த முதல் இண்டர்வியூ கடிதம். என்ன விஷயம் தெரியாமல் கதைக்கிறியள். அவங்களிடம் போய் நாள் சரியில்லை என்று காரணம் சொல்ல முடியுமா?. பிறகு கிடைத்த இண்டர்வியூவையும் கான்சல் செய்து போடுவாங்கள். இப்ப உத்தியோகம் கிடைப்பதே கஷ்டம்." என்றான் சற்று கோபத்துடன் ரவி.

"உன் விருப்பப்படி செய். நான் சொல்வதை நீ எப்ப மதித்து நடக்கிறனீ. இண்டர்வீயுக்கு போக முந்தியாவது பிள்ளையார் கோயிலிலைப் போய் அர்ச்சனை செய்து போட்டு போ. பிறகு நல்லது நடக்காவிட்டால் இருந்து கவலைப் படுவாய்."

ரவிக்கு தாயுடன் வாதாட விருப்பமில்லை. "ஏன் இந்த மனுசி எதுக்கும் தடங்கல் சொல்லுது. இதுண்டை வாயிலை நல்லது வராதா?" என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு சைக்கிளை-யும் எடுத்துக் கொண்டு வெளியே போனான்.

திலகா என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்துப் போய் பேசாமல் நின்றாள்.

"நான் அவன் நன்மை கருதித் தான் சொன்னனான். அவனுக்கு உது விளங்குதில்லை. நீ என்ன சொல்லுகிறாய்?" மகளைக் கேட்டாள் தங்கம்.

“நான் என்னத்தை சொல்ல. அண்ணாவின் போக்குத்தான் உனக்குத் தெரியும் தானே. உன் மனதில் உள்ளதை வெளிப்படையாக சொல்லிப்போட்டாய். முடிவை பொறுத்திருந்து பார்ப்போம்.” என்றாள் திலகா.

*****

கையில் நற்சான்று பத்திரங்கள் அடங்கிய பையுடன் நேர்முகப் பரீட்சைக்கு புறப்பட்டான் ரவி. அன்று தான், முதல்தடவையாக லண்டனில் இருந்த அவனது மாமா கொண்டு வந்து கொடுத்த மார்க்ஸ் அன் ஸ்பென்சர் சேர்ட்டையும் டையையும் அவன் அணிந்திருந்தான். பார்ப்பதற்கு மாப்பிள்ளையைப் போல் இருந்தான். காலை ஐந்து மணிக்கே எழும்பி இண்டர் வியூவுக்கு படித்தான். “நீ போவது பிரபல்யமான கம்பனி இண்டர்வியூவுக்கு. உன் தோற்றம் முக்கியம். கேட்ட கேள்விகளுக்கு மாத்திரம் மறுமொழி சொல். பதட்டப்படாதே. தன் நம்பிக்கையுடன் பேசு. குறைந்தது பதினைந்து நிமிடமாவது முந்தி போய் விடு”. இப்படி பல ஆலோசனைகளை அவன் நண்பன் அவனுக்கு சொல்லியிருந்தான். தங்கம் மகனை வழியனுப்ப அவன் பின்னே வந்தாள். அவளின் வற்புறுத்தலின் பேரில் நெற்றியில் சுவாமி படத்திற்கு முன்னால் போய் நின்று, வணங்கி திருநீற்றை பூசிக்கொண்டான். அவன் வாசலுக்கு வரும் போது சுவர் கடிகாரத்தில் எட்டுமணி அடித்தது.

“மணி அடிக்கிறது நல்ல சகுனம். ரோட்டிலை இறங்கமுன்; இரண்டு பக்கமும் பார்த்துப்போ” என்று மகனுக்கு எச்சரிக்கை செய்தாள். அவன் பதிலுக்குத் தலையாட்டிவிட்டு வீதியில் காலடி எடுத்து வைத்த போது கனகாம்பாள் அம்மா வெள்ளைச் சேலையுடன் கோயிலில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தாள். அவள் காலம் சென்ற பிள்ளையார் கோயில் ஜெகதீஸ்வர ஐயரின் மனைவி. அவளைத் தங்கத்துக்கு எள்ளளவும் பிடிக்காது. காரணம் அவளில் முழித்தால் போகிற காரியம் சரிவராது என்ற எண்ணம் அவளுக்கு. அதோடு மட்டுமல்ல அவளின் நடத்தையில் சந்தேகப்பட்டுதான் ஐயர் சிறுவயதில் இறக்க வேண்டி வந்தது என்ற ஊர்வம்புக்கு அவள் தூபமிட்டாள். கனகாம்பாள் ஒரளவுக்கு அழகி என்பது உண்மை. அவளின் நீண்ட தலைமயிரையும் அழகிய கண்களை பற்றி விமர்சித்தவர்கள் பலர். கனகாம்பாளுக்கு ஆண்களைக் கண்டால் போதும். அவர்களோடு கதைப்பதில் அவளுக்கு ஆனந்தம். அவளுக்கும் சிவன் கோயில் ஐயரின் மகனுக்கும் ஏதோ தொடர்பாம். ஜெகதீஸ்வர ஐயர் அவமானம் தாங்காமல் கிணத்திலை விழுந்து தற்கொலை செய்து கொண்டார். இப்படி கனகாம்பாளைப் பற்றிப் பல ஊர் வதந்திகள். கனகாம்பாள் அம்மாவின் சகோதரன் ஏதோ பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார் என்ற கர்வம் வேறு அவளுக்கு என்று அடிக்கடி தங்கம் எரிச்சல்படுவாள்.

“எடியே திலகம் அங்கை பார். அந்த கனகாம்பாள் ஐயர் மனுசி குறுக்காலைப் போவதை. நேரம் கிடைக்காமல் இந்த நேரம் பார்த்தே போக வேணும். அவள் தான் அவனுக்கு

முழிவியளம். ரவியை பிறத்தாலை கூப்பிட்டுக் கொஞ்ச நேரம் வந்திருந்திட்டு போகச் சொல்லு.'' என்றாள் தங்கம் திலகாவை அழைத்து.

''ஓம் அம்மா அண்ணாவும் அவவோடை நிண்டு என்னவோ கதைச்சு கொண்டு நிக்கிறார். உந்த ஐயர் அம்மாவுக்கு ஆம்பிளையளோடை கதைக்கிறது எண்டால் நல்ல விருப்பம். அதுவும் இளம் பெடியன்கள் என்றால் போதும். அண்ணாவுக்கும் அவ மேலே நல்ல மரியாதை. ஊரிலை அவவை பற்றி பல விதமாக பேசுகிறது தெரிந்திருந்தும் ஏன் அண்ணா அவவோடை கதைக்கிறாரோ தெரியாது.''

''இனி அவள் எல்லா விபரமும் துருவித் துருவி; கேட்கப் போறாள் உவனும் எல்லாத்தையும் கக்கப் போறான். உவளோடை உவனுக்கு என்ன கதை வேண்டியிருக்கு.. என்ன நடக்குமோ தெரியாது'' என்று சத்தம் போட்டாள் தங்கம். அவன் போய் மறையும் மட்டும் ஏதும் பூனை, நாய் குறுக்காலை ஓடுகிறதா என்று கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள்.

''அண்ணா அவவிடம் எதோ துண்டிலை எழுதி கொடுத்துப் போட்டு போறான். வந்ததும் என்ன அவவோடை கதைச்சவன் எண்டு கேள்.''

''ஒரு விதவை முகத்திலை முழித்தால் போற காரியம் எங்கை கைகூடப் போகுது. இது நான் அனுபவத்தில் கண்ட விஷயம்''

''அம்மா அதிகம் யோசிக்காதே. அண்ணனுக்கு உந்த உத்தியோகம் கிடைக்க வேண்டும் எண்டு தலையிலை எழுதியிருந்தால் கிடைக்கும்.'' என்றாள் திலகா.

தாயும் மகளும் பேசுவதைக் கேட்ட வடிவேலு வாசலுக்கு வந்தார். ''என்ன தாயும் மகளும் ரோட்டை பார்த்தபடி கதைக்கிறியள்.? என்றார்.

''ஒன்றுமில்லை. உவன் ரவி இண்டர்வியூவுக்கு போகிற சமயம் பார்த்தே அந்த தாலி அறுந்தவள் முன்னுக்கு வரவேண்டும். அது மட்டுமே அவளோடை அவனுக்கு என்ன கதை வேண்டியிருக்கு. அவளைப் பற்றி ஊர் என்ன கதைக்கிறது எண்டு உங்களுக்கு தெரியும் தானே.?

''அந்த ஐயர் அம்மா சின்ன வயதிலை புருஷனை பறிகொடுத்தது மட்டுமன்றி ஊர் வம்புக்கு கூட இலக்காகி இருக்கிறாள். நாளைக்கு எனக்கு ஒன்று நடந்து உனக்கும் அந்த அம்மா கதி ஏற்பட்டால் பலர் உன்னைப் பற்றி முழிவியளத்துக்கு உதவாதவள் என்று தானே கதைப்பினம் அதை யோசித்தியா?''

''எண்டை சாதகத்தின் படி நான் சுமங்கலியாய் தான் போவன் எண்டு இருக்கு. உங்களுக்கு முந்தி நான் போயிடுவன்'' என்றாள் தங்கம்

அங்கே நின்று ஏன் வீணாக விவாதத்தை வளர்ப்பான் என்று அவ்விடத்தை விட்டு நகர்ந்தார் வடிவேலு.

*****

இண்டர்வியூ முடிந்து இரண்டு கிழமை ஆகியும் ரவிக்கு பதில் வரவில்லை. அவன் தொடர்ந்து வேறு வேலைகளுக்கு மனுப்போட்டுக் கொண்டிருந்தான். மேசையில் இருந்து மூன்று கடித உறைகளைப் பார்த்த தங்கம் "ஏன் ரவி போன இண்டர்வியூவிலை கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் சரியாக பதில் சொன்னேன் என்றாயே. பார்த்தாயா இன்னும் பதில் வரவில்லை. நீ போகும் போது அந்த ஐயர் அம்மா வெள்ளை சேலையோடை வந்த போதே நினைத்தேன் சகுனம் சரியில்லை என்று" என்றாள். .

"ஏன் அம்மா வீணாக அந்த நல்ல மனுசி மேலே பழியைப் போடுறாய்?. யார் கண்டது அவவை நான் இண்டர்வியூவுக்கு போகைக்கை சந்தித்தது ஒருவேளை நல்லதை செய்யலாம்" என்றான் ரவி.

வாசலில் போஸ்ட்மென் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. ரவி ஓடீப்போய் அவன் கொண்டுவந்த கடிதத்தை வாங்கினான். அவன் இண்டர்வியூவுக்கு போன கொம்பெனியில் இருந்து வந்த கடிதம் அது. என்ன கடிதத்தில் எழுதியிருக்கோ என்ற பதட்டத்துடன் பிரித்து வாசித்த அவனுக்கு தனக்கு வேலை கிடைத்துவிட்டதை நம்பமுடியவில்லை. மனதுக்குள் கனகாம்பாள் அம்மாவுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டான்.

"அம்மா எனக்கு வேலை கிடைத்து விட்டது. அதுவும் கனகாம்பாள் அம்மாவுடைய உதவியுடன்." என்று மகிழ்ச்சி பீரிடச் சொன்னான்.

"நீ என்ன சொல்லுகிறாய்?. உனக்கு வேலை கிடைத்ததிற்கும் அவவுக்கும் என்ன சம்பந்தம்?

"நான் இண்டர்வியூவுக்கு போன அன்று அவவை ரோட்டிலை சந்தித்தனான். அவவுடன் கதைத்தபோது நான் எந்த கொம்பனிக்கு இண்டர்வியூவுக்கு போகிறன் என்று சொன்னேன். அந்த கொம்பெனியில் தான் தனது அண்ணன் டிரெக்டராக இருக்கிறார் என்றும் நான் விரும்பினால் அவரோடை போனில் பேசி பார்க்கிறன் என்று சொல்லி என்னிடம் இண்டர்வியூ விபரங்களை வாங்கிக் கொண்டாள். நிச்சயமாக ஐயர் அம்மா அவவிண்டை தமையனோடை என்னைப் பற்றி கதைத்திருக்கவேண்டும். என்னை இண்டர்வியூ செய்த மூன்று பேரில் அவரும் ஒருவர். மார்கட்டிங் டிரெக்டர் என்ற பதவியில் அவர்தான் குழுவுக்கு தலைமை தாங்கினார்."

தங்கம் பதில் பேசாது அதிர்ச்சியில் நின்றாள். தான் சொன்ன சகுனம் பிழைத்து விட்டதே என நினைத்து மனதுக்குள் கோபப்பட்டாள். அதே சமயம் மகனுக்கு உத்தியோகம்

கிடைத்ததையிட்டு மனதுக்குள் மகிழ்ச்சி. விட்டுக் கொடுக்காமல் “ யார் குத்தி அரிசி ஆனாலும் சரி என்ற” தன் கருத்தை தெரிவித்து விட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

****

## *கதை 5*

# கோவில் பிரவேசம்

*யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கோயில்களில் மாவிட்டபுரம் முருகன் திருத்தலம் தொன்மையும் பழமையும் வாய்ந்தது. யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் 9 மைல் தொலைவில் உள்ளது. இவ்வூருக்குப் பெயர்வந்த வரலாறும், கோவிலின் வரலாறும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. ஒரு இளவரசிக்கு குதிரை(மா) முகம் இல்லாது போனதால் மாவிட்டபுரமாயிற்று. 7ம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட உக்கிரப்பெருவழுதி மன்னன் மகள் மாருதப்புரவல்லியால் தோற்றுவிக்கப்பட்டது மாவிட்டபுரம் கோவில். குன்மை நோயினாலும் குதிரைமுகத்துடன் வருந்திய இளவரசி கீரிமலையில் தீர்த்தமாடி முருகனை வணங்கியதால் அவளது குதிரைமுகமும், குன்ம நோயும் நீங்கிப் பேரழகு பெற்றதாக வரலாறு சொல்கிறது. இக்கோயிலுக்குள் தீண்டத்தகாத கீழ் சாதி மக்கள் செல்வது ஒரு காலத்தில் தடைசெய்யப்பட்டிருந்தது. காலப்போக்கில் முற்போக்குவாதிகள் எல்லா சாதி மக்களினது கோவில் பிரவேசத்துக்காக போராடினர். அதை மையமாக வைத்து இக்கதை எழுதப்பட்டது.*

*மாவிட்டபுரத்திலிருந்து தெற்கே 4 மைல் தூரத்தில் உள்ள கிராமம் உடுவில். இராமலிங்கமும், சிவலிங்கமும் நண்பர்களும், உறவினர்களும் ஆனால் ஒருவருக்கு ஒருவர் எதிர்மாறான போக்குள்ளவர்கள். இருவரும் உடுவில் கிராமத்தில்; உயர் வேளாள சாதியைச் சேர்ந்தவர்கள். இருவரும்; வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்து, ஒன்றாக பேராதனைக் பல்கலைக்கழகத்துக்கு மேற்படிப்புக்காகச் சென்றவர்கள். இராமலிங்கத்தின் தந்தை தியாகர் என்ற தியாகலிங்கத்துக்கு சுன்னாகத்திலும், யாழ்ப்பாணத்திலும் பல கடைகள் இருந்தன.*

*தியாகர் என்ற தியாகலிங்கம் வசதி படைத்த பணக்காரர். அரசியல்வாதி. அவர் சுன்னாகம் நகரசபைத் தலைவராக செயலாற்றுபவர்;. தனது மகன் இராமலிங்கமும் தன்னைப் போல் அரசியல்வாதியாக வேண்டும் என்பது அவர் விருப்பம். இராமலிங்கமும் பொலிட்டிக்கல் சயன்சில் பட்டம் பெற்றவன். எவ்வளவு படித்திருந்தாலும் அவன் தந்தையைப் போல ஒரு பழமைவாதி. தீண்டாமையை ஆதரிப்பவன். தான் உயர் சாதியை சேர்ந்தவன் என்ற கர்வம் வேறு. இதற்கு எதிர்மாறான குணம் படைத்தவன் சிவலிங்கம். தமிழைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றவன். முற்போக்குவாதி. மக்களிடையே நிலவும் மூடநம்பிக்கைள், சாதி வேற்றுமை, ஆணாதிக்கம், மனித உரிமை மீறல் , சீதனம் வாங்குவது போன்றவற்றை எதிர்ப்பவன். கட்டுரைகள், கவிதைகள், கதைகள் எழுதுவதில் ஆர்வம் காட்டிவந்தான். பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது லங்கா சமசமாஜி கட்சிக்கு*

ஆதரவாளனாக இருந்தான். அதனால் பல சிங்கள மாணவர்கள் அவன் நண்பர்களாக இருந்தார்கள்.

“ஏன் சிவா நீ அந்த சமசமாஜி அரசியல் கட்சியை ஆதரிக்கிறாயே, அக்கட்சி “சிங்களம் மட்டும்” என்ற அரசின் கொள்கைக்கு ஆதரவளிக்கும் கட்சி” என்று உனக்குத் தெரியாதா”? என்று இராமலிங்கம் சிவாவைக்கேட்டபோது அதற்கு அவன் “ இராம் அது ஒரு சோசலிஷ கொள்கையுள்ள கட்சி. தொழிலாளர்களுக்கு தேவையான கட்சி. என் கொள்கைக்கு ஒத்துப்போகும் கட்சி. அதனால் ஆதரிக்கிறேன்” என்றான்.

சிவாவின் தந்தை புண்ணியலிங்கம் பிரசுரம் ஒன்றையும், “சமதர்மம்” என்ற முற்போக்கு வாரப்பத்திரிகையையும் நடத்திவந்தார். பல்கலைக் கழகப் படிப்பு முடிந்ததும், சிவா தன் தகப்பனின் பிஸ்னஸ்சை பொறுப்பெடுத்து நடத்தத் திட்டமிட்டிருந்தான். தந்தையின் வேண்டுகோளின் படி சமதர்மம்; பத்திரிகைக்கு ஆசிரியராக கடமையாற்றத் தொடங்கினான். தன் முற்போக்கு எண்ணங்களை அப்பத்திரிகை மூலம் வெளிக்காட்டினான். சீன சார்பான பொதுவுடமைக்கட்சியில் சேர்ந்து சிவா அதில் பொறுப்பான பதவி வகித்தான்.

1960ல் யாழ்ப்பாணத்தில், கோவில்களிலும் பொதுவிடங் களிலும் தீண்டாமை தீவிரமாக கடைப்பிடிக்கப் பட்டது. தாழ்த்தப்பட்டோர் பல கோயில்களுக்குள் பிரவேசிக்க முடியாது. கோயிலின் பரிசுத்தம் கெட்டு விடும் என்பது கோயில் உரிமையாளர்களின் வாதம். குறிப்பிட்ட பாடசாலைகளில் படிக்க முடியாது. பொது உணவகங்களில் உயர் சாதியினரோடு சரி சமனாக இருந்து உணவு உண்ணமுடியாது. பொதுக் கிணற்றையோ, குளத்தையோ பாவிக்க முடியாது. படித்தவர்கள் அதிகமாக வாழும் யாழ்ப்பாணத்தில் அத்தகைய வேறுபாடு இருப்பதை சிவாவால் நம்பமுடியவில்லை. சிங்களவர்கள் தம்மை குறைத்து மதிப்பிடுகிறார்கள் என்று குறை கூறும் தமிழர்கள் தம் இனத்தைச் சேர்ந்த ஒரு சாதியினரைப் பாகுபாடு காட்டி நடத்துவது சிவாவுக்கு புரியாத புதிராக இருந்தது. தீண்டாமையை ஒழிக்கப் பல கட்டுரைகளை சமதர்மத்தில் சிவா பிரசுரித்தான். தீண்டாமைக்கு எதிராக நடத்தப்பட்ட ஊர்வலங்களை முன்னின்று நடத்தினான்.

சிவாவுக்குத் துணையாக சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த பொன்னுத்துரை என்ற இளைஞன் இருந்தான். மூன்று மொழிகளும் சரளமாகப் பேசக்கூடியவன். சமுதாயத்தின் கட்டுப்பாடுகளை மீறி தெற்கே போய் கல்வி கற்றவன். பிறருக்கு உதவவேண்டும் என்ற குணம் பொன்னுத்துரைக்கு இருந்தது. உணர்ச்சியைத் தூண்டக்கூடிய கட்டுரைகளை எழுதும் திறமை படைத்தவன். கவிஞன். துரையின் தந்தை பனை மரம் ஏறி கள் இறக்கும் பரம்பரைத் தொழிலை “செய்யும் தொழிலே தெய்வம்” என்பது போல தொடர்ந்து செய்துவந்தார். துரையும் பொதுவுடமைக்கட்சியில் அங்கத்தினராக இருந்து, ஊர்வலங்களில் பங்கேற்றான்.

பொன்னுத்துரை பல எதிர்ப்புகளை மீறி படித்து சமதர்மம் பத்திரிகைக்கு உதவி ஆசரியராக கடமையாற்றினான். இராமலிங்கத்துக்கு சிவாவின் போக்குப் பிடிக்கவில்லை. சிறுவயது முதற்கொண்டே ஒன்றாக வளர்ந்து, நண்பர்களாக இருந்ததினால் இராமலிங்கத்தால் சிவாவோடு கதைக்காமல் இருக்கவும் முடியவில்லை

****

அன்று தீண்டாமையை எதிர்த்து மாவிட்டபுரம் கோவிலுக்கு முன்னால் நடக்கவிருக்கும் கிளர்ச்சி கூட்டத்துக்கு எதிர்பாராதவாறு அதிக கூட்டம் கூடியிருந்தது. பக்கத்து ஊர்களிலும் இருந்து சனங்கள் பஸ்சில் வந்திருந்திருந்தார்கள். வந்திருந்தவர்கள் பெரும்பாலும் இளைஞர்கள். சிலர் சிவப்பு நிறச்சட்டை அணிந்து தாங்கள் பொதுவுடமைக் கட்சி ஆதரவாளர்கள் எனக் காட்டிக் கொண்டனர் வன்முறையைத் தவிர்க்க வேண்டும், பொறுமையை மீறாதீர்கள் என்று எச்சரிக்கை விட்டபடியே சிவாவும், துரையும் இருந்தனர். வந்திருந்தவர்களில் பலர் பொதுவுடமைக் கட்சியின் சிவப்பு நிறக்கொடியினை தூக்கியவாறு, "தீண்டாமை ஒழிக! கோயிலை எல்லோருக்கும் திறந்துவிடு. இறைவன் எல்லோருக்கும் பொது முருகன் முடித்தது வேடுவப் பெண்ணை " என உரத்து பல கோஷங்கள் போட்டபடி இருந்தனர்.

வன்முறை வெடிக்கக் கூடாது என்பதற்காக இரு பொலீஸ் இன்ஸ்பெக்டர்களும், பல பொலீஸ்காரர்களும் பிரச்சனை எச்சமயமும் எல்லையை மீறலாம் என எதிர்பார்த்து, பேட்டன் என்ற கைத்தடிகளோடு நின்றனர். மக்களின் கோஷங்கள் குறிப்பிட்ட பிரபல உயர்சாதி மக்களை குறிவைத்ததாக இருந்தது. அதில் இராமலிங்கத்தின் தந்தை பெயரும் அடிபட்டது.

"கோயில் கதவுகள் மாலை ஆறு மணிக்கு முதல் எல்லோருக்கும் திறக்கப்படாவிடில் நாம்; அனைவரும்; வலுக்கட்டாயமாக கோவிலுக்குள் பிரவேசிக்க வேண்டி வரும்" என எச்சரிக்கை விட்டான் சிவா. அவன் பேச்சைக் கேட்டு, வந்திருந்தகூட்டத்தில் ஒரே கைதட்டல்கள். சிவா பேசும் போது பட்டாசுகள் வெடிச் சத்தமும் ஒரு சிலரின் கூப்பாடுகளும் விசில் சத்தங்களும் சிவாவை பேசவிடாது தொந்தரவு செய்தன. தூரத்தில் இராமலிங்கம் மூவரோடு சிரித்தபடி தன் கார் அருகில் நிற்பதை சிவாவால் அவதானிக முடிந்தது. இராமலிங்கம், கூட்டத்தைக் கலைக்கும் நோக்கத்தோடே வந்திருக்கிறான் என்பதை சிவா புரிந்து கோண்டான்.

இராமலிங்கம் மாவிட்டபுரக் கோயிலின் பரிபாலன சபையின் செயலாளர். அச்சபையில் உயர்சாதி மக்களே அங்கம் வகித்தனர். கோயில் உரிமையாளராக தலைவராக இருந்தார். தியாகலிங்கம் " பாதுகாப்போம் இந்து மதத்தை" என்ற கொள்கையோடு அப்பரிபாலனசபை இயங்கி வந்தது. பிற்போக்கு கொள்கைகளையுடைய அச்சபைக்கு சில

அரசியல்வாதிகளினதும், பணக்கார உயர் சாதியினரதும் ஆதரவு இருந்தது. தியாகலிங்கதின் தந்தை சுந்தரலிங்கம் பிரிட்டிஷ் காலத்தில் முதலியார் பாடம் பெற்றவர் . அதனால் மிடுகோடு நடந்தார் .

சிவா தன் பேச்சு முடிவில் ''நீங்கள் எல்லோரும் தீண்டாமையை ஒழிக்க ஆதரவா? என்ற கேள்வியைக் கேட்டபோது.

''ஆம் நாங்கள் எல்லோரும் தீண்டாமையை ஒழிப்போம். தடைகளை மீறுவோம்'' என்ற பதில் கூட்டத்தில் இருந்து வந்தபோது கற்களும், உடைந்த போத்தல்களும் கூட்டத்தை நோக்கி வீசப்பட்டன. ஒரு கல் சிவாவின் மேல் வந்து விழுந்தது.

''என்ன கல்மழை பொழிந்தாலும் எமது உறுதியை மாற்றமுடியாது'' என்று உரக்கக் கூவினான் சிவா. கூட்டத்தில் இருந்தவரகள் பார்வை கற்களும் போத்தல்களும் வந்த திசை நோக்கிச் சென்றது. இராமலிங்கம் தன் கார் அருகில ஒரு கூட்த்தோடு சிரித்தபடி நிற்பதைக் கண்டார்கள். பலர் கோவில் பரிபாலன சபை அங்கத்தினர்களை இராமலிங்கத்தோடு நின்ற கூடடத்தில் அடையாளம் கண்டு கொண்டார்கள். கற்கள் வீசப்படுவதற்கு கோயில் பரிபலான சபையே காரணம் என்பதைப் புரிந்து கொள்ள எழுச்சிக் கூட்டத்துக்கு வந்திருந்தோருக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. சிலர் இராமலிங்கத்தின் காரை நோக்கி ஓடினார்கள். பயத்தில் இராம் தன் காருக்குள் தனது ஆதரவாளர்கள் சிலரோடு ஏறி காரை புறப்பட ஸடார்ட் செய்ய முயற்சித்தான். கார் ஸ்டார்ட் செய்யாமல் தகராறு செய்தது.

''டேய் ராம் வெளியே வாடா ''என்று கோபத்தில கூட்டம் காரைத் தாக்கியது. பொலீசால் கூட்டத்தின் தாக்குதலை கட்டுப்படுத்த முடியவில்லை. பொங்கி எழுந்த தாக்குதலால் இராமலிங்கம் தலையிலும் முகத்திலும் காயம் ஏற்பட்டு இரத்தம் வழியத் தொடங்கியது. இதைக் கண்ட சிவாவும் துரையும் இராமலிங்கததை காப்பாற்ற அவனின் காரை நோக்கி ஓடினார்கள்.

''போதும் நிறுத்துங்கள் வன்முறை வேண்டாம். இதுவல்ல எமது நோக்கம்'', சிவாவின் குரல் கேட்டு இராமலிங்கத்தின் கார் அருகே நின்ற சனங்கள் தாக்குதலை நிறுத்தியது. இராமலிங்கம் மயங்கிய நிலையில காருக்குள் கிடந்ததைக் கண்ட சிவா தன் நண்பன் ஒருவனின் காரில் பொன்னுத்துரையின் உதவியோடு சுன்னாகம் ஆஸ்பத்திரிக்கு இராமலிங்கத்தை விரைவாக கூட்டிச் சென்றான்.

*****

இராமலிங்கத்தை பரிசோதித்து பல டெஸ்டுகளைச் செய்து, இரத்தம் அதிகம் விரையமாகி இருப்பதைக் கண்ட டாக்டர்;. ''உடனடியாக தேவையான இரத்தம் கொடுக்காவிடில் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். ஆனால் ஒரு பிரச்சனை'' என்றார்.

*"என்ன பிரச்சனை டாக்டர்? என் நண்பனின் உயிரைக்காப்பாற்ற நான் என் இரத்தத்தைக் தரத் தயார்" சிவா உணர்ச்சியோடு சொன்னான்.*

*"பிது சரி உமது பிளட் குரூப் என்ன?".*

*"எ பொசிட்டிவ்."*

*"அங்கைதான் பிரச்சனையே இருக்கு. இரத்தப் பரிசோதனை செய்த போது உமது நண்பனின் இரத்தம் இலகுவில் கிடைக்க முடியாத பி நெகட்டிவ்வைச் சேர்ந்த குரூப் என்று தெரியவருகிறது. இந்த இரத்தம் தற்போது இரத்த வங்கியில் இல்லை. யாழ்ப்பாண பெரிய ஆஸ்பத்திரியில் இருந்து வர வேண்டும். அதற்கு அதிக நேரம் எடுக்கலாம். இந்த குருப் இரத்தம்; கிடைப்பதும் அருமை. அந்த இரத்த குருப் உள்ளவர்கள் உங்களில் யாராவது இரத்தம் கொடுக்க முன்வந்தால் சரி அல்லது உயிருக்கு ஆபத்து " என்றார் டாக்டர்.*

*"டாக்டர் நான் இருக்கிறன் இரத்தம் கொடுக்க" என்றது ஒரு குரல்.*

*குரல் வந்த திசையை நோக்கி திரும்பிப் பார்த்தான் சிவா. அக்குரல் பொன்னுத்தரையினுடையது என்று தெரியவந்தது.*

*"என்ன துரை உண்டை இரத்தக் குரூப் பி நெகட்டிவ்வா?"*

*"ஓம். நான் இரத்த வங்கிக்கு இரத்தம் கொடுப்பவன். அதனால் எனக்கு நிட்சயம் தெரியும் எனது பிளட் குருப் பி நெகட்டிவ் என்று." பொன்னுத் துரை உறுதியாகச் சொன்னான்.*

*சிவாவால் நமபமுடியவில்லை. விதி எப்படி மனிதனைச் சோதிக்கிறது என்று. ஒரு தீண்டப்படாத சாதியைச் சேர்ந்த ஒருவனின் இரத்தம் உயர்சாதியைச் சேரந்த இராமலிங்கத்துக்கு கொடுப்பதா? சிவா சற்று நேரம் சிந்தித்தான். இராமலிங்கத்தின் தந்தை தியாகர் அறிந்தால் என்ன சொல்லுவார்?. தன் நண்பனின் உயிர் பெரிதா? சமூகஅந்தஸ்த்து. சாதி பெரிதா? செயவதறியாது திகைத்து நின்றான் சிவா.*

*டாக்டருக்கு பிரச்சனை விளங்கவில்லை. " ஏன் தாமதிக்கிறீர்கள். பக்கத்திலை பி நெகட்டிவ் பிளட் குருப்பில் ஒருவரை வைத்துக் கொண்டு யோசிக்கவும் வேண்டுமா? நேர்ஸ் உடனே பிளட் டிரான்ஸ்பியூசனுக்கு ஆயித்தப் படுத்துங்கள் " என்றார் நேர்சைப் பார்த்து டாக்டர். நடப்பது நடக்கட்டும் மென்று சிவா தன் சம்மதத்தை தெரிவித்தான்.*

****

*இராமலிங்கம் கண்விழித்த போது பக்கத்தில் சிவாவும் பொன்னுத்துரையும் நிற்பதைக் கண்டான். ஓரத்தில் இராமலிங்கத்தின் தந்தை தியாகலிங்கம் நடப்பதை பார்த்தபடி அமைதியாக நின்றார்.*

“தாங்கியூ டாக்டர்; என்னுயிரைக் காப்பாற்றியதுக்கு” இரமலிங்கம் கண்கலங்கச் சொன்னான்.

“எனக்கு நன்றி சொல்லாதையும். அதோ உமக்கு பக்கத்தில் நிற்கிறாரே அவருக்கு நன்றி சொல்லும். அவர் தன் இரத்தத்தைத்’ தக்க நேரத்தில் கொடுததிருக்காவிட்டால் நீர் உயிர் தப்பி இருப்பீரோ என்பது சந்தேகம்”, என்றார் டாக்டர்.

தன் உடலில் ஓடுவது தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பொன்னுத்துரையின் இரத்தம் என்பதை அறிந்து கொள்ள இராமலிங்கத்துக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. துரையைத் தன்னருகே அழைத்து அவன் கைகளைப் பிடித்து “தாங்கியூ பொன்னுத் துரை உன் உதவிக்கு ” என்றான் இராமலிங்கம். அவனது கண்ணீர்த் துளிகள் பொன்னுத்துரையின் கைகளில் விழுந்தன. தூரத்தில் சுன்னாகம் பிள்ளையார் கோவிலின் மணியோசை கேட்டது.

****

## *கதை 6*

## *ஆணாதிக்கம்*

### *முகவுரை*

*ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் ஒருத்தியிருப்பாள் என்பது உண்மை. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். பெண்களின் புனிதத்தையும் திறமையும் மதிக்காத ஆண்கள் அனேகர். இந்தக் கதை அத்தகைய ஆண் ஒருவனைப்பற்றியது.*

*ராஜ் என்று அழைக்கப்படும் இராஜரத்தினம் யாழ்ப்பாணம் கச்சேரியில் உதவி அரசாங்க அதிபர் வேலை செய்பவர் .தற்புகழ்ச்சியை விரும்புபவர். சுயநலவாதி. பெண்களை மதிக்காதவர். எதையும் திட்டமிட்டே செய்வார். அன்று யாழ்ப்பாணக் கச்சேரியில் கொழும்பிலிருந்து வந்திருந்த உள்நாட்டு விவகார அமைச்சருக்கான கூட்டம்;. மதிய போசனம் உற்பட கூட்டத்தை ஒழுங்கு செய்யும் பொறுப்பை இராஜரத்தினத்திடம் அரசாங்க அதிபர் கொடுத்திருந்தார். அந்தக் கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்களின் பிரச்சினைகளைக் கேட்டு தீர்த்து வைக்கவே அமைச்சர் வந்திருந்தார். கூட்டத்தில் அமைச்சருக்கு அருகே தான்; அமர்வதற்கு ஏற்றவாறு இருப்பிடங்களை ராஜ் ஒழுங்கு செய்திருந்தார். அமைச்சரோடு சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் உரையாடி, தனக்குத் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் சரளமாக உரையாட முடியும் என்பதை அமைச்சருக்கு காட்டினார். அமைச்சர் ஆங்கிலத்தில் கேட்ட கேள்விகளுக்கு சிங்களத்தில் ராஜ் பதில் சொன்னார். அவரது முக்கிய நோக்கம், எஸ்எல்ஏஎஸ் (SLAS) எனப்படும் ஸ்ரீ லாங்கா பரிபாலன சேவையில் கிலாஸ் 1 க்கு பதவி உயர்வு பெற்று, இன்னும் சில மாதங்களில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் இளப்பாறிய பின்னர், தான் அந்த சீட்டைப் பிடிக்க வேண்டும் என்பதே. ''புளூரிப்பன்'' ஹொட்டலில் அமைச்சருக்கு மதிய போசனத்தை ராஜ் ஒழுங்கு செய்திருந்தார். பல விதமான யாழப்பாணத்து கறிகள், பழவகைகள் பரிமாறப்பட்டன. திருப்தி அடைந்த அமைச்சர் தனது உரையில் கூட்டத்தையும், போசனத்தையும் ஒழுங்கு செய்த ராஜைப் பாராட்டிப் பேசினார். எதை ராஜ் எதிர்பார்த்தாரோ அது நடந்தது. தனக்குள் ராஜுக்கு மகிழ்ச்சி .*

*அரசாங்க கிலரிக்கல் சேர்விசில், இருபத்தி மூன்று வயதில், ; சாதாரண கிளார்க்காக வேலை செய்ய ஆரம்பித்து படிப்படியாக தன் உயர் அதிகாரிகளுக்கு பந்தம் பிடித்து, விரைவாக பதவி உயர்வு பெற்றவர் ராஜ். சிங்களம் பேசவும் வாசிக்கவும் கற்றுக் கொண்டார். கொழும்பு, கண்டி, மாத்தறை ஆகிய இடங்களில் சில காலம் வேலை செய்தது அவருக்கு சிங்களம் கற்க உதவியாக இருந்தது. எவருக்கு கீழ் வேலை செய்கிறாரோ அவர் சொல்வதற்கெல்லாம் மறுக்காமல் ஆமோதிப்பதினால், ''பந்தங்காரையா'' என்று சக*

ஊழியர்கள் அவரைக் குறைவாக பேசினாலும், ராஜ் கவலைப்பட வில்லை. அவருக்குத் தன் காரியம் ஆனால் சரி.

யூனிவர்சிட்டியில் படித்து பட்டம் பெறும் வாய்ப்பு அவருக்கு கிட்டவில்லை. அந்தக் கவலை அவர் மனதில் இருந்தது. தான் அரச சேவையில் எப்படியும் உயர் பதவி வகிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவரிடம் தொடர்ந்து இருந்தது. இருபத்தி மூன்று வயதில் கிலரிக்கல் சேர்விசில் சேர்ந்த ராஜ், முப்பது வயதில் எஸ் எல் ஏ.எஸ் பரீட்சை எழுதி முதல் தடவையிலேயே சித்தியடைந்தார். ஆரம்பத்தில் கண்டி, மாத்தறை கச்சேரிகளிலிலும், திருகோணமலை கச்சேரியில் உதவி அரசாங்க அதிபாராகவும் கொழும்பிலும் கடமையாற்றி, அமைச்சர் ஒருவரின் உதவியோடு யாழ்ப்பாணக் கச்சேரிக்கு மாற்றலானார். யாழ்ப்பாண மாவட்டத்தில், நல்லூர், சாவகச்சேரி போன்ற இடங்களில் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றி, இறுதியில் யாழப்பாணக் கச்சேரியில் மேலதிக அரசாங்க அதிபரானார்.

ராஜின் தந்தை செல்வரத்தினம், யாழ்மத்திய கல்லூரியில் ஆசிரியராக வேலை செய்து இளப்பாறியவர். கோண்டாவிலைச் சேர்ந்த செல்வரத்தினம் தன் மனைவியோடு பிரச்சனைபட்ட வாழ்க்கையை நடத்தியவர். அவரது ஒரே மகன் இராஜரத்தினம். தந்தையைப் போல ஒரு சுயநலவாதி. அவருக்கு தன் காரியம் நடந்தால் போதும். ராஜ் அரச பரிபாலன சேவையான சிஏஎஸ் பாஸ் செய்து அரசில் உயர் பதவி வகித்த போது அவருக்குப் பல இடங்களில் இருந்து கலியாணம் பேசி வந்தது. கரம்பனைச் சேர்ந்த பெரிய பிஸ்னஸ்மன் தர்மலிங்கத்தின் ஒரே மகளான கௌரியை, கொழுத்த சீதனத்தோடு ராஜ் திருமணம் செய்தார். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இரு வீடுகள், பளையில் பத்து ஏக்கரில் தென்னந்தோட்டம். அதை விட நகை நட்டு, பணம் வேண்டியளவு தர்மலிங்கம் தன் ஒரே மகளுக்கு சீதனமாகக் கொடுத்தார். சீதனப் பணம் ஐந்துலட்சத்தில் இரண்டு இலட்சம் செல்வரத்தினத்துக்கு நன்கொடையாக கொடுத்த பின்னரே செல்வா தன் மகனின் திருமணத்துக்கு சம்மதித்தார்.

கௌரி, கொழும்பு லேடீஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வி படித்தவள். அடக்கமானவள். படிப்பில் கெட்டிக்காரி. கொழும்பு யூனிவர்சிட்டிக்குப் போய் அறிவியலில் முதன்மையாக பட்டம் பெற்றவள். படிப்பைத் தொடர்ந்து பௌதிகத்தில் பி.எச் டி பட்டம் பெறவேண்டும் என்பதே அவள் ஆசை. தர்மலிங்கம் அடிக்கடி சுகயீனப்படுவதால், தனக்கு ஏதும் நடக்க முன்பே மகளுக்குத் திருமணம் செய்து வைத்தார். .

“நீ கலியாணம் செய்த பிறகு உன்றை கணவனின் அனுமதியோடு படிப்பைத் தொடரலாம்” , என்றார் தர்மலிங்கம்.

கௌரி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் பௌதிக ஆசிரியையாக வேலை செய்யத் தொடங்கினாள். அவள் படிப்பித்த ஏலெவல் மாணவிகள் ஒருவராவது பௌதிகத்தில

சித்தியடையாமல் போனதில்லை. கௌரி பிரபல்ய பௌதிக ஆசிரியையாக இருந்தது ராஜுக்கு அவ்வளவுக்கு விருப்பமில்லை. அத்தோடு ராஜரத்தினத்துக்கு தன் மனைவி வேலைக்குப் போவது மனதுக்கு அவ்வளவு திருப்தியில்லை. "அவள் வேலை செய்வதால் குடும்பத்துக்கு வருமானம் அதிகரிக்கும் என்பதாலும் , அதோடு கௌரி படித்த படிப்பு வீணாகப் போகக் கூடாது" என ராஜின் தாயின் கட்டாயத்தினால் மனைவி வேலை செய்வதற்கு ராஜ்; சம்மதித்தார். ராஜின் தாய் அன்னம்மாவுக்கு மருமகளுடன் நல்ல உறவு இருந்தது .

வீட்டில் சமைக்கும் உணவு தன் விருப்பத்திற்கு ஏற்றவாறு இருக்க வேண்டும் என்பது ராஜின் கட்டளை. கௌரி தன் இஷ்டத்துக்கு சமைக்க முடியாது கறிகள் கூட தன்னை கேட்டு செய்யவேண்டும். வீட்டில் உள்ள ஜன்னல் திரைச்சேலை முதற்கொண்டு கதிரை, மேசை சோபா, கட்டில் வரை அவர் தேர்ந்தெடுத்ததாக இருந்தது. கௌரியின் கருத்துக்கு ஒருநாளும் ராஜ் செவிசாய்த்தில்லை. வங்கிக் கணக்கு இருவர் பெயரில் இருந்தாலும் செக் புத்தகத்தை தான் வைத்துக்கொண்டார். கௌரியிடம் பிசிக்ஸ் டியூசனுக்காக மூன்று மாணவிகள் வீட்டுக்கு வருவதை ராஜ் அவ்வளவாக விரும்பவில்லை. கௌரி தோந்தெடுத்த கேள்விகள் இறுதி ஏலெவல் பரீட்சைக்கு அனேகமாக வருவதனால் மாணவிகளுக்கு கௌரி மீதி ஒரு தனி மதிப்பிருந்தது. மற்றைய கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகள் கூட அவளிடம் டியூசன் கேட்க வந்தாலும் அவள் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் ராஜுவுக்கு மாணவ மாணவிகள் வீட்டுக்கு வருவதும் , அவர்களின் பெற்றோர்கள கௌிரியின் படிப்பிக்கும் முறையை பாராட்டுவதும் அவருக்குப் பொறாமையைக் கொடுத்தது. ஒரு சமயம் அரசாங்க அதிபர் கூட கௌரியிடம் பிசிக்ஸ் படிக்கும் தன் மகள், கௌரி படிப்பிக்கும் முறை இலகுவாகவும், விளங்கக்கூடியதாகவும் இருப்பதாக தனக்குச் சொல்லியதைக் கூறி கௌரியை பாராட்டியது ராஜுக்கு எரிச்சலைக் கொடுத்தது. வேலை செய்யும் இடத்தில் பலருக்கு ராஜுவின் போக்கு பிடிக்கவில்லை. அவனுக்கு கீழ மூன்று பெண்கள் வேலை செய்தார்கள். அவர்களை ராஜ் வேறுபாடு காட்டி நடத்தினார். அவர்களை நடத்தும் விதம் சக ஊழியர்களுக்கு ராஜ்மேல் வெறுப்பைக் கொடுத்தது.

வேலை செய்த மூன்று பெண்களில் ஒருத்தியான டைபிஸ்ட வனிதா, பத்து வருடங்கள் டைபிஸ்ட்டாக வேலை செய்தவள். வனிதா சுருக்கெழுத்தும் தெரிந்தவள். ஆனால் ராஜுவுக்கு அவள் வேலையில திருப்தியில்லை. ஒருநாள வனிதா ஆங்கிலத்தில் டைப் செய்த முக்கிய கடிதத்தில் பல எழுத்துப் பிழைகள் இருப்பதைக் கண்ட ராஜ், அவளைப் பற்றி அரசாங்க அதிபருக்கு முறையிட்டு, யாழ்ப்பாணக் கச்சேரியில் இருந்து வவுனியா கச்சேரிக்கு வனிதாவை மாற்றம் செய்தார். நல்லூரில் குடும்பத்தோடு வாழ்ந்து வந்த அவளுக்கு, அந்த மாற்றம் அசௌகரியத்தைக் கொடுத்தது. வனிதாவின கணவனும் யாழ்ப்பாண மாநகரசபையில் வேலை செய்பவன். ராஜிடம் தன் மாற்றத்தை ரத்து

செய்யும்படி  வனிதா எவ்வனவு கேட்டும் ராஜ் சம்மதிக்கவில்லை. அரசாங்க அதிபரிடம் வனிதா முறையிட்டும், ஒன்றும் நடக்கவில்லை.

ராஜ் - கௌரி தம்பதிகளுக்கு திருமணமாகி இரண்டு வருடத்தில் மாலதி பிறந்தாள். தன் குழந்தை ஆண் குழந்தையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்த ராஜுவுக்கு மாலதி பிறந்தது பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. தன்னையறியாமலே மாலதியை வெறுக்கத் தொடங்கினார். தன் தாயை ஒரு வேலைக்காரி போல் தந்தை நடத்துவதைக்கண்டு வளர்ந்த மாலதி, தந்தையோடு பல தடவை வாக்குவாதப்பட்டிருக்கிறாள். தாயைப் போல் மாலதி படிப்பில் கெட்டிக்காரி, ஆனால் பிடிவாதக்காரி.

''மாமி. இவர் என்னோடு எப்போதும் சண்டைபோடுவதை மாலதி அவதானித்து வாராள். அதனாலை ஏன் அம்மா அப்பா உங்களோடை எப்பவும் குறைபிடித்து சண்டை போடுகிறார்? நீங்கள் படித்தவள் என்ற பொறாமையா? என்னிலையும்; அவருக்கு விருப்பமில்லை? அவருக்குப் பெண்களைப் பிடிக்காதா? என்று கேட்டிருக்கிறாள்'' என்றாள் மாமியாரிடம் கௌரி.

''இஞ்சை பார் கௌரி. குடும்பத்திலை கணவன் மனைவிக்கிடையே சண்டைச் சச்சரவு வருவது சகஜம். உங்கள் விசயத்தில மாலதியை தலையிடவேண்டாம் என்று சொல்லிவை,'' என்று கௌரியின் மாமியார் அன்னம்மா . அவளுக்கு மகனின் குணம் தெரியும் அதனால் கௌரிக்கு அறிவுரை சொன்னாள். அவளுக்கு தன் பேத்தி மாலதியின் குணம் பற்றி தெரியும்.. அவள் தந்ததையோடு தாயை ஆதரித்து வாதாடுவதை அன்னம்மா கண்டிருகிறாள் .

சில நாட்களாக மாலதி ஸ்கூல் முடிந்து வீட்டுக்கு தாமதித்து வரத் தொடங்கினாள். ராஜ் அதைபற்றி மகளிடம் விசாரிக்கவில்லை. கௌரிக்கும,; ராஜின் தாயுக்கும் மாலதி தாமதமாக வருவதைப் பற்றி; கவலை. மகளை தாமதித்து வருவதைக் கண்டிக்கும்படி கௌரி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ராஜ் கேட்கவில்லை.

''ஏன் மாலதி இப்ப சில நாட்களாக ஸ்கூல் முடிந்து தாமதித்து வருகிறாய்'' என்று கௌரி கேட்டதுக்கு தன் வகுப்பு மாணவிகளுக்கு கணித பாடத்தில் உதவிசெய்வதாக விளக்கம் கொடுத்தாள். திடீரென ஒரு நாள் மாலதி ஸ்கூலில இருந்து வரவேயில்லை. கொளரிக்கும் மாமியாருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. மகளைக் காணவில்லை என்று ராஜ் கவலைப்படவில்லை.

''என்ன தம்பி, மாலதி விடுதலைப் புலிகளின் இயக்கத்தில சேர்ந்துவிட்டதாக பக்கத்து வீட்டு இந்திரன் சொல்லி கேள்விப்பட்டேன். இந்திரனுக்கு இயக்கத்திலை பல பெடியன்களைத் தெரியும். அவள் இயக்கத்தில் சேர்ந்தது உனக்குத் தெரியுமா?, விதானையாரின் மனைவி ராஜைக் கேட்டாள். அவளுக்கு ஊரில் நடக்கும் விஷயங்கள் எல்லாம் தெரியும்.

*"மாமி. அவள் விருப்பப்படி இயக்கத்தில் சேர்ந்து விட்டாள். அதுக்கு நான் என்ன செய்யமுடியும்? ஒரு சனியன் தொலைந்தது என்று இருக்கட்டும். என் சொல்லை அவள் ஒரு நாளும் கேட்பதில்லை." என்றார் ராஜ் கோபத்தோடு, தான் அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகக் காட்டிக் கொள்ளாமல் இருந்தார்..*

*விதானையார் மனைவி, மாலதியைப் பற்றிய நியூஸ் சொல்லி அடுத்த நாள், "அத்தான் இந்த கடிதத்தை பார்த்தீர்களா. ஒரு பெடியன் உங்களிடம் கொடுக்கச் சொல்லி தந்துவிட்டுப் போனவன்."*

*"கடிதமா?. எங்கை வாசி."*

*கௌரி கடிதத்தை வாசிக்கத் தொடங்கினாள்*

*அன்பின் அப்பா, அம்மா, அப்பம்மாவுக்கு..*

*எனக்கு தெரியும் நான் உங்களைவிட்டுப் பிரிய எடுக்கும் முடிவை கேள்விப்பட்டு நீங்கள் பெரும் கவலைப்படுவீர்கள் என்று. இந்த முடிவை நான் எடுப்பதுக்கு முக்கிய காரணம், அப்பா அம்மாவை வேலைக்காரி போல நடத்தும் விதம். அப்பா ஒரு பழமைவாதி. ஆண் ஆதிக்க மனப்பான்மை உள்ளவர். மனைவிக்கு தகுந்த இடம் அடுப்படி என்பதே அவர் எண்ணம். நான் அவர் குணத்தை மாற்றச் சொல்லி எவ்வளவோ கேட்டும் அவர் மாறவில்லை. அது அவர் பிறவிக் குணம். அப்பப்பாவும் அவரைப் போலவே அப்பம்மாவை நடத்தியவர் என்று அப்பம்மா சொல்லி கேள்விப்பட்டேன். நான் இயக்கத்தில் சேர வேண்டிய முக்கிய நோக்கம் பெண்களும் ஆண்களைப் போன்று எதையும் சாதிக்க கூடியவர்கள் என்பதை அப்பாவுக்கு நிரூபித்துக் காட்ட. விடுதலை புலிகள் இயக்கத்தில் ஆண் பெண் என்ற வேறுபாடு கிடையாது. இயக்கத்தில் எனது சினேகிதி சங்கரி சேர்ந்ததைப் போல் சேர்ந்து, தமிழ் இனத்தின் விடுதலைக்கு, பெண்களின் பங்கில் நானும் ஒருத்தியாக இருக்க முடிவெடுத்தேன். சமூகத்தில் நிலவும் பழமையையும் ,மூடநம்பிக்கைகளையும் களைந்தெறிந்து தமிழ் இனத்தின் விடுதலைக்காக உழைப்பேன். மாலதி என்ற பெயருள்ள ஒரு மகள் இருந்தாள் என்பதை மறந்துவிடுங்கள். நான் எல்லாப் பெண்களைப் போல் பிள்ளைகள் பெறும் இயந்திரமாக இருக்க விருப்பப்படவில்லை. சமூகத்துக்கு சேவை செய்வதே எனது குறிக்கோள்.*

நன்றி

மாலதி

*கடிதத்தில் தன் ஒரே பேத்தி எழுதியிருந்ததை ராஜின் தாய் கேட்டதும். தலைசுற்றி கீழே விழுந்தாள். ராஜ், கௌரி இருவரும் சேர்ந்து அவளை தூக்கிப்போய் கட்டிலில கிடத்தினார்கள. சில நிமிடங்களுக்கு பின்னர் ராஜின் தாய் கண்விழித்தபோது மகனும், மருமகளும் அருகே நிற்பதைக் கண்டாள். ராஜை தன் அருகே அழைத்து" இப்போ*

நடந்ததைப் பார். இதுக்கெல்லாம் நீதான் காரணம். நீ கௌரியை நடத்தும் விதம் மாலதியின் மனதை புண்படுத்திவிட்டது. அது தான் அவள் இயக்கத்தில் சேர்ந்துவிட்டாள். இனியாவது உன் போக்கை மாற்று'' என்றாள் கவலையோடு ராஜின் தாய். கௌரி மௌனமாக நின்றாள்.

''உங்கள இரண்டு பேருக்கும் மாலதியின் போக்கு தெரியும். அவளுக்கு இயக்கத்தோடு தொடர்பு இருந்ததாக எனக்கு சொல்லியிருந்தால், நான் அவளை கொழும்பில உள்ள ஸ்கூல் ஒன்றில் சேர்த்து, போர்டிங்கில் போட்டிருப்பேன். இந்த சூழ்நிலையில இருந்து விடுபட்டிருப்பாள்'', ராஜ் தாயின் மீதும் மனைவி மீதும் குற்றம் சுமத்தினார்.

சில வாரங்கள் உருண்டோடின. மாலதியிடம் இருந்து ஒரு தகவல்களும் வரவில்லை. மாலதியைப் பிரிந்த கவலை கௌரியையும் அவள் மாமியாரையும் வாட்டியது. ஒரு நாள் காலை, ராஜ் தனக்கு கீழ் வேலை செய்பவர்களோடு ஒரு மீட்டிங்கில் இருந்த சமயம், அரசாங்க அதிபரின் பிரத்தியேக செயலாளாளர் ஒரு செய்தியோடு வந்தார்.

''சேர் ஜி.ஏ உங்களை உடனடியாகப் பாரக்க வேண்டுமாம். தன் அறைக்கு வரட்டாம்''. செய்தியை ராஜுக்கு அறிவித்துவிட்டு பதிலுக்கு காத்திராமல் போய்விட்டார். ஜி.ஏ ஏன் தன்னை கூப்பிடுகிறார் என்பது விளங்கவில்லை. மீட்டங்கை ஒத்திவைத்துவிட்டு அவசரம் அவசரமாக ஜி.ஏ யின் அறைக்கு ராஜ் போனார்.

அறைக்குள் ஜி.ஏயைத் தவிர இன்னும் இருவர் இருந்தனர். ஒருவர் யாழ்ப்பாண மாவட்டத்தின் டி.ஐ.ஜி. மற்றவர் பிரிக்கேடியர். அவர்கள் இருவரையும் ராஜ் முன்பே சந்தித்திருக்கிறார்.

''ராஜ் உமக்கு ஹோம் மினிஸ்டிரி செயலாளரிடம்; இருந்து கடிதம் ஒன்று வந்திருக்கிறது. உம்மை தற்காலிகமாக வேலையில இருந்து நிறுத்தி வைக்கும்படியும், வேலையில் இல்லாத காலத்தில அரைமாதம் சம்பளம் கொடுக்கும் படியும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. செயலாளர் தன் கையொப்மிட்டு கடிதத்தை அனுப்பியுள்ளார்.'' என்று கடிதத்தை ஜி.ஏ.ராஜிடம் கொடுத்தார்.

''என்ன சேர் சொல்லுறியள்? எதற்காக என்னை தற்காலிகமாக வேலையில் இருந்து நிறுத்தவேண்டும்?

''கடிதம் என்கையில் கிடைத்தவுடன், நான், செயலாளரோடு கதைச்சனான். உமது மகள் புலிகள் இயக்கத்தில் சேர்ந்துவிட்டதாகவும், அது உமக்கு தெரிந்திருந்தும் நீ ஒபீசுக்கு அறிவிக்கவில்லை என்றும் நீர் தொடர்நது வேலை செய்வது ஆபத்து என்று ஒரு பெட்டிசன் வந்ததாகவும். அதைத் தீர விசாரித்த பின்னரே அமைச்சரின் அனுமதியோடு இந்த நடவடிககையைத் தான் எடுத்தாகச் சொன்னார். அது சரி ஏன் நீ உமது மகள் இயக்கத்திலை சேர்ந்ததை பற்றி எனக்கு முன்பே அறிவிக்க வில்லை?'' ஜி.ஏ கேட்டார்.

"சேர் என மகள் இயக்கத்தில சேர்ந்து பல வாரங்களாகிவிட்டது. அவளை குடும்பத்தில் இருந்து ஒதுக்கி வைத்துப்போட்டேன். எனக்கும் அவளுக்கும் ஒரு தொடர்பும் இல்லை."

"தொடர்பு இருக்கிறதோ, இல்லையோ பாதுகாப்பு கருதி உடனடியாக நீர் எனக்கு அறிவிக்கத் தவறிவிட்டீர். அதுவே உம்மை வேலையில் இருந்து தற்காலிகமாக நிறுத்த வேண்டி வந்தது. இன்னுமொன்று சொல்ல வேண்டும். நீர் இருக்கும் ஊரை விட்டு வேறு ஊருக்கு பொலீசின் அனுமதியின்றி போகக் கூடாது. தினமும் யாழ்ப்பாண பொலீஸ் ஸ்டேசனுக்கு போய் உம்மை அடையாளம் காட்டி கையொப்பமிட வேண்டும். இது முக்கியம். டிஐஜி அதற்கான ஒழுங்குகளைச் செய்துள்னார்" என்றார் ஜிஏ கடுமை நிறைந்த தொனியில்;. அறைக்குள இருந்த டிஐஜியும், ஜிஏ சொல்வதை ஆமோதித்து சரியெனத் தலையாட்டினார்;.

மாலதி இயக்கத்தில் சேர்ந்தது தன்னைப் பாதிக்கும் என்று ராஜ் எதிர்பார்க்கவில்லை. தனது பல கால அரசசேவையில தனக்கு ஏற்பட்ட களங்கம் என்றது அவர் மனம். பெட்டிசன் போட்டது வேற எவருமாயிருக்காது. இது நான் டிரான்ஸ்பர் செய்த டைபிஸ்ட் வனிதாவின் வேலைதான். எனக்கு எதிராகப் பெட்டிசன் போட்டு பழிக்குப் பழி வாங்கிவிட்டாள். பாவி மனதுக்குள் கறுவிக் . கொண்டார் ராஜ்.

"ராஜ் உமது பைல்களையும் ஒபீஸ் சாவிகளையும் உமக்கு அடுத்த சீனியரான உதவி அரச அதிபர் ஆனந்தனிடம் கொடும். நான் ஏற்கனவே அவருக்கு சொல்லிவிட்டேன்" என்றார் ஜிஏ.

ராஜீவால் பதில் ஏதும் சொல்லமுடியவில்லை. கடிதத்தோடு குனிந்த தலையோடு ஜிஏயின் அறையைவிட்டு வெளியேறினார்.

****

ராஜ் கவலை தோய்ந்த முகத்தோடு, நேரத்தோடு வீடு திரும்பியது, கௌரிக்கு கணவனுக்கு ஏதோ நடந்து விட்டது எனபது புரிந்து கொள்ள அதிக நேரம் எடுக்கவில்லை. கவலையோடு கதிரையில் தலையில் கைவைத்தபடி அமர்நத கணவனைப் பார்த்து "அத்தான் களைத்தப்போயிருக்கிறியள் கோப்பி கொண்டுவாறன் என்று குசினுக்குள் போனாள். ராஜின் தாயுக்கு மகன் பேசாமல் இருப்பது விசனத்தைக் கொடுத்தது. வழமையாக வீட்டுக்குள் வந்ததும் கௌரியோடு சண்டை ஆரம்பிப்பவன் அன்று வித்தியாசமாக, அமைதியாக இருப்பது அவளுக்கு புரியவிலலை.

கௌரி கோப்பியைக் கொண்டு வந்து ராஜிடம் நீட்டினாள். நடுங்கும் கைகளோடு கோப்பிய வாங்கினார் ராஜ். அவர் கண்களில் இருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது. கௌரியும், ராஜின் தாயும் அதை எதிர்பார்க்க வில்லை. ஒருபோதும ராஜ் அழுதது கிடையாது. இன்று ஏன் இவர் கண்களில் கண்ணீர். மாலதிக்கு ஏதும் நடந்துவிட்டதா? கௌரிக்குப் பல யோசனைகள்.

*“கௌரி. என்னைத் தற்காலிகமாக வேலையில் இருந்து நிறுத்திவிட்டாங்கள். அமைச்சு செயலாளரிடம் இருந்து எனக்கு கடிதம் வந்திருக்கு. வேலையில இருந்து நிற்கும் காலத்தில் இனி அரைமாதச் சம்பளம் தான் எனக்கு” , கடிதத்தை மனைவியிடம் கொடுத்தார் ராஜ்.*

*கௌரி அமைதியாக கடிதத்தை வாங்கி வாசித்தாள்.” நீங்கள் அப்படி என்ன தவறு செய்தீகள் வேலையில் இருந்து உங்களை நிறுத்துவதற்கு”: கௌரி கவலையோடுகேட்டாள்.*

*தன்னை வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்திய காரணம் முழுவதையும் கௌரிக்கு ராஜ் எடுத்துச் சொன்னார்.*

*“அத்தான். அப்பவே நான் யோசித்தனான். மாலதி இயக்கத்தில் சேர்ந்ததையும், அதற்கு நீங்கள் பொறுப்பில்லை என்பதையும் ஜிஏயுக்கு அறிவிக்க வேண்டாமா என்று உங்களுக்கு சொல்ல. ஆனால் நீங்கள் எப்போது நான் சொல்வதை கேட்டு நடந்தியள்”?*

*“கௌரி நீர் சொல்வது உண்மை. நான் உம்மையும் மாலதியையும் நடத்தின விதம் தான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறதுக்கு காரணம். அதுக்காக உம்மிடம் மன்னிப்பு கேட்கிறன். இனிவீட்டை நடத்துவது உமது பொறுப்பு நான் எதிலும் தலையிடமாட்டேன். வீட்டு வரவு செலவைக் கவனிப்பது உமது பொறுப்பு. இதோ செக் புத்தகம். நீர் இனி செக்கில் கையெழுத்திடும். மாலதி எப்படியும் எங்களிடம் இயக்கத்தை விட்டு திரும்பி வர என்னால் முடிந்ததை செய்யப் பார்க்கிறேன்.” அமைதியாக மனைவியிடம் ராஜ் மன்னிப்பு கேட்டார். ராஜின் தாயால் தன் மகனிடம் ஏற்பட்ட திடீர் மாற்றத்தை நம்பமுடியவில்லை. தனக்குள் சிரித்துக்கொண்டாள்.*

*“அத்தான் வருமானத்தைப் பற்றி யோசியாதையுங்கோ. இன்னும் சில மாணவிகள் என்னிடம் டியூசன் தரச் சொல்லிக் கேட்டவர்கள். அவர்களுக்கும் டியூசன் கொடுக்கிறன், நீங்கள் சம்மதித்தால்.”*

*“இனி உமது விருப்பத்துக்கு எதிராக நான் ஒன்றும் சொல்லமாட்டேன். எத்தனை பிள்ளைகள் எண்டாலும் நீர் டியூசன் கொடும். ஆனால் உமது உடம்பைக் கவனித்துக் கொள்ளும்” என்றான் மனைவியிடம் என்றுமில்லாதவாறு அன்பாகவும் அக்கறையோடும், ராஜரத்தினம். கணவனில் தோன்றிய மாற்றத்தை கௌரியால் ஜீரணிக்க முடியவில்லை. தன் மனதுக்குள் மாலதிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டாள்.*

****

## *கதை 7*

## வேலுவின் வேள்வி

*"கிளி... கிளி.. என்ன செய்துகொண்டு இருக்கிறாய்? கொஞ்ச நேரமாய் தொண்டை கிழிய கூப்பிடுகிறன். ஏன் அம்மா எண்டு நீ கேட்கிறாய் இல்லை" தாய் மரகதம் சற்று கோபத்தோடு மகள் மனோகரியை கூப்பிட்டாள்.*

*மனோகரியின் செல்லப் பெயர் "கிளி". அப்படித்தான் அவளை வீட்டில் கூப்பிடுவார்கள். யாழ்ப்பாணத்தில் குஞ்சு, இராசாத்தி, பேபி, பபா, மணி என்ற செல்லப் பெயர் சொல்லி அழைப்பது பேச்சு வழக்கில் உள்ளது. ஆணாகயிருந்தால் ராசன், தம்பி, குஞ்சன், என்ற பெயர் சொல்லி அழைப்பார்கள். மனோகரிக்கு அந்தச் செல்லப் பெயர் வரக் காரணமுண்டு. சிறுவயதில் கீச்சிட்டக் குரலில் கத்திப் பேசுவாள். அதனாலை மாமன் அவளை கிளி எனறு செல்லமாகக் கூப்பிடத் தொடங்கினார். அந்தப் பெயர் காலப்போக்கில் நிலைத்துவிட்டது. சிறு வயதில் மனோகரி சரியான பிடிவாதக்காரி. தனக்கு விளையாடப் பொம்மை தரச்சொல்லி கீச்சிட்ட குரலில் கத்தி அடம்பிடித்து அழுவாள். தாயின் அழைப்புகள் அவளின் பொறுமையைச் சோதித்தது.*

*" அம்மா இப்ப என்ன வேண்டும் உனக்கு?. ஏன் உயிர் போகிற மாதிரி கத்திறாய்"? மனோகரி அலுப்போடு தாயைக் கேட்டாள்.*

*"மருந்தை விழுங்க தண்ணி கொஞ்சம் தாவன். மருந்து எடுக்கிற நேரமாச்சு"தாய் மரகதம் தான் அழைத்ததன் காரணத்தைச் சொன்னாள்.*

*"கொஞ்சம் பொறு அம்மா. அடுப்பிலை கத்தரிக்காய் கறி வைத்திருக்கிறன். இறக்கிப் போட்டு வாறன்." பதிலுக்கு உரத்த குரலில் மனோகரி பதில் அளித்தாள். அவளுக்கு தாய் திரும்பத் திரும்ப அழைத்தது எரிச்சலைக் கொடுத்தது. தனக்கு இருக்கிற வேலைகளை சுட்டிக்காட்டி முணுமுணுக்க தொடங்கினாள். அவளின் முணுமுணுப்பு மரகதத்துக்குக்கேட்டது.*

*"ஓம். என் தேகம் இடம் கொடுத்தபோது உங்களுக்கு மாடாய் உழைத்து சமைத்துப்போட்டேன். வீட்டு வேலை முழுவதும் செய்தேன். இப்ப எனக்கு முடியாத காலத்திலை, நான் உனக்கு தொந்தரவு குடுக்கிறன் என்கிறாய். வேறை என்ன சொல்லுவாய்" மரகதம், மனோகரியின் முணுமுணுப்பு கேட்டு பதில் அளித்தாள்.*

*"அம்மா நான் இப்ப தண்ணி கொண்டுவரமாட்டன் என்று சொன்னனானே? கொஞ்சம் பொறு கறியை இறக்கி வைத்துப் போட்டு தண்ணி கொண்டு வாறன். டொக்டர் உனக்கு*

சொல்லியிருக்கிறார் கோபப் படக் கூடாதென்று. பிளட் பிரசர் கூடுமாம். அது உன்ரை இருதயத்துக்கு நல்லதல்ல'', சமாதானத் தோறனையில் பதில் அளித்தாள் மனோகரி.

வளவில் கட்டி இருந்த ஆடு போடும் ம்.. மா சத்தம் கேட்டது

'':கிளி அங்கை பார் வீரன் பசியிலை கத்துறான் அவனை முதலில் கவனி '' மரகதம் மகளுக்கு சொன்னாள்.

'' சரி அம்மா வீரனை முதலில் கவனித்துப் போட்டு பிறகு வந்து உன்னை கவனிக்கிறேன் அது மட்டும் சத்தம் போடாமல் கொஞ்சம் இரு. அடுப்பில் இருந்த கறியை இறக்கி வைத்து விட்டு வீரனை கவனிக்க மனோகரி போனாள்.

****

இயற்கையான அழகும், யாழ்ப்பாண குடா நாட்டின் ஒரே ஒரு பருவ கால ஆறான வழுக்கை ஆறும், பச்சை பசேல் என்ற வயல்வெளிகளும் உள்ள ஊர் அளவெட்டி. அளவெட்டி வழுக்கை ஆற்றைச் சார்ந்து பசுமையான ஈரலிப்புப் பிரதேசமாகக் காணப்படுவதால், இது அளறு + வெடி அல்லது அளறு + வெளியாக இருந்து அளவெட்டியாயிற்று பிரசித்தமான நாதசுவர மற்றும் தவில் கலைஞர்கள் வாழ்ந்த ஊரான அளவெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - மரகதம் தம்பதிகளின் இரு பிள்ளைகள், மனேகரியும், செல்வகுமாரும். மனோகரிக்கு இருபது வயதிருக்கும். செல்வகுமார் இளையவன். வயது பதினெட்டு. வேலு எட்டு ஏக்கர் நிலத்தில் புகையிலை, வெங்காயம், மரக்கறி விவசாயம்செய்து குடும்பத்தைக் கவனித்துக கொண்டான். சொந்தத்தில் கிணறு இருந்தது. மகன் குமாரால் பத்தாம் வகுப்புக்கு மேல் படிக்க முடியவில்லை தகப்பனுக்கு தோட்டத்துக்கு உதவியாக இருந்தான். தங்கை மனோகரி, இருதடவை ஏ லெவல் பரீட்சை பெயில். ஆனால் தையல் வேலை செய்வதிலும், பின்னுவதிலும்; கெட்டிக்காரி.

''நீ படித்ததுபோதும் தையல் வேலை செய்து வருங்காலத்தில் பிழைப்பைத் தேடிக்கொள்'' என்று மகளை மேலே படிக்க விடாமல் வேலு நிறுத்திவிட்டான். தாய் மரகதம் நோய்வாய் பட்டு இருந்தது மனோகரி படிப்பை நிறுத்தியதற்கு மற்ற ஒரு காரணம். பெண்களுக்கு ஏன் மேல் படிப்பு என்ற நோக்கம் உள்ள பழமைவாதி வேலு என்ற வேலுப்பிளளை. ஊரில் உள்ள கோவிலில் கொடியேறி தேர் தீர்த்தம் முடியுமட்டும் மாமிசம் வீட்டில் சமைக்க விடமாட்டான். அவன் பிடிக்காத விரதங்கள் இல்லை. எப்போதும் திருநீறும் நெற்றியுமாகவே காட்சியளிப்பான். இந்து மதச் சடங்குகளில் முழு நம்பிக்கை உள்ளவன். அவனுக்கு வைரவர் கோவில் பூசாரி வாக்கே வேதவாக்கு. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோயிலுக்கு தவறாது போய் வருவான். ஊரில் உள்ள பிள்ளையார் கோவில் தேருக்கும் தீர்த்தத்துக்கும் காவடி எடுக்க தவறமாட்டான்.

கிராமத்து வைரவர் ஆலயம்;, ஊர் மக்களின் மதிப்பை பெற்றிருந்தது. வருடா வருடம் வைரவருக்குப் பொங்கி, ஆட்டுக் கிடாய், சேவல் பலிகொடுப்பது ஊர்வழக்கம்.

வைரவரை அமைதிபடுத்த இந்தச் சடங்கு செய்வது அவசியம் அல்லாவிடில ஊரில் பொக்களிப்பான், பெரியம்மை, சின்னம்மை, கூவக்கட்டு, சின்னமுத்து போன்ற தொற்று நோய்கள் தோன்றாமல் இருக்க வைரவரின பாதுகாப்பு கருதி ஊர்மக்கள் வருடா வருடம் ,பொங்கி வேள்வி நடத்துவார்கள்.

*****

''மணி பதினொன்றாகி விட்டது. மீன்காரி தேவி வருகிற நேரமாச்சு. எங்கை அவள் குரல் இன்னும் கேட்கவில்லை'' என்று மரகதம் சொல்லி வாய் மூடுவதுக்குள், ''மீனோய் மீன். நல்ல துடிக்கத் துடிக்க திரளி, விளைமீன், கிளக்கன், ஓரா, கும்பளா இருக்குது. கொஞ்சம் நண்டும் இராலும் கொண்டு வந்திருக்கறன்'' என்று தேவி சுருக்கமாக தான் கொண்டு வந்திருந்த மீன் வகைகளை வாடிக்கையாளர்களைக் கவரும் விதத்தில் கூவி அழைத்தாள். மீன்காரி தேவியின் நடையில் சினிமாக்காரிகள் நடப்பது போல் ஒரு நளினம் இருந்தது. மீன் நிறைந்த பாரமான கூடைச் சுமையோடு எப்படி நடந்து வியாபாரம் செய்கிறாளோ தெரியாது. அவளது பல வருட வாடிக்கையாளர்களாக இருப்பவர்கள் சுன்னாகச் சந்தைக்குப் போய் மீன் வாங்குவதில்லை. காரணம் சில சமயங்களில் பழைய மீனை கடையில் விற்பனை செய்துவிடுவார்கள். தேவி அப்படியில்லை. தேவியைக் கண்டால் அவளை வரவேற்க, வேலியில் இருக்கும் பூவரசமரத்தில் இலைகள் நாலைந்தை ஆய்ந்து, மீன், இரால் வாங்கும் பாத்திரமாக மரகதம் கொண்டு செல்வது வழக்கம்;. தாயைப் பார்த்து மகள் மனோகரியும் அப்பழக்கத்தைக் கற்றுகொண்டாள்.

''கிளி இண்டைக்கு எனக்குப் பத்தியத்துக்கு கிழக்கன் அல்லது திரளி மீன் வாங்கி வா. காசு அலுமாரி லாச்சிக்குள்ளை இருக்குது'' என்று மகளுக்கு கட்டளையிட்டாள் மரகதம்.

வளவுக்குள் கட்டியிருந்த கொழுத்த, கறுப்புநிற ஆட்டுக்கிடாய் வீரன் மரகதத்தின் கட்டளையை ஆமோதிப்பது போல் தன் குரலை ம்..மா.. என்று வெளிப்படுத்தியது. அக்குரல் '' கிளி எனக்கும் பசிக்கிறது. என்னையும் கவனித்துக் கொள்'' என்பது போல இருந்தது. மரகதம் கிடாயின் சத்தம் கேட்டு ''கிளி மீன் வாங்கிப்போட்டு போய் வீரனுக்கு இலை, புல் வை. அவன் பசியிலை கத்துறான்'' என்றாள் மரகதம். ''வீரன்'' என்பது வேள்விக்காக வேலு வாங்கிய கறுப்பு நிற ஆட்டுக் கிடாயுக்கு மரகதம் சூட்டிய பெயர். சில மாதங்களுக்கு முன்பு வேலு சுன்னாகச் சந்தையில் ஐயாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கி வந்த அந்த வாயில்லா ஜீவனான முரட்டுக் கிடாய், தோற்றத்தில் ஒரு வீரனைப் போலவே இருந்தது. இரண்டு கூரிய வளைந்த கொம்புகள். கொழுத்த கறுத்த உடம்பு. திமிரான பார்வை. நேரத்துக்கு உணவு வீரனுக்கு கிடைத்தது. குமாருக்கு வீரன்மேல தனி பிடிப்பு. வீரனை வேலு குடும்பமே கவனம் எடுத்து கவனித்தது. வேலு வீரனுக்கு அவ்வளவு பணம் கொடுத்து வாங்கியதற்கு காரணம் இருந்தது. மரகதத்துக்கு இருதய நோய் வந்து பல மாதங்களாகியும் முன்னேற்றமில்லை. அவளின் சாதகத்தை கொண்டு போய் ஊர் சாத்திரியாரிடம் காட்டிய போது ,

"பயப்படாதே வேலு. உங்கள் குடும்பத்துக்கு யார் கண்பட்டதோ தெரியாது. பக்கத்து காணிகாரனோடு காணி ஆக்கிரமிப்பு கேசையும் வென்றிட்டாய். நீ செலவு செய்த இருபதாயிரம் காசும் கிடைத்துவிட்டது. ஆனால் உன்ரை மனைவி மரகதத்துக்கு வந்த நோய் தான் போகுதில்லை. இவ்வளவு நாளும் மரகதத்துக்கு வியாழன் எட்டிலை. இன்னும் ஒரு கிழமையில், வியாழன் மாற்றத்தோடு மரகதத்துக்கு ஒன்பதுக்கு போகப் போறான். தேக நலம் சீரடையும்" என்று உறுதி செய்தார் ஊர் சாத்திரியார்.

வைரவர் கோயில் பூசாரி கூட அதையே உருவந்து சொன்னது வேலுவின் ஞாபகத்துக்கு வந்தது. அவர் சில மாதங்களுக்கு முன் அவர் சொன்ன வாக்கின்படியே வேலு பக்கத்து காணிக்காரன் மாணிக்கத்தோடு தொடர்ந்த எல்லை ஆக்கிரமிப்பு வழக்கு பல காலம் இழுபட்டு ஒரு படியாக வேலுக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டு வழக்கு செலவு இருபதாயிரமும் எதிரியிடம் இருந்து கிடைத்தது. அந்த கிடைத்த பணத்திலை தான் ஐயாயிரம்; கொடுத்து வீரனை வேலு சுன்னாகச் சந்தையில் வாங்கினான். ஐவரவர் கோயில் பூசாரி வாக்கின் மேல் வேலுவுக்கு அவ்வளவு நம்பிக்கை. "மரகதத்தின உடல் குணமடைய வேண்டு மென்றால் ஒரு கழிப்பு செய்தாக வேண்டும். வெகு விரைவில்; வைரவர் கோயில் பொங்கலும்,; வேள்வியும் நடக்க இருக்கிறது. நீ ஒரு கிடாயை வாங்கி வைரவருக்கு மரகதத்தின் பெயரில் பலி கொடு. வைரவரை சமாதனப்படுத்தினால் உன் குடும்பத்துக்கே நல்லது. மரகதத்தின் நோய் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். இது வைரவர் எனக்குச் சொன்னதை தான உனக்குச் சொல்லுகிறன்" என்றார் உருவந்த பூசாரி.

இது பூசாரி வாக்கல்ல, தெய்வத்தின் வாக்கென தீர்மானித்தான் வேலு. முடிவு, வைரவர் கோயில் வேள்விக்குப் பலி கொடுக்க அவ்வளவு பணம் கொடுத்து கறுப்பு நிறக் கிடாய் ஒன்றை வாங்கி, வீரன் என்ற பெயர் வைத்து வளர்த்தான். வேள்விக்கு; முன், தேவையான உணவு கொடுத்து; கிடாயைக் கொழுக்க வைத்தான். வேள்விக்கு வரும் கிடாய்களை விட, வந்தாவர்கள் பார்த்து வியக்கும் அளவுக்கு தன் கிடாய் இருக்க வேண்டும் என்பது வேலுவின் எண்ணம். பாவம் தனக்கு மரணதண்டனை நடக்கப்போகுதே என்று தெரியாது வளர்ந்தான் வீரன். வைரவர் கோவிலில் வருடா வருடம் வேள்வி நடப்பதுண்டு. வேள்வியை நிறுத்தும்படி முற்போக்குவாதிகளான சில இளைஞாகள் புரட்சி செய்தும் பயனில்லை. போன வருடம் 400 கிடாய்கள் வைரவருக்கு பலி கொடுக்கப்பட்டது. பலி கொடுக்கப்பட்ட ஒரு கிடாய் இருபதாயிரத்துக்கு விலை போனது.

பல வேள்விகளுக்கு முன்பு ஒரு அதிசயம் அக்கோயிலில நடந்தது. இது ஊரில் சனம் பேசிக் கொண்ட கதை. அது ஒரு வேள்வியில் முதல் வெட்டிய ஆட்டுக்கிடாயின் இரத்தத்தை பொங்கலோடு சேர்த்து மேலே எறிந்த போது சோற்றின் ஒரு பருக்கையாவது கீழே விழவில்லை. வைரவர், கொடுத்த உணவை ஏற்றுக்கொண்டதே அதன் அர்த்தம் என்று ஊர் சனம் விளக்கம் கொடுத்தார்கள். அந்தக் கதை உண்மையோ பொய்யோ என்பது பலருக்குத்

தெரியாது. ஆனால் வேலு குடும்பம் மட்டும் வைரவர் மேல் முழுநம்பிக்கை வைத்திருந்தது.

******

அன்று வைரவருக்கு பொங்கல். அதைத் தெடர்ந்து வேள்வி. நூற்றுக்கணக்கான ஆட்டுக்கிடாய்களும், சேவல்களும் மரணதண்டனையை எதிர்பார்த்து காத்திருந்தன. பலியிடப்படும் ஆடு, கோழி முதலியவை ஆண் பால் இனத்தைச் சேர்ந்தவையாக இருக்கும். கோழியாகயிருந்தால் சேவலாகவும், ஆடாக இருந்தால் கிடாயாகவும் இருக்கும். பலியிடும் கிடாயும், சேவலும் வெள்ளை நிறமாக இருந்தால் அவை நிராகரிக்கப்படுகின்றன. பலி கொடுக்க முன்னர் பலியிடத் தயாராக உள்ள கிடாய் அல்லது சேவல் மீது மஞ்சள் கலந்த நீர் தெளிக்கப்பட்டு, அவை கழுத்தில் சிறு மலர் மாலை அணிவிக்கப்படுகிறது. கிடாய் மூன்று தடவை தலையைக் குலுக்கினால் வைரவருக்கு பலியிடச் சம்மதம் தெரிவித்தாக கருதி பலியிடுகிறார்கள்.

பலி கொடுக்க வந்திருந்த சில ஆட்டுக்கிடாய்களின் கழுத்துக்களை பூமாலை அலங்கரித்தது. நெற்றியில் குங்குமம் வேறு. அவற்றின் உரிமையாளர்கள் தங்களது ஆட்டுக்கிடாய்களின் மதிப்பை பற்றி புகழந்து பேசிக் கொண்டார்கள். வந்திருந்த கிடாய்களில் வேலு பலியிடக் கொண்டு வந்த வீரனின் வளர்ச்சியும் தோற்றமும் பலரை கவர்ந்தது. சுமார் நூறு கிலோவுக்கு மேலே நிறை இருக்கும் என்று அதன் ஏடையைக் கணித்தனர்.

ஆடுகள் போடும் அவலக் குரல் சனத்திரலின் சத்தத்தோடு கலந்து மறைந்தது. பூசாரி வந்து, எல்லா பலி கொடுக்கவிருக்கும் ஆடுகளுக்கும், சேவல்களுக்கும் மந்திரம் சொல்லி தீப ஆராதனை செய்தார்;. ஒரு வெள்ளை நிறக்கிடாயாவது பலி கொடுக்க இருக்கவில்லை. ஒரு மிருக வைத்தியர் வந்து கிடாய்களை பரிசோதித்து சாவதற்கு அவைகள் ரெடி என்று சர்டிபிக்கட் கொடுத்தார். காரணம் வேள்விக்கு பின்னர் நோயுள்ள கிடாயின் இறைச்சியை சாப்பிட்டு சனங்களுக்கு வருத்தம் ஏதும் வரக்கூடாதல்லவா.

திடகாத்திரமான இருவர்கள் கூரிய கத்திகளோடு, தங்கள் நெற்றியில் குங்குமப் பொட்டும் திருநீற்றோடுடனும் தம் சாதனையை சனத்துக்கு எடுத்துக்காட்ட தயாராக நின்றனர். ஒரே வெட்டில் தலை வேறு உடல்வேறாக வேண்டும். வேள்விகளில் அவர்கள் கூலிக்கு வேலை செய்தார்கள். ஒரு கிடாயைவெட்ட இவ்வளவு கூலி என்பது பேச்சு.

சௌதி அரேபியாவில் மரணதண்டனை பெற்ற குற்றவாளிகளின் தலையை வெட்டுவது போல வேள்வி இருந்தது. அது சௌதி அரேபியாவில் நடப்பது வெள்ளிக்கிழமை பிராத்தனைக்குப் பின். அதை இரசித்து பார்க்க சனத்திரள் வேறு. அதே போன்று கிடாய்கள்

வெட்டப்படுவதை பாக்க ஒரே இடிபட்டு சனம் கூடிநின்றது. கிடாய்களின உரிமையாளாகளுக்கு முன்னிடம் கொடுக்கப்பட்டது.

பலிகொடுக்கப்படும் முதல் ஆட்டுக் கிடாயாக வீரனைப் பூசாரி தெரிந்தெடுத்தார். வேலுவும் மகன் செலவகுமாரும் வீரனை பலி மேடைக்கு அழைத்துச்சென்றனர். குமாருக்கு வீரனை பலிகொடுப்பதில் விருப்பமில்லை. தன் சொல்லை அப்பா கேட்கப்போவதில்லை என்று அவனுக்குத் தெரியும். வீரனை அவன் அன்போடு வளர்த்தவன். இலை தழைகள் வெட்டிப் போட்டவன். வீரன் அவர்கள் குடும்பத்தில் ஒருவனாகிவிட்டான்.

தலை வெட்டுபவர்களில் மீசை வைத்த ஒருவன், வீரனை வேலுவிடம் இருந்து வாங்கி பலியிட அழைத்துச் சென்றான். வீரன் பலியிடப்போவதற்கு முன் தனது குரலை உயர்த்தி கத்தி எதிர்ப்பு தெரிவித்தது. தலை வெட்டும் மற்றவன் கத்தியோடு தயாராக நின்றான். கண் சிமிட்டும் நேரத்துக்குள் வீரனின் தலையும் உடலும் ஒரே வெட்டில் வேறாக்கப்பட்டது. வீரனின் உடலில் இருந்து இரத்தம் பீறிட்டுச் சீறியடித்தது. இரத்தம் நிலத்தில் போய் வீணாகமல் இருக்க, வேலுவின நண்பன் சிவராசா ஒருபாத்திரத்தில விரனின் குருதியை ஏந்தினான். குமார் அதைச் செய்ய மறுத்துவிட்டான். அந்த குருதியில் கறி செய்து மரகதத்துக்கு கொடுத்தால் நோய் சீக்கிரம் குணமாகும் என்று யாரோ வேலுவுக்கு சொன்னார்கள். அதறகாக வீரனின் இரத்தம் கீழே சிந்தாமல் பாத்திரமொன்றில் சிவராசாவால் ஏந்தப்பட்டது. இதை மற்றைய கிடாய் உரிமையாளர்கள் தங்கள் கிடாய்கள வெட்டும் போது செய்ததை அவதானிக்க முடிந்தது. வீரனின் தலையையும் உடலையும் மற்றைய பிலியிடப்பட்ட கிடாய்களோடு வரிசையில் கிடத்தப்பட்டது.

பலியடப்பட்ட வீரனின் இறைச்சிக்கு முப்பதாயிரம் ரூபாய் மதிப்பிடப்பட்டது. வேலு வீரனை வாங்கிய விலையை விட பல மடங்கு இறந்தபின் அதற்கு மதிப்பிடப்பட்டது. வேலு வீரனின் உடலை விலைக்கு கேட்டவர்களுக்கு கொடுக்க மறுத்துவிட்டான். வேள்வி முடிந்ததும,; வீரனின் தலையையும் உடலையும் ஒரு தள்ளு வண்டியில் சிவராசா உதவியோடு ஏற்றினான் வேலு. மனைவி மரகதமும் மகள் மனோகரியும்; வீரனின் உடலை பார்க்க வேண்டுமல்லவா. அதன் பிறகு தன் குடும்பத்துக்கும், சிவராசா குடும்பத்துக்கும், கிட்டத்து உறவினர்களுக்கும் வீரனின் இறச்சியை கூறுபோட்டு கொடுப்பது என்பது வேலுவின் திட்டம். வீரனின் உடலை சுமந்து கொண்டு தள்ளுவண்டி வேலுவின விட்டை நோக்கி நகர்ந்தது.

****

வேலு, வீரனின் உடலோடு வீட்டுக்கு அருகே வந்தபோது ஒப்பாரி சத்தம் கேட்டது. வீரனுக்காக தன் குடும்பம் ஒப்பாரி வைக்கிறது என வேலு நினைத்தான். அச்சமயம்

வேலுவின் இரு மைத்துனர்களும் இனத்தவர்களோடு அழுது கொண்டு தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டான்.

“ஐயோ மச்சான் மரகதம் அக்கா எங்களை விட்டிட்டு வீரனோடு போயிட்டா. வைத்தியரும் கையை விரித்திட்டார். கெதியிலை வீட்டுக்கு வாங்கோ” என்று கதறி அழுதபடி ஓடி வந்தார்கள். வீட்டைச் சுற்றி அழுகையோடு ஒரே சனம். கூலிக்கு மாரடிக்கும் கூட்டத்தின் ஒப்பாரிக் குரலோடு மகள் மனோகரியின் அழுகையும் கேட்டது. வேலுவும், குமாரும் திகைத்துப்போய் வாயடைத்து நின்றார்கள். வைரவர் மரகதத்தையும் பலி வாங்கிவிட்டாரா. வைரவர் கோயில் பூசாரியும், சாத்திரியாரும் சொன்னது பிழைத்து விட்டதா?

****

## *கதை 8*

## *குழைக்காட்டான் குஞ்சன்*

*ஊரெழு ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட தங்கம்மாவும், பொன்னம்மாவும் இரு சகோதரிகள், அதில் தங்கம்மா மூத்தவள். அவர்கள் இருவரதும் பெற்றோர் செல்லத்தம்பியும், செல்லம்மாவும் உலகில் இருந்து விடை பெறமுன் இரு மகள் மாருக்கும் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருக்க ஆளுக்கு பக்கத்து பக்கத்தில் 250 அடிகள் நீளமும்100 அடிகள்அகலமும் , அதாவது 20 குழிகள் உள்ள சுன்னாகம் - புத்தூர் பாதையில் ஒரே மாதிரியான காணியில் இரு வீடுகளைக் கட்டிக் கொடுத்து, இருவர் பேரிலும் உயில் எழுதி வைத்துப் போனார்கள் . அதோடு இருவருக்கும் ஒரு பொதுக் கிணறு. நீண்ட தென்னம் கிடுகு வேலி இரு காணிகளையும் பிரிக்கிறது. பங்கு கிணறு, வேலி பற்றிய சொத்து விபரம் அவர்களுக்கு இடையே சண்டை வராமால் இருக்க உயிலில் எழுதி இருந்தது. அந்த விபரத்தில் தென்னோலை கிடுகு போட்ட 250 அடிகள் நீளம் உள்ள பொது வேலி இருவருக்கும் சொந்தம்.*

*வேலியை இருவரும் முறை எடுத்து சில வருடங்களுக்கு ஒரு தடவை புது கதியால்கள் போட்டு, தென்னம் கிடுகால் அடைக்க வேண்டும். அந்தவேலை நடக்கும் பொது தங்கம்மாவும், பொன்னம்மாவும் பிரசன்னமாகி இருப்பார்கள், காரணம் கதியால்கள் போடும் போது ஒருவர் காணியை ஒருவர் சில அங்குலம் ஆக்கிரமித்து விடுவார்கள் என்ற பயம் அவர்களுக்கு . அந் நீண்ட வேலியில் உள்ள பூவரசு, கிளுவை . முள் முருக்கை ஆகியவை வேலிக் கதியால் மரங்களில் அந்த சிவந்த மண்ணில் செழிப்பாக வளரும். அம் மரங்களில் உள்ள இலை குழைகள் வெட்டுபவன். அவர்களின் தூரத்துச் சொந்தக்காரனான சரசாலையைச் சேர்ந்த குஞ்சன் என்ற குஞ்சிதபாதம். இலைகளை விற்று வரும் பணம் இரு சகோதரிகளையும் சரி பாதியாகப் போய் சேரும். வேலியை இரு வருடத்துக்கு ஒரு தடவை முறை எடுத்து மாற்ற வேண்டும். மழைக்காலங்களில் வேலிக்கு கதியால்கள் போடப்படும். அதற்காக பூவரசு, கிளுவை, முட் கிளுவை மரங்கள் பயன்படுத்தப்பட்டன. மாரி காலத்தில் அம் மரங்களின் குழைகளை வெட்டி தோட்டங்களில் பசளையாக நிலத்துள் புதைப்பர். அதே நேரம் கதிகால்களைக் கொண்டு வேலிகளின் இடைவெளிகளை அடைப்பர். கிலுவை மரத்தில் நைதரசன் அதிகளவில் காணப்படுகிறது. இதனைத் தோட்டத்தில் புதைத்தலானது நைதரசன் பசளை போடுவதற்குச் சமமானது என நவீன விவசாய வனவியல் தத்துவங்கள் கூறுகின்றன. ஆனால், அது அன்றே எம்மவர்களுக்குத் தெரிந்திருக்கிறது*

வேலியில் உள்ள பூவரசு, கிளுவை, முள் முருக்கை மரங்களில் உள்ள இலைகளை வெட்டிக் கொண்டு போக யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரிவில் சாவகச்சேரி பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள சரசாலை என்றஊரில் இருந்து வருவான் குஞ்சன் என்ற குஞ்சிதபாதம் .

A9 வீதிக்கு வடக்கே சாவகச்சேரியில் இருந்து ஏறத்தாழ ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள. இவ்வூருக்கு பருத்தித்துறை நோக்கிச் செல்லும் சரசாலை-நுணாவில் வீதி ஊடாக பயணம் செய்யலாம்.

இராம இராவண யுத்த காலத்தில் இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்திருந்த இராமபிரானும் அவரது சேனைகளும் இவ் ஊரிலே போருக்காக அம்புகளை உற்பத்தி செய்யும் ஆலைஇருந்தமையால் இது சரசு ஆலை என அழைக்கப்பட்டு பின்னர் சரசாலை என அழைக்கப்படுகின்றது. என்பது அந்த ஊருக்கு பெயர் வர காரணம் என அவ்வூர் முதியோர் மரபு வழி வந்த கதை சொல்வர் . அம்பு என்பதை சரசு எனவும் அழைக்கலாம்.

சரசாலையில் இருந்து குழைக்காட்டான் குஞ்சன் குழை வெட்ட ஊரெழுவுக்கு வருவான். வேலிகளுக்கு கிடுகும் தென்னம் மட்டைகள் கொண்டு வந்த வண்டியில். குழைகளை ஏற்றிக் கொண்டுபோய் சாவகச்சேரி பகுதியில் உள்ள கிராமங்களில் விவசாயம் செய்வோருக்கு உரமாக விற்பான். அதனால் அவனை சகோதரிகள் இருவரும் "குழைக்காட்டான் குஞ்சன்" என்ற அடைப்பெயர் வைத்து அழைத்தனர். இலை வெட்டும் குஞ்சிதபாதம் ஐந்து அடி மூன்று அங்குல உயரம் இருப்பதால், , "குழைக்காட்டான் குஞ்சன்" என்று பெயரிடப்பட்டான் தொப்பை வயிறும் . மற்றும் வழுக்கைத் தலையுடன் அவனின் தோற்றம் இருந்தது

கிடுகையும் கிராமங்களில் விளைந்த மரக்கறிகளையும் மா பலா போன்ற பழங்களையும் தன் இரு மாடுகள் பூட்டிய வண்டியில் ஏற்றி, பதினாலு மைல்கள் சாவகச்சேரியில் இருந்து பயணம் செய்து உரும்பிராய் , கோப்பாய். கோண்டாவில் ஆகிய கிராமங்களில் விற்று, மரக்கறிகளை சுன்னாகச் சந்தையிலும் விற்று அதே வண்டியில் வேலிக் கதியால்களில் உள்ள மரங்களில் இருந்து வெட்டிய குழைகளை ஏற்றிக் கொண்டு சாவக்கச்சேரி பகுதியில் உள்ள கிராமங்களில் விவசாயம் செய்வோருக்கு விற்பனை. செய்வான். குஞ்சனிடம் குழைகள் வாங்கி, நிலத்துக்கு அடியில் புதைத்து விவசாயம் செய்தால் விளைச்சல் அதிகம் என்பது கிராமப் பகுதியில் வாழும் விவசாயிகளின் நம்பிக்கை. உரும்பிராய், கோண்டாவில். கொக்குவில், கோப்பாய், ஊரெழு ஆகிய கிராமங்களில் உள்ள வேலி மரங்களைத் தெரிந்தெடுத்து, குளைகளை வெட்டுவதில் சரசாலைக் குஞ்சன் நிபுணன்.

.*****

தங்கம்மாவுக்கும் பொன்னம்மாவுக்கும் சொந்தமான வேலியில் சடைத்து வளர்ந்த பூவரசு, முள் முருக்கை, கிளுவை மர இலைகளை வெட்டி போய் விற்பது குஞ்சனின் வழக்கம்.

''கிடுகு வேலிக் கலாசாரம்'' என ஈழத்தின் வடபகுதித் தமிழர்களின் வாழ்வியலைக் குறிப்பாகச் சொல்லுவது பழக்கம், காரணம் அவர்கள் தம் வளவுகளுக்கு கிடுகுவேலியினால் நேர்த்தியாக, அச்சறுக்கையாக எல்லையினை வரையறுத்துக் கொள்ளுவதோடு ஒரு வித மூடிய கலாசாரமாக விளங்கும் அதன் பண்பையும் விளக்க இந்த சொற்பதம் படித்தவர்களால் அதிகம் பாவிக்கப் படுகிறது.

தென்னங் கிடுகுகளால் மாத்திரமன்றி பனை ஓலை, பனை மட்டை, தகரம், சீமேந்து மதில்கள் என்பனவும் பரவலாகப் புழக்கத்தில் இருப்பவை. வேலிச் சண்டை குடும்பங்களிடையே அடிக்கடி நடக்கும். அச்சண்டை அனேகமாக வேலியின் கத்தியால்கள் மாற்றும் போது காணி ஆக்கிரமிப்பு சண்டையாக உருவாகி வக்கீல்களின் வருமானத்துக்கு வழி வகுப்பதுண்டு .

மசுக்குட்டி( மயிர் கொட்டி புழுக்கள் ) நிறைத்த வேலியில் உள்ள மர இலைகள், வேலிக்கு அருகே உள்ள பக்கத்து வீட்டு கிணற்றுக்குள் விழுந்தால் பின் வேலிச்சண்டை உருவாகப் பேசத் தேவயில்லை .

சில குடும்பங்களின் வேலியில் இருக்கும் 'வேலிப்பொட்டு'' எனும் சிறியவழி. அவசரத்துக்கு போய் வரும் வழியாகப் செயல் படுவதுண்டு . அவ்வழியாக உருவாகும் காதலுக்கு ''பொட்டு வழிக் காதல்'' என்று சொல்வார்கள்''.

கோப்பி, சீனி, மிளகாய் தூள், அரிசி, முட்டை போன்ற பல சரக்கு பரிமாற்றமும் இரு குடும்பங்களுக்கு இடையில் பொட்டு வழியே நடப்பதும் உண்டு. ஒரு வீட்டு நாய் பக்கத்து வீட்டு வளவுக்குள் போய் மல சலம் கழித்து வருவதும் பொட்டு வழியேதான்.

மசுக்குட்டிகள் இரண்டு வகைப் படும். ஒன்று வெள்ளை, மற்றது கறுப்பு. நிறம். அதிலும் நிற வேற்றுமை உண்டு இவை முள் முருக்கை பூவரசம் மர இலைகளில் நிரம்ப இருக்கும் குஞ்சன் இலைகள் வெட்டும் போது கவனமாக இலைகளை பார்த்து வெட்டும் திறமை அவனுக்கு உண்டு.

அன்று தங்கம்மா வீட்டு பொது வேலியில் உள்ள மரங்களில், இலைகள் வெட்ட வந்த குஞ்சனுக்கு இலைகளைப் பார்த்தவுடன் அதை வெட்ட விருப்பமில்லை.

''என்னம்மா வேலியில் உள்ள மரங்களுக்கு மருந்து அடித்திருக்குது போல இருக்கு. இந்த இலைகளை வெட்டிக் கொண்டுபோய் விவசாயிகளுக்கு கொடுக்க முடியாது:''

''குஞ்சன், பூவரசம் மரம் முழுவதும் மசுக்குட்டி. அவை கிணற்றுக்குள் விழுந்திடுச்சு . அதாலை இலைகளுக்கு மருந்து அடித்துப் போட்டன்''

''அம்மா அங்கை தான் பிழை செய்து போட்டியள். இந்த மருந்து அடித்த இலையை விவசாயி ஒருத்தனும் வாங்க மாட்டான் அப்படி வாங்கிறது எண்டால் அரை விலை கொடுத்து தான் வாங்குவினம்''

''இப்ப நீ என்ன அரை விலை குடுத்தே வாங்கப் போறாய் ''?:

''அது உங்கள் முடிவு அம்மா'': .

'' அப்ப இரண்டு கிழமைகளுக்கு பின் வாவன் குழை வெட்ட . அதுக்கிடையில் மழை பெய்து இலைகளில் உள்ள மருந்து கழுவிப் போகும் அப்ப வந்து வெட்டிக் கொண்டு போவன் ஆனால் ஒண்டு நீ வரமுந்திக்கு யாரும் ஒருவன் வந்து இலைகளை விலைக்கு கேட்டால் கொடுத்ததிடுவன் சில நேரம் நீ தருகிற காசுக்கும் மேலே அவையள் தருவினம்'' தங்கம்மா சொன்னாள்.

குஞ்சன் சில விநாடிகள் சிந்தித்து விடு '' சரிஅம்மா, எனக்கு திரும்பவும் இவ்வளவு தூரம் திரும்பி வரமுடியாது. இனி இங்கை வந்திட்டன் . போன தடவை கொடுத்த அளவில் இருந்து மசுக்குட்டி போக இலைகளை கழுவ கொஞ்சம் குறைத்து காசைத் தந்துப் போட்டு வெட்டிக் கொண்டு போறன். என்ன சொல்லுறியல் ''.

''சரி சரி நீ எங்கள் சொந்தக்காரன் எண்ட படியால் சம்மதிக்கிறேன்'', தங்கச்சி யோடு கலந்து ஒரு வார்த்தை பேசி அவளின் சம்மதம் பெற்று பதில் சொல்லுறன்'' தங்கம்மா சொன்னாள்.

குழை பேரம் முடிந்தது.

குழைக்காட்டான் குஞ்சன், பேரம் பேசுவதில் கெட்டிக்காரன்

****

தென்மராட்சியில் உள்ள ஒரு முக்கிய சந்தை நகரமான சாவகாச்சேரி, யாழ்ப்பாணத்திற்கு வடக்கே பத்து மைல் தொலைவில் பிரதான யாழ்ப்பாணம் கண்டி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. "சாவகா + சேரி" என்ற பெயர் ஜாவானிய குடியேற்றம் என்று பொருள்படும் என்பதால், இந்த நகரத்தில் ஜாவானீஸ் தோற்றம் இருக்கலாம். இந்த நகரம் யாழ்ப்பாண இராச்சியத்தின் தென்கிழக்கு ஆசிய ஆக்கிரமிப்புக்கு முந்தையதாக இருக்கலாம், அங்கு வெளிநாட்டு குடியேற்றத்தின் மீது மேலாதிக்கத்தை நிலைநாட்ட ஜாவாவில் இருந்து இலங்கை மேல் படை எடுத்து ஆக்கிரமித்த சந்திரபானுவால் சில குடியிருப்புகளும் கோட்டைகளும் நிறுவப்பட்டன. சந்திரபானு ஸ்ரீதாமராஜா தாய்லாந்தின் மன்னர், அவர் 1255 முதல் 1263 வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்தார்

சாவகச்சேரியைச் சுற்றி மட்டுவில், மீசாலை, நுணாவில் , வரணி மிருசுவில், சரசாலை , கொடிகாமம் போன்ற பல விவசாய கிராமங்கள் உள்ளன. செல்லத்துரையின் உறவினரான குஞ்சிதபாதம், சாவக்கச்சேரிக்கு கிழக்கே மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ள மட்டுவிலுக்கு அருகில் உள்ள சரசாலை என்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாயி. மட்டுவில் அம்மன் கோவில் பற்றி வாய் வழி வந்த பல கதைகள் உள்ளன. மட்டுவிலின் நிலம்

உயர்தர பந்து வடிவ கத்தரிக்காயை வெள்ளை நிறத்தில் உற்பத்தி செய்கிறது. பக்தர்களால் கத்தரிக்காயிலிருந்து கறி தயாரிக்கப்பட்டு, வருடாந்திர திருவிழாவில் வேகவைத்த பால் அரிசியுடன் அம்மன் தெய்வத்திற்கு சேவை செய்வார்கள்.

. குஞ்சன் விவசாயத்தைத் தவிர . இலைகள் வெட்டி விற்பதை பக்க வியாபாரமாக செய்கிறவன். அவன் புகையிலை சாகுபடிக்கு இயற்கை எருவாக விவசாயிகளுக்கு இலைகளை விலைக்கு விற்பான் . கிராமங்களில் பூவரசம் மரம் என்று அழைக்கப்படும் தெஸ்பீசியா (மரம்) போன்ற பச்சை இலை உரங்களாக விவசாயிகளால் வெங்காயம் மற்றும் புகையிலை வயல்களில் பச்சை இலை பயன்படுத்தப்படுகின்றன. புகையிலை சாகுபடிக்கு இயற்கை எருவாக புதைக்க ஏற்ற இலைகளின் தரத்தை மதிப்பிடுவதில் குஞ்சன் ஒரு நிபுணன். அவன் வலிகாமம் மற்றும் வடமராட்சி பகுதிகளில் உள்ள பல கிராமங்களுக்குச் சென்று, வேலிகளில் உள்ள மரங்களை முன்பதிவு செய்து ,இலைகளை வெட்டி தனது வண்டியில் ஏற்றி சாவகச்சேரி பகுதியில் உள்ள கிராமங்களுக்கு கொண்டு வந்து விற்பனை செய்வான் . அவன் குழைக்காட்டான் குஞ்சன் என்ற புனைபெயர் பெற்றான். "குழை என்ற சொல் மரங்களில் உள்ள இலைகளைக் குறிக்கிறது. குஞ்சன் என்பது குஞ்சிதபாதத்தின் செல்லப் பெயர். குஞ்சன் அடர்த்தியான மீசையுள்ளவர் மற்றும் வழுக்கை தலையின் ஒரு பகுதியாகும். அவனது நெற்றியில் ஒரு சந்தனப் பொட்டுடன் திரு நீற்றினை நீங்கள் எப்போதும் காணலாம். மரங்களிலிருந்து இலைகளை வெட்டுவதற்கான ஒப்பந்தத்தை பேச்சுவார்த்தை நடத்தும்போது அவருக்கு ஒரு இனிமையான புன்னகை இருக்கும் . தூரத்திலிருந்து இலைகளைப் பார்ப்பதன் மூலம், அவர் அதன் தரத்தை மதிப்பிட முடியும். இலைகளுக்கான அவனது விலை மதிப்பீடு முற்றிலும் ஒரு கோப்பில் இலைகளின் எண்ணிக்கையையும் இலைகளின் ஆரோக்கியமான நிலையையும் பொறுத்தது. பூவரசம் மரத்திலிருந்து இலைகளை இயற்கை எருவாக புகையிலை தோட்டக்காரர்கள் விரும்பினார்கள். பொதுவாக பொன்னம்மா மற்றும் தங்கம்மா ஆகியோருடன் ஒரு வருடத்திற்கு ஒரு முறை மரங்களின் இலைகளை பொதுவான வேலியில் வெட்ட ஒரு வாய்மொழி ஒப்பந்தம்குஞ்சனால் ; செய்யப்படுகிறது. இலைகளுக்கு அவர் வழங்கும் பணம் இரண்டு சகோதரிகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும் . அவர் இரண்டு ஆண்டுகளாக இரண்டு குடும்பங்களுடன் இந்த தொழிலை செய்து கொண்டிருந்தார். அவருக்கு ஒருபோதும் எந்தப் பிரச்சினையும் இல்லை,

குஞ்சனும் பாலனும் ஒன்றரை மணிநேர பயணத்திற்குப் பிறகு தங்கம்மாவின் வீட்டிற்கு வந்து சேரும் போது காலை 9 ஆகிவிட்டது , தங்கம்மா மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தாள், ஏனெனில் அது அவளது கணவரின் சம்பள நாள்.

"ஓ, குஞ்சன், ஒரு வருடம் கழித்து உன்னையும் பாலானையும் பார்த்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். இது என்ன உன் தலை வழுக்கை விழுந்து விட்டது போல இருக்கு . நீ அவ்வளவு வயதானவன்இல்லையே ?" தங்கம்மா சிரித்தபடியே சொன்னாள்.

*“அம்மா சொல்லப்போனால்  எனக்கு  இப்ப வயசு ஐம்பத்தைந்து மட்டுமே”:*

*“உன் மனைவி செல்லம்மாவும், இரண்டு பெடியங்களும் எப்படி இருக்கினம் ?*

*“செல்லம் அடிக்கடி முதுகு மற்றும் கை, கால் வலி பற்றி புகார் செய்வாள். எங்கள் நாட்டு வைத்தியர் சின்னப்பு அவளுக்கு சிகிச்சை அளிக்கிறார். மேற்கத்திய சிகிச்சையை அவள் ஒருபோதும் நம்புவதில்லை. அவள் பத்தியம் வேறு இருக்கிறாள். ”*

*“உன்ரை இரண்டு பெடியங்கள் வரதன் மற்றும் நாதன் எப்படி இருக்கினம் ? அவர்கள் படிப்பு எப்படி”?*

*“எனது மூத்த மகன் வரதனுக்கு அவனோடை படிக்கிற பெட்டை ஒருத்தியோடை காதல். அவளுடைய பெற்றோர் அதைப் பற்றி என்னிடம் புகார் அளித்தார்கள். அவனை எச்சரித்து, முதலில் படிப்பை முடி அதன் பின்னர் அதை பற்றி சிந்திக்கலாம் என்று அவனுக்கு நான் சொன்னேன் ’. அவன் ஒரு என்ஜினியராக வர விரும்புகிறான் ”*

*“இரண்டாவது மகன் நாதன் எப்படி”?*

*“நாதன் ஒரு புத்திசாலி பையன். அவன் டைனமோ, கடிகாரங்கள் மற்றும் சைக்கிள்கள் திருத்துவான் அவன் ஒரு கரேஜில். சனி, ஞாயிறு சில மணித்தியாலம் வேலை செய்கிறான்: அவனுக்கு காதல் விவகாரம் ஒன்றும் இல்லை. அவன் தாயின் பையன் “.*

*"குஞ்சனுக்கு. நாதனுக்கு காதல் விவகாரம் இல்லை என்று நீ உறுதியாக நம்புகிறாயா "?*

*"அவனுக்கு எந்தப் பெண்ணுடனும் எந்த உறவும் இல்லை என்று நான் நம்புகிறேன் அம்மா . அவன் எந்த ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டிருந்தால், என்னிடம் சொல்லாமல் தன்ரை தாயிடம் சொல்லி இருப்பான்*

*“ஊரிலை இருந்து சுன்னாகத்தில் உள்ள எங்கள் வீட்டிற்கு வர எவ்வளவு நேரம் ஆகும்‘?*

*“சரி, நான் மாட்டுவிலிலிருந்து இருபாலை வந்து, பின்னர் கோண்டாவில் வந்து , அங்கிருந்து பாலாலி ரோட், மற்றும் புத்தூர் சுன்னாகம் ரோட்டில்வந்து உங்கள் வீட்டிற்கு வருகிறன். இது சுமார் பதினைந்து மைல்கள். எனது வண்டி மூலம், வர ஒன்றரை மணி நேரம் ஆகும்.”*

*"குஞ்சன் நீ வேலியில் உள்ள இலைகளின் தரத்தை மதிப்பிடுவதில் நிபுணன் என்று பலர் இந்த ஊரிலை சொல்லீனம் , எங்கள் வேலியில் பூவரசம் மற்ற இலைகளைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் . “*

*“நான் ஏற்கனவே வேலியில் உள்ள இலைகளைப் பார்த்தேன். அவை தரமாக இருக்கிறது. கம்பளிப்பூச்சிகள் இல்லை. இந்த மாதத்தில் பலத்த மழை பெய்ததால் பெரும்பாலான மரங்களில் பச்சை இலைகள் மற்றும் பூக்களும் உள்ளன. ”*

"அப்படியென்றால் இலைகளுக்கு எவ்வளவு கொடுக்கப் போறாய்"?

"அம்மா, உங்கள் வேலி இருநூற்று ஐம்பதுஅடி நீளமானது, எனது மதிப்பீடு ஒரு அடிக்கு நாலு ரூபாய், இருநூறு ஐம்பதுஅடி நீளமுள்ள உங்கள் வேலிக்கு நான் ஆயிரம் ரூபாய் கொடுப்பேன் . கடந்த வருடம் நீங்கள் செய்ததைப் போல உங்கள் சகோதரி பொன்னாமாவுடன் பகிர்ந்து கொள்ளலாம் . "

"ஒரு சடைத்த மரத்துக்கு என்ன உந்த விலை மிகக் குறைவு. ஒரு மாதத்திற்கு முன்பு, மற்றொரு இலை வெட்டுபவன் வந்து ஒரு அடிக்கு ஏழு ரூபாய் வழங்கினவன் . நீ எங்கள் தந்தையின் உறவினர் என்பதால் நான் அவருக்கு கொடுக்க விரும்பவில்லை. மேலும், கடந்த சில ஆண்டுகளில் இலைகளை வெட்டுவதாக இருந்தது. நீ வேலிக்கு கிடுககுளை கொடுத்து, உன் ஊரில் இருந்து மட்டுவில் கத்திரிக்காயைக் கொண்டு வந்து கொடுத்தனி . நீ சொல்லும் விலை நியாயமாக இருக்க வேண்டும் குஞ்சன் ".

" சரி அம்மா, நான் உங்களுக்கு அதிகபட்சமாக அடிக்கு ஐந்து ரூபாய் வீதம் மொத்தத்தில் ஆயிரத்து இருநூற்றி ஐம்பது ரூபாய் தாறன் நான் இலைகளை கிராமங்களுக்கு எடுத்து சென்று புகையிலை விவசாயிக்கு எருவாக விற்கும்போது, அதிகபட்சமாக ஐநூறு ரூபாய் லாபம் ஈட்ட முடியும். இந்த பெடியன் பாலனுக்கு நான் ஏதாவது கொடுக்க வேண்டும்.இந்த இலைக்கு புகையிலை தோட்டக்காரரிடம் இருந்து இரண்டாயிரத்துக்கு சற்று அதிகமாக மட்டுமே கிடைக்கும். எனது கடின உழைப்பு மற்றும் நேரம் ஆகியவற்றிற்கான எனது லாபம் ஐநூறு ரூபாய் மட்டுமே கிடைக்கும் . "

", குஞ்சன் உன் வேலை எவ்வளவு கடினம் எண்டு எனக்கு தெரியும் . சரி, அந்த விலையுடன் நான் உடன்படுகிறேன். நீ வெட்டுவதற்கு முன், எனது சகோதரி பொன்னமாவிடம் விலை பற்றி ஒரு வார்த்தை கேட்டு அவளுடைய உடன்பாட்டைப் பெறவேண்டும். பிறகு அவள் புகார் செய்யக்கூடாது. அவளுக்கும் வேலியில் ஒரு பங்கு உண்டு. "

"அது நல்லது. நான் உங்களுக்கு செலுத்தும் தொகையில் ஐம்பது சதவீத பங்கு அவவுக்கு இருப்பதால் நீங்கள் அவவின் ஒப்புதலைப் பெறலாம். "

"நீங்கள் இங்கே காத்திரு, நான் வேலியின் பொட்டுவழியாக அவளுடைய வீட்டிற்குச் சென்று அவளது ஒப்புதலைப் பெற்று வாறன் ," என்று தங்கம்மா குஞ்சனுக்கு பதிலளித்தாள்.

"அம்மா, நானும் பாலனும் ம் , உங்கள் வீட்டு கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளி குடிக்கவா , உங்கள் கிராமத்தில் உள்ள கிணற்று நீர் சிறந்த தரம் வாய்ந்தது. எனது கிராமத்தில் உள்ள கிணற்றில் இருந்து வரும் தண்ணீர் உந்த தரத்திற்கு வராது ".

"சரி, , துலாவைப் பயன்படுத்தி தண்ணீரை அள்ளிக் குடி. பொதுவாக அறியப்படாத நபர்கள் எங்கள் கிணற்றில் இருந்து தண்ணீர் குடிக்க அனுமதிக்க மாட்டேன். ஏனெனில்

அவர்கள் அதை மாசுபடுத்தலாம். நீ எங்களுடன்இனத்தவன் . நான் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் ஒரு ஆளை பிடித்து கிணற்றை சுத்தம் செய்தேன். கிலாசில் தண்ணீரை ஊற்றி குடிக்க விரும்புகிறீர்களா ”?

"ஆம், அம்மா,முடிந்தால் இரண்டு கிலாஸ் தாருங்கள் ."

தங்கம்மா வீட்டிற்குள் சென்று இரண்டு கிலாஸ்களை கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள். அவள் ஒரு காகிதத்தில் பக்கட் செய்த வடையும் கொடுத்தாள்,

"இந்த பாக்கெட்டில் என்ன இருக்கு , அம்மா."

“இது நான் தயாரித்த உளுந்து வடை . அதை நீயும் பாலனும் சாப்பிட்டு பாருங்கள் . ”

“ நன்றி, அம்மா. நான் காலை உணவு சாப்பிட இல்லை. பாலனும் நானும் ஒரு காலை காபிக்குப் பிறகு சரசாலையில் இருந்து பயணத்தைத்ஆரம்பித்தோம் . எனக்கு இப்போ நல்ல பசியாக இருக்கிறது. பாலனும் அப்படித்தான். ”

“‘ அப்படியானால் நீங்கள் வந்து திண்ணையில் உட்கார்ந்து சாப்பிடுங்கள். நான் உங்களுக்கு சில தோசைகள் கொண்டு வந்து சாப்பிடத் தருகிறேன், வடையும் தோசையும் சாப்பிட்டு தண்ணீரை குடித்துவிட்டு, அதன் பிறகு இலைகளை வெட்டத் தொடங்குங்கள். அதற்கு முன், நாங்கள் ஒப்புக்கொண்ட விலைக்கு எனது சகோதரியிடமிருந்து ஒப்புதல்பெற்று வருகிறேன் . ”

குஞ்சனும் பாலனும் சென்று திண்ணையில் அமர்ந்து சமையலறையிலிருந்து தோசை கொண்டு வரப்படுவதற்காக காத்திருந்தனர். அதுவரை குஞ்சன் தனது வேஷ்டியில் இருந்து சில வெற்றிலை மற்றும் புகையிலை சுண்ணாம்பு எடுத்து மெல்லத் தொடங்கினான், தங்கம்மா குஞ்சன் மற்றும் பாலனுக்கான தோசை மற்றும் சம்பல் இரண்டு பனை ஓலைப் பெட்டிகளில் வைத்து உண்ண தங்கம்மா கொடுத்தாள்.

“குஞ்சன் நீ சாப்பிட ஆரம்பி நான் என் சகோதரியின் வீட்டிற்குச் ஓடிப் போய்அவளது ஒப்புதலுடன் வாறன்”:

"சரி, அம்மா, அது நல்லது." குஞ்சன் தோசையை ரசித்து உண்ணஆரம்பித்தான்.

அவள் சாம்பலை ருசித்தபோது, தோசை மற்றும் சம்பல் மிகவும் சுவையாக இருப்பதில் மகிழ்ச்சி அடைந்தான்.

தங்கம்மா செல்லம்மா வீட்டுக்குப் போய் திரும்பி வந்ததும் அவளிடம் :”அம்மா நீங்கள் சுட்ட தொசையும் சம்பலும் பிரமாதம் அவற்றை எவ்வாறு தயாரிப்பது? ‘

, நான் தோசை மாவை அரைக்க ஆட்டுக் கல் பாவிக்கிறான , எலேக்ட்ரிக் மிக்சர் அல்ல, அடுப்பை எரிக்க உலர்ந்த தேங்காய் இலைகளைப் பயன்படுத்துகிறேன், இது தோசைக்கு

நல்ல சுவை தருகிறது., சம்பலைப் பொறுத்தவரை, நான் முதலில் உலர்ந்த மிளகாயை வறுத்து , பின்னர் தேங்காய், வெங்காயம், கள் மற்றும் கறிவேப்பிலை கலந்து உரலில் இடிப்பேன். அதன் பின் தாளித்து சம்பலில் போடுவன்

'' முறையை நான் செல்லமமாவுக்கு சொல்லி செய்விப்பேன்.

பத்து நிமிடங்களுக்கு பின் தங்கம்மா திரும்பி வந்த போது கையில் ஒரு பார்சலைக் கண்ட குஞ்சன் ''அம்மா என்ன உங்க கையில் பார்சல்'' குஞ்சன் அவளிடம் கேட்டான்

"என் சகோதரி உங்களுக்கு சில பனங்காய் பணியாராம் கொடுத்தவள்:"

''நன்றி அம்மா. நான் போக முன், அவவவை பார்த்துபோவன். ஒவ்வொரு குடும்பமும் என்னை உங்கள் இருவரையும் போல் அன்பாக நடத்துவதில்லை, நாங்கள் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் நீங்களும் உங்கள் சகோதரியும் அப்படிஅன்பாக நடத்துகிறீர்கள், நான் உங்களது தந்தையின் சகோதரனின் மனைவியின் இனத்தவன். ''

''பரவாயில்லை, நாங்கள் யாருக்கும் உணவு பரிமாறுவதற்கு முன்பு சாதியைச் பார்க்க வேண்டும். என் கணவருக்கு சாதி பற்றி நான் பேசுவது பிடியாது. ''

''அவர் ஏன் அப்படி போக்கு உள்ளவர் அம்மா '?

''அவர் உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்பதால் லெனின் எழுதிய புத்தகங்களைப் படிக்கிறார்

. நாங்கள் ஒப்புக்கொண்ட விலைக்கு உங்கள் சகோதரி என்ன சொன்னார்?

"நீ சொன்ன விலைக்கு அவள் சம்மதம் சொன்னாள்."

இலைகளை வெட்டுவதற்கு முன், குஞ்சன் தனது பணப்பையில் இருந்து ஆயிரத்து இரு நூற்றி ஐம்பது ரூபாயை வெளியே எடுத்து தங்கம்மாவிடம். எண்ணிக் கொடுத்தான்

"அம்மா, தயவுசெய்து நீங்கள் திரும்பவும் எண்ணி, பேசிய தொகை இருப்பதாக திருப்தி அடையுங்கள்" என்று குஞ்சன் சொன்னான்

''குஞ்சன், நான் உன்னை நம்புகிறேன். காசை எண்ண வேண்டிய அவசியமில்லை. ''

''இல்லை அம்மா, தயவுசெய்து எண்ணுங்கள். சில நேரங்களில் நான் எண்ணுவதில் தவறவிட்டிருப்பேன்''

குஞ்சன் வற்புறுத்தியதால், தங்கம்மா பணத்தை எண்ணி,

''. தொகை சரியாக இருக்கு. ஆனால் நோட்டுகள் அழுக்காக இருப்பது மட்டுமே '', என்று பதிலளித்தாள் தங்கம்மா'

"அம்மா, கச்சேரியில் ஷிராஃப் வேலை செய்யும் உங்கள் கணவரைப் போன்று புதிய நோட்டுகளை என்னால் பெற முடியாது."

தங்கம்மா சிரித்துக் கொண்டே, '' உனக்கு , என் கணவரைப் பற்றி எல்லாம் தெரியும் போ''.

''உங்கள் கணவர் நடராஜா, அய்யா, , நேர்மையான மனிதர். அவர் நல்ல ஆங்கிலம் பேசுவார் ''.

"ஆம், அவர் முதல் பிரிவில் சீனியர் மெட்ரிகுலேஷன் தேர்ச்சி பெற்றவர், அவர் எழுத்தர் சேவை தேர்வில் முதலிடம் பெற்றார்" தங்கம்மா பெருமையுடன் குஞ்சனிடம் சொன்னாள்.

'' சரி, அம்மா. நான் பாலனுடன் என் வேலையைச் செய்ய போறன் '':

குஞ்சன் கத்தியுடன் வேலிக்குச் சென்று இலைகளை வெட்டத் தொடங்கினாரன். மரங்களும் வேலியும் சேதமடையாமல் பார்த்துக் கொண்டான் ஒரு மணி நேரத்திற்குள் இருவரும் வேலையை முடித்து இலைகளை வண்டியில் ஏற்றிக் கொண்டு, 'குஞ்சன் தங்கம்மாவுக்கு நன்றி கூறிவிட்டு, தனது வண்டியில் ஊருக்கு புறப் பட்டார்

இரண்டு மணி நேர பயணத்திற்குப் பிறகு, சரசாலையில் உள்ள ஒரு புகையிலை பண்ணையில் இலைகளை இறக்கி விட்டார் ஆரம்பத்தில் ஒரு தோட்டக்காரனுக்கு இலைகளை உரமாக வழங்க ஏற்பாடு செய்த படியால் தோட்டக்காரன் குஞ்சனுககு இரண்டாயிரத்து முன்நூரறு ரூபாய் கொடுத்து அவருக்கு நன்றி தெரிவித்தார்

வீட்டிற்கு செல்லும் வழியில், குஞ்சன் சோர்வாக இருந்தார், கிராமத்தில் உள்ள செல்லனின் கள்ளுக்கொட்டிலில் குடிக்க விரும்பினார்; செய்த வேலைக்காக பாலனுக்கு ஐநூறு ரூபாயைக் கொடுத்தார், அவனை வண்டியுடன் வீட்டிற்குச் செல்லும்படிசொன்னார் , கள்ளுக் கொட்டிலில் இரண்டு தோட்டக்காரர்களை சந்தித்து, அவர்களின் தோட்டங்களுக்கு இலைகளை வழங்க ஒப்பந்தங்கள் செய்தார்

கள்ளுக் கொட்டிலில் இர்ருந்து வீட்டிற்குச் சென்றபோது, அவரது மனைவி செல்லம்மா கோழிக் கறி மற்றும் இரவு உணவிற்கு வறுத்த மீன் இடியப்பம் ஆகியவற்றைசெய்து வைத்திருந்தாள். இருவரும் ஒன்றாக அமர்ந்து இரவு உணவு சாப்பிட்டார்கள்.

*****

## *கதை 9*

## *நன்கொடை*

*மகாலிங்கத்துக்கு யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து மட்டக்களப்பு கச்சேரிக்கு மாறுதல் கடிதம் வந்தபோது அவனுக்கு மனதில் சந்தோஷம் இல்லை. வீட்டிலும் அதை வரவேற்கமாட்டார்கள் என்று அவனுக்குத் தெரியும். யாழ்ப்பாணத்தில், நல்லூர் நாடாளுமன்ற உறுப்பினரின் உதவியோடு ஆறு வருஷங்கள் யாழ்ப்பாணத்தில் வேலை செய்து விட்டான். அரசாங்க ஊழியர் சங்க விதிகளின்படி நான்கு வருடங்களுக்கு மேல் சொந்த ஊரில் வேலை செய்வதை அவனது சங்கம் வரவேற்பதில்லை. மற்றவர்களுக்கும் சொந்த ஊரில் வேலை செய்ய வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பது அவன் இணைந்திருந்த தொழிற் சங்கத்தின் நியதி.*

*மகாலிங்கத்தை மகான் என்றே நண்பர்கள் அழைப்பார்கள். ஆனால் அவனுடைய தாய் பவளம் அவனை "மகன்" என்றே அழைப்பாள். ஏ லெவல் படித்து, பல்கலைக்கழகம் புக முடியாத நிலை மகாலிங்கத்துக்கு. ஜெனரல் கிளரிக்கல் சேர்வீஸ் எனப்படும்; பொது அரசாங்க லிகிதர் சேவையில் 1980 இல் லிகிதராகச் சேர்ந்தான். மேலும் தொடர்ந்து படிக்க, வீட்டு நிலமை அவனுக்கு இடம் கொடுக்கவில்லை. வரிசையில் திருமணத்துக்காக காத்திருக்கும் அவனது இரு சகோதரிகளான இராசாத்தியும், மலருமே காரணம்.*

*யாழ்ப்பாணத்தில் பல குடும்பங்களில், பொறுப்பு என்று வந்துவிட்டால் வீட்டுக்குத் தலை மகன் அதை பாரம் எடுப்பது வழக்கம். பெற்றோரும் அதை எதிர்பார்ப்பார்கள். அதனால் மகாலிங்கம் திருமணத்தின் போது சீதனத்தோடு நன்கொடை என்ற டொனேஷன (Donataion) வாங்கி அதை மகள்களுக்குக் கொடுப்பதைப் பெற்றோர் எதிர்பார்த்ததைக் குறை சொல்லமுடியாது.*

*மகாலிங்கத்தின் தந்தை சின்னத்தம்பி ஒரு தமிழ்ப் புலவர். பண்டிதர் கூட. அவரைத் தம்பிப் புலவர் என்றே பெருமையாக ஊரில் அழைப்பார்கள். தமிழில் அழகாக உச்சரித்து பேசவும். இலக்கணத்தமிழில் எழுதவும் வல்லவர். அதனால் அரசியல்வாதிகள் அவரின் உதவியை அரசியல் பேச்சுகள் எழுதுவதற்கு நாடுவது உண்டு. பாராட்டி கவிதைகள் எழுதுவதிலும் வல்லவர். அவருடைய தந்தையாரான பெரியதம்பி புலவரும் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர். தந்தை எவ்வழியோ அவ்வழியே மகனும். கோப்பாய் ஊரில் உள்ள கல்லூரி ஒன்றில் தம்பிப்புலவர் தமிழ் ஆசிரியராக இருந்தார்.*

*தம்பிப்புலவர் குடும்பம் பழமைவாதிகள். புலவரின் மனைவி பவளமும் அதே கல்லூரியில் ஒரு தமிழ் ஆசிரியை. படிதாண்டா பத்தினி. எதையும் கணவனைக் கேட்டுத்*

தான் நடப்பாள்.. இருவருட இடைவெளியில், மூன்று பிள்ளைகளையும் பெற்றெடுத்தவர் புலவர். மூன்றே போதும் என்று தனது தயாரிப்பை நிறுத்திவிட்டார்.

வீட்டுப் பரிபாலனம் தம்பிப் புலவர் கையிலிருந்தது. முக்கியமாக வரவு செலவு கணக்கு பார்த்து செலவு செய்தார் புலவர்.. அவர் சொல்வதே வீட்டில் சட்டம். பவளம் எதற்கு எடுத்தாலும் அப்பாவைக் கேட்க வேண்டும் என்பாள் பவளம் பிள்ளைகளுக்கு.

மகாலிங்கத்துக்கு மாத சம்பளம் கிடைத்தவுடன் அப்படியே சுளையாக கொண்டு வந்து தகப்பன் கையில், சம்பள விபர ரசீதோடு கொடுத்தாக வேண்டும். அதன் பின்னரே மகனின் சொந்தச் செலவுக்குத் தம்பிப் புலவர் பணம் கொடுப்பார். இது அவரின் மகனுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களாக இருக்கும் பவளத்துக்கும், மூத்த மகள் இராசாத்திக்கும், ஸ்டெனோகிராபராக நீதி மன்றத்தில் வேலை செய்யும் கடைக்குட்டி மலருக்கும். பொருந்தும். குடும்பத்தில் உள்ளவர்கள் உழைக்கும் சம்பளத்தில் ஒரு பகுதி சீட்டாக மிச்சம் பிடிப்பதும், அதன் கணக்கை வைத்திருப்பதும் தம்பிப் புலவர் பொறுப்பு.

தம்பிப் புலவர் சரியான சிக்கனக்காரர் என்று ஊர் சொன்னாலும்; அதைப்பற்றி அவர் கவலைப் படுவதில்லை. காரணம், கடன் வாங்காமல் தன் மகள் இருவரையும் தான் ரிட்டையராக முன்பே கரை சேர்க்க வேண்டும் என்பதே அவரின் முழு நோக்கம்..

மனைவி பவளத்தின் பரம்பரைச் சொத்தான ஆறு பரப்பு காணியோடு சேர்ந்த கோப்பாயில் இருநத மூன்று அறைகள் உள்ள கல் வீடு தான் அக்குடும்பத்தின் குடியிருப்பு. அந்த வீட்டை மலருக்கும் இராசாத்திக்கும் பங்கு வீடாகவும், தனக்கும் பவளத்துக்கும் சீவிய உருத்து வைத்து எழுவது தான் புலவரது திட்டம். அவர்கள் இருந்த வீடோ, இடிந்த நிலையிலிருந்தது, சுவர்களுக்கு வெள்ளையடித்துப் பல வருடங்களாயிற்று. வரும் வருமானத்தை சிக்கனமாக மிச்சம் பிடித்துச் சேமித்து வைத்தார் புலவர் தன் இரு மகள் மாருக்கும் சீதனமாகக் கொடுக்க. அதோடு மட்டுமல்ல மகனின் திருமணத்தின் பொது சீதனத்தோடு ஒரு பெரிய தொகையை நன்கொடையாகப் பெறவேண்டும் என்பதும் அவர் திட்டம். தன் சேமிப்போடு அந்த நன்கொடையையும் சேர்த்து சீதனமாய் மகள் இருவருக்கும்; கொடுத்து நல்ல குல கோத்திரத்தில். அரசில் உயர் உத்தியோகத்திலை உள்ள மாப்பிள்ளைகளைத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பதே தம்பிப் புலவரின் யோசனை. தன் இரு மகள் மாரின் திருமணத்துக்கு, மகன் மகாலிங்கத்தையே முழுக்க நம்பி இருந்தார் தம்பிப் புலவர்.

இலட்சம் ரூபாய்களை மகனின் திருமணத்தில் நன்கொடையாகப் பெண் வீட்டாரிடம் இருந்து பெற்று, அதை ஒரு இலட்சம் பணமாகப் பிரித்து, தலா இரு பெண்களுக்கும் தங்கள் இருக்கும் வீட்டை பங்கு வீடாகச் சீவிய உருத்து வைத்து சீதனமாக கொடுப்பது. இரண்டாவது திட்டம் மகனுக்கும் மூத்தவள் இராசாத்திக்கு மகாலிங்கத்துக்கு வரும் பெண்ணின் சகோதரனோடு மாற்றுத் திருமணம் செய்து வைப்பது. ஆனால் இரண்டாவது

திட்டத்தை அவர் அவ்வளவுக்கு விரும்பவில்லை. இந்த மாற்றுத் திருமணத்தால் பிரிந்த சில குடும்பங்களைப் பற்றி அவர் அறிந்திருந்தார். அதோடு நன்கொடை பெற்று மலருக்கு திருமணம் செய்ய முடியாவிட்டால் சீவிய உருத்து வைக்காமல் முழு வீட்டையும் மலருக்கு கொடுக்க வேண்டி வரும். அப்படி நடந்தால் தானும், மனைவி பவளமும் இருக்க வீடில்லாமல் போக வேண்டிய நிலை ஏற்படும். அதனால் முதல் நன்கொடைத் திட்டத்தையே நம்பி இருந்தார் தம்பிப்; புலவர். அவர் மனைவி பவளமும் அவர் சொன்னதையே மறு பேச்சில்லாமல் ஆமோதித்தாள். இராசாத்தியும், மலரும் தங்களுக்கு எந்த வழியிலும் திருமணமானால் சரி என்று இருந்தனர்.

பவளத்தின் அன்பு மகன் மகாலிங்கம். அவனுக்கும் தாய் மேல் சொல்லமுடியாத அளவுக்குப் பற்று. தன் ஓபீஸ் பிரச்சனைகளைத் தாயோடு அடிக்கடி பகிர்ந்து கொள்வான். தந்தையோடு பேசுவது குறைவு. அவரின் கட்டுப்பாடு அவனுக்குப் பிடிப்பதில்லை.

****

கையில், மட்டக்களப்புக்கு போக, மாறுதல் கடிதத்தோடு வீட்டுக்கு மகாலிங்கம் வந்த போது பவளம் கைவேலையாய்; குசினிக்குள் இருந்தாள். இராசாத்தியும், மலரும் வேலையில் இருந்து வீடு திரும்பவில்லை

“அம்மா நீ எங்கை இருக்கிறாய். கொஞ்சம் இங்க வாவன்” என்று சொன்னபடி அவன் எப்போதும் அமரும் கதிரையில் போய் அமர்ந்தான். தன் கைப்பையைத் திறந்து, கடிதத்தை எடுத்து தாயிக்குச் செய்தியைச் சொல்லத் தயாரானான்.

“நீ வேலையாலை வந்திட்டியா மகன்? கொஞ்ம் பொறு, இப்ப வாறன், நான் செய்த பனங்காய் பணியாரமும் கோப்பியோடையும்” என்று குசினியில் இருந்து பதில் அளித்தாள் பவளம்.

தன் அறைக்குள் பள்ளிக்கூட வேலை செய்து கொண்டிருந்த தம்பிப் புலவர் மகனின் குரல் கேட்டு இலக்கணப் புத்தகமும் கையுமாக ஹாலுக்குள் வந்து, அவர் வழமையாக அமரும்; சாய்மானக் கதிரையில் புத்தகம் வாசிப்பது போல் பாவனை செய்தபடி அமர்ந்தார்.

பவளம் புலவருக்கு முதலிலும் அதன் பின் மகனுக்கும் பனங்காய் பணியாரமும் கோப்பியும் தட்டில் கொண்டு வந்து கொடுத்தாள்;

“ அம்மா பனங்காய் பணியாரம் இராசாத்திக்கும் மலருக்கும் வச்சிருக்கிறியா’? மகாலிங்கம் தாயைக் கேட்டான்.

“ நீ அதைப் பற்றி யோசிக்காதே. அவர்களின் பங்கு வைத்திருக்கிறேன். உனக்கு எப்பவும் தங்கச்சி இருவரிலும் எவ்வளவுக்கு அக்கறை? அதுசரி மகன் என்ன இன்று அசதியாயிருக்கிறாய்”? பவளம் மகனைக் கேட்டாள்;. அலுவலகத்தில் வேலை அதிகமா?

*கடந்த மூன்று நாட்களாக நீ அலுவலகத்திலை இருந்து தாமதமாக வரும்; காரணத்தை நான் கேட்க விரும்பவில்லை", பவளம் கரிசனையோடு சொன்னாள்.*

*தம்பிப் புலவர், மனைவி கொடுத்த பணியாரத்தை சுவைத்து, கோப்பியை அருந்தியபடி மனைவிக்கும் மகனுக்கும்; இடையே நடைபெற்ற உரையாடலை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.*

*"ஓம் அம்மா, ஓவர் டைம் வேலை வரும் போது, நான் வேலை செய்யும் வாய்ப்பை தவறவிடக் கூடாது. என் அதிகாரி என்னை ஒவ்வொரு நாளும் கூடுதல் மணி நேரம் வேலை செய்ய அனுமதித்திருக்கிறார். நான் இந்த சனிக்கிழமையும் அலுவலகத்திற்குச் சென்று வேலை செய்ய முடியும்."*

*"மகன் நீ அதிகமாக வேலை செய்து உடம்பை கஸ்டப்படுத்தாதே'' பவளம் சொன்னாள்.*

*மகாலிங்கத்தின் கையில் கடிதத்தைக் கண்ட புலவர் “ தம்பி என்ன கையிலை கடிதம்''? என்று கேட்டார்.*

*"அடடா கதையிலை, உங்கள்; இருவருக்கும் ஒரு கெட்ட செய்தி சொல்ல மறந்திட்டன்".*

*"கெட்ட செய்தியா? அது என்ன? அலுவலகத்தில் ஏதாவது பிரச்சனையா''?*

*"இல்லை ஐயா. என்னை அடுத்த மாதம் முதல் மட்டக்களப்பு கச்சேரிக்கு மாற்றி இருக்கினம். அந்த மாறுதலுக்கான கடிதம் தான் இது. "*

*"என்ன மாறுதலா? எப்ப இருந்து?" புலவர் கேட்டார்.*

*"அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து. நான்கு வருஷங்களுக்கு மேலாக நான் யாழ்ப்பாணத்தில் வேலை செய்திட்டன். அதுதான் என்னை வேறு ஊருக்கு மாற்றி இருக்கினம.'';*

*"மாறுதலை ரத்து செய்ய எம்.பியோடை நான் பேச வேண்டுமா? அவரது மேடைப் பேச்சை அவர் கேட்டு நான் எழுதி வச்சிருக்கிறன். அவரைச் சந்திக்கும் போது உன் மாறுதலைப் பற்றிப் பேசுகிறன் "*

*"வேண்டாம் ஐயா. நான் மட்டக்களப்புக்குப் போக மறுத்தால், அது என் பதவி உயர்வைப் பாதிக்கும். மேலும், நான் எழுது வினைஞர் சேவையாளர் சங்கத்தில் அங்கத்தினராக இருக்கிறேன். சங்க விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அதுவுமல்லாமல் மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக பணியாற்ற மாற்றப்படடிருக்கிறன். ஒரு பொறுப்பான பதவி'' என்றான் மகாலிங்கம்*

*"அப்ப தம்பி எங்களை விட்டிட்டு வெகு தொலைவான இடத்துக்குப் போகப் போறியா? என்றார் பெருமூச்சோடு தம்பிப் புலவர்.*

*"ஐயா கவலைப்படவேண்டாம் ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷம் அங்கை வேலை செய்துவிட்டு பிறகு நான் மியூச்சுவல் டிரான்ஸ்வர் எடுத்துக் கொண்டு திரும்பவும் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு வரத் தெண்டிக்கிறன்"*

*"மகன் நீ; இங்கே இல்லாமல் நாங்கள் என்ன செய்ய''? . உன் இரண்டு தங்கச்சிமாருக்குத் திருமணங்கள் ஏற்பாடு செய்ய நீ இருந்தால் எங்களுக்கு உதவியாக இருக்கும்" பவளம் விசனப்பட்டு மகனைக் கேட்டாள்.*

*"ஐயா இருக்கிறார்தானே எல்லாத்தையும் கவனித்து முடிவு எடுக்க ".*

*"தம்பி நீ மட்டக்களப்பு போக வேண்டும் என்று சொன்ன போது நான் சரியாகக் கவலைப்படுகிறேன். உம்முடைய மாறுதல் கொழும்புக்கு என்றால் நான் கவலைப்பட்டிருக்க மாட்டன்", தம்பிப் புலவர் தன் ஆதங்கத்தை கவலையோடு தெரிவித்தார்.*

*"ஐயா கவலை வேண்டாம்? மட்டக்களப்பும் யாழ்ப்பாணத்தைப் போல ஒரு தமிழ் பகுதிதானே. மேலும் அரசாங்க அதிபரும் ஒரு தமிழர். ஆனால் பயணம் தான் ஒரே ஒரு பிரச்சனை. ரயிலில் போவதெண்டால் பல மணித்தியாலப் "*

*''நான் ரயில் பயணம் குறித்துப் பேசவரவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு மாற்றப்பட்ட இளம் அரசாங்க ஊழியர்களுக்கு அங்கை திருமணம் என்ற பொறியில் சிக்குப்பட்டதைப் பற்றிப் பல கதைகள் கேள்விப்பட்டிருக்கிறேன். மட்டக்களப்புப் பெண்களுக்கு யாழ்ப்பாணத்துப் பெடியன்கள் மேல் ஒரு கண்ணாம். அதோடை, யாழ்ப்பாணத்துப் பெடியன்களை மயக்க விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு மந்திரித்த காத்தான்குடி பாயைப் பாவிப்பார்களாம்'', என்று சொல்லி மகனின் முகத்தை புலவர் பார்ததார்*

*"ஐயோ கடவுளே! ஐயா நீங்கள் கேட்டதெல்லாம் கட்டுக் கதைகள். நானும் உது போன்ற கதைகள் கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கு என் ஒபீசில் என்னோடு வேலை செய்யும் மட்டக்களப்பைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என் நண்பர். அவர் உதெல்லாம் கட்டுக்கதை என்றார்''.*

*"நான் மட்டும் சொல்லவில்லை.நம் சமூகத்தில் மக்கள்; பேசியதைத் தான் சொல்கிறேன்.'' என்றார் புலவர்.*

*'' ஐயா உங்களுக்கு மட்டக்களப்பு மக்கள் பற்றி மிகவும் நல்ல கருத்து இல்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். உங்களைப் போல் அந்த ஊரிலை நல்லாய் படித்த தமிழ் அறிஞர்கள் பலர் உண்டு.. அவர்களின் பழக்க வழக்கங்கள் யாழ்ப்பாணம் மக்களைப் போலவே உள்ளது.. அங்கு தமிழர்கள் முஸ்லீம், சிங்கள மக்களோடு இணைந்து வாழ்கிறார்கள்'', மகாலிங்கம் தகப்பனுக்கு விளக்கம் கொடுத்தான்.*

"ஆனால் எங்கள் கிராமத்திலிருந்து யாராவது மட்டக்களப்பில் திருமணம் செய்தால் அவர்களை; நாம் மதிப்பதில்லை. என் மாமா, புகையிலை விற்பனைத் தரகர். அவர் மட்டகளப்புவுக்கு வியாபாரம் செய்ய போனபோது அவரின் மட்டக்களப்பு வியாபார கூட்டாளியின் மகளைக் கண்டு விரும்பி வீட்டிலை சொல்லாமல் கலியாணம் செய்தவர். எனது மாமாவின் தந்தை அவரோடு இணைப்பைத் துண்டித்து, அவரை அவரது வீட்டில் நுழைய அனுமதிக்க வில்லை. அது மட்டுமல்ல, என் பள்ளி தலைமை ஆசிரியர் பொன்னுசாமி ஆசிரியரின் மூத்த மகளுக்கு என்ன நடந்தது என்று உனக்குத் தெரியும் தானே ? அவளும் மட்டக்களப்பு பல்கலைக் கழகத்துக்குப் படிக்கப் போன போது மட்டக்களப்பு பெடியன் ஒருவனைக் காதலித்து திருமணம் செய்து கொண்டாள். அது போல உனக்கும் ஏதும் நடந்துவிடக்கூடாது என்ற கவலை எனக்குத் தம்பி "

"அவள் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளரைத் திருமணம் செய்தது எனக்குத் தெரியும் ஐயா. நான் அவரை ஒரு முறை சந்தித்தனான்;. மிகவும் நல்ல மனிதர். அவர் அவளை விரும்பி திருமணம் செய்வதில் என்ன குற்றம்? நாங்கள் ஒரு வட்டத்துக்குள் மட்டுமே வாழாமல்; மற்ற பகுதிகளில் வாழும் மக்களோடு ஒருங்கிணைய வேண்டும் ஐயா''

"தம்பி, நாங்கள் அவர்களின் வேர்களைத் தெரியாமல் எப்படி ஒருங்கிணைய முடியும்? அவரது முதல் மகள் மட்டக்களப்பு திருமணம் செய்ததால், பொன்னுசாமியின் இரண்டாவது மகள் திருமணத்தில் பல பிரச்சினைகள். "

"ஐயா நாங்கள் வாழ்வதோ ஒரு சிறிய தீவு. நீங்கள் அடிக்கடி தமிழ் ஈழம் பற்றி பேசுவீர்களே. வடக்கும், கிழக்கும் இணைய வேண்டும் என்பீர்களே. அப்ப ஏன் இந்தப் பாகுபாடு''?

'' மகன், எனக்கு உன்னிலை நல்ல நம்பிக்கை உண்டு. நீ எங்கடை ஊருக்குள்ளை தான் முடிப்பாய் எண்டு''

****

மகாலிங்கம் மட்டக்களப்புக்கு மாறுதலாகிப் போய் கிட்டத்தட்ட ஒரு வருஷமானது. இரு முறை மட்டுமே ஊருக்கு வந்து போனான். தாய் காரணம் கேட்டதுக்கு, வேலை அதிகம் என்று சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளித்து விடுவான். மகாலிங்கத்தின் பிரிவை வீட்டில் எல்லோரும் உணர்ந்தார்கள். மாதாந்தம் தன் செலவு போக தன் சம்பளத்தில் ஒரு பகுதியைத் தவறாது தகப்பன் பெயருக்கு மணியோடர் எடுத்து அனுப்பிவிடுவான். அதோடு சுருக்கமாக வீட்டில் எல்லோரையும் சுகம் விசாரித்தும், தான் நலமாக இருப்பாதாகவும் குறிப்பிட்டு ஒரு பக்கத்தில் கடிதம் எழுதுவான்.

அவனுடைய நண்பன் பாலகிருஷ்ணன் வீட்டில் தான் தற்காலிகமாக தங்கியிருப்பதாகவும், வேறு வீடு கிடைத்தவுடன் போய்விடுவதாகவும் ஒரு கடிதத்தில் எழுதியிருந்தான். கடையில் சாப்பிடாமல் பாலகிருஷ்ணனின் தாய் சமைத்த உணவை மகன் சாப்பிடுகிறான் என்று கேள்விப்பட்டதும் பவளத்துக்கு மனதுக்குள் சந்தோஷம். பாலகிருஷ்ணன் லீவில்

*யாழ்ப்பாணத்துக்குப் போனபோது, பவளம் எலுமிச்சம் ஊறுகாயும், வடகமும், முறுக்கும் தயார் செய்து மகனுக்கு பாலா மூலம் அனுப்பினாள். பாலா வீட்டில் இரு மாதங்கள் தங்கியிருந்த பிறகு, சம்மரி ஒன்றில் மகாலிங்கத்துக்குத் தங்க இடம் கிடைத்தது. ஒரு சமையலகாரன் சம்மரியில் இருப்போருக்கு உணவு தயார் செய்தான். அந்த செய்தி அறிந்த போது தம்பி புலவர் குடும்பத்துக்குப் பெரும் நிம்மதி தனது கடைசி கடிதத்தில், தீபாவளிக்கு ஒரு வார விடுமுறை நாட்கள் எடுத்துக்கொண்டு வருவதாக மகாலிங்கம் அவர்களுக்கு எழுதியிருந்தான்.. முழு குடும்பமும் அந்த கடிதத்தைப் படித்து சந்தோசப்பட்டனர்.*

*தம்பிப் புலவர், கோண்டாவிலில் மகனுக்குத் திருமணம் பேசி ஏற்பாடு செய்திருந்தார்.; அவர் கேட்ட வரதட்சணையை, பெண்ணின் பெற்றோர் சந்திக்கத் தயாராக இருந்தனர். நன்கொடையாக ரூபாய் ஒரு லட்சம் ஐம்தாயிரம் கொடுக்க ஒப்புக் கொண்டனர். பெண் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் நேர்சாக வேலை. நல்ல சாதி சனம். பெண்ணின் தகப்பன் அரசாங்கத்தில் சேவேயராக வேலை செய்து ரிட்டையரானவர். தாய் ஒரு ஆசிரியை. பெண்ணுக்கு மணமான ஒரு சகோதரன் மட்டுமே. ஆனால் பெண் கொஞ்சம் கறுப்பு. வாக்குக் கண்பார்வை. உயரம் குறைவு. தம்பிப்புலவருக்குத் தனது வருங்கால மருமகளின் அழகு பற்றி கவலை இல்லை. அவருக்கு நன்கொடை தான் முக்கியம். அவருக்குத் தான் கீறின கோட்டை மகன் தாண்ட மாட்டான் என்று தெரியும். வரதட்சணை எதிர்பார்ப்பை விட அதிகமாக இருந்ததும், நல்ல ஜாதகப் பொருத்தம் இருந்ததும் அவர் மனதுக்குத் திருப்தி. மகன் வந்து திருமணத்துக்குத் தலையாட்ட வேண்டியது மட்டும் தான். தன் பாரம் குறைந்த மாதிரி என்று மனைவிக்குத் தம்பிப் புலவர் சொன்னார்.*

*"அம்மா நாங்கள் அண்ணாவின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர் எங்களுக்கு நிறையச் செய்திருக்கிறார். நாம் அவர் தன் மனைவி எப்படி இருக்கவேண்டும் என்று விருப்புவதைநாம் ஏற்க வேண்டும்", இராசாத்தி தாய்க்கு சொன்னாள்.*

*“மகள் அண்ணாருடைய கலியாணத்திலை நீ தலையிடாதே அப்பா அதெல்லாம் முடிவெடுப்பார்”, என்றாள் பவளம்.”*

****

*தபால்காரன் ஒரு பதிவுக்கடிதத்ததை தம்பிப் புலவர் வீட்டில் கொடுத்துச் சென்றான்.*

*“ ஏதோ புதுமையாக அண்ணாவிடம் இருந்து பதிவுக்கடிதம் ஒன்று; வந்திருக்கிறது அம்மா” என்றாள் கடிதத்தைக் கையெழுத்திட்டு வாங்கினாள் மலர்.*

*“ தீபாவளி பண்டிகைக்கு அவன் வருவதுக்கு இரண்டு வாரங்கள் மட்டுமே இருக்கிறது. அதுக்குள்ளை ஏன் கடிதம் போடுகிறான். அதுவும் பதிவுத் தபாலில் கடிதம் போட்டிருக்கிறான்” என்றாள் யோசனையோடு பவளம்.*

தம்பிப் புலவர் கல்லூரியில் இருந்து வீடு திரும்பியதும் கடிதத்தை அவரிடம் இராசாத்தி கொடுத்தாள்;. அவர் தன் சாய்மானக் கதிரையில் அமர்ந்து, கடிதத்தை உறையில் இருந்து எடுத்து வாசிக்கத் தொடங்கினார்.

அன்புள்ள ஐயா, அம்மா , சகோதரிகளுக்கு

நான் நலம் உங்கள்; நலமறிய ஆவல். பதிவு அஞ்சல் மூலம் என் கடிதத்தைப் பெற உஙகளுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். என்னைப் பற்றி நீங்கள் கண்ட கனவை நான் ஏமாற்றியதுக்கு முதலில் வருத்தம் தெரிவிக்கிறேன். நான் இப்போது ஒரு திருமணமானவன் என்று சொன்னால் உங்கள் எல்லோருக்கும் அதிர்ச்சியாக இருக்கலாம். உங்கள் மருமகள் பெயர் ரஞ்சிதம். அவளது தந்தை மட்டக்களப்பில் ஒரு தொழில் அதிபர். அவள் அவருக்கு ஒரே ஒரு மகள். ரஞ்சிதத்துக்கு மட்டக்களப்பு கச்சேரியில் வேலை. அவள் என் அரசாங்க அதிபரின் கிட்டத்து உறவு. அவளை நான் ஒரு கூட்டத்திளை முதலிலை சந்தித்த போது எனக்கு அவளுடைய அணுகுமுறை மற்றும் நடத்தை பிடித்திருந்தது. அவள் ஒரு எளிமையான தோற்றம் உள்ளவள் அமைதியான பெண். தன் தந்தை பணக்காரன் என்ற பெருமை இல்லாதவள். வேலையிலும் கெட்டிக்காரி. சமூக சேவை பகுதியில் அதிகாரியாக இருக்கிறாள். சமூகத்தில் பல தொண்டு; வேலைகளில் ஈடுபட்டவள்;. அவளுக்கு என்னை பிடித்துக்கொண்டது. எனக்கும் ரஞ்சிதம் தான் மனைவி எனத் தீர்மானித்து, அரசாங்க அதிபரின் உதவியோடு அவளின் பெற்றோரைச் சந்தித்து எங்கள் காதலைப் பற்றிப் சொன்னேன். அவர்களும் எங்களின் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்தனர். எங்கள் திருமணம் மாமாங்கம் பிள்ளையார்; கோவிலில் போன மாதம் நடந்தது. இந்த விவகாரம் பற்றி நான் எழுத விரும்பவில்லை. ரஞ்சிதத்தின் தகப்பன்; உங்களை நன்கு அறிந்தவர் என்று சொன்னார். பல வருஷங்களுக்கு முன் , அவர் மட்டக்களப்புவுக்கு வியாபார விஷயமாக வந்த போது அவரின் பிஸ்னஸ் கூட்டாளியின் மகளைத் திருமணம் செய்துகொண்டாதாகச் சொன்னார். நீங்கள் ஒரு தடவை, மட்டக்களப்பில் திருமணம் செய்து கொண்ட உங்கள் மாமா முறையானவர் பற்றி என்னிடம் சொல்லியது என் நினைவுக்கு உடனே வந்தது. அவர் தான் ரஞ்சிதத்தின் தந்தை, என்றால் ஆச்சரியப்படுவீர்கள். நான் அவரோடு என் திருமணததைபற்றி பேசிய போது எனது. இரு சகோதரிகள் திருமணம் தொடர்பான சீதனப் பிரச்சினை பற்றிச் சொன்னேன். அவர்; உடனே அவர்களின் திருமணத்துக்குத் தேவையான பணத்தைத் தான் தருவதாக உறுதியளித்தார். அவர் தந்த பணம் இரண்டு இலட்சம் ரூபாய்களுக்கு ஒரு வங்கி டிராப்ட் எடுத்து இக் கடிதத் தோடு அனுப்புகிறேன். மறுக்காமல் இப்பணத்தை ஏற்று, என்னையும் ரஞ்சிதத்தையும் நீங்களும், அம்மாவும், தங்கச்சிமாரும் ஆசீர்வதியுங்கள். எங்களை ஏற்றுக் கொண்டதாகப் பதில் போட்டால் தீபாவளிக்கு உங்கள் மருமகளையும் கூட்டிக்கொண்டு ஊருக்கு வருகிறேன்

இப்படிக்கு

உங்கள் மகன் மகாலிங்கமும் மருமகள் ரஞ்சிதமும்.

கடிதத்தை வாசித்ததும் தம்பிப் புலவரின் கைகள் நடுங்கத் தொடங்கியது. அவர் நெற்றியில் வியர்வைத் துளிகள் தெரிந்தன. கடித உறைக்குள் வங்கி டிராப்ட் இருக்கிறதா என்று அவருக்குப் பார்க்க விருப்பமில்லை. அவ்வளவுக்கு அவருக்கு மகன் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எதை அவர் விரும்பவில்லையோ அதை அவன் செய்து விட்டான். கடிதத்தையும் உறையையும் மேசையில் வைத்து விட்டு அமைதி ஆனார். மகன் அனுப்பிய நன்கொடை பணத்தை எடுப்பதா அல்லது திருப்பி மகனுக்கு அனுப்புவதா? தன்மானம் அவர் மனதில் போராடிக் கொண்டு இருந்தது

****

## *கதை 10*

## *சீட்டு*

*சில்லாலைக் கிராமத்தில். மட்டுமல்ல சுற்றுப்புறக் கிராமங்களிலிலும் சீட்டுக்காரி சின்னம்மாளைத் தெரியாதவர்கள் இல்லை. சொன்னசொல் தவறாத, நாணயங்களுடன் தொடர்புள்ள நாணயக்காரி அவள். சொன்ன திகதிக்கு சீட்டுப்பணத்தைக் கொடுக்கத்தவறாதவள். சின்னம்மாளுக்கு சீட்டுபிடிப்பது ஒருபுதிய தொழில் அல்ல. பரம்பரைத் தொழில் என்று குறிப்பிடுவதில் தவறில்லை. அவளுடைய தாய் பொன்னம்மாள்கூட ஒருகாலத்தில் சீட்டுபிடித்து பல குடும்பங்களுக்குத் தங்கள் பெண்பிள்ளைகளைக் கரைசேர்க்க உதவிபுரிந்தவள். அக்காலத்தில் வங்கிகளைநம்பி அக்கிராமமக்கள் வாழவில்லை. சீட்டுத்தான் அவர்களுக்குத் தேவைப்பட்டநேரத்தில்கை கொடுத்து உதவியது. சின்னம்மாளின் புருஷன் கச்சேரியில் சிறாப்பர் வேலை அதனால் சின்னம்மாவிடம் சேரும் பழைய நோட்டுகளை புதிய நோட்டுகளாக புருசனைக் கோண்டு மாற்றி வைத்திருப்பாள்*

*சின்னம்மாளின் ஏலச்சீட்டினால்பயன் அடைந்த புகையிலைதரகர்களும்; வெங்காயம், மிளகாய்வியாபாரிகளும்பலர். பொன்னம்மாளும் சின்னம்மாளைப் போல்வாக் குநாணயம் தவறாதவள். சூரியன் கிழக்கில் உதிக்கத்தவறினாலும் பொன்னம்மாள்சொன்ன திகதிக்குசீட்டுப் பணத்தை உரியஆளுக்குக் கொடுக்கத்தவறமாட்டாள். அப்படி காசுசேராவிட்டாலும் கையில் உள்ள தன்பணத்தைப் போட்டுகொடுத்துவிடுவாள். சீட்டுபிடிப்பவர்கள் யாராவது சீட்டுக்காசைகுறித்த நேரத்துக்கு கொடுக்கத்தவறினால் பொன்னம்மாள் பொல்லாத வளாகிவிடுவாள். அவள்வாயில் இருந்துவரும் வார்த்தைகளுக்கு அஞ்சி சீட்டுப்பிடிப்பவர்கள் காசைக் கொடுக்கத்தவறமாட்டார்கள். எழுபதுவயதாகியும் பத்து சீட்டுகளைப் பரிபாலனம் செய்துவந்தாள். அவளின் ஞாபகம் அபாரமானது. பழைய கொப்பி ஒன்றில் தேய்ந்த பென்சில் ஒன்றினால் அவள் எழுதிவைத்த கணக்குகளில் ஒரு படித்தகணக்காளர் கூட பிழை கண்டு பிடிக்கமுடியாதவாறு இருந்தது. இவ்வளவுக்கும் அவள்படித்தது உள்ளூர் தமிழ்பாடசாலை ஒன்றில் ஐந்தாம் வகுப்புவரையே. திடீரென்று ஒரு நாள் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்ட பொன்னம்மாள் முழுப் பொறுப்பையும் தன் மகள் சின்னம்மாளிடம் பாரம் கொடுத்தாள். சீட்டு பிடிக்கும் தொழிலை சின்னம்மாள் தாயிடம் முற்றாகக் கற்றறிந்தவள். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்பது போல் சின்னம்மாளின் பெயரும் ஊர்ச் சனங்களின் மதிப்பில் வெகு விரைவில் பிரபல்யமாகத் தொடங்கியது. தாய்க்கு ஆரம்பத்தில் உதவியாக இருந்த சின்னம்மாள் அவள் இறந்தபின் பரம்பரைத் தொழிலைச் செய்யத் தொடங்கினாள். ''சில்லாலை சீட்டுக்காரச் சின்னம்மாள்'' என்ற நீண்ட அடுக்கு மொழிப்*

*பட்டப் பெயர் பொன்னாலை வரை தெரிந்திருந்தது. வணிகத்தில் ஒரு ஒழுங்குமுறையை அவள் கடைப்பிடித்தாள். சீட்டு பிடிப்பவர் எவராவது பணம் கொடுக்கத் தவறினால் அவர்கள் நாணயத்தின் மேல் ஒரு கரும் புள்ளியைக் குத்தி அவர் வேறு எவரோடாவது சீட்டுபிடிக்க முடியாதவாறு செய்துவிடுவாள். அவள் சொல்லுக்கு அவ்வளவு மரியாதை. அதற்குப் பயந்து குறிபிட்ட திகதிக்குள் பணத்தைக் கொடுக்கச்; சீட்டுகாரர்கள் தவறமாட்டார்கள்.*

*ஏலச் சீட்டு, குலுக்கல் சீட்டு இரண்டிலும் அவள் கைதேர்ந்தவள். புகையிலைத் தோட்டம் செய்யும் பலர் அவளிடம் ஏலச் சீட்டுபிடிக்க வரிசையில் நின்றனர். ஆனால் அவளது நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் மட்டுமே அதில் சேரமுடியும்.*

*சீட்டுக்காசும் கையுமாக சிறாப்பர் சிற்றம்பலத்தின் மனைவி கமலா வருவதைக் கண்ட சின்னம்மாள் "என்ன கமலா சிறாப்பருக்கு சம்பளம் கிடைத்த இருபத்தைந்தாம் திகதியன்றே நீர் காசைக் கொண்டுவந்து கட்டுகிறீர். இப்படி எல்லோரும் முதலாம் திகதிக்கு முன்னரே கொண்டு வந்து தந்தால் எனக்குப் பிரச்சனையில்லை. வாரும். எனக்குப் பக்கத்திலை வந்திரும். என்ன குடிக்கப் போறீர்?"; என்று அனுசரணையுடன் கமலாவை வரவேற்றாள். கமலா அவளின் சினேகிதிகளில் ஒருத்தி. பல வருடங்களாக அவளிடம் சீட்டு பிடிப்பவள். சின்னம்மாளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவள். கமலா யாரையாவது சீட்டில் சேர அறிமுகப்படுத்தினால் மறு வார்த்தை பேசாமல் சின்னம்மாள் சேர்த்துவிடுவாள்.*

*" இப்பத்தான் சாப்பிட்டுப் போட்டு வந்தனான் அக்கா. குடிக்க ஒண்டும் வேண்டாம் இந்தாருங்கோ அவருடைய சீட்டு காசு. வைதேகிக்கு நாளைக்கு சம்பளம். அவளுடைய சீட்டுக்காசை நாளைக்கே கொண்டு வந்து தாறன்" கமலா பணத்தை சின்னம்மாளிடம் நீட்டினாள். எல்லாம் புதிய மணம் வீசிய புது நோட்டுகள். புத்தகவடிவில் இருந்தது. சிறாப்பருக்கு கிடைக்காத புது நோட்டுச் சலுகையா? சின்னம்மாள் காசை எண்ணி எடுத்தாள். சில நோட்டுகள் ஒட்டிக்கொண்டன.*

*"வைதேகி எப்படி இருக்கிறாள்? அவளைக் கண்டு கன காலம்." கமலாவின் ஒரே மகள் வைதேகியைப் பற்றி; சின்னம்மாள் விசாரித்தாள்.*

*"நான் வரைக்கை அவள் இன்னும் வேலை முடிந்து ஸ்கூலாலை திரும்பவில்லை. முத்தையா அம்மானின் மாட்டு வண்டிலிலை தான் இன்னும் இரண்டு டீச்சர்மாரோடை வேலைக்குப் போய் வாறவள். அதாலை பயமில்லை. பாவம் கஷ்டப் பட்டு இராப்பகலாய் உழைச்சு தன்ரை கலியாணத்துக்கு சீதனம் சேர்க்கிறாள்" கமலா சொன்னாள்.*

*"வைதேகி படிப்பிக்கிற ஸ்கூலிலை தான் என்டை அக்காவிண்டை மகளும் படிக்கிறவள். வைதேகியைப் பற்றி உயர்வாக சொல்லுவாள். பிள்ளையளுக்கும் அவளை நல்லாய்*

பிடிக்குமாம். திறமையான இங்கிலீஷ் டீச்சராம்'' வைதேகியைப் புகழ்ந்து சின்னம்மாள் சொன்னாள்.

“ஓம் அக்கா, அதாலை வீட்டிலையும் இங்கிலீஸ் டியூசன் கொடுக்கிறவள். அவள் உழைக்கிற காசிலை முக்கால் வாசி அவளுடைய சீட்டுக்குப் போகுது. இதெல்லாம் அவள் கலியாணத்துக்குத் தான் சேர்க்கிறம். வேறு பிள்ளையளா எங்களுக்கு இருக்குது குடுக்க?. இருக்கிற வீட்டையும் சீவிய உருத்து வைத்து அவளுக்கு குடுக்க நானும்; அவரும் யோசித்திருக்கிறம். அதோடை இரண்டு சீட்டு காசுகளையும் எடுத்து, கையிலை இருக்கிறதோடை சேர்த்து ஐம்பது குடுக்க யோசித்திருக்கிறம். நல்ல இடத்தில் இரண்டு சம்பந்தங்கள் கைவசம் இருக்கு. ஒரு மாப்பிள்ளை பட்டதாரி மாப்பிள்ளை. டீச்சராக இருக்கிறார். மற்ற மாப்பிள்ளை வவுனிய கச்சேரியிலை கிளாஸ் ரூ கிளார்க்காக வேலையாம். சாதகம் நல்லாய் பொருந்தியதாகப் பார்த்து செய்து வைக்க வேண்டும். எல்லாம் கடவுள் விட்ட செயல்'', கமலா தன் மனதில் உள்ளதைச் சொன்னாள்.

“கமலா நீர் ஒன்றுக்கும் யோசிக்காதையும். உமக்கும், உம்முடைய அவருக்கும் நல்ல மனசு. உம்முடைய மனுசன்டை சீட்டு காசு பதினையாயிரமும்., உம்முடைய மகளிண்டை சீட்டு காசு இருபதாயிரமும்; இன்னும் மூன்று மாசத்திலை எடுக்கலாம். நீங்கள் கலியாணத்துக்கு வேண்டிய ஒழுங்குகளை இப்பவே செய்யத்தொடங்குங்கள்'', என்று கமலாவுக்கு தைரியத்தைக் கொடுத்தாள் சின்னம்மாள்.

“சரி அக்கா. நேரமாச்சு. அப்ப நான் கிளம்பிறன். வைதேகி ஸ்கூலாலை வருகிற நேரமாச்சு. நான் வரக்கை அவர் வீட்டிலை இல்லை. கலியாண விஷயமாய் அவர், ஓவர்சியர் கந்தையரைப் பார்க்க போயிட்டார்'' என்று சொல்லிக் கொண்டு கமலா புறப்பட்டாள்.

“இவ்வளவு தூரம் வந்த நீர் வெறும் கையோடை போகக் கூடாது. வீட்டை செய்த எள்ளுருண்டையும் பனங்காய்ப் பணியாரமும் இருக்கு, தாறன். கொண்டு போய் சிறாப்பருக்கும், வைதேகிக்கும் குடும்“ என்று சொல்லியபடி சின்னம்மாள் எழும்பிப் போய் அடுப்படியில் இருந்து ஒரு சிறு பார்சலை கொண்டு வந்து கமலாவிடம் கொடுத்தாள். அவளை வாசல் வரை வழியனுப்பிப் போட்டு அலுமாரிக்குள் கமலா கொடுத்த பணத்தைக் கொண்டு போய் வைத்து பூட்டினாள்.. சின்னம்மாள் பழமையில் ஊறியவள். அவளுக்கு பணத்தை வங்கியில் போடும் அவளுக்கு பழக்கமில்லை. கையில் காசு இருந்தால் தான் அவசரமாக காசு தேவைப்படுபவர்களுக்கு நகைகளை அடைமானமாக எடுத்து இருபது வீத வட்டிக்கு மூன்று மாதங்களுக்குள் திருப்பித் தரும்படி கடன் கொடுத்து சம்பாதிக்கக் கூடியதாயிருந்தது. பலர் கொடுத்த சீட்டு பணத்தில் உழைத்தாள் அவள். ஆனால் சொன்ன திகதியன்று சீட்டுப் பணத்தைப் சீட்டுக்காரர்களுக்குக் கொடுக்க அவள தவறமாட்டாள்.

****

சிறாப்பர் சிற்றம்பலம் பலகாலம் அரசசேவையில் சிறாப்பராக இருப்பவர். தான் பென்சன் எடுக்க முன்னரே தனது ஒரே மகள் வைதேகியின் கலியாணத்தைச் செய்துமுடிக்க வேண்டும் என்பது தான் அவருடைய முழு விருப்பம். கலியாணத்துக்கு குறைந்தது ஐம்பதாயிரம் தேவை. ஒரு வருஷத்துக்கு முதல் சீட்டு போட்டு சேர்த்து வைத்த காசில் ஒரு பகுதியை தாயின் இழவு வீட்டுக்குச் செலவு செய்து போட்டார். செல்லாச்சி கிழவி விட்டுச் சென்ற மூக்குத்தியும் தோடும் ஐயாயிரத்திற்கு கூட பெறுமதியில்லை என அவருக்கும் தெரியும். அதற்கு மேலாக  செத்த வீடு, காடாத்து, அந்தியேட்டி என்று செலவு செய்து போட்டார். தாயுக்கு ஒரே பிள்ளை சிற்றம்பலம். கணவன் இறந்தவுடன் கஷ்டப்பட்டு கிடைத்த கொஞ்சப் பென்சன் காசுடன் பலகாரம் செய்து சம்பாதித்து மகனை வளர்த்து படிப்பித்து ஆளாக்கினவள் செல்லாச்சி. மாமியாரோடை ஒட்டென்றால் ஒட்டு கமலா. அதே போல செல்லாச்சியும் பிரச்சனை என்று வந்தால் மருமகள் பக்கம் தான் சாய்வாள்.

''எணேய். நீ எனக்கு தாயில்லை அவளுக்கு தான் தாய் என்று'' அடிக்கடி வேடிக்கையாக சிறாப்பர் தாயைச் சீண்டுவார்.  சிற்றம்பலம் கொஞ்சம் பின் வாங்கினாலும் கமலா செலவு செய்ய பின்வாங்கியிருக்கமாட்டாள். மாமியார் சாக முன் தன் கையில் ஐயாயிரம் காசை செத்தவீட்டு செலவுக்கு எனப் பென்சன் காசில் சீட்டுபிடித்து கொடுத்து வைத்ததை கமலா சொன்னபோது தன் தாய்க்கும் மனைவிக்கும் உள்ள நெருக்கத்தை சிறாப்பரால் உணர முடிந்தது.

செத்த வீட்டுச் செலவு போக மிஞ்சினது இருபத்தையாயிரம். இன்னும் இருபத்தையாயிரம் இருந்தால் எப்படியும் வைதேகியின் கலியாணத்தை முற்றாக்கி இரண்டு வருடத்தில் முடித்திடலாம் அதுக்கு சின்னம்மாளின் சீட்டு தான் வழிகாட்டும் என்று சிறாப்பரும் கமலாவும் தீர்மானித்து இரண்டு வருஷத்துக்கு முதலே சீட்டில் சேர்ந்தார்கள்.

வைதேகி பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியையாக வேலை  செய்து மாதம் மாதம் உழைத்த காசில் இருபதாயிரத்துக்கு ஒரு குலுக்கல் சீட்டு. மற்றது சிறாப்பரின் சம்பளத்தில் பதினையாயிரத்துக்கு ஒரு ஏலச் சீட்டு. இன்னும் நான்கு மாதத்தில் இரண்டும் சேர்த்து முழுத்தொகை முப்பத்தையாயிரத்தையும் எடுக்கலாம். சிறாப்பராக வேலைசெய்தாலும் பணத்தை வங்கியில் போட்டு சேர்க்க அவர் விரும்பவில்லை. வரவு செலவு, சேமிப்புகள் எல்லாவற்றையும் கவனிப்பது கமலா. சிறாப்பரும் வைதேகி'யும் முழு சம்பளத்தையும் அப்படியே கொண்டு வந்து கமலாவிடம் கொடுப்பார்கள். அவர்களின் கைச்செலவுக்கு வேண்டிய நேரம் கேட்டு வாங்கிக் கொள்வார்கள். கமலாவிடம் கணக்கு கேட்கும் பழக்கம் இருவருக்கும் கிடையாது.

சின்னம்மாளிடம் சீட்டுப் பணத்தைக் கொடுத்துப் போட்டு கமலா வீடு திரும்பிய சில நேரத்தில் வைதேகியும் சிறாப்பரும் வீடு வந்துசேர்ந்தார்கள்.

''என்ன அப்பா. போன காரியம் காயோ பழமோ?'' கணவனிடம் ஆவலாகக் கேட்டாள் கமலா.

''ஓரளவுக்கு பழம் தான். மாப்பிள்ளை பருத்தித்துறை ஹார்ட்லி கொலேஜ்ஜிலை சயன்ஸ் டீச்சராம். மூன்று வருஷத்துககு; முந்தித்தானாம் கொழும்பு யூனிவர்சிட்டியிலை பட்டம் பெற்றவர். கிளாஸ் எடுத்தவராம். தகப்பனும் ஓவர்சியராம். அதாலை எங்கடை ஓவர்சியர் கந்தையருக்கு அவையளைத் தெரியும். தங்கமான பெடியனாம். தாய் சின்ன வயதிலேயே போயிட்டாவாம். தகப்பன்தானாம் பெடியனுக்கு எல்லாம்.''

''பருத்தித்துறை ஹார்ட்லி கொலேஜ் என்கிறியள். பருத்தித்துறை ஆக்களே அவையள்?. ஊருக்கு வெளியே கல்யாணம் செய்ய கொஞ்சம் யோசிப்பினமே'' கமலா மாப்பிள்ளையின் ஊரைக் கேட்டாள்.

''அப்படியில்லை. தகப்பன் கோப்பாய். தாய் இருபாலை. பெடியன் தாய் செத்ததும் கரவெட்டியிலை இருந்த சிறிய தாய் வீட்டிலை இருந்து ஹார்ட்லி கொலேஜ்ஜிலை படித்தவன்.''

தானும் தகப்பனும் பேசுவதை சுவர் ஓரமாக நின்று கேட்டுகொண்டிருந்த வைதேகியை கண்டாள் கமலா.

''இந்தா பிள்ளை பணியாரம். சின்னம்மா மாமி உனக்கும் அப்பாவுக்கும் குடுக்கச் சொல்லித் தந்தவ. வீட்டிலை செய்தவவாம்.'' என்று கையில் இருந்த பார்சலை கொடுத்தாள் கமலா.

''இந்தாருங்கோஅம்மாஇந்தமாசத்துசம்பளம். நாளைக்கு சனிக்கிழமை அதுதான் இண்டைக்கு தந்தவங்கள்''என்றுதன் சம்பள உறையைத் தாயிடம் கொடுத்தாள் வைதேகி.

''நல்லதாய் போச்சு. நாளைக்கே போய் உண்டை சீட்டுக்காசைக் கொடுத்திடுறன். நீ ஏதோ ஒரு சீலையும் அதுக்குப் பொருத்தமாக டூ பை டூ ஜக்கட் துணியும் வாங்க வெண்டும் எண்டு போன மாசம் சொன்னது எனக்கு ஞாபகம் இருக்கு. வா நாளைக்கு நீயும் நானும் பெரியகடைக்குப் போய் ராஜகோபால் கடையிலை அதை பார்த்து வாங்குவம்.

வைதேகி தலையை ஆட்டி ஒப்புதல் கொடுத்துப்போட்டு பணியாரப் பார்சலுடன் தன் அறைக்குள் போனாள்.

'' கமலா நீர் ஒருக்கா முடிந்தால் முடமாவடிச் சாத்திரியாரிடம் போய் இந்த இரண்டு சாதகத்தையும் காட்டி பொருத்தம் எப்படி என்று கேளும். எனக்குத் தெரிந்தமட்டில் நல்ல பொருத்தம் போலத் தெரியுது''. இந்தக் கலியாணம் தரகருக்குள்ளாலை வராமல் கந்தையர் கொண்டு வந்தது நல்லதாய் போச்சு. இல்லாட்டால் தரகருக்கு வேறை கொமிஷன் கொடுக்கவேண்டும்.'' என்றார் சிறாப்பர் சித்தம்பலம்.

'' எப்படியும் தை பிறந்ததும் செய்து முடிக்கலாம். அப்ப இரண்டு சீட்டுக் காசும் வந்திடும். எனக்கு இரவு சமையல் வேலை இருக்கு நான் வாறன். உங்களுக்கு கோப்பி கொண்டு வந்து தாறன். அந்த பணியாரத்தைச் சாப்பிட்டுப்போட்டு குடியுங்கோ '' என்று கமலா மகள் கொடுத்த சம்பள உறையை அலுமாரிக்குள் வைத்துப் பூட்டிவிட்டு சமையல் அறைக்குள் போனாள்.

****

மூன்று மாதங்கள் போனது தெரியவில்லை. மாரி மழை என்றும் இல்லாதவாறு கொட்டித் தீர்த்தது. ஊர் குளங்கள் எல்லாம் நிரம்பி வழிந்தன. தை பிறக்க இரண்டு கிழமைகள் தான் இருந்தது. தைபிறந்தவுடன் நல்ல நாள் பார்த்து எழுத்தையும் கலியாணத்தையும் ஒன்றாக வைக்கலாம் என இரண்டு பகுதியும் தீர்மானித்தார்கள். செலவும் மிச்சம். இதற்கு முன்னின்று பேச்சு வார்த்தை நடத்தி; முடிவுக்கு கொண்டு வந்தவர் ஓவர்சியர் கந்தையர். நல்ல மனுசன். பொது சனத்துக்கு கேட்காமலே உதவக் கூடியவர். பணம் இருக்கிறது என்ற செருக்கு இல்லாதவர்.

****

அன்று சனிக்கழமை காலை வேப்பங் குச்சியால் பல் துலக்கிய படி காணியைச் சிறாப்பா சிற்றம்பலம் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் சிந்தனை முழுவதும் வைதேகி கலியாணம் ஒரு பிரச்சனையில்லாமல் நடக்க வேண்டும் என்பதே. படலையைத் திறந்த சின்னம்மாளின் பக்கத்துவீட்டுக்காரி பதைக்கப் பதைக்க ஓடிவருவதைக் கண்டார் சிறாப்பர்

''என்ன தங்கம்மா. என்ன விஷயம் இப்படி இளைக்க இளைக்க ஓடிவாறாய்'' பல்துலக்கிய குச்சியை வாயில் வைத்தபடியே சிறாப்பர்சிற்றம்பலம் கேட்டார்.

''ஐயோ சிறாப்பர் ஐயா. அதையேன்கேட்கிறிள்? நடக்கக் கூடாதொன்றல்லோ நடந்து போச்சு. சொன்னால் நம்பமாட்டியள்'' ஒப்பாரி வைத்தபடி சொல்லி அழுதாள் தங்கம்.

''என்ன விஷயம் எண்டு சொல்லிப் போட்டு அழன்''

''சின்னம்மாளின்டை வீட்டை அல்லோ நேற்று இரவு அவவிண்டை வாயுக்குள்ளை துணியை அடைத்து ஆளை மயக்கிப் போட்டு, கொள்ளையடித்துக் கொண்டு போயிட்டாங்கள் ஆரோ ஒரு கள்ளர் கூட்டம்.. சீட்டுக்காரருக்கு கொடுக்க சேர்த்து வைச்ச சீட்டுக்காசுகள் , அடைவு நகைகள் எல்லாம் ஒண்டு விடாமல் துடைச்சு எடுத்துக் கொண்டு போட்டாங்கள். பேயறைந்த மாதிரி சின்னம்மாள் இருக்கிறாள். வீட்டிலை ஒரே சீட்டுக்காரர் கூட்டம். பொலீசும் வந்திட்டாங்கள். அவையளுக்கு பதில் சொல்லமுடியாமல் அவள் இருக்கிறதை பார்க்க எனக்குப் பரிதாபமாயிருக்கு. அது தான் உங்களுக்கு விஷயத்தை சொல்ல ஓடிவந்தனான்'' என்றாள் பதைக்கப் பதைக்க பக்கத்துவீட்டுத் தஙகம்..

சிறாப்பருக்கு கேட்டவுடன் தலைசுற்றிற்று. ஏதோ தலையில் இடி விழுந்த மாதிரி ஒரு உணர்வு. சத்தம்போட்டு வீட்டுக்குள் இருந்த கமலாவையும் வைதேகியையும் கூப்பிட்டார். சிறாப்பருக்கு ஏதோ நடக்கக் கூடாது நடந்து விட்டது என்று நினைத்து ஓடி வந்த இருவருக்கும் தங்கம் நடந்ததைச் சொன்னாள். கமலா பேயறைந்தவள் போல் அசையாது நின்றாள்.

''அம்மா யோசிக்காதையுங்கோ வாருங்கோ இரண்டு பேரும் என்ன நடந்தது எண்டு போய் பார்ப்போம்'' என்று ஆறுதல் சொல்லி தாயையும் கூட்டிக் கொண்டு சின்னம்மாள் வீட்டுக்கு புறப்பட்டாள் வைதேகி.

சின்னம்மாள் வீட்டுக்கு முன்னால் ஒரே கூட்டம் அதில் கமலாவுக்கு அறிமுகமான முகங்கள் பல. கவலை தோய்ந்த முகத்தோடை நிற்பதைக் கண்டதும் அவர்கள் எல்லோரும் சீட்டு பணத்திற்காகத்; தான் வந்திருக்கிறார்கள் என்று அவளுக்கு தெரிந்து கொள்ள அதிக நேரம் எடுக்கவில்லை. சிலர் ''எல்லாம் போச்சுது'' என்பதைக் காட்ட இரண்டு கைகளையும் விரித்துக் காட்டினார்கள். வீட்டுக்குள் நுளைந்த கமலாவும் வைதேகியும் பொலிசார் விசாரணை முடித்துக்கொண்டு வெளியேறுவதைக் கண்டார்கள். மூலையில் முடங்கிக்கிடந்த சின்னம்மா கமலாவைக் கண்டதும் ஓ வென்று ஒப்பாரி வைத்து அழத் தொடங்கினாள்.

''ஐயோ கமலா கடவுள் என்னை சரியாக சோதிச்சுப் போட்டார். நான் என்ன பாவம் செய்தனோ தெரியாது!. வீட்டை முழுவதும் அப்படியே படுபாவியள் வழித்தெடுத்துக்கொண்டு போயிட்டாங்கள்.. எனக்கு எப்படி சீட்டுக்காரார் முகத்திலை முழிக்கிறது எண்டு தெரியவில்லை. உங்கள் இரண்டு பேரிண்டை சீட்டுக்காசு முப்பத்தையாயிரத்தையும் சேர்த்து வைச்சிருந்தனான். அதையும் அள்ளிக்கொண்டு போட்டாங்கள். இனி காசு தரமுடியுமோ தெரியாது. இன்னும் பலருக்கும் காசு கொடுக்கவேண்டும். நான் என்ன செய்யிறது எண்டு தெரியாமல் முழிக்கிறன்'', சின்னம்மா அழுத்படி சொன்னாள்.

''என்ன மாமி இப்படி எண்டை தலையிலை குண்டை தூக்கிப் போட்ட மாதிரி பேசிறியள். அவரும் வைதேகியும் கஷ்டப்பட்டு சம்பாதித்த காசு. இன்னும் ஒரு மாதத்திலை வைதேகிக்கு எழுத்து. சீதனத்துக்கு உந்த சீட்டை தான் நம்பியிருந்தனாங்கள். பாவம் வைதேகி கேட்டதும் அழுதிட்டாள்'' கமலர் கோபத்துதோடு பேசினாள். வைதேகி தாயைப் பேசவிட்டுவிட்டு ஒதுங்கி நின்றாள்.

''இப்ப இவளை என்ன செய்யச் சொல்லுறாய். காசு இருந்தால் தராமல் பொய் சொல்லுறாளே? நடந்த விஷயம் தெரியுந்; தானே? உனக்கு மட்டுமே பிரச்சனை?. அங்கை பார் எத்தனை பேர் நிக்கினம் எண்டு'' சின்னம்மாளுக்கு வக்காலத்து வாங்கினாள் ஏற்கனவே சீட்டு பணத்தை எடுத்து முடித்த பக்கத்து வீட்டுக்காரி இராசம்மா.

கமலாவுக்கு அவள் மேல் சரியான கோபம் வந்தது. "நான் உம்மோடை கதைக்கயில்லை. எனக்கும் சின்னம்மாவுக்கும் உள்ள பிரச்சனை. மற்றைவையள் தலையிடத் தேவையில்லை" சற்று காரமான குரலில் பதில் அளித்தாள் கமலா.

வைதேகி தாயைச் சமாதானப் படுத்தினாள். " இங்கை பார் சின்னம்மா இன்னும் ஒரு கிழமை நேரம் தாறன். நீ எப்படிக் காசைப் பிரட்டுவியோ எனக்குத் தெரியாது. உண்டை வீட்டையும் காணியையும் ஈடு வைத்தாவது எங்கடை சீட்டுக்காசு முப்பத்தைதாயாயிரமும் ஒரு கிழமைக்குள்ளை நான் வரக்கை எனக்குத தர வேண்டும். இல்லாட்டால் நடக்கிற சங்கதி வேறு. உனக்கு மானம் ரோஷம் இருந்தால் இவ்வளவு காலம் நாணயமாக நடந்த மாதிரி நடப்பாய் எண்டு எதிர்பார்க்கிறன்." என்று சின்னம்மாளுக்கு எச்சரிக்கை செய்து போட்டு விடுக்கென்று பதிலை எதிர்பாராது மகளையும் கூட்டிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள் கமலா.

****

அன்று பின்னேரம் சின்னம்மாளுக்கு நடந்ததை அறிந்து ஓவர்சியர் கந்தையர் சிறாப்பர் வீட்டுக்கு வந்தார்.

"என்ன கமலா சின்னம்மாள் என்னவாம். பாவம் எல்லாத்தையும் பறிகொடுத்துப் போட்டு தவித்து நிற்கிறாள். பாவம் அவள். நாணயக்காரியான சின்னம்மாளுக்கு இப்படி நடக்கும் என்று ஆர் எதிர்பார்த்தது?. இந்த களவை, அவளிடம் சீட்டுக் காசு நகை இருக்குது எண்டு தெரிந்த ஒரு ஆள் தான் செய்திருக்கவேண்டும்" என்றார் கந்தையர்.

"பாருங்கோ ஓவர்சியர். அதுவும் இந்த நேரத்தில் இப்படி நடந்திருக்கு. நாங்கள் வைதேகி கலியாணத்துக்கு என்ன செய்ய எண்ட நிலை. சின்னம்மாளுக்கு ஆத்திரத்திலை பேசி போட்டு வந்திட்டன். ஒரு கிழமை தவணை கொடுத்திருக்கிறன் காசை தரச்சொல்லி "அழுதபடி கமலா கந்தையரிடம் முறையிட்டாள்.

"உது தெரிந்துதான் நான் உங்களைப் பார்த்துப் பேச வந்தனான். சிறாப்பரோடை நான் எல்லாம் விளக்கமாய் கதைச்சுப் போட்டன். வைதேகி என்றை மகள் மாதிரி. எனக்கோ பிள்ளையள் இல்லை எண்டு உங்களுக்குத் தெரியும். வைதேகியின் கலியாணத்துக்கு வேண்டிய முப்பத்தைந்தாயிரத்தை நான் தாறன். உங்களுக்கு வசதி பட்ட நேரம் திருப்பித் தாருங்கள். வட்டியும் வேண்டாம். திருப்பித் தராவிட்டாலும் பரவாயில்லை. ஒரு நல்ல காரியத்துக்கு உதவியதாக இருக்கட்டும" கந்தையர் தான் வந்த காரணத்தைச் சொன்னார். சிறாப்பரும் கமலாவும் அதை கந்தையரிடம் இருந்து எதிர்பார்த் திருக்கவில்லை. சிறாப்பர் சிற்றம்பலம் கந்தையரின் கையை பிடித்து உணர்ச்சி பொங்க அழத் தொடஙகினார். கமலாவினதும் வைதேகியினதும் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொல வென்று கொட்டியது.

“ இனி நடக்கப்போற காரியங்களைக் கவனியுங்கள். சீட்டுக்காசைப் பற்றி யோசியாதையுஙகள். அவள் சின்னம்மாள் தன் வீடு நிலத்தை விற்றாவது கடனைத்தீர்ப்பாள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு. காசு கிடைக்கிற நேரம் சந்தோஷப்படுங்கள். கமலா நாளைக்கு நீர் சின்னம்மாளிடம் போய் கோபத்தில் பேசினதை மறந்து விடும்படி சொல்லும். நான் காசு தருகிறதை பற்றி மூச்சு விட வேண்டாம். என்ன”? கந்தையர் கமலாவுக்கு ஆறுதல் சொன்னார்.

“ஓம் ஓவசியர். உங்கடை பெரும் தன்மைக்கு மிகவும் நன்றி. நான் அவளோடை கன காலம் சினேகிதம். உந்த சீட்டுக்காசு போன கவலைதான் என்னை இப்படி கீழ்த்தரமாக கோபத்திலை பேச வைச்சது “ என்றாள் தன்தவறை உணர்ந்து கமலா.

மறு நாள் சின்னம்மாளைப் போய் கமலா காணமுன் காலையில் வந்த செய்தி அவளை அதிர்ச்சியடைய செய்தது. “ஏன் ஊர் சனங்கள் இந்த நேரம் இப்படி ஓடுதுகள் என்று ஒருத்தரை நிறுத்திக் கேட்ட போது “சின்னம்மாள் அவமானம் தாங்காமல் தூக்குப் போட்டு நேற்றிரவு செத்துப்போட்டாளாம். அதைக் கேட்டு ஓடுதுகள் ” என்ற பதில் அவரிடம் இருந்து வந்தது.

*****

## *கதை 11*

## *மாற்றுத் திருமணம்*

*புலோலி என்பது யாழ்ப்பாண தீபகற்பத்தில் வடமராட்சியில் உள்ள பருத்தித்துறையின் புறநகரில் 4 கி மீ தூரத்தில் அமைந்த சிறிய கிராமம். புலோலி கிராமத்தில் பெரும்பான்மையான மக்கள் மருத்துவர்கள், பொறியாளர்கள், கணக்காளர், ஆசிரியர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் என நன்கு படித்தவர்கள் என்பதால் இந்த கிராமத்திற்கு பெருமை உண்டு. ஒரு முறை ஒரு புலவர் தன் கவிதையை பாடி அந்த கிராமத்தை ஒரு ராஜாவிடம் இருந்து பரிசாகத் பெற்றதால், அக் கிராமத்தில் புலவர் ஒலி கேட்டதால் அக்கிராமத்துக்கு புலவர் ஒலி என்ற பெயர் மருவி புலோலி பெயர் வந்தது.. அக் கிராமத்தில் ஒரு சில வீதிகளும் ஒழுங்கைகளும் இருந்தன அந்த கிராமத்தில்வாழந்த குடும்பங்கள் ஒருவருக்கொருவர் இனத்தவர்கள். அக் கிராம மக்கள் தங்கள் கிராம மரபுகளிலிருந்து விலகிச் செல்வதை அதிகம் விரும்புவதில்லை. வடமராட்சி யில் உள்ள கிறிஸ்தவர் அநேகர் கல்வி கற்றவர்கள்.*

****

*புலோலி கிராமத்தில், வழக்கறிஞர் ஆனந்தனின் குடும்பம் புலோலி மற்றும் யாழ் குடாநாட்டில் உள்ள வடமராட்சியில் உள்ள கிராமங்கில் நன்கு அறியப்பட்ட குடும்பம் வெற்றிகரமான கிரிமினல் வழக்கறிஞராக அவர் திகழ்ந்ததே அந்த பிரபல்யத்துக்கு காரணமாக இருந்தது. ஆனந்தனின் தந்தை சோமசுந்தரம் (சோமு) அந்த கிராமத்தில் ஒரு செல்வந்தர். அவர் பிரிட்டிஷ் ஆட்சியின் போது மலேசியாவில் உள்ள ஈப்போவில் ஸ்டேஷன் மாஸ்டராக இருபது ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்ற அவர் தனது மனைவி கமலம், மற்றும் ஆனந்தன், வனஜா ஆகிய இரு பிள்ளைகளுடன் தனது கிராமத்திற்கு திரும்பினார். சோமு மலேசியாவிலிருந்து புலோலிக்கு திரும்பியபோது ஆனந்தனுக்கு பத்து வயதும் வனஜாவுக்கு எட்டு வயதும் இருக்கும்.*

*சோமசுந்தரம் ஈப்போவில் பணிபுரிந்தபோது, அவர் தனது சகோதரி பாக்கியம் மற்றும் மைத்துனர் நடராஜாவுக்கு மாதம் மாதம் தவறாமல் பணம் அனுப்புவார். அக்காலத்தில் மலேசிய வெள்ளியின் பெறுமதி அதிகம். சோமு தனது ஊரில் உள்ள நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கும், மேலூம் அதிகமான நிலங்களை வாங்குவதற்கும் அந்த பணத்தை அனுப்பினார். அவரின் முக்கிய நோக்கம் தான் ஓய்வு பெற்று சொந்த ஊரான புலோலிக்கு குடும்பத்தோடு திரும்பும்போது, ஆட்களை வைத்து விவசாயம் செய்வதே.*

*. சோமுவின் மைத்துனர் நடராஜா. என்பவர் .புலோலியில் ஒரு பலசரக்கு கடை வைத்திருந்தார். ஊரில் தனது நிலங்களை கவனித்த அதே நேரம், கிளிநொச்சியில் நெல்*

வயல்களையும் பளையில் தென்னம் தோட்டமும் அவர் சோமுவுக்கு வாங்கினார். சோமுவின் நில புலன்களை நிர்வகிப்பதில் நடா தன் பெரும்பாலான நேரத்தை செலவிட்டார். அனைத்து வசதிகளுடன் சோமு கேட்ட படியே. ஐந்து அறைகள் உள்ள வீடு ஊரில் கட்ட கட்டிடத் திட்டங்களையும் அவர் தயாரித்து சோமுவின் அனுமதியும் பெற்றார்.. மலேசியாவிலிருந்து ஓய்வு பெற்று குடும்பத்தோடு திரும்பி வரும்போது, அவர்கள் நேராக தங்கள் புதிய வீட்டிற்கு செல்ல முடியும் என்று சோமுவுக்கு அறிவித்தார்

****

நடராஜா-பாக்கியம் தம்பதிகளுக்கு, சோமு குடும்பத்தைப் போலவே, செல்வேந்திரன் மற்றும் செல்வி என்ற இரு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களும் ஆனந்தன் மற்றும் வனஜா போன்ற ஒரே வயது உள்ளவர்கள்.

பாக்கியத்தின் கணவர் நடராஜா எதையும் திட்டம் போட்டே செயல் படுத்துவார் அவரின் திட்டத்தை மற்றவர்கள் புரிந்து கொள்ளவது கடினம். தனது நிலத்தையும், பணியையும் புறக்கணித்த நடா, மலேசியாவிலிருந்து பெற்ற அறிவுறுத்தல்களின் படி சோமுவின் விவகாரங்களை நிர்வகிப்பதில் அதிக அக்கறை கொண்டிருந்தார். ஒரு நாள் பாக்கியம் வெளிப்படையாக தனது கணவரிடம் தன் சந்தேகம் பற்றி கேட்டாள்.

“அத்தான் உங்கள் நடத்தையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. என் சகோதரனின் விவகாரங்களில் நீங்கள் ஏன் அதிக நேரம் அக்கறையோடு செயல்படுகிறீர்கள்? நீங்கள் அவருக்காகச் செய்கிற வேலைக்கு அவர் உங்களுக்கு சம்பளம் கொடுக்கவில்லையே”?

பாக்கியம் தனது கணவரிடம் அவரது நோக்கத்தைத் தெரிந்து கொள்ள கேள்வி கேட்டாள்.

“நீர் ஏன் இதைப் பற்றி கவலைப்படுகிறீர்? நான் உம் அண்ணரிடம் எப்படி சம்பளம் கேட்க முடியும்? நான் இதை உமது சகோதரனின் குடும்பத்திற்காக செய்கிறேன். நான் ஒரு கடை ஒன்றை ஆரம்பிக்கும் போது அவர் எனக்கு பணம் அனுப்பினார். அதன் பின் ஒருபோதும் அவர் அந்தப் பணத்தைத் தனக்குத் திருப்பித் தரும்படி கேட்டதில்லை. நீர் அவருடைய ஒரே அன்புச் சகோதரி. நான் அவருடைய ஒரே மைத்துனன் . நாங்கள் அனைவரும் ஒரே குடும்பம் போன்றவர்கள் ”. உம்முடைய சகோதரனை மதிக்கிறீர் என்று நான் நினைத்தேன்” நடா சொன்னார் .

“இப்போது எனக்கு உங்கள் எண்ணம் புரிகிறது. என் சகோதரனின் குடும்பத்தின் மேல் நீங்கள் வைத்த பாசத்தினால், உங்கள் நேரத்தை செலவு செய்து, நீங்கள் இந்த வேலையெல்லாம் செய்கிறீர்கள் என்று சொல்ல விரும்புகிறீர்களா? பாக்கியம் அவரது . பதிலில் இன்னும் திருப்தி அடையவில்லை. தன் கணவர் ஒரு காரணமின்றி எதையும் செய்ய மாட்டார் என்று அவளுக்குத் தெரியும்.

“இங்கை பார் பாக்கியம் நான் சொல்வதை கவனமாகக் கேள். எங்களுக்கு இருப்பதோ இரண்டு பிள்ளைகள் . உன் சகோதரருக்கும் இரண்டு பிள்ளைகள் இருக்கினம் . இந்த உலகத்திலிருந்து நாம் போன பிறகு, அவர்கள் அனைவரும் வசதியாக வாழ வேண்டும், எங்கள் இரு குடும்ப சொத்துக்களையும் செல்வத்தையும் அவர்கள் அனுபவிக்க வேண்டும். இந்த சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு வெளியே, குறிப்பாக எங்கள் கிராமத்தைச் சேர்ந்த வேறு குடும்பத்துக்கு கை மாற்றக்கூடாது”.

“அத்தான் உங்கள் மனதில் இருப்பதை என்னால் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் எதை நோக்கமாகக் கொண்டு சொல்லுகிறீர்கள் ”?

பாக்கியம் தனது கணவரின் நோக்கத்தைத் அறிய விரும்பினாள். அவள் அதை தன் கணவன் வாயிலிருந்து வெளிவரவே விரும்பினாள்.

நடா சிரித்தார். "நான் எப்போதும் முன்னதாகவே திட்டமிடுகிறவன் என்று பாக்கியம் உனக்கு தெரியும்".

"நெருப்பு இல்லாமல் புகை இல்லை என்று எனக்குத் தெரியும். உங்களுடைய திட்டம் என்ன அதை முதலில் சொல்லுங்கள் “?

"அது சிம்பிள் பாக்கியம். உன் அண்ணர் குடும்பம் இங்கே வந்ததும் எங்களுக்குப் பக்கத்திலேயே வசிக்கப் போகினம். அதனால்தான் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உன் சகோதரருக்கு காணி வாங்கி, இந்த புது வீட்டைக் கட்டினேன். அவரும் தனது சகோதரி குடும்பத்திற்கு பக்கத்தில் வாழ விரும்புவார் ”.

“என் அண்ணி கமலம் இதை விரும்புவார் என்று நினைக்கிறீர்களா?

“உன் அண்ணி இதில் தலையிட அவவுக்கு அதிகாரம் இல்லை. இது உன் சகோதரனின் பணம். அவர் மட்டுமே சம்பாதிக்கிறார் அவ இல்லை . உங்கள் அண்ணி அதிக வரதட்சணை கொண்டு வரவில்லை. ஒரே கிராமத்தைச் சேர்ந்த ஒரே சாதி என்பதாலும், அவளுடைய தந்தை உன் சகோதரனுக்கு தன் மகளை கொடுத்தார் . உன் அண்ணரும் உன் அண்ணி அழகி என்பதால் அதிகம் சீதனம் வாங்கமால் அவவை கலியாணம் செய்தார் மலேசியாவுக்கு கப்பலில் செல்ல உன் அண்ணியின் தந்தை உன் சகோதரருக்கு பணம் கொடுத்து உதவினார். அது ஒரு விலை அதிகமான பயணம்.. சமையல் செய்வதற்கும் குடும்பத்தை கவனிப்பதற்கும் மட்டுமே உன் அண்ணி இருக்கிறாள் ”.

“அப்படி அவவைப் பேச வேண்டாம் ? மலேசியாவுக்குச் செல்வதற்கு முன்பு எஸ்.எஸ்சியில் ஆங்கிலத்தில் நான்கு *A* க்களோடு பாஸ் செய்தவ. அவ ஆங்கிலம் சரளமாகப் பேசுவா. அவ ஒரு புத்திசாலிப் பெண் ” பாக்கியம் சொன்னாள்.

“பாக்கியம், எங்கள் சமூகத்தைப் பற்றி உனக்குத் தெரியாது. இது ஆணாதிக்கம் உள்ள சமூகம் பெண் எவ்வளவு புத்திசாலித்தனமாக படித்து இருந்தாலும், திருமணத்திற்குப்

பிறகு அவள் கணவனிடமிருந்து உத்தரவுகளை எடுக்க வேண்டியிருக்கும். அவளுடைய இடம் சமையலறையாக இருக்கும். அவளுக்கு அதிகாரம் இல்லை. இது எங்கள் ஊர் கலாச்சாரம் "

"ஆனால் அத்தான் நீங்கள் என்னை அப்படி நடத்துவதில்லை. நீங்கள் எப்போதும் என் பேச்சைக் கேட்பீர்கள் . "

"அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. உமது சகோதரர் பணம் அனுப்புகிறார். நான் உன்னோடு மோசமாக நடந்து கொண்டால், அவர் எனக்கு பணம் அனுப்புவார் என்று நீர் நினைக்கிறீரா"?

"எங்கள் பிரச்சனை இருக்கட்டும் உங்கள் மனதில் என்ன திட்டம் போட்டிருக்கிறீர்கள், ஒளிக்காமல் எனக்குச் சொலுங்கள் "

". இங்கு பக்கத்து வீடுகளில் வாழும் இரு குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் ஒன்றாக விளையாடுவார்கள். .ஸ்கூலுக்கு போவார்கள் . சாப்பிடுவார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளும் சூழல் உருவாகும் அது ஒருகதை உருவாக வாய்ப்பை வழங்கும். "

"பிள்ளைகள் ஒன்றாக வளர்வதற்குப் பின்னால் உள்ள கதை என்ன?

:"ஒரு பெரிய காதல் கதை உருவாகும் . அதைத்தான் நான் விரும்புகிறேன். அவர்கள் ஒருவருக்கொருவர் காதலிக்கத் ஆரம்பிக்க தொடங்குவார்கள் . ஆனந்தன் எங்கள் மகள் செல்வியின் கைகளைப் பிடித்துக்கொண்டு பள்ளிக்குச் செல்வதை நான் காண விரும்புகிறேன். எங்கள் மகன் செல்வன் உன் அண்ணின் மகள் வனஜாவுடன் அந்த மரத்தில் உள்ள ஊஞ்சலில் விளையாடுவதையும் நான் காண விரும்புகிறேன்."

"அட கடவுளே. அவர்கள் சிறு பிள்ளைகள். உங்களுக்கு ஏன் இந்த கெட்ட மனம் அத்தான் . நீங்கள் ஒரு தமிழ் சினிமா கதையைப் போல கற்பனை செய்கிறீர்கள் ".

"எனக்கு கெட்ட மனம் இல்லை. அவர்களின் எதிர்காலம் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். ஒருவருக்கொருவர் தெரிந்துகொள்ள அவர்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது. ".

"அப்படியானால் நீங்கள் என்ன சொல்ல முயற்சிக்கிறீர்கள்? எங்கள் மகன் செல்வன் தனது மச்சாள் வனஜாவையும், எங்கள் மகன் செல்வி தனது அத்தான் ஆனந்தனையும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்புவதால் இவை அனைத்தையும் செய்கிறீர்களா?

"யாழ்ப்பாண தமிழ் கலாச்சாரத்தில் இது பொதுவானது",

நடா பாக்கியத்தைப் பார்த்து புன்னகையோடு சொன்னார்.

*“ஆனால் உறவினர்களுக்கிடையேயான திருமணங்கள் மருத்துவ ரீதியாக ஊக்குவிக்கப்படவில்லை என்று பலர் சொல்வதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு பிறக்கும் குழந்தை புத்தி குறைவாக இருக்கும் சில குழந்தைகள் ஊனமாகவும் பிறக்கலாம் இந்து மதத்தினர் அதிக அளவில் உறவுகளுக்குள் திருமணம் செய்வதை விரும்புகின்றனர். இவ்வாறு உறவுகளுக்குள் திருமணம் செய்வதன் மூலம் பரம்பரையாக வியாதிகள் சந்ததிகளுக்குள் கடத்தப்படுவதோடு புதிது புதிதாக நோய்கள் ஏற்படுகின்றனவாம். ரத்த சொந்தத்தில் திருமணம் செய்து கொள்வதால் அவர்களின் சந்ததியினர் குறைபாடுடைய மரபணுக்களோடு பிறக்க வாய்ப்புண்டு என்று எச்சரிக்கின்றனர் நிபுணர்கள்.”. பாக்கியம் சொன்னாள்.*

*"இந்த குப்பைகளை எங்கே படித்தீர்கள்?"*

*“இது குப்பை அல்ல. எங்கள் தமிழ் ஆசிரியர் வேலு மாஸ்டரின் மகன், வேலுவின் சகோதரியின் மகளை திருமணம் செய்து கொண்டார் என்பது உங்களுக்குத் தெரியும் தானே ? அவளுக்கு மூன்று கருச்சிதைவுகள் நடந்தது இறுதியாக, அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் வளர்ந்தபோது, படிப்பில் சிறப்பாக செயல்படவில்லை. ”*

*"பாக்கியம் இவை எல்லாம்ஆயிரத்தில் ஒன்று . புலோலி மற்றும் வடமராட்சி மக்கள் தங்கள் பகுதிகளுக்கு வெளியே திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள் என்பது உனக்குத் தெரியுமா? முக்கிய காரணம் அவர்கள் சாதி குறித்து அக்கறை காட்டுவதுதான். காரைநகர், தென்மராட்சி அல்லது வலிகாமம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஒரு நபர் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதை அறிய அவர்களுக்கு வழி இல்லை. இரண்டாவது காரணம் “அறியப்படாத தேவதையை விட அறியப்பட்ட பிசாசு சிறந்தது”. அவர்களுக்கு ஏதேனும் மோசமான கதாபாத்திரங்கள் அல்லது குணப்படுத்த முடியாத நோய்கள் இருந்தால், முழு கிராமமும் அதைப் பற்றி அறிந்து கொள்ளும்.”.*

*“அத்தான் நீங்கள் எப்போதும் உங்கள் வாதத்தில் என்னை வெல்வீர்கள். நான் எனது குழந்தைகள் அல்லது சகோதரரின் குழந்தைகளுக்கு எதிரானவற் அல்ல. ஜாதக பொருத்தம் எப்படி?*

*“உறவினர்களுக்கு இடையில் ஒரு ஜாதகம் பொருத்தம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. இது தமிழர்கள் மற்றும் சிங்களவர்களிடையே கூட ஒரு பாரம்பரியம் இருந்து வரு.ம் முறை . திருமணங்கள் சொர்க்கத்தில் தீர்மானிக்கப்படுகின்றன ”.*

*உறவினர்களுக்கிடையில் திருமணம் செய்து கொள்வதற்கான தனது வாதங்களை பாக்கியதுக்கு நடராஜா வழங்கினார். மிக மதிப்புமிக்கவர், சாதி, செல்வம், மற்றும் தம்பதியினரிடையே உள்ள புரிதல் மற்றும் எல்லாவற்றையும் விட குடும்பப் பிணைப்பை அவள் உணர்ந்தாள்.*

****

சோமாசுந்தரமும் குடும்பத்தினரும் ஈபோவிலிருந்து கப்பலில் கொழும்புக்கு வந்தனர். நடாவும் பாக்கியமும் அவர்களை வரவேற்க கொடிகாமத்தில் மெயில் ரயில் எடுத்து கொழும்பு சென்றனர். தனது வருங்கால மருமகள் வனஜா எவ்வளவு அழகாக இருக்கிறாள் என்று பாக்கியம் கண்டதும் ஆச்சரியப்பட்டாள். ஆனந்தனும் அவனது தாயைப் போல உயரமாகவும் அழகாகவும் இருந்தான்.

குடும்பம் கிராமத்தில் குடியேற சில வாரங்கள் பிடித்தது. அவர்கள் பார்வையாளர்களையும் உறவுகளையும் சந்திக்க சில நாட்கள் செலவிட்டனர். நடா எப்போதும் சோமுவின் பக்கத்தில்தான் இருந்தார், தனக்கு எதிராக யாரும் சோமுவின் மனதை மாற்றாமல் பார்த்துக் கொண்டார். ஒரு நல்ல நாளில், சோமசசுந்த்ரம் புதிய வீட்டிற்கு குடி புகுந்தனர். சோமு தனது மைத்துனரால் செய்யப்பட்ட மிகச்சிறந்த பணிக்கு முழு பாராட்டுக்களைக் கொடுதத்தார். சோமுவின் மனைவி கமலம் கூட வீடு மற்றும் அதில் உள்ள வசதிகள் குறித்து மகிழ்ச்சியடைந்தாரள்.

சோமுவின் மனைவியிடமிருந்து பாராட்டை பெற்றதில் நடா பெருமிதம் கொண்டார். அவர் தன் மனதுக்குள் சிரித்தார்.

இரண்டு கல்லூரிகளின் துணை முதல்வரை நடா அறிந்திருந்ததால், புகழ்பெற்ற ஹார்ட்லி கல்லூரியில் ஆனந்தனுக்கும் மெதடிஸ்ட் உயர்நிலைப்பள்ளியில் வனஜாவுக்கும் கல்வி பயில நடா அனுமதி பெற்றார். நான்கு குழந்தைகளும் மணியத்தின் ஆஸ்டின் ஏ 40 காரில் ஒன்றாக பள்ளிக்குச் சென்றனர். அந்த கார் குறிப்பாக நான்கு குழந்தைகளுக்கானது, மேலும் கிராமத்தைச் சேர்ந்த வேறு எந்த குழந்தைகளும் அந்த காரில் செல்லக் கூடாதென்பதை நடா உறுதி செய்தார். அவர்கள் வேறு எந்த இளைஞர்களுடனும் நடப்பு வைப்பதை நடா விரும்பவில்லை.

நடா விரும்பியபடி குழந்தைகள்ஒருவரை ஒருவர் விரும்பத் தொடங்கினர். ஆனந்தன் சட்டக் துறையை தேர்ந்தெடுத்தார் செல்வன் பல்கலைக்கழகத்தில் கணித விரிவுரையாளரானார். காலப் போக்கில் செல்வன் சில பொல்லாத நண்பர்களுடன் நட்பு கொள்வதன் மூலம் கெட்ட பழக்கங்களைத் தேர்ந்தெடுத்தார். ஆனந்தன் கொழும்பில் ஒரு பிரப்லயமான் குற்றவியல் வழக்கறிஞரின் கீழ் முதலில் ஜூனியராகப் பயிற்சி பெற்றார், அனுபவம் பெற்ற பிறகு அவர் யாழ்ப்பாணத்தில் வழக்கறிராக தொழில் செய்தார்

****

குழந்தைகளும் கமலமும் இல்லாதபோது தனது மைத்துனருடன் பேச நடாவுக்கு பேச வாய்ப்பு கிடைத்தது.

"அத்தான், எங்கள் பிள்ளைகளின் வருங்காலம் பற்றி நான் உங்களுடன் பேச விரும்புகிறேன். உங்களுக்கு பேச நேரம் இருக்கிறதா"?

*"மச்சான். நீங்கள் எனக்கு ஒரு பெரிய உதவி செய்துள்ளீர்கள். உங்கள் உதவி இல்லாவிட்டால் என் குடும்பம் இந்த வீட்டில் அவ்வளவு சுலபமாகவும் வசதியாகவும் குடியேறியிருக்க முடியாது. எனது வயது வந்த காலத்தில் எனது கிராமத்திற்குத் திரும்பி வந்து மக்களுக்கு உதவ வேண்டும் என்பது எனது கனவு. நீக்கள் என்னுடன் பேசுவதில் சம்பிரதாயங்களைத் பேண வேண்டிய அவசியமில்லை ".*

*அந்த நேரம் கமலம் வந்ததை கண்டவுடன்*

*" அண்ணியும் இங்கே இருப்பது ஒரு விதத்தில் நல்லது. இது உங்கள் குடும்பத்தினருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் இடையே உள்ள விஷயம் ", பாக்கியம் பேச ஆரம்பித்தாரள்.*

*"அது என்ன மச்சாள் விஷயம் "? என்று கமலம் அறிய ஆர்வமாகக் கேட்டாள்.*

*"இது எங்கள் பிள்ளைகளின் திருமணத்தைப் பற்றியது. இப்போது உங்கள் மகனும் எனது மகனும் வேலை செய்யத் தொடங்கியுள்ளதால், அவர்களுக்கான சிறந்த துணைவிகளை கண்டுபிடிப்பதற்கான நேரம் இது. எங்கள் கிராமத்திற்கு வெளியே வேறு சாதிகளோடு அவர்கள் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும். எங்கள் இரு குடும்பங்களுக்கு போதுமான செல்வம் உள்ளது, வெளியாட்கள் அதை தவறாக பயன்படுத்தக்கூடாது. எங்கள் சொத்து நமக்குள் இருக்க வேண்டும். " பாக்கியம் தொடர்ந்தாள்.*

*சோமுவின் மனைவி கமலம் ஒன்றையும் ஒன்றையும் ஒன்றாக இணைத்து பாக்கியம் எதை அடைய முயற்சிக்கிறாள் என்பதை பகுப்பாய்வு செய்வதில் மிகவும் கெட்டிக்காரி,*

.

*"நீங்கள் என்ன சொல்ல முயற்சிக்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. என் கணவருக்கு ஆட்சேபனை இல்லை என்றால் எனக்கு எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை."*

*பாக்கியம் தனது அண்ணியிடமிருந்து சம்மதத்தைப் பெற்றதில் சந்தோசப் பட்டாள் அவள் தன் சகோதரனை நோக்கி*

*‘‘அண்ணா , ஆனந்தனுக்கும் செல்வனுக்கும் வேறு பெண்ணகளை தேடாமல் அவர்கள் திருமணத்திற்கு நீ சம்மதித்தால் நேரடியாக எங்கள் குடும்பதுக்குள் அதை நடத்த வேண்டும். உங்கள் மகன் ஆனந்தன் என் மகள் செல்வியையும் என் மகன் செல்வன் உங்கள் மகள் வனஜாவை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது எனதும் என் அத்தானிதும் விருப்பம் . நாங்கள் இரு திருமணங்களையும் ஒரே நாளில் நடத்தலாம். ஜாதகங்களை ஒப்பிட வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் அவர்கள் முதல் உறவினர்கள். அவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் நன்கு அறிவார்கள். ’’*

*சோமு அமைதியாக கேட்டுக் கொண்டு இருந்தார். அவர் உடனடியாக பதிலளிக்கவில்லை. அவர் பேசாது இருப்பதைக் கண்டு நடா கவலைப்பட்டார்*

*"அத்தான், நீங்கள் பதில் சொல்லாமல் மிகவும் அமைதியாக இருக்கிறீர்கள். உங்கள் மனதில் ஏதேனும் இந்த திருமணம் விசயத்தில் பிரச்சினை இருக்கிறதா?" நடா சற்று விசனத்துடன் கேட்டார்.*

*." அப்படி ஒன்றும் இல்லை , மச்சான், சம்மதத்தை என்னிடம் கேட்க முன் பிள்ளைகளின் விருப்பத்தை நீங்கள் கேட்டீரா ? அவர்கள் மனதில் வெவ்வேறு கருத்துக்கள் இருக்கலாம். அவர்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நான் அவர்களின் வழியில் ஒரு தடையாக இருக்கப் போவதில்லை", என்று சோமு பதிலளித்தார். அந்த பதிலில் நடாவுக்கு பெரும் மகிழ்ச்சி. அவர்களுக்கு ஆட்சேபனை இருந்தாலும், அதை எவ்வாறு சமாளிப்பது என்பது அவருக்குத் தெரியும்.*

****

*நடா திட்டமிட்டபடி, ஆனந்தன்- வனஜா, செல்வன் - செல்வி ஆகியோருக்கு இடையிலான திருமணம் ஒரே நாளில் நடந்தது. திருமணத்திற்காக கிராமம் முழுவதும் சமூகமாகி இருந்தது. சோமசுந்தரம் கிராம பாரம்பரியத்தை கடைப்பிடித்ததில் முதிய கிராமவாசிகள் மகிழ்ச்சியடைந்தனர்.*

*சோமாசுந்தரம் தனது குழந்தைகளின் திருமணத்திற்குப் பிறகு நீண்ட காலம் வாழவில்லை. திருமணமான மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு சோமு புற்றுநோயால் இறந்தார். பேரக்குழந்தைகளைப் பார்க்க அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. நடா ஒரு கார் விபத்தை சந்தித்து ஒரு வருடம் கழித்து இறந்தார். இரு குடும்பங்களையும் கவனிக்கும் முழுப் பொறுப்பு ஆனந்தனின் கைகளில் விழுந்தது. அவருக்கு வேலையும் அதிகம் .*

*செல்வனுக்கு பல நண்பர்கள் இருந்ததால் குடிக்க தொடங்கி அது மோசமடைந்தது. அவனுடன பணிபுரியும் மற்றொரு பெண் விரிவுரையாளருடன் செல்வன் உறவு வைத்திருப்பதாக வதந்திகள் வனஜாவுக்கு வந்தன. செல்வன் தாமதமாக வீட்டிற்கு வரத் தொடங்கினான். ஆரம்பத்தில், வனஜா தனது கணவரின் நடத்தை பற்றி மாமியாரிடம் பேச விரும்பவில்லை. அவள் அவனை நேசிப்பதன் மூலம் அவனின் போக்கை மாற்ற முயன்றாள். ஆனால் முடியவில்லை .*

*ஆனந்தன் தனது வாடிக்கையாளர்களுடன் ஒரு முக்கிய கொலை வழக்கில் பிஸியாக இருந்ததால், தனது சகோதரியின் குடும்பத்தில் விஷயங்கள் எவ்வாறு தீவிரமடைகின்றன என்பதை ஆனந்தன் அறிந்திருக்கவில்லை.*

*ஒரு நாள் செல்வன் முழு குடிபோதையில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தனது மூன்று நண்பர்களுடன் வீட்டிற்கு வந்தான். நண்பர்கள் செல்வனின் பல்கலைக்கழக காதலி*

ஜெயந்தியைப் பற்றியும், அவர்களது காதல் விவகாரம் பற்றியும் குடி போதயில் உளறத் தொடங்கினர். வனஜாவால் அவர்களின் உரையாடலை நிறுத்த முடியவில்லை. அவர்களை பேச்சை நிறுத்திவிட்டு வீட்டை விட்டு வெளியேறும்படி அவள் கத்தினாள். தனது மனைவியின் அந்த நடத்தை செல்வனுக்கு கோபத்தை தூண்டியது தனது நண்பர்களுக்கு முன்னால் மனைவியின் கன்னத்தில் ஓங்கி அறைந்து. “ போதும் நிறுதத்தடி உன் நாடகத்தை” என்று நா தழும்ப கத்தினான்.

பாக்கியத்தால் தன் மகனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தனது மகனின் நண்பர்களிடம் முரட்டுத்தனமாக நடந்துகொண்டு ஒரு காட்சியை உருவாக்கியதாக வனஜா மேல் பாக்கியம் குற்றம் சாட்டினாள். வனஜா தனது மாமியாரிடமிருந்து அந்த அணுகுமுறையை ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. பாக்கியம் தனது நடவடிக்கைக்கு ஆதரவளிப்பாள் என்று வனஜா நினைத்தாள். ஆனால் நடந்தது வேறு அடுத்த சில வாரங்களில் விஷயங்கள் மோசமாகின. வனஜாவின் தாய் கமலம் அவளைப் சந்தித்த போது, முழு கதையையும் அறிந்தாள். கமலம் செல்வனுடன் பேசி வனஜாவுடன் சமாதானப்படுத்தி வைக்கும் படி பாக்கியதுக்கு சொன்னாள் மேலும் பிரச்சினையை கட்டுபாட்டுக்குள் கொண்டுவர தன் சம்பந்தியை அறிவுறுத்தினாள். ஆனால் பாக்கியத்திடமிருந்து அவளுக்கு கிடைத்த பதில் ஊக்கமளிக்கவில்லை.

வனஜாவின் தாய் கமலம் சமநிலையை இழந்து பாக்கியத்தின் மீது குற்றம் சாட்டத் தொடங்கினாள்.

"இந்த திருமணத்தை செய்ய வேண்டும் என்பது உங்கள் கணவரின் யோசனையாகும். நீங்கள் இருவரும் இதை நீண்ட காலமாக திட்டமிட்டீர்கள். இப்போது என்ன நடக்கிறது என்று பாருங்கள். உங்கள் மகனுக்கு அறிவுரை கூறாமல் நீங்கள் உங்கள் மகன் பக்கம் செல்கிறீர்கள். என் மகள் உங்கள் ஆதரவின்றி தனித்து அவதிப்படுகிறாள். இது சரியா . அவள் உங்கள் அண்ணன் மகள் . உங்கள் இரத்தம் அவளிலும் ஒடுகிறது "கமலம் சொன்னாள்.

"ஆமாம், அண்ணி. நீங்களும் அண்ணரும் சேர்ந்து இந்த மாற்றுத் திருமணத்தக்கு ஒப்புக்கொண்டீர்கள். நீங்கள் அனைவரும் வெளிநாட்டில் வசதியான வாழ்க்கை வாழ்ந்தபோது என் கணவர் உங்களுக்காக அனைத்து தன் வேலைகளை கவனியாது இரவு பகலாய் உங்கள் வீட்டை குறைந்த செலவில் கட்ட பாடுபட்டார் . உங்கள் மகள் பொறுமையாக என் மகனின் படித்த நண்பர்களுக்கு முன்னால் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். உங்களுக்குத் தெரியுமா? என்ன நடந்தது என்று? "

"இங்கை பார் பாக்கியம் யார் தவறு செய்தது என்று கண்டுபிடிக்க நான் இங்கு வரவில்லை. இந்த சம்பவம் ஒரு பெரிய பிரச்சினையாகி , முழு கிராமமும் சிரிப்பதை நான்

விரும்பவில்லை. உன்னுடன் பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை என்று நான் நினைக்கிறேன். நான் நினைத்தேன் எங்கள் குடும்பத்தின் நெருங்கிய உறவுதொடரும் என்று, ஆனால் எங்கள் குடும்பத்தின் மீது ஒரு தீய கண் விழுந்ததாகத் தெரிகிறது. என் மகன் ஆனந்தன் தன் தங்கைக்கு நடந்ததை பற்றி அறிந்தால் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. அவன் தனது சகோதரியை மிகவும் நேசிக்கிறவன். சட்ட ரீதியான விளைவுகளை. எதிர்கொள்ள தயாராக இருங்கள் "அவள் பக்கியத்தை எச்சரித்துச் சென்றாள்.

ஆனந்தன் தனது தாயிடமிருந்து முழு கதையையும் அறிந்ததும், அவன் வருத்தப்பட்டான் அவன் தனது மனைவி செல்வியிடம் சென்று தனது சகோதரன் மற்றும் தாயிடம் பேசி செல்வன் - வனஜாவுக்கு இடையே உள்ள பிரச்சனையை தீர்த்து வைக்க வேண்டும், இல்லையெனில் வீடு திரும்பக்கூடாது என்று கோபத்தொடு செல்வியை பேசி அவளின் தாயிடம் அனுப்பினான் பாக்கியம் தனது மகள் செல்வியை கண்ணீருடன் வந்ததை பார்த்தபோது, கோபமடைந்தாள்."

"நீ ஏன் செல்விஅழுதுகொண்டே இங்கு வந்தனி ? ஆனந்தன் உன்னை அடித்தாரா, அல்லது மோசமாக நடந்து கொண்டாரா?"

“ இல்லை அம்மா “.

::அப்ப "செலவன் வனஜா பிரச்சனையை அவர்களோடும் என்னோடும் பேசி தீர்த்து வைக்காமல் உன்னை வீடு திரும்ப வேண்டாம் என்று அவர் என்னிடம உன்னை சொல்ல சொன்னாரா?

"ஆமாம், அம்மா. இந்த திருமணத்தை அப்பாவும் நீங்களும் தான் விரும்பினீர்கள் என்றும் அவர் சொன்னார். அவர் தனது தந்தையை திருப்தி படுத்த தான் ஆம் என்று சொல்ல வேண்டியிருந்தது. என்றார்’’

"எனவே எல்லோரும் என்னைக் குற்றம் சாட்டுகிறார்களா? செல்வன் வரட்டும். நீ இங்க வந்த காரணத்தை அவனுக்கு சொல்லுறன் ".பாக்கியம் கோபத்தோடு மகளுக்கு சொன்னாள்.

தனக்கும் வனஜாவுக்கும் இடையிலான விஷயத்தை தீர்த்துக் கொள்ளாமல் வீடு திரும்ப வேண்டாம் என்று செல்வியிடம் ஆனந்தன் சொன்னதை செல்வன் அறிந்ததும் நிலமை மோசமானது .

‘‘எங்கள் குடும்ப விவகாரங்களில் தலையிட ஆனந்தன் யார்? அவர் ஒரு பிரபலமான வழக்கறிஞர் என்பதால் உன் அண்ணன் என்னை அச்சுறுத்த முடியும் என்று நினைக்கிறாரா? ’’என்று செல்வன் வனஜாவை பார்த்து கத்தினான்.

செல்வன் நண்பர்களுடன் குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து ஒரு பெண் விரிவுரையாளருடன் உறவு வைத்திருப்பதாக வனஜா மீண்டும் குற்றம் சாட்டினாள்.

செல்வன் தனது மனநிலையை இழந்து அவளை உடல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்தான். அவன் கூச்சலிட்டு அவளை வீட்டை விட்டு வெளியே தள்ளினான்.

"போடி. போய் உன் தாய் மற்றும் சகோதரனுடன் வாழ். உன்னை இங்கே. எனக்கு தேவை இல்லை இனி என்ன செய்வது என்று எனக்குத் தெரியும்." செல்வன் சத்தம் போட்டான் . அவன் முகம் சிவந்தது

செல்வி அசையாமல் நின்றாள். பாக்கியம் தனது மகனின் நடவடிக்கைக்கு எதிராக ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

ஆனந்தன் தனது சகோதரி வனஜாவை வீங்கிய முகம் மற்றும் கையில் ஒரு சூட்கேஸுடன் பார்த்தபோது குடும்ப பிரச்சனை புது திருப்பம் எடுத்தது.

"அவன் ஒரு மிருகத்தைப் போல நடந்து கொண்டான். அவன் என் சகோதரி வனஜாவை அடித்து கீழே தள்ளி விட்டான். நான் அவனது சகோதரியைத் தொட்டதில்லை. என் சகோதரியிடம் இதைச் செய்வதன் மூலம் தப்பித்துக் கொள்ளலாம் என்று செல்வன் நினைக்கிறானா?. நான் யார் என்று அவனுக்குத் தெரியாது. நான் அவனுக்கு ஒரு பாடம் கற்பிப்பேன்."

ஆனந்தன் குரலின் உச்சியில் கத்தினான். அவனது தாயார் கமலம் மகனை சமாதானப்படுத்த முயன்றாள், ஆனால் யாரையும் அவன் கேட்கத் தயாராக இல்லை. அவன் காவல் நிலையத்திற்கு போன் செய்து தனது நண்பர் இன்ஸ்பெக்டர் ராஜனோடு பேசினான். சில மணி நேரத்தில், ஒரு போலீஸ் ஜீப் செல்வனின் வீட்டில் வந்து நின்றது . . மனைவி மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் செல்வன் ரிமாண்ட் செய்யப்பட்டான். இரு குடும்பங்களுக்கிடையிலான சண்டைபற்றி முழு புலோலி கிராமத்துக்கும் தெரிந்தது. சிலர் மாற்றுத் திருமணத்தை ஊக்குவித்ததற்காக பெற்றோரை சபித்தனர். கிராமத்தின் ஒரு முக்கிய மனிதரான மேற்பார்வையாளர் தம்பையா. வீட்டைக் கட்டுவதற்கான ஒப்பந்தத்தை தனக்கு வழங்குவதாக நடா சொல்லி பின் ஏமாற்றை விட்டார், அதனால் அவர் நடாகுடும்பத்தினருக்கு எதிராக கோபம் கொண்டிருந்தார். மேலும், தனது மகளை ஆனந்தனுடன் திருமணம் செய்து வைக்க தம்பாயாவுக்கு ஒரு யோசனை இருந்தது, ஆனால் தம்பையாவின் முழு திட்டத்தையும் நடா கவிழ்த்தார். அந்தக் கோபம் தம்பையாவுக்கு மனதில் இருந்தது

ஒரு சில கிராமவாசிகள் அம்மன் கோவிலில் சந்தித்து முழு சம்பவத்தையும் விவாதிக்கத் தொடங்கினார்கள் :

"இப்படி நடக்கும் என்று எனக்கு முன்பே தெரியும். நடராஜா ஒரு தந்திரமான மனிதன் முழுச் செல்வமும் அவர்களது குடும்பத்திலிருந்து வெளியேறக்கூடாது என்பதற்காக அவர் இந்த் திருமணத்தைத் திட்டமிட்டார். இது கடவுளின் தண்டனை. தந்தையைப் போலவே மகனும் ஒரு குடிகாரன்." தம்பையா வதந்திகளை தூண்டி விட்டார்.

தனது சகோதரியை ஒரு விலங்கிலிருந்து காப்பாற்ற ஆனந்தன் விவாகரத்து ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று சிலர் பரிந்துரைத்தனர். செல்வனுக்கு ஒரு பாடம் கற்பிக்க அவர் தனது மனைவி செல்வியை விவாகரத்து செய்ய வேண்டும். இது மற்ற ஒருவர் கருத்து.

கிராம விதானையார் விசுவலிங்கம் (விசுவர்)/அவர்களுக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. இந்தக் கதை மற்ற கிராமங்களுக்கும் பரவினால் அவர்கள் புலோலி மக்களை ஏளனம் செய்வார்கள் என்று விசுவர் கவலைப் பட்டார் . செல்வன் மற்றும் ஆனந்தனுடன் பேசி, இரு குடும்பங்களுக்கிடையிலான நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்க அவர் முடிவு செய்தார்.

அவர் மத்தியஸ்தரைப் போல செயல்படுவதற்கான முதல் படியாக செல்வனை பிணை எடுத்தார். அதைச் செய்வதற்கு முன்பு, ஆனந்தனை இரு குடும்பங்களின் நலனுக்காக தான் செய்கிறேன் என்று சமாதானப்படுத்தினார். சர்ச்சை தொடர்ந்தால், அது விவாகரத்தில் முடிவடையும். வனஜா மூன்று மாத கர்ப்பமாக இருந்ததால் அது அவரது தொழில் வாழ்க்கையின் எதிர்காலத்தையும் அவரது சகோதரியின் குழந்தையின் எதிர்காலத்தையும் பாதிக்கும். அவரது அதிர்ஷ்டமோ எனவோ, செல்வியும் கர்ப்பமாக இருந்தாள், மேலும் இது இரு குடும்பங்களையும் ஒன்றிணைக்க கூடுதல் காரணங்களை விசுவருக்கு கொடுத்தது.

விசுவர் செல்வனின் வீட்டிற்குள் நுழைந்தபோது பாக்கியம் நுழைவாயிலில் இருந்தாள்:

''விசுவர் மாமா, நீங்கள் இல்லையென்றால், எங்கள் குடும்பத்தின் நற்பெயர் காற்றில் போயிருக்கும். எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ரிமாண்ட் செய்யப்படுவது இதுவே முதல் முறை. சோமு அண்ணன் மகன் அதைச் செய்வான் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. செல்வனை ஜாமீனில் விடுவித்ததற்கு நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். "பாக்கியம் விசுவருக்கு நன்றி தெரிவித்தாள்.

"எனக்கு நன்றி சொல்ல வேண்டாம். ஜாமீனில் செல்வனை வெளியில் கொண்டு வர ஒப்புக்கொண்ட ஆனந்தனுக்கு நன்றி சொல்லுங்கள் . இதை ஒரு போலீஸ் வழக்காக மாற்றியதற்காக அவர் செய்த தவறை அவர் உணர்ந்துள்ளார். வனஜா கர்ப்பமாக இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

"என்ன. வனஜா கர்ப்பிணியா அது எனக்குத் தெரியாதே?"ர"வனஜா மட்டுமல்ல, உங்கள் மகள் செல்வியும் கர்ப்பமாக இருக்கிறாள். அது உங்களுக்குத் தெரியுமா?" விசுவர் பாக்கியத்தின் பதிலுக்காகக் காத்திருந்தார்

"கடவுளே. அதுவும் எனக்குத் தெரியாது. செல்வன் வனஜாவைத் தாக்கி அவளைத் தள்ளியபோது நல்ல காலம் கருச்சிதைவு ஏற்படவில்லை. அவள் இப்போது எப்படி இருக்கிறாள்"? பாக்கியம் மருமகளை நினைத்து கவலைப்பட்டாள். செல்வன் ஒரு மூலையில் நாற்காலியில் இருந்து மௌனமாகக கேட்டுக்கொண்டிருந்தான்.

"உங்கள் மகன் ஒரு படித்தவராக இருந்து தனது நடத்தைக்கு வெட்கப்பட வேண்டும். அவர் சிறுவயதிலிருந்தே வனஜாவை செல்வன் அறிந்திருந்தான். மதுபானம் அவனது சிந்தனையை தடுத்துள்ளது. தவறு உங்களுக்கும் உள்ளது. நடுநிலை வகிப்பதற்கு பதிலாக உங்கள் மகன் பக்கம் சாய்ந்தீர்கள் , அது நிலைமையை மோசமாக்கியது. உங்கள் மகனின் பைத்தியக்கார நடத்தை இரண்டு குடும்பங்களின் விவாகரத்தில் முடிவடைந்திருக்கும், மேலும் உங்கள் பேரக்குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாதித்து இருக்கும் "விசுவர் நெருக்கடியின் பாதிப்பை தன் வலுவான, நம்பிக்கையான குரலில் வலியுறுத்தினார்.

பாக்கியம் தன் தவறை உணர்ந்தாள். செல்வன் பரிதாபமாக விசுவரைப் பார்த்தான்.

"நீங்கள் ஏன் என்னைப் பார்க்கிறீர்கள்? உங்கள் கர்ப்பிணி சகோதரி செல்வியைப் பாருங்கள். உங்கள் நடத்தை காரணமாக ஆனந்தன் அவளை விவாகரத்து செய்தால், அது உங்கள் சகோதரியின் எதிர்காலத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் உணர்ந்தீர்களா? அது அவளுடைய குழந்தையின் எதிர்காலத்தை பாதிக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா’’?

விசுவர் செல்வனை நோக்கி நடந்து பலமான குரலில் பேசினார், செல்வனிடம் ஒரு பதிலுக்காக காத்திருந்தார்.

செல்வனின் கன்னங்களில் கண்ணீர் ஓடியாது . "விசு மாமா, நான் செய்ததற்காக வருந்துகிறேன். என்னைப் பற்றி நான் வெட்கப்படுகிறேன். மது பானங்களுக்குப் பிறகு, நான் என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை." செல்வன் விசுவின் கையைப் பிடித்து மன்னிப்பு கேட்டான். அவன் கண்களில் இருந்து கண்ணீர் ஓடியது .‘‘என்னிடம் மன்னிப்பு சொல்வதில் அர்த்தமில்லை. நீங்களும் உங்கள் தாயும் இப்போது என்னுடன் ஆனந்தனின் வீட்டிற்கு வருகிறீர்கள். நீங்கள் வனஜாவுக்கு செய்ததற்காக உங்கள் அத்தான் ஆனந்தன், கமலம் மாமி இருரிடம் மன்னிப்பு கேளுங்கள் . "

"மாமா, அவர்கள் என் மன்னிப்பை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறீர்களா?"

"கவலைப்படாதே. உன்னை பிணை எடுப்பதற்கு முன்பு நான் ஆனந்தனின் அனுமதி பெற்றேன். நீங்கள் இருவரும் என்னுடன் வாருங்கள். செல்வியும் உங்களுடன் சேரட்டும்.

மீதியை என்னிடம் விட்டு விடுங்கள்." செல்வன் மற்றும் பாக்கியம் ஆகியோர் தங்கள் தவறுகளை உணர முடிந்ததில் விசுவர் மகிழ்ச்சியடைந்தார். செல்வி மூலையில் இருந்து அவரைப் பார்த்து சிரித்தாள்.

அவர் செல்வியைப் பார்த்து புன்னகைத்தார். "நீங்கள் ஏன் என்னை பார்த்து பற்களைக் காட்டுகிறீர்கள்? தயாராகுங்கள், வாருங்கள். உங்கள் ஆனந்தன் அத்தான் உங்களைப் பார்க்கக் ஆவலுடன் காத்திருக்கிறார். கடந்த சில நாட்களாக அவர் உங்களின் பிரிவை அவரால் தாங்க முடியவில்லை ."

விசுவர் ஒரு திறமையான கிராம விதானையார் மட்டுமல்ல, சமாதான மத்தியஸ்தரும் கூட என்பதை நிரூபித்திருந்தார். தென்றல் வீட்டின் வாசல் வழியே வீசியது .

உறவுக்குள் திருமணம் உகந்தது அல்ல

****

## கதை 12

## விவசாயி

பல தசாப்தங்களுக்கு முன் யாழ்பாணக் குடாநாட்டில் உள்ள வடமராட்சியில் நடந்த சம்பவம் இது .

யாழ்ப்பாணத் தீபகறப்பத்தின் பிரிட்டிஷ் மற்றும் டச்சு ஆட்சி, மிஷனரி பள்ளிகளை நிறுவுவதன் மூலம் யாழ்ப்பாணக் குடா நாட்டு வாசிகளுக்கு நல்ல ஆங்கிலக் கல்வியைக் கொடுத்தார்கள் . இதனால் பல யாழ்ப்பாணத் தமிழர்கள் கடினமான அந்தஸ்து உள்ள சிவில் சர்வீஸ் பரீட்சை எழுதி பாஸ் செய்து அரசாங்க சேவையில். திணைக்கள அதிகாரி. அரசாங்க அதிபர்கள், அமைச்சு செயலாளர் போன்ற பதவிகள் வகித்தனர் . அவர்கள் சமூகத்தால் நன்கு மதிக்கப்பட்டார்கள். ஒரு சிலர் ஸ்டேஷன் மாஸ்டர்ஸ் , சர்வேயர்களாக பணியாற்றுவதற்காக மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கு குடிபெயர்ந்தனர். இவர்கள் ஓய்வு பெற்று யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு திரும்பிய போது அவர்களை மலேசியன் பென்சனியர் என அழைத்தனர். பல ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டனர்.

.****

ஒரு முறை இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படிக்கும் ஜான்சன் என்பவர் தன்னுடன் பல்கலைக்கழகத்தில் படித்த இலங்கை தமிழ் நண்பர் ஒருவரின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாண சமூக மக்களின் கல்வியறிவையும் கலாச்சாரத்தையும் ஆய்வு செய்தார் யாழ்ப்பாணம் குடாநாட்டில் உள்ள வடமராட்சி கிராமம் ஒன்றுக்கு சென்றார் . அந்த கிராமத்தில் தன் நண்பரின் வீட்டைத்தேடி நடக்கும்போது. மண்வெட்டியைப் பயன்படுத்திய படியே மரக்கறித் தோட்டம் ஒன்றில் வேலை செய்யும் தொப்பி அணிந்த ஒரு மனிதனை அவர் கவனித்தார். முகத்திலிருந்து வியர்வை கொட்டியபடி அந்த விவசாயி வேலை செய்து கொண்டு இருந்தான்

அந்த மனிதனால் தான் தேடும் இடத்தின் திசையைப் பற்றி ஆங்கிலத்தில் தனது விசாரணைக்குப் பதிலளிக்க முடியுமா என்று அவர் சிறிது நேரம் யோசித்தார். அவர் சிறிது நேரம் தயங்கிய பின் எதற்கும் அந்த மனிதனிடம் கேட்க முடிவு செய்தார்.

"சேர். ஒரு கிராமத்திற்குச் செல்ல என்னை வழிநடத்த முடியுமா "?ஜான்சன் ஆங்கிலத்தில் அந்த விவசாயியிடம் கேட்டார்

"மன்னிக்கவும், நான் சேர் அல்ல, என் பெயர் நடராஜா. என்னை நடா என்று அழைக்கவும். ஆம். உங்களுக்கு வழிகாட்ட நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன் "என்று சரியான

ஆங்கிலத்தில் அழகான உச்சரிப்பில் பதிலளித்தார். ஒரு சாதாரண கிராம விவசாயி அவருக்கு மகாராணி மொழியில் பதிலளிப்பதைக் கேட்டு ஜான்சன் ஆச்சரியப்பட்டார் '

அந்த விவசாயி ஜான்சன் ஆங்கிலத்தில் கேட்ட கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் தயங்காமல் பதில் அளித்தார் . திருப்தி அடைந்த ஜான்சன் அவருடன் சேர்ந்து நினைவுக்கு ஒரு படமும் எடுத்துக் கொண்டார் .

****

அந்த மனிதன் கொடுத்த குறிப்பின் படி தன் நண்பன் சிவராஜாவின் வீட்டை ஜான்சன் அடைந்தார்

தன் நண்பரிடம் நடந்ததை ஜான்சன் சொன்னார் .தான் சந்தித்த விவசாயியின் தோற்றத்தை விவரித்தார் .

“ சிவா, அந்த மனிதருக்குச் சற்று வழுக்கை விழுந்த தலை . முகத்தில் ஒரு மச்சம் .ஆறடி உயரம் . திடகாத்திரமான மார்பு. என் கணிப்பின் படி அவருக்கு வயது அறுபது இருக்கும் .என்ன அழகான உச்சரிப்பில் என் கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதில் சொன்னார் தெரியுமா ?. நான் அதை ஒரு கிராம விவசாயியிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை “.

ஜான்சன் சொன்னதைக் கேட்டு சிவராஜா சிரித்தார் .

“ ஏன் சிரிக்கிறாய் சிவா”?

“ ஜான்சன் நீ சந்தித்தது வேறு யாருமில்லை . அவர் தான் என் தந்தை நடராஜா . அவர் ஆங்கிலத்தில் பட்டம் பெற்று சிலோன் சிவில் சர்வீசில் சேர்ந்து வடமாகாணத்தில் நான்கு வருடங்கள் அரசாங்க அதிபராக இருந்தவர். என்னை இங்கிலாந்து அனுப்பிப் படிப்பித்த பெரிய மனிதர் . ஆங்கிலத்தில் கவிதை எழுதுவார் . ஒரு கிழமையில் குறைந்தது நான்கு நாட்களாவது எங்கள் தோட்டத்தில் மண்வெட்டி பிடித்து வேலை செய்வார் . அவருக்கு நோய் என்று இருந்ததில்லை” என்றான் சிவா .

“அவருக்கு என்ன வயது இப்போ’?

சொன்னால் நம்ப மாட்டாய் இவருக்கு ஐம்பது வயதில் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பின் அரசாங்கத்தில் வேலை செய்வது கடினம் என்பதைக் கண்ட அவர் முடிவெடுத்து சீக்கிரம் ஓய்வு பெற்றார்

“ ஏன் அப்படி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பின் அரசாங்க சேவையில் என்ன நடந்தது"?

“ஆட்சி பிரிட்டிஷ் கையில் இருந்து பெரும் பான்மை இனமான சிங்களவர்களின் கைகளுக்குப் போனதும் குரங்கு கை பூமாலை தான்.சில வருடங்களில் அரசாங்க

ஊழியர்கள் அவசியம் சிங்களம் படிக்கச் வேண்டும் என்று அரசு சொன்னது. படித்து பாஸ் செய்தால் தான் புரொமோசன் அதனால் திறமை இல்லாத தனக்குக் கீழ் வேலை செய்த சிங்களவனுக்கு புரொமோசன் கிடைத்ததால் . என் தந்தை விரக்தி அடைந்தார் . அவரால் தொடர்ந்து அரச சேவையில் இருக்க மனம் இடங்கொடுக்கவில்லை. இனி நாட்டுக்குக் கஷ்ட காலம் ஆரம்பித்து விட்டது தான் தன் காணியை நம்பி வாழப்போகிறேன் என்று வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, மண்வெட்டியை தூக்கியபடி தோட்டத்தில் இறங்கினார் “ சிவா சொன்னான் .

“அது நல்ல முடிவு சிவா. உன் தந்தை ஒரு நல்ல கொள்கைவாதி “ என்றார் ஜான்சன்

## *கதை 13*

## *சிவப்பு நாடா*

*ஆடியபாத வீதியில் அமைந்த உதவி அரசாங்க அதிபருக்கான (Assistant Government Agent) அலுவலகம் அது. அவரின் பெயர்ப் பலகையோடு பிரத்தியேக அறை அலுவலகத்தில் இருந்தது . அந்த அறைக்கு வெளியே வாசலில் பியோன் இருக்க ஒரு கதிரை மணி அடிக்கும் சத்தம் கேட்டவுடன் அறைக்குள் போய் " கூப்பிட்டியளா சேர்" என்று கேட்பான் பியோன் சிவராசா .*

*அந்த அலுவலகத்தின் மெயின் ஹாலில் பிரதம லிகிதருக்கு ஒரு பெரிய மேசையும், அந்த மேசைக்கு முன்னால் இடது பக்கத்தில் மூன்று, வலது பக்கத்தில் மூன்று மேசைகளும் கதிரைகளும் போடப்பிடிருந்தது . ஒவ்வொரு மேசையிலும் கோப்புகள் (Files) அடுக்கி இருந்தன அலுவலகத்துக்கு சமூகப் பிரச்சனைகள் தொடர்பான வேலை நிமித்தம் வரும் பொதுஜனம் அமர்வதற்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில், அவர்கள் வசதியாக அமர ஆறு கதிரைகள். வந்தவர்கள் வாசிக்க ஓரத்தில் உள்ள மேசையில் சில பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்.இருந்தன அலுவலகத்தின் மூன்று ஜன்னல்களில் பச்சை நிற திரை சீலை தொங்கிக் கொண்டு இருந்தது. ஆளும் கட்சியின் நிறம் என்பதை அது எடுத்துக் காட்டியது. ஆளும் கட்சி மாறினால் புது கட்சியின் நிறத்தில் திரை சீலை ஜன்னலில் தொங்கும். சுவரில் பல அறிவித்தல்களைக் கொண்ட நோட்டீஸ் போர்ட் காட்சி கொடுத்தது . ஹாலின் ஒரு மூலையில் அலுவலகத்தில் வேலை செய்வோர் தேநீர் தயாரிக்க எலக்ட்ரிக் அடுப்பு இருந்தது .ஹாலின் சுவரில் நாட்டின் ஜனாதிபதியின் படமும் பிரதமந்திரியின் படமும் தொங்கிக் கொண்டிருந்தன .*

*உதவி அரசாங்க அதிபர் நடராஜா தவிர்த்து, பியோன், மற்றும் ஏழுபேர் லிகிதர்களாக வேலை செய்யும் அலுவலகத்துக்கு அன்றுதிங்கள் காலை வேலைக்கு வந்திருந்த லிகிதர்கள் நான்கு பேர் மட்டுமே. சனி, ஞாயிறு தினங்களில் வேலை இல்லாததால் திங்கட்கிழமையில் லீவு எடுத்து வீட்டில் நின்றுவிடுவது வெகு தூரத்திலிருந்து வரும் லிகிதர்களின் வழக்கம். ஒபீசில் இருந்தவர்களில் ஒருவர் அன்றைய தினப்பத்திரிகையை வாசித்தபடி இருந்தார். இன்னொருவர் பேப்பரில் வந்திருந்த குறுக்கெழுத்து போட்டியைச் செய்து கொண்டு இருந்தார் இன்னொருவர் தன் மேசைக்கு முன்னே அமர்ந்திருந்தவரோடு பேசிக் கொண்டிருந்தார். மற்றவர் பியோன் கொண்டு வைத்த கோப்பியைச் சுவைத்தபடியே மேசையில் உள்ள கோப்புகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிந்தார். பிரதம லிகிதரின் கதிரை காலியாக இருந்தது. ஒபீசில் வேலை செய்பவர்களுக்கு எடு பிடி வேலை செய்யும் பியோன் சிவராசா பிரதம லிகிதரையும் உதவி அரசாங்க அதிபரையும் சந்திக்க வந்தவர்களுடன் பேசி, அவர்கள் வந்த காரணத்தையறிந்து அவர்கள்*

கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான். அவனைத் தாண்டி எவரும் அலுவலகத்தில் உள்ளவர்களைச் சந்திக்கமுடியாது. ஏஜிஏ ஒபீசில் சிவராசாவுக்கு இருபது வருஷ சேவை. மூன்று ஏஜிஏக்களுக்கு கீழ வேலை செய்தவன். அவன் சேர் போடும் நாலாவது ஏஜிஏ நடராஜா. அவனுக்கு எந்தக் கடையில் எந்தப் பொருள் மலிவாக விற்கிறார்கள் என்ற விபரம் தெரியும். அதனால் ஏஜீஏ நடராஜா தன் வீட்டுக்குத் தேவையான சாமான்களை வீட்டுக்குப்போக முன் சிவராசாவைக் கொண்டே வாங்கிவிடுவார்..

சிவராசா தேநீரை அங்கிருந்த அனுபவம் உள்ள லிகிதர் பரமசிவத்திடம் கொடுத்து விட்டு “சேர் சிலகோப்புகளில் பெண்கள் ரிப்பன் கட்டுவது போல் கட்டுகிறீர்கள் ஏன்” இந்த அலங்காரம் “? எனக் கேட்டான்.

“ நல்ல கேள்வி சிவா. என் அப்பா பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அரசில் பல ஆண்டுகள் வேலை செய்தவர் . அவர் எனக்குச் சொன்ன விளக்கம் , அரசாங்க வேலை தொடர்பான தாமதங்களுக்கு `சிவப்பு நாடா’ (Redtape) என்று வந்த கலாச்சாரம் இங்கிலாந்து அரசர்கள் சட்ட ஆவணங்களைத் தோலால் ஆன காகிதங்களில் எழுதிச் சுருட்டி, சிவப்பு ரிப்பன்களால் கட்டி வைப்பார்கள். பின்னர் அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகார வர்க்கத்தினர் தங்களுடைய பணிகளுக்கு ஒரு முக்கியமான தோற்றத்தைத் தருவதற்காக சிவப்பு நாடா பழக்கத்தைப் பின்பற்றத் தொடங்கினர். தங்களை அதிகாரிகள் மிஞ்சக் கூடாது என்பதற்காக வக்கீல்கள் தங்களுக்கு என்று ரிப்பன்களை தேர்ந்தெடுத்துக்கொண்டனர் அரசாங்கம் மற்றும் சட்டப் பிழைகளால் ஏற்பட்ட ஏமாற்றத்தைப் பற்றி பிரபல எழுத்தாளர் சார்லஸ் டிக்கன்ஸ், `சிவப்பு நாடாவை வெட்டிச் செல்லுதல்’ என்று குறிப்பிட்டார். அதாவது முறையை மீறி செல்லுதல் என்பது அர்த்தம். அதன்பிறகு இது எல்லோராலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. சிவப்பு நாடா முறை அரச வேலையில் தாமதத்தைக் கொடுப்பதுக்குக் காரணம் ஒன்று ஒரு பிரச்சனைக்கு விடை காண கோப்பு பலரின் கை மாறுகிறது. மற்றது அறிக்கை தயாரிக்க தேவையான தகவல் சேகரிக்க தாமதமாகிறது. சில தாமதம் லிகித்ர்களால் “சம்திங்” எதிர் பார்த்து உருவாக்கப் படுகிறது என்றார்” சிரித்தபடி லிகிதர் பரமசிவம் .

சிவப்பு நாடா என்பது அதிகப்படியான கட்டுப்பாடு அல்லது முறையான விதிகளுக்கு உறுதியான இணக்கம் ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு முட்டாள்தனம்,. இது தேவையற்ற அல்லது அதிகாரத்துவமாகக் கருதப்படுகிறது மற்றும் நடவடிக்கை அல்லது முடிவெடுப்பதைத் தடுக்கிறது. இது பொதுவாக அரசாங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் பிற பெரிய நிறுவனங்களுக்குப் பொருந்தும். "ரெட் டேப்" என்று பெரும்பாலும் விவரிக்கப்படும் விஷயங்களில் காகிதப் பணிகளை நிரப்புதல், உரிமங்களைப் பெறுதல், பல நபர்கள் அல்லது குழுக்கள் ஒரு முடிவை அங்கீகரிப்பது மற்றும் ஒருவரின் விவகாரங்களை நடத்துவதை மெதுவான, கடினமான, அல்லது இரண்டையும்

*உருவாக்கும் பல்வேறு கீழ்-நிலை விதிகள் ஆகியவை அடங்கும். 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், சார்லஸ் V, ஸ்பெயினின் மன்னர் மற்றும் புனித ரோமானிய பேரரசரின் ஸ்பானிஷ் நிர்வாகத்துடன், அவர் தனது பரந்த சாம்ராஜ்யத்தை நடத்தி வந்த நிர்வாகத்தை நவீனமயமாக்கும் முயற்சியில் சிவப்பு நாடாவைப் பயன்படுத்தத் தொடங்கினார். மிக முக்கியமான நிர்வாக ஆவணங்களைப் பிணைக்க சிவப்பு டேப் பயன்படுத்தப்பட்டது, மேலும் சாதாரண நிர்வாக வழியில் நடத்தப்பட்ட சிக்கல்களிலிருந்து அவற்றைப் பிரிக்கவும், அவை சாதாரண சரத்துடன் பிணைக்கப்பட்டுள்ளன."*

*:"இந்த முறை மக்கள் பிரச்சனைகளைத் தீர்க்க. அவசியமா ஐயா"?*

*"வெளிப்படைத்தன்மை. நேர்மை, மக்கள் திருப்தி என்பது மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு. சமூகத்தில் பல வித பிரச்சனைகளைப் பல வித முறைகளில் அணுகி ஓர் அரசு வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட்டால் மட்டுமே மக்களும் அந்த ஆட்சியின் மீது நம்பிக்கை வைத்து, நிர்வாகத்தில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள முடியும்." இது பரமசிவத்தின் பதில்.*

****

*அலுவலகத்துக்கு சொந்த காரியமாக வந்த சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவரின் பார்வையிலிருந்து அவர் அலுவலகத்தில் யாரையோ சந்திக்க வந்திருக்கிறார் என்று; பியோன் சிவராசா ஊகித்துவிட்டான்.*

*"யாரை ஐயா பார்க்க வந்திருக்கிறியள்"? சிவராசா வந்தவரைக் கேட்டான்.*

*"உதவி அரசாங்க அதிபரைச் சந்திக்க வேண்டும். அவர் இருக்கிறாரா"? வந்தவர் கேட்டார்.*

*"மன்னிக்கவும். ஐயா ஒரு கூட்டத்திற்கு ஜிஏ (GA) யின் ஒபீசுக்குப் போய்விட்டார். அவர் வர மூன்று மணித்தியாலமாகும்"*

*" அப்போ நான் பிரதம லிகிதர் மிஸ்டர் சின்னையாவைச் சந்திக்கலாமா"?*

*" அவர் இண்டைக்கு அரை நாள் லீவு. பகல் ஒரு மணிக்கு பிறகு தான் வருவார். ஏதாவது முக்கிய விஷயமாக அவரைச் சந்திக்க வேண்டுமா"?*

*" ஓம். கனடாவில் இருக்கும் என் மகன் இந்த ஊரில் ஆடைகள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கத் திட்டம் வைத்திருக்கிறான். அதைப்பற்றிப் பேச வந்தனான்".*

*" இது வெளிநாடு சம்பந்தப்பட்ட விஷயம். அதைப்பற்றி ஏஜீஏ ஐயாவோடு தான் நீங்கள் நேரடியாகப் பேசவேண்டும்", சிவராசா சொன்னான். அவனுக்கு எவரை ஏஜீஏயை சந்திக்க அனுமதிக்க முடியும் என்று தெரியும். அவனைத் தாண்டி ஏஜிஏயையோ பிரதம லிகிதரையோ எளிதில் எவராலும் சந்திக்க முடியாது.*

*" அப்பத் தம்பி நான் மூன்று மணிக்கு வந்து அவரைச் சந்திக்கிறன். இதோ என்டை பிஸ்னஸ்கார்ட் இதை அவரிடம் கொடும்" முதியவர் விடைபெற்றார்.*

*வேலை செய்பவர்கள் மேசைகளில் இன் (IN), அவுட்(OIT), என ஆங்கிலத்தில் எழுதிய மரத் தட்டுகளில் பைல்களால் நிறைந்திருந்தன. அப்பைல்கள் பல சிவப்பு நாடாவால் கட்டப்பட்டிருந்தன. இந்த சிவப்பு நாடா கலாச்சாரத்தை பிரித்தானியர் தமது ஆட்சியின் போது அறிமுகப்படுத்தினார்கள். எந்த காரியமும் முறைப்படி, பரிபாலன விதிப்படி நடக்க வேண்டும் என்பதைச் சிவப்பு நாடா எடுத்துக்காட்டுகிறது.*

*அந்த அலுவலகத்தில், சுவர் ஓரத்தில் ஐந்து அலுமாரிகள் நிறம்பப் பைல்கள். அப்பைல்களில் தேவைபட்டவை எங்கிருக்கிறது என்பது சிவராசாவுக்கு மட்டுமே நன்றாகத் தெரியும். காரியத்தை வெகு விரைவில் முடிக்க வேண்டுமாகில் அவனுக்கு ஏதும் சந்தோசம் கொடுத்தால் அடியில் உள்ள பைல் மேலே வந்து விடும் . அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு ஏதாவது ஒரு பைல் தேவைப்பட்டால் சிவராசாவின் உதவியைத் தான் ஒபீசில் வேலைசெய்பவர்கள் நாடுவார்கள்.*

*முதியவர் வந்து சென்று சில நிமிடங்களுக்குப் பின் ஒரு தம்பதிகள் வந்தார்கள்.*

*"ஐயா யாரைப் பார்க்க வந்திருக்கிறியள்"? சிவராசா அவர்களிடம் கேட்டான்.*

*" எண்டை பெயர் செல்லையா. நான் ரிட்டையர்ட் ஸ்டேசன் மாஸ்டர். இது என் மனைவி ரிட்டையர்ட் பிரின்சிபால் பாக்கியம். எங்கடை காணியும், வீடும் விஷயமாக நாங்கள் ஒரு கிழமைக்கு முன்பாக வந்து ஏஜிஏயிடம் மனு கொடுத்தோம். அந்த மனுவுக்கு என்ன நடந்தது என்று அறிய வந்திருக்கிறோம்".*

*" காணி சம்பந்தப்பட்ட முறைப்பாடு என்றால் பெரிய ஐயாவோடை தான் நீங்கள் பேச வேண்டும். அவர் மீட்டிங் ஒன்றுக்கு மாவட்டச் செயலாளர் அலுவலகத்திற்குப் போய் விட்டார். அவர வர சில மணி நேரமாகும்"*

*" அவரைப் போன கிழமை சந்தித்து மனு கொடுத்தனாங்கள். அவர் அதை வாசித்துவிட்டு தேவ்வாயான நடவடிக்கை எடுக்கும் படி அந்த மனுவில் ஓடர் போட்டு, அதோ இருக்கிறாரே அந்த கிளார்க்கிடம் கொடுத்தவர். ஒரு கிழமைக்கு மேலாகிவிட்டது. என்ன நடக்கிறது என்று கேட்க வந்திருக்கிறோம்"..*

*சிவராசா வந்த தம்பதிகளை அவர்கள் காட்டிய கிளாரக்கிடம் அழைத்த சென்றான்;. பத்திரிகை ஒன்றை வாசித்து கொண்டிருந்த அவர், அதை மடித்து வைத்து விட்டு வந்தவர்களை நிமிர்ந்து பார்த்தார்*

*"சேர் இவையள் தாங்கள் ஒரு கிழமைக்கு முன் கொடுத்த மனுவைப்பற்றி விசாரிகக்; வந்திருக்கினம்;" சிவராசா கிளாக்கர் கந்ததையாவிடம் சொன்னான்.*

வந்த தம்பதிகளை தன் முன் இருந்த கதிரைகளில் அமரும்படி சைகை மூலம் காட்டினார் கந்தையர். அவர் பத்து வருடங்களாக ஏஜிஏ ஒபிசீல் வேலை செய்யும் கிளாஸ் ரூ கிளரிக்கல் சேவண்ட். ஒபிசீல் இருந்து அரை மைல் தூரத்தில் அவர் வீடு இருந்தபடியால் ஒபீசுக்கு நடந்தே வந்து போவதால் பஸ் செலவு அவருக்கு இல்லை. இரு தடவை அவருக்கு அறுபது மைல்களுக்கு அப்பால் உள்ள ஏஜிஏ ஒபீசுக்கு மாறுதல் கிடைத்தும், தனது அரசியல் செல்வாக்கைப் பாவித்து டிரான்ஸ்பரை நிறுத்தியவர் கந்தையர் . அந்தப் பகுதி எம்.பி அவரின் தாய் வழிச் சொந்தக்காரன்.

" ஐயா போன கிழமை எங்கடை காணியும் வீட்டையும் பற்றி நாங்கள் கொடுத்த மனுவுக்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறியல் என்று கேட்க வந்தனாங்கள்" வந்தவர் சொன்னார்.

" ஓ இப்ப எனக்கு நீங்கள் இருவரும் ஒரு கிழமைக்கு முதல் ஏஜீஏயை சந்தித்தது என் ஞாபகத்துக்கு இப்ப வருகுது. ஏஜிஏ உங்கள் மனுவை வாசித்துவிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் படி எழுத்தில் மனுவில் ஓடர் போட்டிருக்கிறார். நான் உங்கடை மனுவை வாசித்தனான். உங்கடை பிரச்சனை ஒரு சிக்கலான பிரச்சனை." உதட்டைச் சுழித்தபடி கந்தையர் சொன்னார்.

" அப்படி என்ன சிக்கலான பிரச்சனை? அந்த காணியும் வீடும் எங்கடை பரம்பரைக் காணி. எங்கடை அனுமதி இல்லாமல் பாதுகாப்பு என்று சொல்லி ஆர்மி எடுத்துப்போட்டுது. இப்ப இரண்டு வருசத்துக்கு மேலாகிவிட்டது. இப்ப போரும் நிண்டு போச்சு. இனி ஏன் ஆர்மிக்கு எங்கடை வீடும் காணியும் தேவை? எங்களை காணியையும் வீட்டையும் போய் பார்க்கக் கூட விடுகினம் இல்லை", அழாத குறையாகச் செல்லையர் சொன்னார்.

" ஆர்மி அந்த வீட்டிலை இருப்பது தான் பிரச்சனை. உங்கடை காணியும் வீடும் இருப்பது பாதுகாப்பு வலையத்துக்குள் இருக்குது . சில மாதங்களுக்குமுன் உங்கடை வீட்டுக்குக் கிட்ட பெடியன்கள் குண்டு வைச்சவங்கள். ஆர்மி இந்த நாட்டைப் பாதுகாப்பவர்கள் ஆகவே இது பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விஷயம். இதை பற்றி ஏஜிஏ தீர்மானிக்க முடியாது. இது உயர் மட்டத்து அதிகாரிகள் தீரமானிக்க வேண்டிய விஷயம். இதை நான் ஏஜிஏயுக்கு சொன்னனான். அவர் இந்த ஒபீசக்கு மாற்றலாகி வந்து மூன்று மாசம்.. அவர் உங்கடை மனுவைப் பற்றி விபரமாய் மேலிடத்துக்கு ஒரு அறிக்கை தயாரிக்கும்படி இதோ எழுதியிருக்கிறார் என்று பைல் ஒன்றில் இருந்த மனுவை வந்தவர்களுக்கு ஏஜிஏ எழுதியதைக் காட்டினார் கந்தையா .

" அப்ப ஏஜிஏ சொன்னபடி மேலிடத்துக்கு அறிக்கை தயாரித்து விட்டீரா?

" தயாரிப்பதற்கு மேலதிக தகவல்கள் தேவை. வீட்டின் உயில் உங்களிடம் இருக்கிறதா?. நீங்கள் தான் சொந்தக்கார் என்பதை அறிக்கையில ஆதாரத்தோடு காட்டவேண்டும்"?

" இருக்கிறது. உயிலின் பிரதி தரலாம்"

*“ அதுமட்டும் போதாது. விதானையாரிடமிருந்து நீங்கள் முந்தி அங்கு வசித்ததாக ஒரு கடிதம் தேவை.”*

*“ பிரச்சனை இல்லை. அதையும் வாங்கித்தரலாம்”*

*“ அதுமட்டுமல்ல நீங்கள் விட்டில் வாழ்ந்த போது கட்டிய மாநகரசபை வரியின் ரசீது அல்லது, எலக்டிரிசிட்டி அல்லது வோட்டர் பில்லின்பிரதிகள் தேவை.”*

*“ அது மட்டுமா? அல்லது; அது எங்கடை காணியெண்டு நிரூபிக்க வேறு பத்திரம் எதாவது தேவையா?*

*“ தேவையில்லை ஏஜிஏ இராணுவ அதிகாரியோடு பேசி, அவரோடு போய் உங்கடை வீட்டை பார்க்க வேண்டும்.”*

*“ எதையும் உங்கள் முறைப்படி செய்யுங்கள் எனக்கு வெகு கெதியிலை வீடும் காணியும் திரும்ப கிடைக்க வேண்டும். என் மகளுக்குக் கலியாணம் பேசி ஒழுங்காயிற்று. அந்தக் காணியும் வீடும் சீதனமாகக் கொடுக்கிறதாகப் பேச்சு. வீட்டிலை ஆர்மி இருக்கிறபடியால் அதை விற்கமுடியாது. ஒருத்தரும் வாங்க முன் வரமாட்டினம்”.*

*“ நீங்கள் இந்த நிலையில் அந்த வீட்டைச் சீதனமாக கொடுக்கலாமோ இல்லையா என்று எனக்கு; தெரியாது. எதற்கும் நான் சொன்ன பத்திரங்களோடு வந்து ஏஜிஏ வோடு சந்தித்துப் பேசுங்கள். அவர் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்” கந்தையர் சொன்னார்.*

*செல்லையர் தம்பதிகள் தாங்கள் வந்த காரியம் முடியாத ஏமாற்றத்தோடு சென்ற ஒரு மணித்தியலத்துக்குப்பின் ஏஜிஏ நடராசர் மிட்டிங் முடிந்து வந்தார்.*

*ஏஜிஏ நடராஜா வந்ததும் வராததுமாய் கந்தையரை தன் அறைக்குள் அழைத்து*

*“கந்தையா யாராவது என்னைக் காண வந்தார்களா”? என்று கேட்டார்.*

*“ ஓம் சேர். அந்த ரிட்டையர்ட் ஸ்டேசன மாஸ்டர் செல்லையரும் அவர் மனைவியும் தான் தங்கடை வீட்டு விஷயமா உங்களைக் கண்டு பேச வந்தவையள். நான் அவையளுக்குச் சொன்னேன் அவர்களின் பிரச்சனை பற்றி ஜிஏயுக்கு ஒரு அறிக்கை எழுத சில பத்திரங்கள் தேவை என்றும், அதோடு நீங்கள் ஆர்மி மேஜரோடு போய் வீட்டை பார்க்கவேண்டும் என்று சொன்னான்”.*

*“ சரியாகச் சொன்னீர். நான் இரண்டு தடவை ஆர்மி ஒபீசுக்கப் போன் செய்தனான். மேஜர் பெரெரா முக்கிய மீட்டிங்கிற்கு கொழும்புக்குப் போய் விட்டாராம். அவர் திரும்பி வர ஒரு கிழமை எடுக்குமாம்; அதற்குப் பிறகு அவரோடு போய் வீட்டை நான் பார்த்துப் பேசி, அவர் என்ன சொல்லுகிறார் என்றதைப் பொறுத்தது. ஆர்மி வீட்டை காலி பண்ண அவர் சம்மதிப்பாரோ எனக்குத் தெரியாது. போர் முடிந்தாலும் இன்னும் பாதுகாப்பு தேவைபடுகிறதாம். அந்த வீடு பாதுகாப்புக்கு ஏற்ற சந்தியில் இருக்கிறது.”*

*****

ஏஜிஏ, கந்தையருக்கு ரிப்போர்ட்டை வெகு விரைவில் தயார் செய்யும்படி கட்டளையிட்டார்.

கந்தையர் ஏஜிஏ யின் அறையை விட்டு வெளியேறியதும் பியன் சிவராசா அறைக்குள் வந்து.

" சேர் யாரோ ஒரு முதியவர் உங்களைப் பார்க்க வேண்டும் என்று மூன்று மணித்தியாலங்களுக்கு முன் வந்தவர். அப்ப நீங்கள் ஜிஏ ஒபீசுக்கு கூட்டத்துக்கு போயிட்டியள். இப்ப அவர் திரும்பவும்; வந்திருக்கிறார் உங்களைப் பார்த்து ஏதோ முக்கியமான விஷயம் பேசவேண்டுமாம். அவரை வரச்சொல்லட்டா சேர்"? சிவராசா கேட்டான்.

" நான் இன்னும் மதிய போசனம் கூடச் சாப்பிடவில்லை. அரைமணித்தியாலம் அவரை இருக்கச் சொல் நான் கூப்பிடும் போது வரச்சொல்".

" சரி சேர்."

அரை மணித்தியாலத்துக்குப்பின், ஏஜிஏயை காண வந்த முதியவருக்கு ஏஜிஏயின் அறைக்குள் போக அனுமதி கிடைத்தது.

" வாருங்கோ ஐயா. அமருங்கள். நான் கொஞ்சம் பிசி. என்ன விஷயமாக வந்த நீங்கள் என்று சுருக்கமாக சொல்லுங்கோ எனக்கு வேறு வேலைகள் இருக்கு ," ஏஜிஏ சொன்னார்

" சேர் எண்டை மகன் கனடாவிலை பெரிய பிஸ்னஸ்மன். சொந்த ஊரான இங்கு ஒரு ஆடைகள் தயாரிக்கும் பக்டரி ஒன்றை தனது வெளிநாட்டுப பணத்தில ஆரம்பிக் போறாராம். அறுபது பெண்களுக்கும் இருபது ஆண்களுக்கும்; வேலை வாய்ப்புண்டாம்;. அதைப் பற்றி உங்களை சநதித்து பேசச் சொல்லி கடிதம் எழுதியிருக்கிறான். அது தான் அதைப் பற்றி பேச வந்னான்."

" அடடா அது வரவேற்கத்தக்க விஷயம். ஆனால். இது வெளிநாட்டு பிரஜா உரிமையுள்ளவரின் முதலீட்டு விஷயமாச்சே. அதனாலை வெளிநாட்டு அமைச்சால் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். நானோ அல்லது ஜிஏ யோ தீர்மானிக்க முடியாது."

" அப்ப என்ன செய்யச் சொல்லுறியல் ஐயா"

"உங்கடை மகனை கனடாவில் இருக்கும் சிறீ லங்கா அம்பசடரை அல்லது அவரின் உதவியாளரை சந்தித்துப் பேசச் சொல்லுங்கள். கனடாவிலை உள்ள இலங்கை தூதராலயம்

இங்கை உள்ள வெளிநாட்டு அமைச்சோடு தொடர்பு கொண்டு ஆவன செய்யும். அது சரி மகன் எவ்வளவு பணம் முதலீடு செய்ய இருக்கிறார். “

“ கிட்டத்தட்ட பத்து மில்லியன் கனேடியன் டொலர்கள் சேர்”

“ அது பெரிய தொகை ஆச்சே. விரைவில் காரியமாக வேண்டுமானால் வெளிநாட்டு அமைச்சின செயலாளரோடு அல்லது மந்திரியோடை உங்கடை மகனை நேரடியாகத் தொடர்பு கொள்ளச் சொல்லுங்கோ. பத்து மில்லியனை விட கொஞசம் கூட செலவாகும். நான் ஏன் சொல்லுகிறன் எண்டு விளங்கிச்சே’?

வந்தவர் சிறிது நேரம் பதில் சொல்லாது யோசித்தார்”.

“ என்ன ஐயா யோசிக்கிறியள்.”

“ ஒண்டுமில்லை. நீங்கள் சொன்னதை மகனுக்குச சொல்லுகிறன். அவன் என்ன சொல்லுகிறானோ தெரியாது. ஆனால்..”

“ ஆனால் என்ன..?

“சொந்த நாட்டில் முதலீடு செய்ய இவ்வளவு சிவப்பு நாடா வென்றால், சில வேளை அவன் சிங்கப்பூரில் அல்லது துபாயில் முதலீடு செய்ய யோசிக்கலாம் அங்கு சிவப்பு நாடா குறைவு ” என்று சொல்லிவிட்டு முதியவர் நன்றி கூடச் சொல்லாமல் அதிருப்தியோடு எழுந்து சென்றார்.

******

திரும்பவும் போர் ஆரம்பித்ததற்கு அறிகுறிகள் தெரிந்தது.

“ இனி ஸ்டேசன் மாஸ்டர் செல்லையருக்கு வீடு கிடைத்த மாதிரி தான் அவர் வீட்டிலை இருக்கிற ஆர்மி இனி எழும்பமாட்டாங்கள்”, என்றார் கந்தையர் தனக்குப் பக்கத்து சீட்டில் இருந்த கிளாக்கர் முருகேசுவிடம்”.

அதைக் கேடடுக் கொண்டிருந்த பியோன் சிவராசா “ ஐயா செல்லையருக்கு அவர் வீடு இருந்தால் தானே திரும்பிக் கிடைக்க” என்றான்.

“ ஏண்டா சிவராசா, ஏன் அப்படி சொல்லுகிறாய்”? கந்தையர் கேட்டார்.

“ பெடியன்கள் நேற்று இரவு செல்லையர் வீட்டிலை இருந்த ஆர்மியை தாக்கி அங்கை இருந்த ஆர்மிக்காரர்கள் ஆறுபேரை முடிச்சுப்போட்டாங்கள். வீடும் தரைமட்டம்” என்றான் சிவராசா.

“ அப்படியா.? காணி சரி செல்லையருக்கு மிஞ்சிச்சே. எனக்கும் வேலை குறைஞ்சிட்டுது?, என்றார் ஸ்டேசன் மாஸ்டர் செல்லையர் மேல் அனுதாபப் பட்டவர் போல் கந்தையர் .

******

## *கதை 14*

## *பென்சன்*

*முப்தைந்து வருட அரசாங்க சேவை அன்றோடு கிளாக்கர் கிட்னருக்கு முடிவடைகிறது. தனது வாழ்நாளின் பெரும் பகுதியை அரசாங்கச் சேவைக்காக அர்பணித்தவர் "கிட்னர்" எனச் செல்லமாக அழைக்கப்படும் சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி . நேர்மைக்கும் , கடுமையான உழைப்புக்கும், சொன்ன வார்த்தை தவறாமைக்கும் பெயர் பெற்றவர்;. இருபது வயதில் அரசசேவையில் லிகிதராக வேலைக்குச் சேர்ந்தவர். தனக்குப் பின், வரிசையில் நிற்கும் இரு சகோதரிகளுக்காக தொடர்ந்து படிக்கவசதியில்லாது வேலையில் சேர வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. உள்ளூர் தபாற் கந்தோரில் தபால்காரனாக வேலைசெய்த அவரின் தந்தையான சிதம்பரப்பிள்ளையின் வருமானமும்; ஆசிரியையாக வேலை செய்த தாயின் உழைப்பும் தனது இரு சகோதரிகளுக்கும் சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைக்கப் போதுமானதாக இல்லை என்று அவருக்கு தெரியும். படிப்பில் கெட்டிக்காரனாக இருந்தும் படித்து, சர்வகலாசாலைக்குச் சேன்று பட்டம் பெற வேண்டும் என்று அவர் கண்ட கனவு நனவாகவில்லை. கொடுத்து வைத்தது அவ்வளவு தான் என்று தாயின் வற்புறுத்தல் காரணமாக கிளரிக்கல் சேர்விஸ்சுக்கு விண்ணப்பித்த போது மூன்று மாதத்தில் வேலை கிடைக்கும் என்று அவர் எதிர் பார்க்கவில்லை.*

*நீண்ட கால அரச சேவையில் ஒரு நாளாவது அவர் நேரம் தாமதித்து வேலைக்குச் சென்றது கிடையாது. அதே போன்று மாலையிலும் அவர் தான் கடைசி ஊழியராக வேலை முடிந்து வீடு செல்வது வழக்கம். கிளரிக்கல் சேர்வீசில் சாதாரண லிகிதராக சேர்ந்து ஓய்வு பெறும் போது எவ்வளவோ போட்டிகளுக்குப் பின்னர், பரிபாலன சேவையில் பதவி உயர்வு பெற்று உதவி அரசாங்க அதிபரானார் (Assistant Government Agent ).. பாவம் அவ்வளவு நேர்மையாக வேலை செய்தும் அந்தப் பதவி; கிடைக்க அரசியல்வாதிகளின் தயவை நாட வேண்டிய நிலை அவருக்கு. அது கிடைப்பதற்கு எத்தனை தடவை பாராளுமன்ற உறுப்பினர் வீட்டு வாசலைத் அவர் தொட்டு வணங்கி வர வேண்டியிருந்தது. அவரது நல்ல காலம் அந்தப் பதவிக்கு பா.ம.உ யின் இனத்தவர்கள் ஒருவரும் போட்டிக்கு நிறக்வில்லை. தனது பாராளுமன்ற தொகுதிக்கு உதவி அரசாங்க அதிபராக கிட்னரை நியமித்ததின் காரணம் தனக்கு ஏற்றவாறு திட்டங்களை டெண்டரில் விட்டு தனக்கு சாதகமாக கிடைக்கத்தான் என்பது கிட்னருக்குத் தெரியும். சங்கக் கடையில் மனேஜராக இருந்து அரிசியில் மண் கலந்து விற்று திடீர் பணக்காரனாகி, அதன் பின் அரசியலில் புகுந்து பெரிய புள்ளியான அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் பேரம்பலத்துக்கு ஊழல் ஒரு புதிய விஷயமில்லை. உத்தியோகத்திற்கு கடிதம் கொடுப்பது முதல் பதவி உயர்வு வரை வேலைக்கு ஏற்றவாறு ரேட் வைத்திருந்தார். ஒரு போதும் அவர் பணத்தை நேரடியாக*

வாங்கியது கிடையாது. அவருக்கு உதவியாக இருந்த செல்வம் என்ற அவரது மைத்துனன்; தான் அதனைக் கவனித்துவந்தார். அவர் மூலமே பாராளுமன்ற உறுப்பினரின் தொடர்பு அவருக்கு கிடைத்தது. செல்வம் ஒரு ஊடகவியலாளர் .

அரசசேவையில் கிட்னர் சேரும் போது பல ஊர்களில் வேலை செய்ய வேண்டிவரும் என எதிர்பார்க்கவில்லை. ஏதோ ஊரோடு இருக்கலாம், பெற்றோருக்கு உதவியாக இருந்து குடும்பப் பிரச்னைகளுக்கு வழி காணலாம், என நினைத்த கிட்னருக்கு முதல் முறையாக வேலை கொழும்புக் கச்சேரியில் என்றவுடன் வேலைக்குப் போவோமா விடுவோமா என்ற நிலை. ஆனால் தாயார் குடும்ப நிலையைக்காட்டி வற்புறுத்தியபடியால் அவருக்கு வேலையை ஏற்க வேண்டிவந்தது. கொழும்பில உள்ள வெள்ளவத்தை பகுதியில் தாயாரின் தூரத்து சொந்தக்காரார் ஒருவர் நடத்திய சம்மரியில் தங்க இடம் கிடைத்தது கொழும்புக்கு புதிதான அவரின் அதிர்ஷ்டம். ஒரு அறையில் மூன்று பேர் முடங்கி கிடக்க வேண்டிய நிலை. காலையில் குளிப்பதற்கும், மலசலம் கழிப்பதற்கும் கியூ வேறு. காரணம் மூன்று அறையுள்ள அந்த சம்மரியில் பத்து பேர் வாழ்ந்தனர். ஹாலின் ஒரு பகுதி கூட ஒருவருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. காலை போசனம் காலி வீதியல் உள்ள காந்தி லொட்ஜில்;. நண்பன் ஒருவனின் அறிமுகத்தால் கொப்பி ஒன்றில் திகதி போட்டு எழுதும் மாதக் கணக்கொன்றை அங்கு தொடங்கினார். சரியாக சம்பள நாளன்று கணக்கு பார்த்து பணத்தைக் கொடுத்துப் போடுவார். வெள்ளை நிற லோங்சம்,; வெள்ளை நிற நீண்ட கை சட்டையும் அவரது வேலைக்குப் போகும் தினமும் அதே? யூனிபோர்ம். தினமும் வேலைக்கு போக முன் சப்பாத்தை பொலிஷ் செய்வார் .சேர்ட் பாக்கெட்டில் ஒரு பைலட் பேனா. .

கொழும்பில் ஆரம்பித்த அவரது அரசாங்க சேவை, கண்டி இரத்தினபுரி , காலி , குருநாகல் போன்ற சிங்களப் பகுதிகளிலும் மட்டக்களப்பு, புத்தளம் போன்ற தமிழ் பகுதிகளிலும் தொடர்ந்தது. அரச சேவையில் கடைசி ஐந்து வருடஙகளும் தான் யாழ் குடா நாட்டில் சேவை செய்யும் சந்தர்ப்பம அவருக்கு கிட்டியது. அதிக காலம் சிங்களப் பகுதிகளில் வேலை செய்ததினால் சிங்களத்திலும் எழுதி, வாசித்து உரையாடக் கூடிய திறமையை விரைவில் அவர் பெற்றார். மும்மொழிகளிலும் வேலை செய்யக் கூடிய கிட்னருக்கு அரசசேவையில் தனி மதிப்பை மற்றைய ஊழியர்களிடம் கொடுத்தது மட்டுமன்றி நல்ல உறவையும் ஏற்படுத்தியது. மொழிபெயர்ப்பு என்று வந்தவுடன் கிட்னரைத் தான் முதலில் சக ஊழியர்கள் தேடுவார்கள். அதனால் அவர் வேலை செய்த கச்சேரிகளில் எல்லாம் அவரது பெயர் பலருக்கு தெரியவந்தது. ''மும்மொழிக் கிட்னர்''; என்று கூட பகிடியாக அழைப்பார்கள்..

தனது கெட்டித்தனத்தால் தன்னோடு கிளரிக்கல் சேர்வீசில் வேலை செய்த இரு நண்பர்களை தன் இரு சகோதரிமாருக்கு மாப்பிள்ளைகளாக தேர்ந்தெடுத்து குறைந்த சீதனத்தில் கலியாணம் செய்து வைத்தவர் கிட்னர். சகோதரிகளுக்காக அவர் அவ்வளவு

வயது வந்தும் திருமணமாகமலே இருந்தார். இரத்தினபுரி கச்சேரியில் வேலை செய்யும் போது அவருக்கு வயது நாற்பது. கெட்டித்தனத்தால் முதலாம் தர லிகிதராக பதவி உயர்வடைந்திருந்தார். அக்கச்சேரிக்கு காலியில் இருந்து மாற்றம் பெற்று வந்தடைந்த சில மாதஙகளில், அங்கு தனக்கு முன் கடமையாற்றிய பிரதம லிகிதர் அரசுக்கு சேர வேண்டிய சுமார் மூன்று இலட்சம் பணம் சேராமல் போனதிற்கு காரணம் என்பதையும் அவர் பல ஊழல்களை செய்ததையும் கண்டுபிடித்து அரசாங்க அதிபருக்கு அறிக்கை ஒன்று சமர்பித்தார். அந்த கண்டுபிடிப்பு மேலாதிகாரிகளிடம் பெரும் பாராட்டைமட்டும் பெற்றதும் அல்லாமல், அடுத்த வருடமே பதவி உயர்வையும் அவருக்கு பெற்று கொடுத்து ஸ்பெசல் கிலாஸ் லிகிதராக கொழும்பில் உள்ள திறைச்சேறிக்கு மாற்றலாகி பென்சன் பகுதிக்கு செல்ல உதவியது.. இரத்தினபுரியில் வேலை பார்த்தபோது அவருக்கு கீழு வேலை செய்த டைபிஸ்ட் பிரேமலதாவின் தொடர்பு ஏற்பட்டது. பதினெட்டு பக்க அறிக்கையை ஒருவரும் அறியாத விதத்தில் தட்டச்சு செய்து அவருக்கு கொடுத்ததினால் அவரின் நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமானாள் ரக்வானையை சேர்ந்த சிங்ளத்தி பிரேமா. பெற்றோரை சிறுவயதிலேயே இழந்த பிரேமாவை வளர்த்தது பிள்ளைகள் இல்லாத அவளது தாய் மாமன் குடும்பம். இரத்தின வியாபாரியான அவர் குணத்திலும் இரத்தினம் தான். பிரேமா கிட்னர் மேல் வைத்திருந்த நம்பிக்கை நாளடைவில் காதலாக மலர்ந்தது அவளின் தாய் மாமனின் ஆசீர்வாதத்துடன் திருமணத்தில் முடிந்தது. நல்லகாலம் அவரின் கலப்புத் திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்க கிட்னரின் தாயும் தகப்பனும் உயிருடன் இருக்கவில்லை. கிட்னரின் சகோதரிமார் இருவரும் தமது தமையன் தமக்காக செய்த தியாகத்தைக் கூட பெரிதாகக் கருதி நன்றிக்காக கூட திருமணத்துக்குப் போகவில்லை. அதனால் கிட்டனர் அவர்கள் மேல் கோபப்படவில்லை.

வேலையில் கிட்னர் சற்று கண்டிப்பானவர். அரசாங்க விதிகளில் இருந்து சற்றும் விலகிச் செல்லமாட்டார். அரச சேவை பரிபாலன, நிதி சட்டப் புத்தகங்களை கரைத்து குடித்திருந்தார். அவர் கடைப்பிடித்த கடுமையான முறைகளினால் பலருக்கு பென்சன் கிடைப்பது தாமதாகியது. அரசசேவையில் பல திணைக்களஙகளில் வேலை செய்தவர்களின் வேலை சம்பந்தமான அறிக்கைகள் முழுமையாக கிடைத்து, அவர்கள் அரசுக்கு ஏதாவது பணம் கொடுக்க வேண்டுமா என்று கணித்து , அவர்கள் ஊதியம் இல்லாது லீவில் இருந்த நாட்களையும் கழித்த பின்னரே அதை முற்றாக்கி மேலதிகாரியின் அனுமதிபெறுவார்.

பண்டகச்சாலை மேற்பார்வையாளராக பல இடங்களில் வேலை செயத ஒருவர் தனது கவனயீனம் காரணமாக பல அரிசிமூட்டைகளை களவு கொடுத்து அதிகாரிகளால் தண்டிக்கப்பட்டார். அவர் ஓய்வுபெற்றபோது அவரின் பென்சன் முற்றாக்க சுமார் இரண்டு வருடங்களாயிற்று. அறிக்கைகள்யாவும் சரியாக வந்து சேராததே அந்த தாமதத்திற்கு காரணமாகும். அரசுக்கு அவரது; கவலையீனம் காரணமாக ஏற்பட்ட இழப்பு சுமார் நாற்பதாயிரம் ரூபாய் . அதை அவரின் பென்சனில் இருந்து கழித்தால் அவருக்கு

கிடைக்கும் மொத்த பணம் மிகச் சிறிது என கிட்டனருக்குத் தெரியும். நோயினால் அவதிப்படும் அவ்வூழியரின் மனைவியின் மருந்துச்செலவுக்கு அந்தப் பணம். போதாது என்பதும் அவருக்குத் தெரியும். அரச சட்டப் புத்தகத்தில் உள்ள சில ஓட்டைகளைப்பாவித்து பத்தாயிரம் ரூபாய் மட்டுமே கழித்துவிட்டு மிகுதி பென்சன் பணம் கிடைக்கும்படி செய்த மனிதபிமானம் மிக்கவர் கிட்னர். கண்டிப்போடு கலந்த இரக்க சுபாவம் படைத்தவர்.

பென்சன் திணைக்களத்தில், இறந்தவர்களுக்கும் மரண அத்தாட்சிப பத்திரமின்றி கள்ளக் கையெழுத்துடன் பென்சன் கொடுக்கப்பட்டு வந்ததை கண்டுபிடித்து அறிக்கை சமர்ப்பித்தார் கிட்னர். அவரது திறமையை நம்பியே மேலதிகாரிகள் தங்கள் தீர்மானங்களை எடுத்தனர். பென்சன் பகுதியில் இருந்து மாற்றலாகி அவர் செய்த சேவைக்கு பதவி உயர்வு திடீரென்று வரவில்லை. ஒரு நாள் அவரது அதிகாரி தன் அறைக்கு வரும்படி அழைத்திருந்தார்.

கதவை தட்டிவிட்டு ஒதுங்கி நின்ற கிட்னரை “ கம் இன்” என்ற ஒரு அதிகாரக் குரல் அறைக்குள் இருந்து வரவேற்றது. அவரது அதிகாரி சோமரத்னாவுக்கு கிட்டனர் மேல் நல்ல மதிப்பு. அவரின் கீழ் வேலை செய்த சிங்கள ஊழியர்களை விட அவர் மேல் கூடிய நம்பிக்கை வைத்திருந்தார்.

சோமரத்தினா அமரும்படி அவரைக் கட்டளையிடும் வரை அவர் முன்னே பதுமையாக மரியாதையுடன் நின்றார் கிட்னர்

*“ Sit down Kitnar”*

*“ Thank you sir”*

“உமக்கு ஒரு நல்ல செய்தி சொல்லவே அறைக்கு அழைத்தனான். உமது கடும் உழைப்பையும் திறமையையும் மதித்து உம்மை பரிபாலான சேவைக்கு மேலிடத்துக்கு சிபார்சு செய்துள்ளேன். ஆனால் உயர் பதிவிகளுக்கு அரசியல்வாதிகளின் ஆதரவு அவசியம் வேண்டும். எனது சிபார்சை நம்பி மட்டும் இராதையும்” என்றார் ஆங்கிலத்தில் அதிகாரி சோமரத்தினா சொன்ன அறிவுரையைக் கேட்டு கிட்னருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவிலலை. பேசாமல் அவர் முகத்தைப் பார்த்தபடி இருந்தார்.

“ என்ன மௌனமாக இருக்கிறீர். உமக்கு மூன்ற பாஷைகளும் தெரியும், வேலையில் நல்ல திறமைசாலி. அது மட்டும் இருந்தால்; போதாது. சற்று அரசியல்வாதிகளோட ஒத்துப்போகவும் தெரியவேண்டும். உமக்கு யாழ்ப்பாணத்தில் யாராவது எம் பியை தெரியுமே?.

“ எனக்கு யாரை சேர் தெரியும். நானும் வேலையும் என்று இருப்பவன். யாழ்ப்பாணத்தில நான் வேலை செய்யவில்லை”

"எனக்கு உம்மைபற்றி தெரியும். உமக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் அறைக்குள் அழைத்தனான். எனக்கு தமிழ் எம் பி ஒருவரின் பீஏயைத் தெரியும். அவரது அண்ணருக்கு நான் பென்சன் கெதியிலை கிடைக்க உதவினனான். அதுக்குப் பிறகு நாலைந்து பேருக்கு பென்சனும், கொமியூட்டட்டும் கெதியிலை கிடைக்க உதவினான். அவர் காசடிக்கிறவர்; என்று பிறகு தான் தெரியவந்தது. ஆனால் நான் கேட்டால் எந்த உதவியையும் செய்ய மாட்டேன் என்று சொல்லமாட்டார். அவரோடை நான் கதைக்கிறன். நீர் போய் அவரைச் சந்தித்து நான் அனுப்பினதாகச்சொல்லும். அவர் பெயர் செல்வம். புரொமோஷன் ஓடர் வந்ததும் அவருக்கு 2000 ரூபாய் கொடுத்தால் போதும்."

"கிட்னர் சிந்தித்தார். ஊழலுக்கு எதிரான போக்குள்ள தன்னை விசயம் முடிந்ததும் காசு கொடுக்கச் சொல்லுகிறாரே தனது அதிகாரி. எப்படி முடியாது என்று சொல்ல முடியும். எனக்கு இன்னும் ரிட்டயராக ஐந்து வருஷம் இருக்கிறது. இந்தப் புரொமோஷன் கிடைத்தால் எனக்கு கிடைக்கிற பென்சன் குறைந்தது இருபது விகிதம் கூடும். அதோடை இந்த பதவியில் இருந்து ரிட்டயரானால் அதைக்காட்டி கொம்பெனிகளில் வேலை எடுக்க முடியும். மகள் மல்லிகாவின் வாழ்க்கைக்கு ஒரு வழி பார்க்கவேண்டும். ஒருத்தரும் எனக்கு உதவப் போவதில்லை. பிரேமாவும் ரிட்டையரானால் எங்கள் இரண்டு பேருடைய பென்சனிலை தான் வாழக்கை நடத்த வேண்டும்" கிட்டனர் சிந்தித்தார். அதிகாரிக்கு செல்வத்தின் கொமிஷனில் ஏதாவது பங்குண்டோ?. கிட்னருக்கு சந்தேகம் வந்தது.

" என்ன கிட்னர் யோசிக்கிறீர். இந்த சான்சை தவற விடாதையும்"

" சரி சார் நீஙகள் சொன்னபடி செய்கிறன். எனக்கு அவருடைய தொலைபேசி, விலாசம் ஆகியவற்றைத் தாருங்கள்."

" இன்று வெள்ளிக்கிழமை. வருகிற செவ்வாய்க் கிழமை முழு விபரத்தையும் தாரன். இந்த மாத முடிவுக்குள் புரொமோஷன் லிஸ்ட்டை முடீவு செய்வினம். அதுக்கிடையிலை அவரோடை பேசி எம்பி யை சந்தியும் என்ன?" கிட்னர் பதிலுக்கு தலையாட்டினார்.

மூன்று மாதங்களில் கிட்னர் கையில் பதவி உயர்வுக்கான கடிதம் வந்தவுடன் அந்த கடிதத்தின பெறுமதி 2000 ரூபாய் என நினைத்து அவர் மனதுக்குள் சிரித்துக் கொண்டார்.

*****

கடைசி நாளான அன்று வேலைக்கு போவது அவருக்கு என்னவோ மாதிரி இருந்தது. அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் நாளது. நாளை முதல் நான் ஒரு சாதாரண மனிதன். ஆயிரக்கணக்காக ஓய்வு பெற்ற அரச ஊழியர்களின் பெயர் பட்டியலில் அவர் பெயரும் ஒன்று. இனி ரிட்டையர்ட் என்ற வார்த்தையையும் சீ ஏ எஸ் ஒபிசர் என்ற தன் பெயருக்கு அடுத்துள்ள பட்டத்துடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆபிசில் அவருக்கு பலத்த வரவேற்பு காத்திருந்தது. நேரே தன் அறைக்கு போன அவர் வெளியில் இருந்த தனது பெயர்

பலகையைப் பார்த்தார். கிருஷ்ணபிள்ளை, உதவி அரசாங்க அதிபர், சாவகச்சேரி. நாளை வேறு ஒருவரின் பெயருடன் இந்தப் பலகை இங்கு தொங்கப் போகிறது.

"சேர் டீ கொண்டு வரட்டுமா. களைத்துப் போய் வந்திருக்கிறியள்." என்று பியூன் சின்னையா வந்து கேட்டான் பதிலுக்கு தலையாட்டிவிட்டு தன் அறைக்குள் சென்றார்.

என்னைப் பார்த்தால் களைத்தவன் மாதிரியாகவா இருக்கிறது?. அரச சட்டத்தின்படி 55 வயதில் ஓய்வு பெற வேண்டும் ஆனால் அரசியல் வாதிகள் விரும்பினால் ஏதோ பிச்சை போடுகிற மாதிரி ஒவ்வொரு வருடமும் சேவையை நீடிப்பினம். அதுக்கு அவர்களிடம போய் பல் இளித்து கெஞ்ச வேண்டும். இதுவும் ஒரு வாழ்க்கையா?. இன்னும் என்னால் பத்து வருஷம் வேலை செய்யக் கூடிய சக்தி இருக்கிறது. ஆனால் என் பதவி;, மந்திரி ஒருவரின் மைத்துனருக்கு ஏற்கனவே குறிக்கப்பட்டுவிட்டதாம். கடிதமும் போயாகிவிட்டதாம். ஏற்கனவே அவர் என்னிடம் ஒரு கிழமைக்கு முன் வந்து வேலையைப்பற்றி விசாரித்துப் போயிருக்கிறார். இனி எனது ரிட்டயர்மண்ட் ஓடரில் மாற்றம் வராது. அது எனக்கு தேவையில்லை. இவ்வளவு காலம் அரசாங்கத்துக்கு மாடாக உழைத்துக்கொடுத்தனான். மேலும் ஒரு வருஷம் என் சேவையை நீடிக்க அவர்களால் முடியாதாம். இது தான் எனது சேவைக்கு வெகுமதி. சிந்தித்தவாறு தனது பிரத்தியோகப் பைலை புரட்டினார். சின்னையன் அறைக்குள் டீ யோடு வந்தான்.

சின்னையன் கொண்டு வந்த டீ யை வாங்கிக் குடித்தார் கிட்னர்.

" சேர் இன்று மத்தியானம் உங்களுக்கு ஒபீஸ் ஆட்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சின்ன பார்ட்டி ஒழுங்கு செய்திருக்கினம். ஹெட் ஓபிசில் இருந்தும் ஆட்கள் வருகினமாம்." சின்னையன் செய்தி சொன்னான்."

" அப்படியா?. நல்லது" என்றார் அமைதியாக கிட்னர். அவரது எண்ணங்கள் எல்லாம் வேறு எங்கேயோ இருந்தது.

" ரிட்டையரான பிறகு என்ன சேர் செய்யப் போகிறியள்?"

" முதலிலிலை என்டை பென்சன் தாமதிக்காமல் கிடைக்க கொழும்புக்கு போய் ஆட்களைக் கண்டு கெதிப்படுத்தவேண்டும். பென்சன கிடைச்சவுடன் இந்தியாவில் உள்ள கோயில் குளத்துக்கு ஒரு மாதம் போய் வர யோசித்திருக்கிறன்"

"சேர் ரிட்டயரான பிறகு எங்களையெல்லாம் மறந்திடாதையுங்கோ. நேரம் கிடைத்த நேரம் எங்களையும் வந்து பார்த்துப்போட்டு போங்கோ. உங்களிலை எல்லோருக்கும் நீஙகள் நல்லவர் என்ற மதிப்பிருக்கு"

கிட்னர் முகத்தில் புன்னகை தெரிந்தது.

அன்று நடந்த பிரியாவிடையில் அவரது சக ஊழியர்கள் தங்கள் நினைவாக கொடுத்த சீக்கோ கைகடிகாரமும் ஆயிரம் ரூபாய் உள்ளடக்கிய கடித உரையும் அவரை உடல் சிலிர்க்க வைத்தது. எல்லோருக்கும் தன் நன்றியை தெரிவித்து விட்டு கலங்கிய கண்களுடன் வேலைத்தளத்தைவிட்டு வெளியேறினார்.

*****

கிட்னர் ரிட்டயராகி ஒன்பது மாதங்களாகிவிட்டது. பிரேமா தொடர்ந்து வேலைக்குப் போய்வந்தாள். தனது பென்சன் விஷயமாக குறைந்தது ஐந்து தடவையாவது கொழும்புக்கு போய் வந்திருப்பார். அறிக்கைகள் இன்னும் வந்து சேரவிலலை என்ற பதிலே வந்தது. அவர் வேலை செய்த போது இருந்த அதிகாரியும் ஊழியர்களும் இப்போது அங்கில்லை. அவர் வேலை செய்த இடத்தில் இருந்தவர் ஒரு சிங்களவர். அவரைப் பார்த்தால் ஒரு சிடு மூஞ்சி என்பது முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. பென்சன் பிரான்ஜ்சில் அவர் வேலை செய்த போது இருந்த பியோன் நாணயக்கார இன்னும் அங்குதான் வேலையில் இருந்தான். நாணயக்கார ஒரு நாணயமான சிங்களவன். அவனைக் கண்டதும் அவருக்கு மனதுக்குள் ஒரு சந்தோஷம். அரசசேவையில் பியூனைப்பிடித்தால் எந்த காரியமும் இலகுவாக நடக்கும் எனபத அவருக்கு தெரியும்.

“ மாத்தயா. இப்போ பென்சன் பிரான்ஞ்சில் ஒரு வேலை செய்து முடிப்பது சரியான கஷ்டம். ஒவ்வொருத்தருக்கும் பைலை நகர்த்த காசு கொடுக்கவேண்டும். உங்கடை பைல் இன்னும் அசையாமல் கிடக்கிது. நான் கூட எனக்குத் தெரிந்த ஒருவரோடு கதைத்தனான். நீங்கள் முந்தி இங்கை வேலை செய்தனீங்கள் எண்டும் சொன்னனான்.. ஏதோ தன்னால் முடிந்ததை செய்கிறன் எண்டார். நீங்கள் முடிந்தால் சீப் கிளாக் ஜெயரத்தினாவோடை கதையுங்கள். வெளித் தோற்றத்துக்கு சீடு மூஞ்சியானாலும் சிங்களத்திலை நீங்கள் கதைச்சால் சில சமயம் உங்கடை பென்சன உங்களுக்கு கெதியிலை கிடைக்க உதவி செய்வார். அவரும் இரத்தினபுரிதான்.” என்றான் சிஙகளத்தில் நாணயக்கார.

நாணயக்கார ஆலோசனை சொன்ன மாதரி ஜெயரத்தினாவுக்கு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தனக்கு ரிட்டையராகி ஒன்பதுமாதங்களாகியும் பென்சன் இன்னும் கிடைக்கவில்லை எனபதை எடுத்துச்சொன்னார். தான் இரத்தினபுரி கச்சேரியில் வேலை செய்ததாகவும் தனது மனைவியின் சொந்த ஊர் ரக்வான என்றும் சொன்னார். அவர் சிஙகளத்தில் உரையாடியது ஜெயரத்தினாவுக்கு மகிழ்ச்சியை கொடுத்தது என்பது அவர் முகத்தில் இருந்து தெரிந்தது. தன்னால் இயன்றளவு அவருக்குப் பென்சன் விரைவாக கிடைக்க வழிசெய்கிறேன் என்றார் ஜெயரத்தினா.

அந்த சந்திப்புக்கு பின் வீடு திரும்பி மூன்று மாதமாகியும் அவருக்குப் பென்சன் வரவில்லை. திரும்பவும் ஜெயரத்தினாவைப் போய் அவர் சந்திக்க திட்டம் போட்ட போதுதான் *Pension approved* என்று சில படிவங்களுடன் கடிதம் ஒன்று வந்தது. அந்த

படிவங்களை நிரப்பி அதில் குறிப்பிட்டுள்ள அத்தாட்சிகளுடன் அனுப்பினால் அடுத்தமாதத்தில் இருந்து பென்சன் அவரது வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படும் என்றிருந்தது கடிதத்தில் தாமதிக்காமல் பூர்த்தி செய்த படிவங்களையும் அத்தாட்சி பத்திரங்களையும் ஒரு கடித உறைக்குள் வைத்து ரெஜிஸ்டேர்ட் போஸ்டில் அனுப்பிப் போட்டு வீடு திரும்பினார் கிட்னர். நெஞ்சுக்குள் இறுக்குகிறது என்று அன்று இரவு படுத்தவர் தான் பிறகு அவர் எழும்பவேயில்லை. பாவம் கிட்னர். கடும் உழைப்பின் பயனை அவரால் அனுபவிக்க கொடுத்துவைக்கவில்லை. அவர் உடல் அதற்கு முதல் பென்சன் எடுத்துவிட்டது.

****

## *கதை 15*

## *சின்னமேளம் சந்திரவதனி*

### *முன்னுரை*

*தாசிகள் என்ற கோவிலில் நடனமாடும் தொழில் புரியும் குலத்தினர் கோயில்களிலே குறிப்பாக, திருவிழாக் காலங்களிலே நிகழ்த்தி வந்த ஆடற்கலையே 'சின்னமேளம்' என்று மக்கள் அழைத்ததாக அறிய முடிகின்றது. அரசவைக் களங்களிலும், சில ஆண்டவன் சந்நிதிகளிலும் ஆடப்பட்டு கால ஓட்டத்தில் எல்லாக் கோயில்களிலும் இடம்பெறும் நிகழ்ச்சியாக வளர்ந்தது. அங்கெல்லாம் கோயில் பூசைகளில் நட்டுவ மேளத்தைக் கண்ட மக்கள், தேவதாசிகள் ஆட்டத்திற்குச் சிறிய அளவிலான மேளம் (மிருதங்கம்) பாவிக்கப்படுவதனைக் கண்டு அதனை (சின்னமேளம்) என அழைக்க முற்பட்டு நாளடைவில் அம்மேளம் பாவிக்கும் நாட்டியக் கலையையே சதிராட்டம் அல்லது 'சின்னமேளம்' என்ற பெயர் கொண்டு அழைக்கும் மரபு தோன்றியது என கலாநிதி பத்மா சுப்பிரமணியம் போன்றவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.*

*****

*ஏழு தசாப்தங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வீர மஹா காளி அம்மன் கோவிலில் பல நாட்கள் நடக்கும் திருவிழாக்களை உபயக்காரர்கள் போட்டிபோட்டு நடத்துவார்கள். கோவிலுக்கு முன் சிகரம் கட்டி மின் விளக்குககளால் அலங்கரித்து கொண்டாடுவார்கள் . பூந்தொட்டி திருவிழா பிரபல்யமனது அதன் உபயகாரர் ஆனைப்பந்தியடி ஓவர்சியர் பூபாலசிங்கம். அவரின் திருவிழாவில் இருந்து தமிழ் நாட்டில் இருந்து ராஜமாணிக்கம் பிள்ளை போன்ற நாதஸ்வர வித்துவான்ககளையும் நாட்டியக்காரிகளையும் அழைத்து வந்து நிகழ்சிகள் நடத்துவார்.*

*யாழ்ப்பாணத்தில் செட்டிமார்கள் கட்டிய கோயில்களில் இறைவனுக்கு ஆடற்கிரியை வழங்குவதற்காக இலங்கைக்கு கூட்டி வரப்பட்டவர்கள் தமிழகத்து ஆடல் மங்கையர்கள். இவர்களைப் போல் இலங்கையிலும் ஆடல் மங்கையர்கள் இருந்துள்ளார்கள். இவ் ஆடல் மங்கையரின் ஆடல்களே 'சின்னமேளம்' என்று அழைக்கப்பட்டது.*

*ஆரம்பத்தில் சின்னமேளம் என்பது மிருதங்கத்தினைக் குறித்துப் பின்னர் இவ்வாத்தியத்துடன் ஆற்றுகையை நிகழ்த்தும் குழுவினரையே குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இதனால் இந்நடனத்தை ஆடும் பெண்களை 'சின்னமேளக்காரி' அல்லது சதிராட்டக்காரி என்று அழைக்கும் மரபு யாழ்ப்பாணத்தில் பெருவழக்காக நிலவியது.*

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியில் வருவது மிகக்குறைவு. பொது இடங்களில் இக்காலத்தில் சைக்கிளில் அல்லது டூ வீலரில் போவதில்லை அதனால் அவர்களைக் காணும் வாய்ப்பு அக்கால இளைஞர்களுக்கு மிகவும் குறைவாக இருந்தமையால் அழகும் கவர்ச்சியும் மிக்க சதிராட்டத்தில் ஆடல் மகளிரைக் காண்பது இளைஞர்களுக்கு அரிய சந்தர்ப்பமாக அமைந்தது. எனவே எல்லாத் தடைகளையும் தாண்டி ஆடல்களை முண்டியடித்துக்கொண்டு வந்து இளைஞர்கள் பார்ப்பதில் வியப்பேதுமில்லை.

அன்றைய காலத்தில் சுவாமி வீதியுலா வரும்போது ஆடல்மகளிர் சுவாமிக்கு முன்பாக நடனமாடிக்கொண்டு சென்றதாகவும் அறியமுடிகின்றது. இவ்வாறு சுவாமிக்கு முன்பாக புனிதமாக தெய்வீக மணங்கமழ சின்னமேள ஆடல் நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன இன்றும் தமிழ் நாட்டில் இந்த வழமை நடந்து வருகிறது. இலங்கையின் சிங்களப் பகுதியில் பெரஹரா ஊர்வலத்தில் கண்டிய நடனக்காரர்கள் ஆடுவதைக் காணலாம்.

இந்துக்கோயில் திருவிழாக்களில் "விருந்திற்கு பாயாசம் போல ஒவ்வொரு கோயில் நிகழ்ச்சிகளிலும் சின்னமேள ஆடல் சிறப்பான நிகழ்வாக இறுதியில் இடம்பெறும் இருபதாம் நூற்றாண்டு வரை சதிர்ஆட்டம், தாசியாட்டம், தேவரடியார் ஆட்டம் எனப் பெயர் பெற்று விளங்கியதாகத் தெரிகிறது.

கூடத்துக்கு சொல்லத்தேவை இல்லை.

. “சபையோரின் ஆரவாரத்தினால் களைகட்டி அற்புதமாக வாசித்துக் கொண்டிருக்கும் தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் மேளத்தையும் நாதஸ்வரத்தையும் கட்டிக்கொண்டு எழும்பிச் செல்லவேண்டிய நிலை உருவாகும்.”.

சின்னமேள ஆடல் நிகழ்வானது தவில், நாதஸ்வர நிகழ்வுகளையெல்லாம் பின்தள்ளி முதன்மையான இடத்தைப் பெறுவதற்கு அக்கால சமூக நிலையையும் ஒரு காரணம் என்று பல முதியவர்களின் செவ்விகள் மூலம் அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வசதி படைத்தவர்களிற் சிலர் சின்னமேளக் குழுக்கள் (செற்றுக்களை) உருவாக்கினர். இவர்கள் தென் இந்தியாவில் இருந்து தரகர்கள் மூலம் தொடர்புகொண்டு ஆடல் மகளிரை வரவழைத்தனர். இவ்செற்றுக்களை வைத்திருக்கும் உரிமையாளர்களின் பெயர், ஊர் என்பன சேர்த்து அக்குழுவினர் அழைக்கப்பட்டனர். இவற்றில் குறிப்பிட வேண்டிய செற் புத்தூர் மார்க்கண்டு செற், கொக்குவில் சின்னத்துரை செற், நீர்வேலி வைத்திலிங்கம் செற், இணுவில் சரவணமுத்து செற், அளவெட்டி ஐயாத்துரைசெற், வண்ணார்பண்ணை இராமசாமி சுதுமலை மணியம் செற் போன்றவை யாகும்

இந்த குழுக்களில் சதிராட்டம் ஆடியவர்களில் சரசு விசாலினி , விஜயா, மல்லிகா, அம்பிகா, ஈஸ்வரி சகோதரிகள், இராமலட்சுமி போன்றவர்களை விட ச்திராட்டக்காரி சந்திராவுக்கு ஏராளம் ரசிகர்கள் அமைந்துள்ளது

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மூன்று செட் சின்ன மேளங்கள் போட்டிக்கு இருந்தன. ஒன்று பாம்பு - மயில் நடனம் ஆடுவதில் பிரபல்யமான நாட்டியக்காரி சுந்தரி, ரேக்கொர்ட் டான்சுக்கு பெயர் பெற்றவள். அவளது வளைந்து ஆடும் முகாரி ராகத்தில் மயங்காதவர்கள் இல்லை. அடுத்தது கவர்ச்சியாக முழங்காலுக்கு மேல் ஆடை அணிந்து, இளைஞர்கள் பலரின் வாயை திறந்தபடி ஆட வைத்த சொப்பன சுந்தரி. கனவிலும் பலரை வாய்விட்டு சுந்தரி... சுந்தரி... என்று புலம்ப வைத்த பாலசுந்தரி. இந்த இருவரையும்விட தன் கவர்ச்சியான கண்வெட்டால் இளமை ததும்ப நெளித்து வளைந்து சந்திராவின் ஆட்டத்தைப் பார்க்கவும் - அவளது பார்வை தம்மேல் விழாதா என்று ஏங்கி அதற்காகவே முன்வரிசையில் இடம் பிடிக்க முண்டி அடித்துக் கொண்டு பலத்த போட்டிபோட்டு மெல்லிய சேர்டடோடு கழுத்தில் தங்கச் சங்கிலி மிணுங்க முன் வரிசையில் இருந்த மைனர்களில் முத்திரை பதித்தவர் சிலர்.

ஓவர்சியர் பூபாலசிங்கத்தின் ஒரே மகன் மைனர் பாலா என்ற பாலசிங்கம் தரிசனம் இல்லாத சந்திராவின் சதிராட்டம் இல்லை. அத்தர் வாசனை வீசினால் மைனர் பாலா தரிசனம் தந்திருக்கிறான் என்பதற்கு எடுத்துக்காட்டு. மைனர் பாலாவின் முகத்தில் உள்ள அடர்த்தியான மீசைஅவனின் ஆண்மைக்கு எடுத்துக் காட்டு .

தன் தங்கப் பல் செட்டை சந்திராவுக்கு அடிக்கடி இளித்துக் காட்டியபடி பாலா இருப்பான். தனது விரல்களில் இருந்த வைர மோதிரம் சந்திராவுக்கு தெரியும் விதத்தில் காட்டி கைகளை அசைத்து நாட்டியத்தை இரசிப்பான்.

மைனர் பாலா திருமணம் செய்தது மாமன் மகள் சாவித்திரியை. சாவித்திரி போல் கற்புக்கரசி இல்லை தன் கணவன் மாணிக்கத்தின் கூத்து தெரிந்திருந்தும் பேசாமல் குடும்ப ஒற்றுமைக்காக அடங்கிப் போனாள்.

நாட்டியம் முடிந்தவுடன் தனது புதிய ஒஸ்டீன் கேம்பிரிட்ஜ் காரில் பவுத்திரமாகச் சந்திராவை அவள் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு பாலாவுக்கு . சந்திராவின் மனேஜராக இருந்த பாட்டுக்கார சோமு காரணத் தோடு கொடுத்தான். சோமு பாலாவோடு ஒன்றாக படித்தவன், அதனால் பாளா கேட்ட எதையும் மறுக்காமல் செய்யக் கூடியவன். பாலாவும் தான் கண் வைத்த பெண்ணை அடையாமல் விடுவதில்லை.

யாழ்ப்பாணத்துக்கு கேரளக்காரி சந்திராவை அறிமுகப்படுத்தியவர் வண்ணார்பண்ணை சேகுவன் செட்டியார். இரு தடவை கொழும்பு - ஆடி வேல் திருவிழாவிலும் அவளை ஆட வைத்தார். ஒரு சிங்கள படத்தில் நடிக்க சந்திராவுக்கு அழைப்பு வந்தும் செட்டியார் அனுமதி கொடுக்கவில்லை.

சின்ன மேளம்சந்திரவதனிக்கு இவ்வளவு அழகு இருந்தும் ஏன் இவள் சினிமாவில் நடிக்க தமிழ்நாட்டுக்கு போகவில்லை என்பது பல இரசிகர்களுக்கு புதிராகயிருந்தது. அதற்கு முக்கிய காரணம் அவளது அறுபது வயது தாய் பாலாமணியேயாகும். பாலாமணிக்கு கேரள தொடர்பு இருந்தது. திருவனந்தபுரத்தில் நாட்டியம் பழகிய பாலாமணிநாயர் சாதியைச் சேர்ந்தவள். கேரளவுக்கு வணிகம் நிமித்தம் சென்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த நாகராஜனுக்கு அறிமுகமாகி, அவனின் பேச்சிலும்சிரிப்பிலும்தோற்றத்திலும் மையல் கொண்டு அவனை மணந்து யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்தவள். நாகராஜனுக்கு நாகத்தின் விஷம் கொன்ட மனசு அவனுக்கு காணிநிலங்கள் இருந்தும் சொகுசான வாழ்வை விரும்பும் பேர்வழி. வணிக நோக்கமுள்ள அவன் பாலாமணியின் சதிர் ஆட்டத்தை யாழ்ப்பாணத்துக்கு அறிமுகப்படுத்தினான். பாலாமணியின் நிறத்திலும் சிரிப்பிலும் மயங்கியவர்கள் பாலகுமாரன் கொடுத்து வைத்தவன் என்று வயித்தெரிச்சல் பட்டார்கள்.

பாலாமணிக்கு சந்திரா பிறந்தது ஒரு அதிஷ்டம் என்றே சொல்லாம். அவளுக்கு பிறக்கும் போது ஏழாம் இடத்தில் சந்திரன் உச்சம் பெற்று இருந்ததால் அழகுக்கு குறைவில்லை என்று சாத்திரியார் சொன்னது உண்மையாகும் என்று பாலாமணி எதிர்பார்க்கவில்லை. அவளை கேரளாவில் நாயர் குடும்பத்தில் மணமுடித்து வைக்கவே அவள் விரும்பினாள். பாலகுமாரனின் நோக்கம் வேறாக இருந்தது. அவனின் நண்பன் மைனர் பாலாவின் ஆசைநாயகி சந்திராவை வைத்து மைனர் பாலாவிடம் பணம் சம்பாதிப்பதே அவன் திட்டம். அவனுக்கு துணை போனான் பாட்டுக்கார சோமு .

சந்திராவுடன் ஒன்றாக படித்தவள் அவளின் உற்ற சிநேகிதி அமுதா அந்தனிபிள்ளை . அமுதாவின்தந்தை அந்தனிபிள்ளை அச்சுவேலியில் சிறந்த ஆயுர்வேத வைத்தியர்.

தனக்கு சதிராட சிறிதளவும் விருப்பம் இல்லை. தன் பெற்றோரின் வற்புறுத்தலில் தனக்கு பலர் முன் பணந்துக்காக ஆட வேண்டி இருக்கிறது என்று அமுதாவுக்கு சொல்லி சந்திரா கண்ணீர் விட்டு குறைபட்டாள்.

“சந்திரா எனக்கு தெரியும் உன் அப்பாவும் அம்மாவும் உன்னை மைனர் பாலாவின் ஆசைநாயகியாக்கி பணம் சம்பாதிக்கப் பார்க்கிறார்கள் என்று”

“ அமுதா நான் நாட்டியம் ஆடும் போது பலர் எனக்கு கண் அடித்து பார்வை செலுத்துவார்கள் அவர்களின் உள் நோக்கம் எனக்கு தெரியும். நான் ஒரு விலைமாது என்பது அவர்கள் எண்ணம் கோவிலில் நான் ஆடுவது இறைவனுக்கு , அவர்களுக்கு இல்லை என்பது அவர்களுக்குப் புரிவதில்லை ஒரு நாள் அந்த மைனர் பாலா நிகழச்சி முடிந்து தன் காரில் என்னை என் வீட்டுக்கு கூட்டி செல்லும் போது தனி இடத்தில காரை நிறுத்தி என்னை அணைத்துமுத்தம் கொடுக்க முயற்சித்தான். அவன் நோக்கம் எனக்கு புரிந்தது , நான் எபோதும் என் தற் பாதுக்காப்புக்கு ஒரு சிறு போத்தலில் அமிலத்தை

எடுத்துச் செல்வேன். என்னை தொட்டால் அமிலத்தை அவன் முகத்தில் வீசுவேன்என்று பயமுறுத்தி அன்று தப்பித்துக் கொண்டேன் அவன் என் மேல் நிச்சயம் என்னை வஞ்சம் தீர்ப்பான் அமுதா . அவனுக்கு என்று நல்ல குணம் உள்ள மனைவி இருந்தும் இவன் ஏன் வேறு பெண்களை தேடி அலைகிறான்.

“உன் பிரச்சனை தீர ஒரே ஒரு வழிமட்டுமே உண்டு சந்திரா” அமுதா சொன்னாள்.

“என்ன வழிசொல்லு அமுதா. நீ சொன்னபடி செய்கிறேன் ”

“உன்னை அந்தோனியார் கோவில் ஜோசப் பாதிரியாரிடம் கூட்டிச் செல்கிறேன் . அவரிடம் ஒளிவு மறைவு இல்லமல் உன் பிரச்சனையை அவருக்கு எடுத்து சொல். அவர் உனக்கு வழிகாட்டுவார்” அமுதா சொன்னாள்.

“அது நல்ல யோசனை அமுதா” என்றாள் சந்திரா.

சந்திராவை சஜோசப் பாதிரியாரிடம் அமுதா அழைத்துச் சென்றாள்.’

****

அன்று ஒரு கோவில் திருவிழாவில் சந்திரா சதிராட மைனர் பாலா பாட்டுகார சோமுவின் உதவியோடு ஒழுங்கு செய்திருந்தான். அதற்கான பெரும் தொகை பணத்தை சந்திராவின் தாய் பலாமணிக்கு மைனர் பாலா . கொடுத்திருந்தான். திட்ட மிட்டபடி நிகழ்ச்சி முடிந்ததும் சந்திராவை தன் சொந்தமான காரை நகர் விடுதிக்கு கடத்திச் சென்று அவளை தன் ஆசை தீர அனுபவிப்பதே அவன் திட்டம்

சந்திராவை சதிராட தன் காரில் ஏற்றி செல்ல சோமுவோடு அவள் வீட்டுக்கு பாலா போன போது சந்திராவின் வீட்டில் ஒரே ஒப்பாரி சத்தம் கேட்டது,

பாலாவை பாலாமணி கண்டதும். :

“ ஐயோ தம்பி பாலா. சந்திரா எங்கள் எல்லோரையும் ஏமாற்றி விட்டு போய் விட்டாள்” என்று கதறி அழுதாள் தன் கணவனோடு சேர்ந்து பாலாமணி.

“சந்திரா எழுத்தி வைத்துவிட்டு போன இந்த கடிதத்தை வாசி அப்ப உனக்கு தெரியும் அவளுக்கு நடந்தது எண்டு”. பாலாமணி ஒரு கடிதத்தை சோமுவிடம் கொடுத்தாள்..

சோமு கடிதத்தை வாங்கி வாசித்தான்

அம்மாவுக்கும் அப்பாவுக்கும்

நான் இனி சதிராட மாட்டேன். இந்துக் கோவிலில் மட்டும் தான் சதிராட்டம். கதோலிக்க சர்சுகளிலும் முஸ்லீம் மசூதிகளிலும் அது நடப்பதில்லை . நான் மதம் மாறி கன்னியாஸ்திரி யாக மாறிவிட்டேன் . நான் தெற்கே போகிறேன். என்னை இனி ஒருவரும் தேடவேண்டாம்.

**இப்படிக்கு**

**மேரி என்ற சந்திரா**

*****

## *கதை 16*

## *சந்திக் கடை சங்கரப்பிள்ளை*

*இங்கிலாந்தில் உள்ள மூலைக் கடைகள் போல் மூலைக்கொரு தேனீர்; கடைகள் யாழ்ப்பாணத்தில் இருந்தாலும் நல்லூர் முருகன் கோவிலுக்கு அருகில் உள்ள அரசடிச் சந்தியில் இருக்கும் சந்திக்கடை பிரசித்தமானது. சந்தியில் இருந்த அரசமரம் பழமை வாய்ந்தது. சங்கிலி அரசன் காலத்து மரம் என்று சொல்வார்கள். உண்மை தெரியாது. அதைச் சுற்றி உயர் சாதியினர் வசதியாக அமர்ந்து ஊர் வம்பளக்க சலவைக்கற்கள் இருந்தன. அக்கற்கள் அழுக்குபடாமல் இருக்க தாழ்ந்த சாதியைச் சேர்ந்த கந்தன் பொறுப்பெடுத்தான் அடிக்கடி தண்ணீரால் கழுவி சுத்தப்படுத்துவது அவன் வேலை. அதற்கு கூலியாக மாதாந்தம் சிறுதொகையை பிரக்கிராசி பீதாம்பரமும் இன்னும் சிலரும் அவனுக்கு கொடுப்பார்கள்.*

*ஓலையால் வேயப்பட்ட சந்திக்கடை பிரபல்யமடைய பல காரணங்கள் இருந்தன. முக்கியமாக சங்கரப்பிள்ளையின் கைராசியில் தயாராகும் உளுந்து வடையும், தாளித்த சுண்டலும் நாவுக்கு சுவையாக இருந்தது. அவர் கை எவ்வளவு சுத்தம் என்று வருபவர்கள் பார்ப்பதில்லை. அடிக்கடி கையால் வாயை மூடியபடி இருமிக் கொண்டு சேவை செய்வார். கையைக் கழுவுவதில்லை. ஆனால் அடிக்கடி கடைக்குச் சாம்பிராணிப் புகை காட்ட தவறமாட்டார்.; அவர் இருமும் போது தெறிக்கும் எச்சில், பலகாரத்தில் விழுவதை அவர் அவதானிப்பதில்லை. அவருக்கு காச நோய் என்று யாரோ கிளப்பிவிட்ட புரளியை கூட வாடிக்கையாளர்கள் கணக்கில் எடுப்பதில்லை. அவ்வளவுக்கு அவரது வடையும் சுண்டலும்வாய்க்கு ருசியாக இருந்தது.*

*சங்கரப்பிள்ளை, தனது பழைய ஏச்.ஏம்.வி ரெக்கோர்ட்டை அடிக்கடி பாவிப்பார். "ராதை உனக்கு கோபம் ஆகாதடி" என்ற தியாகராஜபாகவதர் பாடிய பாட்டு அவருக்குப் பிடித்தமான பாடல். எந்த ராதையை நினைத்து கேட்கிறாரோ தெரியாது. ரெக்கோர்டில், பாவிப்பினால் கீறு விழுந்ததால் திரும்பித் திரும்பி ஒரே வரியை கிளிப் பிள்ளையைப் போல் பாடும். ஊசியை சற்று தூக்கி அசைத்தால் தான் மறு வரியைப்பாடும். சுந்தராம்பாள், பி.ஏ பெரியநாயகி, வசந்தகோகிலம், டிகே பட்டம்மாள், எம். எஸ். சுப்புலஷ்மி; போன்ற பாடகிகளின் பாடல்களும் அடிக்கடி ஒலிக்கும்.*

*அவரது பூர்வீகம் நயினாதீவு. உயர் சாதியைச் சேர்ந்தவர். நயினா தீவுக்கு ஒல்லாந்தர் "ஹார்லம்" என தங்கள் ஊர் நினைவாக பெயர்வைத்திருந்தனர். ஒரு காலத்தில அத்தீவில் கழுதைகள் ஏராளம் அதனால் அந்தப் பெயர் இடப்பட்டது என்கிறது வரலாறு. இத்தீவு*

மணிபல்லவம் எனவும் அழைக்கப்பட்டது. புத்த பெருமான் வந்து போன தீவென மகாவம்ச நூல் கூறுகிறது. வடக்கில் இருந்து எப்படி மூவாயிரம் மைல்கள் அவர் வந்தார் என்ற உண்மை தெரியாது.

சங்கரப்பிள்ளையருக்கு இருந்த மதிப்புக்கு அடுத்த காரணம் அக்கடை அமைந்திருந்த இடம். சனப் போக்கு வரத்து அதிகமான நாற் சந்தியிவ், அரச மரம் இருந்ததால், அரசடிச் சந்தி என்பர். அச்சந்தி ஓரமாக சின்ன கடை ஒன்றை அமைப்பதற்கு அதிர்ஷ்டம் இருக்க வேண்டும். அந்தக் கடையின் பின்னேரமாக ஒரு சின்ன படுக்கை அறை. அதில் தான் சங்கரப்பிள்யைரின் சொந்தக்காரப் பையன் முருகன் தங்குவான். அடிக்கடி உதவிக்கு முருகா முருகா என கூப்பிட்டுக் கொள்வார். நல்லூர் முருகனை மனதில் நினைத்து பையனைக் கூப்பிடுகிறாரோ தெரியாது. இரவு நேரம் அவன் கடைக்கு காவல். தினமும் சேர்ந்த பணத்தை கல்லாப் பெட்டியிலிருந்து வீட்டுக்கு எடுத்துப் போய்விடுவார் சங்கரப்பிள்ளையர். அவர் வீடு, பருத்தித்துறை வீதியில், யானை சிலை வைத்த வாசலைக் கொண்ட கல் வீடு. கடையிலிருந்து சுமார் இருநூறுயார் தூரத்தில் அமைந்திருந்தது. அவரது கடுமையான உழைப்பினால் வாங்கப்பட்ட சொத்து அது.

எத்தனையோ பெட்டிசன்கள் அக்கடைக்கு எதிராக மாநகரசபைக்கு வந்தாலும் சங்கரப்பிள்ளையரை ஒருவராலும் அசைக்க முடியவில்ல. கடையில் இருந்து சுமார் 400 யார் தூரத்தில் உள்ள நல்லூர் கந்தன் ஆசி அவருக்கிருந்தது. நல்லூர் கந்தனின் திருவிழாக்களில் விரதம் இருப்பார். அதே பிரதான பாதை ஓரமாக இருந்த நல்ல தண்ணீர் கிணற்றோடு இருந்த வைரவர் கோயிலுக்கு தினமும் மாலை பூசை செய்வார் சங்கரப்பிள்ளையர். வைரவர் அவரது காவல் தெய்வம். மாதம் ஒரு தடவை வைரவருக்கு பொங்கிப் படைப்பார். கிணற்றில் கண்ட சாதி சனங்கள் தண்ணீர் அள்ளாதிருக்க " உத்தரவின்றி தண்ணீர் அள்ளுவது தவிர்க்கப்பட்டுள்ளது" என்ற பலகை தொங்கவிடப்பட்டிருந்தது. வைரவர், கண்டவர்கள் தண்ணீர் அள்ளினால் கோபித்துக் கொள்வார் என்று வதந்தி பரப்பப் பட்டது. அந்த வைரவரும் அவருடைய கடைக்கு காவல். அதுமட்டுமல்லாது சற்று தள்ளி அமைந்துள்ள வீரமகாகாளி அம்மன் துணை வேறு இருந்தது. நல்லூர் முருகன் கோவில் , அம்மன் கோவில் திருவிழா காலங்களில் சங்கரப்பிள்ளையருக்கு ஓகோ என்று சொல்லுமளவுக்கு நல்ல வியாபாரம்.

ஒரு நாளைக்கு மூன்று தடவையாவது வடையும் சுண்டலும் போடுவார். எப்படி அவை தீர்ந்து போகும் என்று தெரியாது. அத்தியடி, ஆனைப்பந்தியடி, கந்தர்மடம், முத்திரைச சந்தி, கைலாய பிளளையார் கோவிலடி, முடமாவடி ஆகிய இடங்களிலிருந்தும் வாடிக்கையாளர்கள் அவர் கடைக்கு சுண்டலும் வடையும் வாங்க வருவதுண்டு. தனக்கு உதவிக்கு இன்னும் இரண்டு நயினாதீவைச் சேர்ந்த தன் சொந்தக்காரப் பெடியனை வைத்திருந்தார்.

அந்த வட்டாரக் கவுன்சிலர் முத்துராசா அவரது தாய் வழியில் தூரத்துச் சொந்தம். கடையின் இலாபத்தில் அவருக்கும் பங்குண்டு என்பது ஊர் வதந்தி. அரச மரத்தைச் சுற்றி உள்ள சலவைக் கல்லில் இருந்து, வம்பளக்கும் அந்த ஊர் முக்கிய பிரமுகர்களோடு சங்கரப்பிள்ளையர் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டார். இன்னும் ஒரு முக்கிய காரணம் பருத்தித்துறை யாழ்ப்பாண வீதியில் போக்கு வரத்து அதிகம். பஸ்சால் வந்திறங்கும் சனம் தாகம் தீர்க்க, சங்கரப்பிள்ளை கடைக்குப் போய் சுடச்சுட வடை அல்லது தாளித்து போட்ட சுண்டலும், நல்ல ஆடையோடு ஆட்டுப்பால் கலந்த தேனீரும் அருந்தி போவது வழக்கம். சிலர் கடையில் ஓரமாகத் தொங்கும் கயிற்றில் எரியும் நெருப்பில் சங்கரப்பிள்ளையரிடம் சுருட்டு அல்லது; பீடி வாங்கி அதில் பற்றவைத்து ஒரு இழுவை இழுத்தால்தான் அவர்களுக்கு திருப்தி. அது சற்று சாதி குறைந்த சனங்களுக்கு கிடைக்கும் சுதந்திரம். உயர் சாதி மக்களுக்கு மட்டும் இரண்டு யானை படம் போட்ட நெருப்பெட்டியை வை.சி.சி.கு சுருட்டையோ, சொக்கலால் பீடியையோ பற்ற வைக்க மரியாதையாக நீட்டுவார். கடைக்குள் புகைத்தல் தடைசெய்யப்படாத காலமது. யார் உயர் சாதி, எவர் கீழ சாதியினர் என்று அவரது கூர்மையான கண்கள் அடையாளம் கண்டு விடும்;. கீழ் சாதி என்று தெரிந்தவுடன் கையில் சுருட்டை கொடுக்காமல் மேசையில் வைத்து கயிற்றின் நுனியில்; தொங்கும் நெருப்பைக் காட்டுவார். நெருப்பு பற்ற வைப்பதில் கூடச் சாதி பாகுபாடு அக்காலத்தில் இருந்தது .

கடைக்குள் இரண்டு புது வாங்குகள் பிரத்தியோகமாக உயர் சாதி மக்களை வரவேற்க காத்திருக்கும். அவர்கள் வெற்றிலை போட்ட பின்னர் தடவிய சுண்ணாம்பின் அடையாளம் வாங்கின் ஓரங்களை அலங்கரிக்கும். அதில் அமர்ந்து, அரசியல் வதந்தி கதைத்தபடி புகைப்பிடிப்பதில் ஒரு தனி இன்பம் பலருக்கு. ‘‘யாருக்கு புள்ளடி, எவருக்கு பொல்லடி’’ என்று நக்கலாக தமது ஆதரவை காட்டி அரசியல் பேசிக் கொள்வார்கள். புகையிலைத் தரகு, வெங்காயத் தரகு, கலியாணப் பேச்சுக்களும அடிக்கடி நடக்கும். அமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட அந்த இரண்டு வாங்குகளும் உயர் சாதி மக்களுக்கு மட்டுமே என்ற தைரியம் சிலருக்கு.

ஓரமாக பொயிலரில் எப்பவும் சுடு தண்ணீர் கொதித்தபடி இருக்கும். சங்கரப்பிள்ளையர் தேனீர், கோப்பி தயாரிப்பது தனி அழகு. ஆட்டுப்பாலை விட்டு தேனீர் தயாரிக்கும் போது மூக்குப் பேணியை உயர்த்தி கொதித்த பாலையும் தேனீரையும் கலப்பது கைதேர்ந்த கலை. தமிழ்நாட்டில் உள்ள மேட்டுப்பாளயத்தில் அவர்கற்ற கலையோ என்னவோ தெரியாது. சிறிதளவாவது தேனீர் கீழே சிந்தாது. பேணியில் நுரை பொங்கி வழியும். நான் சில நேரம் இந்தக் கலையை கண்கொட்டாமல் இரசித்து பார்த்துக்கொண்டிருப்பேன். நுரைக்க நுரைக்க மூக்குப் பேணியில் உயர் சாதியினருககு பக்குவமாக தேனீர்; கொடுக்கும் போது எனக்கும் குடிக்க வேண்டும் போலிருக்கும்.,

" சரி அங்கை தொங்கிற பால் டின்னைப் போய் எடு" என்பார் சற்று மரியாதை குறைந்த தொனியில், தேனீர் கொடுக்க முன்னர் சொல்லுவார்., அந்த டின்கள் கழுவப்பட்டு எத்தனை நாட்களோ தெரியாது. எறும்புகளும் இலையானும் சுவைத்த, பக்குவமாக வெட்டப்பட்ட நோனா மார்க் பால்டின்கள் அவை. அதில் குடிப்பதில் கூட ஒரு சிலருக்கு சுவையுண்டு போலும்.

எங்கள் வீட்டில் இருந்து சுமார் 50 யார் தூரத்தில் சங்கரப்பிள்ளையரின் கடை இருந்தது. அதுவே எனக்கு வசதியாக அமைந்தது. மாலை 4 மணிக்கு ஏதாவது எனக்கு சாப்பிட்டாகவேண்டும். அம்மாவுக்கு அது தெரியும். " இந்தாடா போய் கணக்கு புத்தகத்தில் எழுதிப்போட்டு சுண்டலும் ஆறு கடலை வடைகளும் வாங்கி வா. அப்பா, கச்சேரியாலை வருகிற நேரமாச்சு" என்பாள்.. அவளுக்குத் தெரியும் அந்த நேரம்தான் சுடச் சுட கடலை வடையும் சுண்டலும் சங்கரப்பிள்ளையர் அடுப்பிலை இருந்து இறக்குவார் என்று. பள்ளிக் கூடத்தால் பசி பசி என்று வீடு திரும்பும் பிள்ளைகள் அவர் கடையை தரிசிக்காமல்; போவதில்லை. கடையில் தொங்கும் கதலி வான்ழப்பழக்குலை வடையோடு சோடி போட்டு வெகு விரைவாக மறைந்துவிடும்.

சங்கரப்பிள்ளையர் நல்ல சங்கீத இரசிகர். சமைக்கும் போது பழைய பாடல்களை முணுமுணுப்பார். அதுவும் தியாகராஜபாகவதரின் பாடல்களை கிராமபோனில் கேட்பதற்காகவே பலர் வருவதுண்டு. "ராதை உனக்கு கோபம் ஆகாதடி" என்ற சிந்தாமணி படப்பாடல் உள்ள ரெக்கோர்ட்டை அடிக்கடி பாவிப்பார். எந்த ராதையை நினைத்து பாவித்தாரோ தெரியாது. ரெக்கோர்டில், பாவிப்பினால் கீறு விழுந்ததால் திரும்பித் திரும்பி ஒரே வரியை கிளிப் பிள்ளை போல பாடும். ஊசியை சற்று தூக்கி அசைத்தால் தான் மறு வரியைப்பாடும். சுந்தராம்பாள், வசந்த கோகிலம், டிகே பட்டம்மாள், எம். எஸ். சுப்புலஷ்மியின் பாடல்களும் அடிக்கடி ஒலிக்கும். சுப்புலஷ்மியின்; காற்றினிலே வரும் கீதம் என்ற பாடலும் அவருக்கு மிகவும் பிடித்தமான பாடல்.

நல்லூர்;; தேர், தீர்த்த திருவிழாவின் போது காவடிகளுக்குப் பஞ்சமில்லை. சந்தியில் ஆட்டக்காவடி, தூக்குக்காவடி, பால்காவடி, பிரதிஷ்டைக் காவடி என்றால் சங்கரப்பிள்ளையரின் வியாபரத்துக்கு குறைவில்லை. திருவிழா இல்லாத நாட்களில் சைக்கிலில் வரும் மீன்காரன் இரத்த கண்ணனும், தலையில் மீன் கூடையோடு வரும் தேவியும் வியாபாரம் முடிந்து , சங்கரப்பிள்ளையின் கடையில் வந்துதான் தேனீர் அருந்திப் போவார்கள். அப்படி வந்து போன இரத்தக்கண்ணன் மீன் பெட்டியில் இருந்து குப்பைகளோடு தூக்கி எறிந்த வலம்புரி சங்கொன்று சங்கரப்பிள்ளையருக்கு தற்செயலாகக் கிடைத்தது. அதுவே பின்னர் அவருக்கு அதிர்ஷ்டத்தை வாரிக் கொடுத்தது. சங்கை சாமி படத்தோடு வைத்து, பக்தியோடு பூஜை செய்வார். வலம்புரி சங்கிலை அப்படி என்ன விசேஷம் என்று கேட்டால் , வலம்புரி சங்கு இருக்கும் இடத்தில் லட்சுமியும் குபேரனும் நித்தியவாசம் செய்வர். சங்கில் பால் வைத்து லட்சுமியை

வழிபட்டு வந்தால், வர இருக்கும் பணம், கைவிட்டுப் போன பொருள், சொத்து திரும்பக் கிடைக்கும். தொழிலில் லாபம் பெருகும்'' என்பார்.

யாராவது புது மனிதர்கள் கடைக்கு வந்தால் சங்கரப்பிள்ளையர் குறுக்கு விசாரணையில் ஈடுபடுவார். அதன் பின்னரே அவர்களுக்குத் தக்க மரியாதை கிடைக்கும். வந்த புதுமுகம் நயினாதீவு என்றால் வந்தவருக்குத் தனி மரியாதை கிடைக்கும். கேள்விகள் நயினாதீவில் அவரைத் தெரியுமா, இவரைத் தெரியுமா? தகப்பனார் பூர்வீகம் என்ன? நயினாதீவில் எந்தப்பகுதியைச் சார்ந்தவர்? எப்ப யாழ்ப்பாணம் வந்தவர்? என்ன தொழில்? என்ன சம்பளம்? இது போன்ற கேள்விகளாக இருக்கும்.

ஒரு மனிதனுக்கு அதிர்ஷ்டம் தொடர்ந்து இருப்பதில்லை. எவர் கண் பட்டதோ தெரியாது. சங்கரப்பிள்ளையரின் உடம்பு மெலியத் தொடங்கியது. இருமலும் அதிகரித்தது. இருமும் போது இரத்தம் கலந்த சளியைக் கக்கினார். தன்னை கொண்டு போய் ஆஸ்பத்திரியில் காட்டி வைத்தியம் செய்ய அவருக்கப் பயம். எங்கே தனக்குள் உள்ள வியாதி பலருக்குத் தெரிந்துவிடுமோ என்ற அச்சம். அந்தசமயம் யாழ்மாநகரசபை தேர்தலில் கவுன்சிலர் முத்துராசா படு தோழ்வியடைந்தார். அவர் செய்த ஊழலே அவரது தோல்விக்கு காரணம். அதோடு அரசடி சந்தியில் உள்ள பழைய அரசமரத்தை அகற்றவேண்டும் அல்லாவிடில் புத்தர் சிலை ஒன்று மரத்துக்கு கீழ் தோன்றிவிடும் என்று ஊர்வாசிகள் பயந்தனர். நான்கு முற்சந்தியை பெருப்பிக்க வேண்டும், விபத்துகள் ஏற்படாதவாறு செய்ய வேண்டும் என்று ஒரு இளைஞர் மன்றம் தொடர்ந்து மாநகரசபையை நச்சரித்ததால் , அரச மரம் வெட்டப்பட்டு. அதை தொடர்ந்து சந்திக்கடையும், சலவைக் கற்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. சுமார் இருபது வருடங்கள் அச்சந்தியில் வியாபாரம் செய்த சங்கரப்பிள்ளையருக்கு அது பெரும் தாக்கத்தைக் கொடுத்தது. அக்கடையிருந்ததோ மாநகரசபைக் காணியில், அதனால் அவருக்கு நஷ்ட ஈடு கிடைக்கவில்லை. பாவம் சந்தியடி வைரவர் அவரைக் கைவிட்டு விட்டார். ஆனால் அவர் தவறாது மாதம் மாதம் வைரவருக்குப் பொங்கி வந்தார். வீரமகாகாளி அம்மன் கோயிலுக்கு அருகே இன்னொரு சுண்டல் கடையொன்றை அவர் ஆரம்பிக்க முன்னரே சங்கரப்பிளளையர் கண்ணை மூடிவிட்டார். அவர் இறந்தது காச நோயால் என்று பின் அறியவேண்டிவந்தது. அவருக்கு இருந்தது காச நோய் என்று பலருக்கு தெரிய வேண்டிவந்ததால், '' அடடா அவர் கடைக்குப் போய், அவர் கையால் சுட்ட வடையையும் , சுண்டலும் வாங்கிச் சாப்பிட்டோமே எமக்கு காச நோய் வந்திருக்குமோ'' என்று பலர் பயந்து ஆஸ்பத்திரிக்குப் போய்.; தம்மை பரிசோதிக்கத் தொடங்கினார்கள். இருமாதவர்களுக்குக் கூட இருமல் வரத்தொடங்கியது.

## *கதை 17*

## *சண்முகம் சம்மரி ( விடுதி)*

### *முன்னுரை*

*சம்மரிக்கும் செம்மறி ஆட்டுக்கும் ஒரு தொடர்பும் இல்லை . சம்மரி என்ற ஆங்கில சொல்லின் அர்த்தம் அரசிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ வேலை செய்யும் நண்பர்கள் வதியும் இடம் என்பதாகும். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் இராணுவ வீரர்கள் தங்கிய இடத்தை சம்மரி என்று அழைத்தனர். அந்த பெயர் இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சி முடிந்ததும் கொழும்பில் வேலை செய்பவர்கள் தங்கும் வீட்டை சம்மரி என அழைத்தனர் . இந்த கதை அத்தகைய விடுதியில் நடந்த சம்பவத்தைக் கருவாகக் கொண்டது. )*

*கொழும்பு மத்திய நகரத்தின் கொழும்பமையத்திலிருந்து தெற்கே கரையோரமாக காலி வீதியில் ஆறு மைல்கள் சென்றால் வெள்ளவத்தை என்ற தமிழர்கள் அநேகர் வாழும் பகுதியாகும் தெற்கில் உள்ள "குட்டி யாழ்ப்பாணம்" என்று கருதப்படுகிறது . இது மும்பாயில் உள்ள தமிழர்கள் வாழும் மாட்டுங்க, கனடா ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள ஸ்காபரோ, லண்டனில் உள்ள ஈஸ்ட் ஹாம் போன்றது. அறுபது காலப் பகுதியில், வெள்ளவத்தையில், ஒரு வீட்டைச் சொந்தமாக வைத்திருப்பது ஒரு காலத்தில் தமிழர்களிடையே அந்தஸ்தின் அடையாளமாக இருந்தது. தமிழ் உணவகங்கள், வாழைப்பழம் சுருட்டுக் கடைகள் மற்றும் தமிழ் சினிமா அரங்குகள் , திருமண மண்டபங்கள் அங்கு ஒரு இலாபகரமான வியாபாரத்தைக் கொண்டிருந்தன. அவர்களில் பலர் தங்கள் வருவாய்க்காக அங்கு வசிக்கும் தமிழ் அரசு ஊழியர்களை நம்பியிருந்தனர். அவர்கள் தங்கள் உணவகத்தில் சாப்பிட்ட மக்களின் தினசரி வாங்குதல்களைக் குறிப்பிடுவதற்கான ஒரு நோட் புத்தகத்தைப் பராமரித்து, சம்பளம் பெற்ற நாளில் பணத்தைச் சேகரித்தனர். அந்த வசதி பல அதிகாரிகளின் மாதாந்திர செலவினங்களை பட்ஜெட் செய்ய உதவியது. காந்தி லாட்ஜ் மற்றும் கிருஷ்ணா பவன் ஆகியவை காலி வீதியில் உள்ள இரண்டு பிரபல்யமான சைவ உணவகங்களாக இருந்தன, அவர்களின் "மசாலாவடை ", நெய் தோசை. இட்டலி மற்றும் சாம்பார் ஆகியவற்றிற்கு பிரபல்யமானது. அசைவ உணவுக்கான தேவையைப் பூர்த்தி செய்ய மலையாளி பாலன் நாயரின் கொச்சின் உணவகம் இருந்தது. அவர் மதிய உணவு மற்றும் இரவு உணவை மசாலா கறிகளுடன் மட்டுமே பரிமாறினார்; அவரது உணவகம் வாடகை அறைகளில் வசித்து வந்த தமிழ் அரச ஊழியர்களால் நன்கு ஆதரிக்கப்பட்டது. மிகவும் நெருங்கிய வாடிக்கையாளர்களுக்காக, சமையலறையிலிருந்து சாராயம் நாயர் உணவு உண்ண முன் வழங்கினார். சாம்பார் தயாரிப்பதற்கான பொருட்களாக முந்தைய நாள் மீதமுள்ள*

வாழைப்பழ தோல், வடை போன்றவற்றை மறு நாள் சாம்பாருக்குள் இருக்கும். கோட்டை பகுதியில் உள்ள அலுவலகங்களுக்குச் செல்ல பஸ்ஸைப் பிடிக்க அவசரமாக வந்தவர்கள் இந்த உணவகத்தில் காலை உணவை முடித்துச் செல்வார்கள்

கொழும்பில் வேலை செய்யும் யாழ்ப்பபாண குடா நாட்டுத் தமிழ் அரசு ஊழியர்களில் பலர் இரு குடும்பங்கள் நடத்தினார்கள் , யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் மனைவி மற்றும் குழந்தைகளோடு ஒரு குடும்பம், மற்றது வெள்ளவத்தையில் உள்ள சம்மரியில் பிரமச்சரிய வாழ்க்கை. மூன்று மாதத்துக்கு ஒரு முறை யாழ்தேவியிலும் மெயில் டிரெயினிலும் ஊருக்குச் சென்று தாம்பத்திய வாழ்க்கை நடத்தி வருவார்கள். அவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கை, செலவைக் குறைக்க சம்மரியில் மூன்று பேருடன் ஒரு அறையைப் பகிர்ந்து கொண்டார்கள் . இது போன்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்த வீடுகளில் சண்முகம் சம்மரியும் ஒன்று. வார இறுதி நாட்களிலும், பொது விடுமுறை நாட்களிலும், சிறப்பு மதிய உணவையும் மற்றும் இரவு உணவையும் புங்குடுதீவிலிருந்து வந்த முருகேசு என்ற ஒரு சமையல்காரர் தயாரித்தார். தேங்காய்ப் பாலில் சிறப்புமிக்க காரமான சிக்கன் கறி, மற்றும் யாழ்ப்பாண பாணி பால் பொரியல் என்ற தேங்காய்ப் பாலில் மட்டன் கறி தயாரிப்பதில் நிபுணராக இருந்தார். பசியைக் கட்டியெழுப்ப, சம்மரியில் வசிப்பவர்கள் தங்கள் உடலை நல்லெண்ணெயில் ஊறவைத்து, ஆளுக்கு ஒரு மணி நேரம் குளியல் அறையைப் பாவிக்கலாம் என்ற அடிப்படையில் எண்ணெய் குளியல் நடக்கும் சமரியின் மனேஜர் சண்முகம் உட்பட எட்டு பேர் சம்மரியில் வாடகைக்கு இருப்பவர்கள் அவர்களுக்கிடையே பணம் திரட்டி இரு பாட்டில் உயர்ந்த ரக வெள்ளை சாராயம் வாங்கி பகிர்ந்து குடிப்பார்கள் . குடிக்கும் போது சுவைப்பதற்கு நண்டும் இறாலும் முருகேசு பொரித்துக் கொடுப்பார் . முருகேசுவும் சில சமயம் ஒரு கிளாஸ் சாராயம் எடுப்பார் .

*1920* களில் கட்டப்பட்ட நான்கு படுக்கை அறை வீடு, கொழும்பு முனிசிபல் பகுதியில் உள்ள புறநகர் நகரமான *33/2* புஸ்ஸல்ஸ் லேன் வெள்ளவத்தையில் அமைந்துள்ளது, இது ஒரு காலத்தில் பிரபலமாக "சண்முகம் சம்மரி" என்று அழைக்கப்பட்டது. சம்மரியின் மனேஜராக ஐம்பது வயதுள்ள எஸ்.சண்முகம் என்பவர் இருந்தார் இந்த வீடு அவருக்குச் சொந்தமில்லாவிட்டாலும் அவரின் பெயரை சம்மரி பெற்றது. யாழ்ப்பாண தீபகற்பத்தில் உள்ள வடமராட்சி பகுதியைச் சேர்ந்த தமிழ் அரசு ஊழியர்களால் சம்மரி நன்கு ஆதரிக்கப்பட்டது. சுவர்கள் விரிசல் அடைந்திருந்தன ஆனால் வெளியில் வீட்டின் தோற்றம் வெள்ளை. சமையலறை கரப்பான் பூச்சிகள் மற்றும் எலிகளால் நிரம்பியிருந்தது. சம்மரியின் சுகாதாரம் பற்றி பேசத் தேவையில்லை. வீட்டின் பழைய கூரையின் தோற்றம் என்பதால் அவசரமாகச் சரிசெய்ய வேண்டும் என்று கோரியது. மழைக்காலங்களில் கூரையில் இருந்து வெளியேறும் தண்ணீரைச் சேகரிக்க வாளிகள் பயன்படுத்தப்பட்டன. வீட்டின் விறாந்தையில் பழங்கால தளபாடங்களாக நான்கு நாற்காலிகள் போடப் படிருந்த்ன.. கதிரைகளின் தலைப் பகுதியில் எள் எண்ணெய்யால் கறை படிந்து இருந்தன.

சம்மரிக்கு வருபவர்கள் உணவுக்காக அதிக நேரம் தங்காமல் இருப்பதைக் கதிரையில் இருந்த மூட்டைப் பூச்சிகள் உறுதி செய்தன.

அந்த நான்கு அறைகள் கொண்ட சம்மரியில் ஒரு அறையை வாடகைக்குப் பெறுவது கடினம், ஏனென்றால் பருத்தித்துறையைச் சேர்ந்த உயர் சாதி அரச ஊழியரான சண்முகலிங்கம் சண்முகம் தனது விதிமுறைகளின்படி அதை நடத்தினார். இது சண்முகத்தின் சகோதரர் வடிவேலுவின் வீடு, வல்வெட்டிதுறையில் வடிவேலு ஒரு முன்னணி தொழிலதிபர் என்றாலும், சண்முகம் அந்த வீட்டின் உரிமையாளர் போல் நடந்து கொண்டார். சம்மரியை நடத்துவதற்கும், வீட்டைப் பராமரிப்பதற்கும் வடிவேலு முழு அதிகாரத்தையும் தன் தம்பி சண்முகத்திடம் கொடுத்திருந்தார். சண்முகம் கிடைக்கும் வாடகை பணத்திலிருந்து மாதந்தோறும் 1200 ரூபாய் வடிவேலுக்கு அனுப்ப வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் சம்மரி இருந்த வீட்டை தன் தம்பியின் பொறுப்பில் விட்டார் . 60 களில் அது பெரிய பணம். ஒரு முக்கியமான நிபந்தனை என்னவென்றால், சம்மரியில் ஒரு இடத்திற்கு யார் விண்ணப்பிக்கிறாரோ அவர் வடமாராட்சி பகுதியைச் சேர்ந்த நல்ல வெள்ளாள சாதியாகவும், திருமணமானவராகவும் இருக்க வேண்டும். பிரமச்சாரிகளுக்கு அறைகள் வாடகைக்கு விடப் படுவதில்லை. சமரிக்குப் பெண்கள் வந்து போவதைச் சண்முகம் விரும்பவில்லை, ஏனெனில் இது பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் மற்றும், சம்மரியின் ஒழுக்கத்தையும் மதிப்பையும் கெடுத்துவிடும் என்று அவர் பயந்தார் .பிறகு சமூகத்தில் விபச்சார விடுதி என்று பெயர் கிடைத்து விடும் என்பது அவர் கருத்து.

சண்முகம் தீவிர ஒழுக்கத்தைக் கடைப் பிடிப்பவர் . சிகரட் சுருட்டு குடிக்க மாட்டார். பருத்தித்துறையில் உள்ள ஒரு தமிழ் பாடசாலையில் ஆசிரியராக இருந்த அவரின் தந்தை பண்டிதர் சண்முகலிங்கத்திலிருந்து அவர் கற்றுக்கொண்டார். சண்முகம் பல்கலைக்கழகத்தில் நுழைய முடியவில்லை, அவருக்கு இருபத்தொரு வயதாக இருந்தபோது, அவர் அரசாங்க எழுத்தர் சேவையில் சேர விரும்பினார், மேலும் பல்வேறு துறைகளில் பணியாற்றினார். அவர் தனது முதலாளிகளுடன் நல்ல உறவை ஏற்படுத்துவதை எப்போதும் ஒரு நோக்கமாக கொண்டார். அவரது நண்பர்கள் பலர் அவரை "பந்தம்காரன்" என்று கேலி செய்தனர். அந்த தந்திரோபாயங்கள் அவருக்கு முதலாம் வகுப்பில் பதவி உயர்வு பெற உதவியது, அவருக்கு மூத்தவர் வடிவேலு . சண்முகத்தின் மனைவியும் இரண்டு குழந்தைகளும் பருத்தித்துறையில் அவரது வரதட்சணை வீட்டில் வசித்து வந்தனர். கிராமத்தில் உள்ள அவரது சொத்துக்களைக் கவனிக்கும் கடமை அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. கிறிஸ்துமஸ் விடுமுறை மற்றும் வேல் பண்டிகையின்போது அவரது மனைவியும் மகன்களும் இரண்டு முறை மட்டுமே கொழும்புக்கு விஜயம் செய்தனர். செலவுகள் அதிகம் என்பதால் கொழும்பில் தனது குடும்பத்தினருடன் அவர் வாழ்வதைப் பற்றிச் சிந்திக்கவில்லை . அவர் தனது இரண்டு மகன்களையும் தான் படித்த பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியில் விட்டு படிப்பிக்க விரும்பினார்.

சண்முகத்திற்கு நண்பர்கள் மிகக் குறைவு . அவர் வார இறுதி நாட்களில் குடிப்பதற்காக சம்மரியில் இருப்பவர்களோடு சேர்ந்து இருக்கும்போது இரண்டுகிளாஸ் சாராயம் வையிற்றுக்குள் போனதும் சிரித்து பகிடி விடுவார் . தனது குடும்ப வாழ்க்கை பற்றி கூச்சம் இன்றி பேசுவார்.தன் அழகிய மனைவி சுந்தரியைப் பற்றி பெருமையாகப்பேசுவார் வாடகைக்கு இருப்பவர்களோடு தேவையான போது மட்டுமே பேசுவார் . மாதத்தின் முதல் தேதிக்கு முன்பே அவர்கள் வாடகையை உடனடியாக வீட்டில் இருப்பவர்கள் செலுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார்.

கொழும்பு மலே வீதியில் இருந்த சண்முகத்தின் கல்வி இலாக்கா அலுவலகத்தில் அவருடன் வேலை செய்யும் நல்ல நண்பருமான கந்தையா கரவேட்டியைச் சேர்ந்தவர், திருமணமானவர். அவர் சண்முகத்தின் மனைவியின் தூரத்து உறவினர். சண்முகம் வாடகைக்கு இருப்பவர்களை விட அவரை நம்பினார். சண்முகம் இல்லாத நேரத்தில் , கந்தையா சம்மரியின் துணை மனேஜராக பொறுப்பேற்றார். விஹார லேனில் வசித்து வந்த ஒரு சிங்கள பெண்ணுடன் அவருக்கு உறவு இருந்தது யாருக்கும் தெரியாது. பெண்கள் மேல் அவருக்குச் சபல மனம் .

வெள்ளவத்தையில் உள்ள தெஹிவல வாய்கால் ஓரமாக உள்ள விஹாரா லேன் ஒரு பிரபலமான சேரிப் பகுதி. பல சிங்கள குண்டர்கள் அந்த பகுதியில் வசித்து வந்தனர். அவர்களின் வாழ்வாதாரம் தமிழ் வீடுகள், கடைகளில் இருந்து கிடைக்கும் “கப்பம்” எனப்படும் பாதுகாப்புப் பணமாக இருந்தது.இனக் கலவரத்தின் போது கடைகளைக் கொள்ளை அடிப்பவர்கள் அவர்கள் .

கந்தையா தனது குறும்பு நிறைந்த நாற்பது வயதில் பல சிங்களவர்களுடன் நட்பாக இருந்தார். கொழும்புக்கு மாற்றப்படுவதற்கு முன்பு, அவர் காலி கச்சேரியிலும், பின்னர் இரத்தினபுரி கச்சேரியிலும் பணியாற்றினார், எனவே அவரால் சிங்கள மொழியைச் சரளமாகப் பேச முடியும். ராக்ஸி தியேட்டர் அருகே பேக்கரி ஒன்றை நடத்தி வந்த அவரது நண்பர் ரத்னசிறி, கந்தையாவை விஹாரா லேனில் வசித்த சோமாவதிக்கு அறிமுகப்படுத்தினார். கந்தையா பள்ளி நாட்களிலிருந்து ஒரு சினிமா பிரியன். அரை நிர்வாண ஆங்கில படங்களை பார்ப்பார் மற்றும் பல சிங்கள ,பறங்கிப் பெண் நண்பர்கள் அவருக்கு இருந்தனர். அவர் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் பொது எழுத்தர் சேவையில்( General Clerical Service) சேர முடிந்தது. அவரது முதல் நியமனம் வவுனியா கச்சேரியில். கந்தையா தனது வேலை இடத்திலும் தீராத விளையாட்டுப் பிள்ளையாக இருந்தார் , மேலும் ஒரு தட்டச்சு வேலை செய்யும் பெண்ணுடன் உறவு வைத்திருந்ததற்காகத் தண்டனையின் பேரில் வவுனியாவில் இருந்து இரத்தினபுரிக்கு மாற்றப்பட்டார்.

****

ஒரு நாள், சண்முகத்திற்கு உடல்நிலை சரியில்லை. அரை நாள் லீவுக்கு விண்ணப்பித்து சண்முகம் சீக்கிரம் சமரிக்குத் திரும்பினார். வீட்டில் ஒருவரும் இல்லாத போது பிரதான ஹாலின் ஓரத்தில் ஒரு நாற்காலியில் கந்தையாவின் மடியில் சந்தோஷமாக முத்தமிட்டவாறு அமர்ந்திருந்த ஒரு பெண்ணைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார். அந்த பாலியல் செயலில் தன் நண்பர் கந்தையா ஈடுபட்டார் என்று அவரால் நம்ப முடியவில்லை. சண்முகத்துக்குத் தெரியாமல் அந்தப் பெண்ணைச் சந்திக்க சம்மரிக்கு வர சண்முகத்துக்குத் தெரியாமல் கந்தையா அரை நாள் லீவு எடுத்திருந்தார்.

பெண்ணுடன் கந்தையா இருந்த கோலத்தைக் கண்ட சண்முகம் படு கோபம் வந்தது. உரத்த குரலில் கந்தையாவுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார், மேலும் கந்தையா சம்மரியிலிருந்து வெளியேற அவருக்கு 48 மணி நேரம் அவகாசம் அளித்தார். சிங்களப் பெண்ணை சம்மரிக்கு வர வேண்டாம் என்றும் அவள் தன் கட்டளைப் படி நடக்காவிட்டால் அவளைப் போலீசுக்கு ரிப்போர்ட் செய்வதாக அவளை எச்சரித்தார். எதிர்காலத்தில் இது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைச் சண்முகம் அப்போது உணரவில்லை. பின்னர் அவள் விஹார லேனில் உள்ள சேரிச் சிங்கள பெண் என்பது தெரியவந்தது.

சம்மரியை விட்டு வெளியேறுவதற்கு முன்பு, சண்முகம் தன்னை தவறாகப் புரிந்து கொண்டிருப்பதாகவும், விரைவில் அவருக்கு ஒரு பாடம் கற்பிப்பதாகக் கந்தையா எச்சரித்துச் சென்றான். இந்த விஷயத்தைப் போலீசில் தெரிவிப்பதாக கந்தையாவை சண்முகம் மிரட்டினார். காந்தையாவை போலீஸ் நிலையத்திற்கு வரவழைத்து அவருக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்க அவரது மேலதிகாரி சகோதரரான வெள்ளவத்தை போலீஸ் இன்ஸ்பெக்டர் சில்வா அவருக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

ஒரு சிங்களப் பெண்ணுடனான கந்தையாவின் விவகாரத்தை விளக்கி கந்தையாவின் மனைவிக்குச் சண்முகம் ஒரு விரிவான கடிதம் எழுதினார். சில நாட்களில், நெருக்கடியைத் தீர்க்க சண்முகத்தைச் சந்திக்க கந்தையாவின் மாமியார் காந்திமதி கொழும்புக்கு வந்தாள் . கந்தையாவின் இருப்பிடம் அவளுக்குத் தெரியவில்லை. சண்முகத்தின் சம்மரியில் தங்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்று அதிருப்தி அடைந்த தமிழ் அரசு ஊழியர்கள் மத்தியில் இந்த சம்பவம் காட்டுத்தீ போல் பரவியது. சம்மரி பெயரை இழிவுபடுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக இது அவர்களுக்கு இருந்தது. விரைவில் இந்த சம்பவம் வாழைக் கடைகள் மற்றும் உணவகங்களில் வதந்தியாக மாறியது.

****

மகேந்திரன் மற்றும் அவரது இரண்டு நண்பர்களான சிவகுமார் ரவீந்திரன் ஆகியோர் காந்தி லாட்ஜில் காலை உணவை உட்கொண்டிருந்தனர். கந்தையா மகேந்திரனின் நண்பர். ஒரு

*முறை மகேந்திரனைச் சண்முகம் விடுதியில் அறை வாடகைக்கு எடுக்க அழைத்துச் சென்றார் . மகேந்திரன் புங்குடுதீவு என்பதால் அறை வாடகைக்குக் கொடுக்க மறுத்து விட்டார் சண்முகத்தைச் சமாதானப்படுத்த அவர் தன்னால் முடிந்தவரை கந்தையா முயன்றார். வாடகைக்கு இருப்பதற்கான தகுதிக்கான சண்முகத்தின் விதிகளை மகேந்திரன் பூர்த்தி செய்யவில்லை, அதனால் அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. மகேந்திரன் அந்த சம்பவத்தை மனதில் வைத்துக் கொண்டார் சண்முகத்தைப் பழி .வாங்கக் காத்திருந்தார் . சம்மரியிலிருந்து கந்தையா துரத்தப்பட்டபோது, மகேந்திரன் அவரை தற்காலிகமாகத் தனது அறையில் தங்க வைத்தார். கந்தையாவும் மகேந்திரனும் சண்முகத்தை அவர்களுக்கு செய்ததற்காக அவமானப்படுத்தத் திட்டமிட்டனர்.*

*"சண்முகம் சம்மரி ஒரு விபச்சார கூட்டாக மாறிவிட்டது தெரியுமா?" காந்தி லாட்ஜில் காப்பி குடித்துக்கொண்டிருந்த சிவா என்பவர் மகேந்திரனிடம் கேட்டார்.*

*"அதைத்தான் நானும் மச்சான் கேட்டேன். காவல்துறையினர் சம்மரி மீது சோதனை நடத்தி இரண்டு பெண்களை பாலியல் செயலில் பிடித்ததாகப் பேசுகிறார்கள் மச்சான் எங்கள் தமிழ் சமூகத்துக்கு என்ன ஒரு அவமானம். இந்த திருமணமான கூட்டாளிகள் ஏன் தங்கள் மனைவிகளை யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்து வந்து இங்கு மகிழ்ச்சியுடன் வாழ முடியாது"? ரவி கதைக்கு மசாலா வைத்து பேசினார் .*

*"கடவுளுக்கு நன்றி மச்சான். நான் அந்த சம்மரியில் வாழவில்லை.இல்லாவிட்டால் என் பெயரும் கெட்டுப்போயிருக்கும் "என்று பதிலளித்தார் மகேந்திரன்.*

*"இந்த சட்டவிரோத செயல்களில் சம்மரியில் இருபவர்கள் ஈடுபட்டிருப்பது சண்முகத்திற்குத் தெரியுமா?" என்று சிவா கேட்டார்.*

*" ஏன் தெரியாது? அவரும் இங்கு மனைவியைப் பிரிந்துவாழ்கிறார் . ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தனது கிராமத்திற்குப் போறார். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் எவ்வளவு காலத்துக்கு தன் பாலியல் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும்? "என்று மகேந்திரன் கிண்டலான புன்னகையுடன் பதிலளித்தார்.*

*"அது உண்மை. இல்லையென்றால் இப்படி விபச்சார விடுதி நடத்தாமல் அவர் எப்படி இவ்வளவு பணம் சம்பாதிக்க முடியும்? அவர் எப்படி ஆடம்பரமாக ஆடை அணிவார்? அவர் அணிந்திருக்கும் மூன்று பவுன் அட்சரக்கூட்டு தங்கச் சங்கிலி. விரலில் மோதிரம் ஆகியவற்றை நீங்கள் பார்த்தீர்களா? ஒரு சாதாரண அரச ஊழியர் இவைற்றை எப்படி வாங்க முடியும்? இது நிரூபிக்கிறது, அவரின் அண்ணன் வடிவேலுக்கு இங்கை நடக்கிறது என்ன என்று தெரியாது "*

*"கந்தையாவுக்கு அவரது உறவு என்ன? அவரும் அந்த சம்மரியில் தங்கியிருந்தார்? "*

*" சண்முகத்தின் மனைவிக்குத் தூரத்துச் சொந்தம் "*

“கந்தையா ஒரு நல்ல மனிதர். எனது சகோதரரின் ஓய்வூதியத்தை விரைவுபடுத்த அவர் எனக்கு உதவினார் ”இது சிவா. .

:”நான் ஐந்நூறு ரூபாய் கடன் கேட்டதும் உடனே தந்திட்டார்”. ரவி கந்தையாவை புகழ்ந்தான் .

"பாவம் கந்தையா, சம்மரியில் நடப்பதைப் பற்றி அறிந்ததும் அவர் சண்முகத்தை எச்சரித்தார். ஆனால் அந்த மனிதன் பணத்திற்காக பேராசை கொண்டிருந்தான். கந்தையா இதைப் பற்றி என்னிடம் சொல்லி கவலைப் பட்டார் அந்த சமரியில் இருபவர்கள் வார இறுதி நாட்களில் சட்டவிரோதமாக மதுபானங்களை விற்கிறார்கள். அதனால் கந்தையா சண்முகத்துடன் வாக்குவாதத்திற்குப் பிறகு சமரியை விட்டு வெளியேறினார். அவருக்கு அங்கு வாழ விரும்பவில்லை. போலீஸ் சோதனைக்கு வர முன்னர் இவை அனைத்தும் நடந்தன ”மகேந்திரன் வதந்தியை திரிபு படுத்திச் சொன்னார்

பொய் வதந்திகள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின. கந்தையா வதந்தி என்ற நெருப்பைப் பற்றவைத்து, சண்முகம் சம்மரியின் பெயரைக் கெடுப்பதில் வெற்றி பெற்றார். சண்முகம் பஸ் ஸ்டாண்டில் வேலைக்குச் செல்லும்போதெல்லாம் மக்கள் அவரை முறைத்துப் பார்த்தார்கள் . ஒரு கட்டத்திற்கு வந்த. வதந்திகள் அவரது அலுவலகத்தை அடைந்தன. அவரது அதிகாரி அவரை அழைத்து ஏதேனும் உண்மை இருக்கிறதா என்று விசாரித்தார். கந்தையா பற்றிய முழு நிகழ்வையும் சண்முகம் அவருக்கு விளக்கினார். சண்முகம் வீடு திரும்பியபோது அவரது மனைவியிடமிருந்து ஒரு கடிதம் காத்திருந்தது. கடிதத்தைப் படித்தபோது தன்னை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. கடவுளே இந்த வதந்திகள் என் கிராமத்தை அடைந்துவிட்டன. எனது நல்ல மதிப்பை எவ்வாறு நான் திரும்பப் பெறுவது? எனது குடும்பத்தினரையும், மக்களையும் நான் எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? கதையின் உண்மையான பக்கத்தை அவர்கள் கேட்பார்களா? அவர் வருத்தப்பட்டார், அன்றிரவு தூங்க முடியவில்லை. அவரை இழிவுபடுத்துவதற்காகத் தான் நம்பி இருந்த கந்தையாவால் இது தொடங்கப்பட்டது என்பதை அவர் அறிந்திருந்தார்.

****

மகேந்திரன் தனது அறைக்கு விரைந்து வந்தான். அவன் மிகவும் உற்சாகமாகப் கந்தையாவை பார்த்தான். படுக்கையில் அமர்ந்து கந்தையா செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்தார். மகேந்திரன் அவரிடமிருந்து பேப்பரை பறித்து எடுத்து .

“மச்சான் கந்தையா. நியூஸ் உனக்குத் தெரியுமா? ”

“நீ சொன்னால் தான் எனக்குத் தெரியும் ”.

"உன்னை சம்மரியயில் இருந்து துறத்திய சண்முகம் தற்கொலை செய்து கொண்டான்?"

“யார் என் உறவினன் சண்முகமா ?”

“வேறு யார் என்று நினைக்கிறீர்? உம்மை சம்மரியில் இருந்து விரட்டியடித்தாரே சண்முகம் அவர் தான் “

“: உமக்கு எப்படி இது தெரியும் “?

. சம்மரிக்கு முன்னால் நிறுத்தப்பட்டுள்ள இரண்டு பொலிஸ் வாகனங்களை நான் பார்த்தேன். அங்கே நின்று கொண்டிருந்த கான்ஸ்டபிள்களில் ஒருவரிடம் கேட்டேன் என்ன சம்மரியில் நடந்தது என்று . சண்முகம் தனது அறைக்குள் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக அவர் என்னிடம் கூறினார். தனது எதிரிகளால் பரப்பப்பட்ட தேவையற்ற கதைகள் மூலம் தனது சம்மரியின் நற்பெயருக்கு ஏற்பட்ட அவமானத்தைத் அவரால் தாங்க முடியவில்லை என்று விளக்கி தற்கொலை செய்ய முன் ஒரு கடிதத்தை அவர் மேசையில்எழுதி வைத்திருந்தாராம் "

இந்தச் செய்தியைக் கேட்டு கந்தையா அதிர்ச்சியடைந்தார்.

“நீங்கள் உண்மையைச் சொல்கிறீர்களா?” அவன் கண்களைப் பார்த்து மகேந்திரனிடம் கேட்டார்.

“இது நகைச்சுவையான விஷயம் அல்ல. உண்மையான உண்மையை நான் உங்களுக்கு சொல்கிறேன். சண்முகம் குறித்து நான் வருந்துகிறேன். நாங்கள் தொடங்கிய வதந்திகள் ஒரு வாழ்க்கையை இழக்கும் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. அவரது மரணத்திற்கு நாங்கள் தான் காரணம் என்று எனக்குத் தெரியாது. ”மகேந்திரனின் குரல் குறைந்தது.

"அவர் கடிதத்தில் என்ன குறிப்பிட்டார்? அவரது மரணத்திற்கு காரணமானவர்களின் பெயர்களை அவர் கடிதத்தில் குறிப்பிட்டாரா? ” கந்தையா பயத்தில் மகேந்திரனிடம் கேட்டார்.

“கடிதத்தில் என்ன விவரங்கள் இருந்தன என்று எனக்குத் தெரியாது கந்தையா . கான்ஸ்டபிளிடம் நான் அதைக் கேட்க வில்லை நான் கேட்டாலும் அவர் சொல்லி இருக்க மாட்டார் ”

திடீரென்று ஒரு போலீஸ் காரின் சைரன் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து கதவைத் தட்டும் சத்தம் கேட்டது

இருவரும் உறைந்து போனார்கள் .

****

## *கதை 18*

## *கண்ணம்மா*

*யாழ்ப்பாணக் குடாநாட்டில், வலிகாமம் வடக்கில், பாக்கு நீரணையைத் தழுவி உள்ள கடலோரக் கிராமம் மயிலிட்டி. ஒரு நெய்தல் நிலக் கிராமம் அக் கிராமம் தமிழ் நாட்டில் உள்ள கோடியக்கரையில் இருந்து தெற்கே 22 மைல் தூரத்தில், பாக்கு நீரணையின் இலங்கைக் கரை ஓரத்தில் அமைந்த கிராமம் என்பதால் அடிக்கடி அவ்வூர் மக்கள் தமிழ் நாட்டுக்குச் சென்று வருவதுண்டு. ஒருகாலத்தில் இலங்கையின் பிரசித்தமான மீன்பிடி துறைமுகங்களில், இரண்டாம் துறைமுகமாய் திகழ்ந்த இடம் மயிலிட்டித் துறைமுகம்.*

*மாவீரர்கள் பலர் பிறந்த ஊர் என்பது அதன் தனிச் சிறப்பு. மயிலிட்டிக்கும் தமிழ் நாட்டுத் தலை நகர் சென்னையில் உள்ள மயிலாபூருக்கும் ஒருகாலத்தில் தொடர்பிருந்ததாக வரலாறு சொல்கிறது. அங்கிருத்து மயிலிட்டி கிராமம் பகுதிக்கு; வந்த; நரசிங்கத்தேவன் என்ற சோழ அரச அதிகாரிக்குப் பாதுகாப்பாக இருந்த ஈட்டிப் படையின் இலட்சணை மயில். ஆகவே அதில் இருந்து மயிலும் ஈட்டியும் இணைந்து மயிலிட்டி என்ற பெயர் கிராமத்துக்கு மருவி இருக்கலாம். வீரமாணிக்கதேவன். ஆரியநாட்டுத் தேவன் பெயர் கொண்ட சோழ அரசின் தளபதிகள் இதன் அருகே சில பகுதிகளை ஆட்சி செய்ததாக வரலாறு சொல்கிறது. இதில் இருந்து இவ்வூர் மக்களின் இரத்தத்தில் வீரம் செறிந்துள்ளது என்பது தெரிகிறது அந்த வீரம் கலந்த மண்ணில் பிறந்தவள் கண்ணம்மா . அவளின் உயரம் ஐந்தடி பத்து அங்குலம். சற்று நிறம் குறைந்தவள். தன் தற் பாதுகாப்புக்குக் கராத்தை, குத்துச் சண்டை சிலம்படி ஆகிய வீர விளையாட்டுகளை கற்றவள். அழகில் குறை இருந்தாலும் குணத்தில் சிறந்தவள். சற்று முற்போக்கு குணம் உள்ளவள். சீதனம் கேட்பதை எதிர்ப்பவள். தன் ஊரில் பெண்களை மதியாது அவர்களின் உரிமைகளை, சமூகத்தில் இருந்து வரும் காலத்தோடுமாறாத மூடநம்பிக்கைகள் மூலம் பல உயர் வர்க்கத்து ஊர்வாசிகள் பறிப்பதை எதிர்த்து சில பெண்களோடு சேர்ந்து போர்க் கொடி உயர்த்தியவள் கண்ணமா . அவளோடு ஒரு பெண் இயக்கமும் . பொதுவுடைமை கட்சியாளர்களும் சேர்ந்து கொண்டனர்*

*தன்னை பல முறை, பெண் பார்க்க வந்து சீதனம் கேட்டு.பெற்றோருக்கு நன்கொடை கிடைக்காததால் பதில் சொல்லாது சென்ற குடும்பங்களை நினைத்து அவள் மனதில் சமூகத்தின் செயலின் மேல் வெறுப்பு ஏற்பட்டது .*

*நேற்று அவளை பெண்ணைப் பார்க்க மாவிட்டபுரத்தில் இருந்து வந்த குடும்பம் ஆறாவது குடும்பம். அக் குடும்பம் அவளிடம் குறுக்கு விசாரணை செய்து, முடிவு சொல்வதாக சென்றவர்கள் மூன்று நாட்கள் ஆகியும் பதில் அவர்கள் சொல்லவில்லை.*

" அம்மா இரு நாட்களுக்கு முன் என்னைப் பெண்பார்க்க வந்து சென்ற குடும்பம் இரு நாட்களில் முடிவு சொல்வதாக சொல்லி சென்றவர்களிடம் இருந்து ஏதும் பதில் வந்ததா . ஓய்வு பெற்ற போஸ்ட்மாஸ்டர் நடராஜர் குடும்பத்தின் மூத்த மகள் கண்ணம்மா கேட்டாள். நடராஜருக்கு மூன்று பிள்ளைகள் . மூத்தவன் செல்வன். இரண்டாவது கண்ணம்மா. கடைக் குட்டி கயல்விழி

" மகள்! அவர்கள் பதில் சொல்லாதது சீதனப் பிரச்சனை தான் . வந்த மாப்பிள்ளையாயின் தாய் எங்களிடம் இருந்து பிடுங்க முடிந்ததைச் சீதனமாகப் பிடுங்கப் பார்க்கிறாள். மாப்பிள்ளையின் தகப்பன் ஒன்றும் பேசவில்லை. அவர் மனுசிக்குபயம் போலத் தெரியுது "நடராஜரின் மனைவி சிவகாமி சொன்னாள்.

"அவர்களுக்கு என்ன சீதனம் வேண்டுமாம். அம்மா "?

"அவர்களுக்கு இந்த வீடு, நான் போட்டிருக்கிற வைரத் தோடு, இருபது பவுனுக்கு நகை, அதோடு நன்கொடை ஐம்பதாயிரம் சீதனமாக வேண்டுமாம் . மாப்பிள்ளை அரசில் நல்ல பென்சன் கிடைக்கும் பதவியில் இருக்கிறாராம். இன்னும் இரண்டு வருஷத்தில் அவருக்குப் பதவி உயர்வு கிடைக்குமாம் "கண்ணம்மாவின் தாய் சிவகாமி சொன்னாள்.

" அப்பா அவர்களுக்கு என்ன பதில் சொன்னார் அம்மா "?

" உன் அப்பாவைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. அவர் ஒன்றுமே பேசாமல் என்னைப் பார்த்தார். எல்லா முடிவும் நான் எடுக்க வேண்டும் ".

"எதுக்கு அம்மா அவர்களுக்கு நன்கொடை வேண்டுமாம் ?. இதென்ன வியாபாரமா"?

"தங்கள் மகளுக்குச் சீதனமாக கொடுக்கவாம். இருந்த காசு முழுவதையும் மகனுக்குப் படிக்கச் செலவு செய்து போட்டினமாம் ".

"இதென்ன திருமணம் என்பது பண்ட மாற்று வியாபாரமா? அவர்கள் என்னைப் பார்க்க வரும் போது நீ ஏன் அம்மா உன் வைரத் தோட்டைப் போட்டுக் கொண்டு இருந்தனி? மாப்பிள்ளையின் தாய் அதைக் கண்டதும் கேட்டிருக்கிறா".

"மகள், யாருக்குத் தெரியுமடி அந்த மனுசியின் பேராசைக் குணம் . ஏதோ நல்ல சாதி சனம், ஜாதகமும் பொருத்தம் . மாப்பிள்ளையும் அரசில் நல்ல உத்தியோகம் என்பதால் உன்னைப் பார்க்க அவர்களை வரச் சொல்லி தரகர் தம்பித்துரையருக்கு சொன்னோம். ஆனால் நடந்தது வேறு"

"அம்மா என்னை பெண் பார்க்க பல தடவை ஆக்கள் வந்து போயிருக்கினம் எல்லோரும் மகனுக்குச் சீதனமாக ,வீடு, நகை நட்டு நன்கொடை . வேண்டும் என்று பேரம் பேசி போயிருக்கினம். இந்த சீதனம் கேட்கும் முறை முற்றிலும் இல்லாமல் போகச் சட்டம் வரவேண்டும் அம்மா" கண்ணம்மா தன் கருத்தைத் தாய்க்கு சொன்னாள்.

''மகள், நீ இப்படிப் பேசுவதால் நீ ஆண் மூச்சுக்காரி எண்டு வந்து போன குடும்பம் தரகருக்கு சொல்லி இருக்கு. அதோடு நீ உன் தற்பாதுகாப்புக்காக பழகிய கராத்தை, குத்துச் சண்டை உனக்குத் தெரியும் என்று தரகர் உன்னைப் பற்றி அவர்களுக்குப் புகழ்ந்து பேசினது உனக்கு எதிராகப் போயிருக்கு'' .

''அம்மா விசித்திரமான சமூக போக்கு எங்கள் ஊர் . பெண் அடக்க ஒடுக்கமாக வீட்டில் சமையல் செய்து கொண்டு இருக்க வேண்டும்.வடிவாக மூக்கு முழியுமாக இருக்க வேண்டும், மாப்பிள்ளையை விட அதிகம் படித்து இருக்கக் கூடாது. பெண்ணின் உடலில் குறை இருக்கக் கூடாது. மாமியாருக்கு அடங்கி நடக்க வேண்டும். திருமணம் முடிந்தவுடன் தனிக்குடித்தனம் போக வேண்டும். இப்படி ஏராளம் நிபந்தனைகள். இப்ப காலம் மாறி போச்சு அம்மா. உதெல்லாம் முந்தி இருந்து. உருத்துக்குத்தான் சொத்து வெளியிலை போகாமல் இருக்க சொந்தத்துக்குள்ளை மச்சானையும் மச்சாளையும் திருமணம் செய்து வைக்கும் முறை இருந்தது. ''

''மகள் எனக்கும் உன் அப்பாவுக்கும் தெரியும் உன் முற்போக்கு குணம். உன்ரை வீர விளையாட்டுகள் பற்றி ஊருக்குத் தெரியும். எங்களிடம் இருக்கும் சொத்தை உனக்கும் உன் தங்கச்சிக்கும் சீதனமாக கொடுத்து திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். உன் அண்ணன் செல்வன் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து மாவீரனாகி விட்டான். அவன் இருந்திருந்தால் உனக்கும் அவனுக்கும் மாற்றுத் திருணத்துக்குப் பேரம் பேசி இருக்கலாம்''.

''அம்மா என்ன விசர் கதை பேசுகிறாய்? அண்ணரின் தமிழ் இனப் பற்று பற்றி புரியாமல் பேசாதே. அவரின் வீரச் செயல் இந்த நாட்டில் ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்துக்குப் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறது. எனக்குத் தெரிந்த சீதனக் கொள்கையால் பாதிக்கப் பட்ட இரு சினேகிதிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து செயல் படுகிறோம்.''

'' என்ன ஏதோ புதுசாய் பேசுகிறாய்?. நீயும் உன் தங்கச்சியும் திருமணம் செய்த எங்கள் குடும்பத்துக்கு வாரிசுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். இப்படி பிற்போக்குத்தனமாகப் பேசாதே''.

''அம்மா எனக்குத் திருமணம் அவசியம் இல்லை . அதற்க்கு என் தங்கச்சி இருக்கிறாள். அவளுக்கு உங்கள் சொத்தெல்லாம் கொடுத்து நல்ல மாப்பிள்ளையாய் பார்த்து திருமணம் செய்து வையுங்கள். அவள் உங்களுக்குப் பேரனோ பேத்தியோ பெற்றுத் தரட்டும். என்னை விட்டு விடுங்கள்''

'' எடியே இதென்ன புதுசாய் பேசுகிறாய்? உதை உன் அப்பா கேட்டால் பிறகு எனக்குப் பிரச்சனை'':

*கண்ணம்மா தாயுக்குப் பதில் சொல்லாமல் தன் அறைக்குள் போய் விட்டாள்.*

****

*நாட்கள் உருண்டோடின. நடராஜர் குடும்பம் தங்கள் மகள் கண்ணம்மா விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்வாள் என எதிர்பார்க்கவில்லை . கண்ணம்மா எழுதி வைத்துச் சென்ற கடிதத்தை நடராஜர் எடுத்து வாசித்தார் .*

*என் அம்மா, அப்பா, தங்கச்சிக்கு கண்ணம்மா எழுதுவது*

*இனி நீங்கள் என்னைத் தேட வேண்டாம். எனக்கு கலியாணம் பேசி கஷ்டப் படவேண்டாம் . நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தமிழ் இன விடுதலைக்காக சேர்ந்து விட்டேன். என் அண்ணார் சென்ற வழியில் சென்று விட்டேன் உங்கள் இருவரினதும் ஆசையை என் தங்கச்சி பூர்த்தி செய்வாள்*

**இப்படிக்கு**

**உங்கள் மகள்**

***கண்ணம்மா***

*நடராஜர் கடிதத்தை வாசித்து முடிந்ததும் வீட்டின் முன் கதவு தட்டும சத்தம் கேட்டது. வந்தவர் தரகர் தம்பித்துரையர் .*

*“ என்ன ஐயா நான் கேள்விப்பட்டது உண்மையே உங்கள் மகள் கண்ணம்மா இயக்கத்தில் சேர்ந்து விட்டாளாம் . ஊர் பேசுது ”*

*“துரை நீர் கேள்விப் பட்டது உண்மை. அது அவள் எடுத்த முடிவு” என்றார் நடராஜர்.*

*“கண்ணம்மாவின் நல்ல முடிவு ஐயா. இன்னொரு செய்தியை உங்களுக்கு சொல்ல வந்தனான்”.*

*“ என்ன செய்தி எண்டு சொல்லுமேன் துரை”*

*“வைரத்தோட்டை சீதனமாக் கேட்ட மாவிட்டபுரம் குடும்பத்திலிருந்த அரசில் வேலை செய்த மாப்பிள்ளை லஞ்சம் வாங்கியதுக்கு ஊழல் கட்டுப்பாட்டு இலாக்காவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் . குறைந்தது அவருக்கு மூன்று வருஷம் சிறை கிடைக்கும் என்று ஊரிலை பேசிக் கொள்ளினம்” துரை சொன்னார்*

*“இதை தான் பேராசை கூடாது என்பினம் ? நடராஜர் மனைவியைப் பார்த்துச் சிரித்த படியே சொன்னார் .*

*****

## *கதை 19*

## ஓடிப்போனவள்

*வேலி என்பது சோழர் காலத்தில் நில அளவைக்குப் பாவிக்கப்பட்ட வார்த்தையாகும். யாழ்ப்பாண குடா நாட்டில் சங்குவேலி, நீர்வேலி. திருநெல்வேலி என்று வேலியில் முடிவடையும் கிராமங்களில் பிரசித்தம் பெற்ற ஊர் அச்சுவேலி. அச்சன்வேலி அச்சு வேலியாக மருவி இருக்கலாம். அத்திமரம் அதிகம் காணப்பட்ட ஊர் ஆகையால்இடப்பெயர் வந்திருக்கலாம் என்பதும் பல இடப்பெயர் ஆய்வாளர்கள் கருத்து. யாழ். குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என்ற மூன்று பெரும் பிரிவுகளுக்கும் ' அச்சுப்போல் மைய இடத்தில் அமைந்துள்ள கிராமமாகையால் அச்சுவேலி என்ற பெயர் வந்திருக்கலாம் என்பது இன்னொரு சாராரின் விளக்கம் உண்டு அச்சுவேலி கிராமத்துக்கு அருகே இடைக்காடு, வளலாய், பத்தமேனி ஆகிய கிராமங்களாலும் சூழப்பட்டது. அச்சு என்பது போர்த்துகேய சொல். ஆதனால் அக்கிராமத்தில் போரத்துக்கேயர் ஆட்சியின் போது கத்தோலிக்க மதம் செழித்து இருந்ததற்கு ஆதாரம் இன்றுமுண்டு.*

*அச்சுவேலிப் பகுதியில் அமைந்துள்ள மூன்று கத்தோலிக்க தேவாலயங்களில் இரண்டாவது பெரிய தேவாலயமாக விளங்குவது அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியார் ஆலயம், இந்த ஆலயம் அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் 750 மீற்றர் தூரத்தில் வீதிக்கு வடக்குப் புறத்தில் கம்பீரமாக றோமன் கத்தோலிக்க கட்டிடக் கலை அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.*

*புனித சூசையப்பர் ஆலயம், நவக்கிரி அன்னம்மாள் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம் என்பன அமைந்துள்ளன இக்கிராமத்தில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் மதமாறற்ம நடந்ததுக்கு ஆதாரமுண்டு.. இலங்கைக்கு 1505இல் போர்த்துக்கேயரின் வருகை, 1618இல் ஒல்லாந்தரின் வருகை என்பனவற்றை அடுத்தே றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயங்களின் வியாபகமும் அந்தச் சமயங்கள் சார் நிலையில் ஆலயங்களும் அமைக்கப்பட்டுக் குறித்த காலகட்ட ஆட்சியாளர்களின் தனித்துவமான செல்வாக்கோடு சுதேசிகள் மத்தியில் பரப்பப்பட்டன. அதற்கு முந்திய காலப்பகுதியில் வடபகுதியில் பெருமளவில் இந்து மதமும், குறிப்பிட்ட நகரக் குடியிருப்புக்களை அண்டிய நிலையில் இஸ்லாம் மதமும் வழிபாட்டுக்குரியனவாக இருந்து வந்தன.*

*அச்சுவேலிப் பகுதியில் முதன்முதலாக 1800ஆம் ஆண்டுக்குப் பின்னர் றோமன் கத்தோலிக்க சமயம் அச்சுவேலி மேற்கில் சிற்றம்பலமுதலியாரின் மகள் திருமதி*

மரியம்செட்டியார் காக்கைப்பிள்ளை (டொன்மரியா) குடும்பத்தினர் சார்நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தவகையில் புனித சூசையப்பர் ஆலயமும் அச்சுவேலி மேற்கில் (அச்சுநகர்) நிறுவப்பட்டது. 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் அச்சுவேலிப் பங்கில் 400 குடும்பங்கள் வரையில் கத்தோலிக்க குடும்பங்களாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

ஊர்ப் பெயர் எப்படி வந்ததாக இருப்பினும் சுற்றி வளைக்காமல் நாம் கதைக்கு வருவோம். அச்சுவேலி ஊருக்கு முதற் தடவையாக வருவோருக்கு நிலக் குறியாக "அன்னவாசா" வீடு பாவிக்கப்பட்டது. கிராமத்தில் வாழ்ந்த மக்கள் பலர் பிற நாடுகளுக்கு புலம் பெயர்ந்தவர்களின் உழைப்பால் செல்வம் கொழிக்கும் ஊராக வளர்ந்து, பல புது வீடுகள் புதிய பாணியில் தோன்றினாலும் அன்னவாசாவின் தோற்றத்தில் மட்டும்; பழமை பிரதிபலித்து, கம்பீரமாக நின்றது. அன்னவாசா சுமார் நூறு வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட வீடு. குறிப்பாகச் சொல்லப்போனால் 1916 ஆம ஆண்டு ஒல்லாந்தர் ஆட்சியின் போது கச்சேரியில் உயரப் பதவியில் இருந்து முதலியார் பட்டம் பெற்ற முதலியார் இமானுவேல் தேவநேசனால் கட்டப்பட்ட வீடு. வீட்டு வாசலில் நின்ற இரு தூண்களின் மேல் இரு அன்னங்கள். அதுவே அவ்வீட்டுக்குப் பெயர் வரக்காரணம். அதுவுமில்லாமல் இமானுவேல் அந்த வீட்டை தன் மனைவி மரியாள் அன்னலட்சுமியின் சீதனத்தில் கட்டிய வீடு. மாமனார் அவ்வீட்டுக்குத் தன் மகள் பெயர் நிலைத்து நிற்க பெயர் வைக்கவேண்டும் என நிர்ப்பந்தம் செய்ததால் அவ்வீட்டுக்கு அப்பெயரை இமானுவேல் வைக்க வேண்டி வந்தது.

இமானுவேல் தேவநேசன் தம்பதிகளுக்கு அந்தோனியார் தேவாலயத்தோடு நெருங்கிய தொடர்புண்டு. இமானுவேலுக்கு இரு மகள்கள்;. மூத்தவள்; பெயர் கிறிஸ்டினா பொன்னம்மா. இரண்டாவது மகள் பெயர் லட்டீசா ஜெயமணி. மூத்தமகள் பிறந்தபின்னரே இமானுவேலுக்கு செல்வம் சேரத் தொடங்கியது. அதனால் தானோ என்னவோ கத்தோலிக்க இந்து மத பெயர்களை கலந்து மகளுக்கு அந்தப்பெயரைச் சூட்டினார்.

கிரிஸ்டினாவுக்கு அழகுக்குக் குறைவில்லை. தினமும் விதம் விதமான ஆடை அணிவாள். இமானுவேலுக்கு சொந்தத்தில் பச்சை நிறத்தில் ஒஸ்டீன் ஏ40 டெவொன் மொடல் கார் இருந்தது, அச்சுவேலியில் சொந்தமாக கார் வைத்திருந்தவர் அவர் ஒருவரே. முதலில் ரிக்ஷோ, அதன்பின் குதிரை வண்டி வைத்திருந்தார். நாளடைவில் போக்குவரத்துக்கு காரை வாங்கினார். .அவருக்கு கார் ஓட்டத் தெரியாததால் இடைக்காட்டு ஊரைச் சேர்ந்த சொந்தக்காரப் பையன் சுப்பிரமணியன் என்ற இந்து இளைஞனை டிரைவராக வைத்திருநதார். அவனே தினமும் காரில் கிறிஸ்டினாவை கல்லூரிக்கு அழைத்துப் போய்வருவான்.

ஆரம்பத்தில் காரில் போகும் போது சுப்பிரமணியன் தேவையில்லாமல் கிறிஸ்டினாவோடு உரையாடுவதில்லை காரணம் அவள் எஜமானின் அன்பு மகள்; அல்லவா. காருக்கு பின்

*சீட்டில் இருந்தபடியே அன்று நடக்க விருக்கும் விஞ்ஞான பாடத்துக்கு தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தாள் கிரிஸ்டினா.*

*“அடக்கடவுளே. என் தலை விதி. இந்த மூன்று நியூட்டனின் விதிகளும் எனக்கு புரியுதில்லையே. டீச்சர் கூட வகுப்பில் சரிவர விளஙகப் படுத்தவில்லை” கிறிஸ்டினா முணுமுணத்தாள்*

*அவள் முணுமுணுத்தது கார் ஓட்டிக்கொண்டிருந்த சுப்பிரமணியன் காதுகளுக்கு எட்டியது. அவன் சிரித்ததை கிறிஸ்டினா கவனித்துவிட்டாள்.*

*“ ஏன் சிரிக்கிறாய் சுப்பிரமணி“? கிறிஸ்டினா கேட்டாள்.;.*

*“ ஏன் தங்கச்சி. இண்டைக்கு பிசிக்ஸ் பாடத்தில் உங்களுக்கு டெஸ்டா?*

*“ ஓம். அது எப்படி உனக்குத் தெரியும்”?*

*“ அதில்லை, நியூட்டன் விதிகளைப் பற்றி சொன்னீர்கள் அதுதான்”*

*“ ஏன் உனக்கு அந்த விதிகளைப் பற்றி தெரியுமா”?*

*“ ஏன் தெரியாமல்?. பௌதிக பாடத்தில், வகுப்பில் அதிக மாரக்ஸ் நான் வாங்கினவனாச்சே”*

*“ அப்படியா? அதுசரி எது வரை படித்திருக்கிறாய்.“?*

*“ஏ லெவல் வரை”.*

*“ அது எனக்கு தெரியாதே. அப்ப ஏன் மேலும் படிக்கவில்லை”?*

*“ தந்தையார் இறந்த பின் என் தாயாருக்கு என்னைப் படிப்பிக்க பணவசதியில்லை. அப்பா இரண்டு வருஷத்துக்கு முன்பே இறந்துட்டார். அம்மா வீடுகளில் வேலை செய்து என்னையும் என் தங்கச்சியையும் வளர்க்கிறாள். முதலிலை கார் கராஜ் ஒன்றில் மெக்கானிக்காக வேலை செய்தனான். அவருடைய ஏ40 காரை நான் தான் ரிப்பெயர் செய்து கொடுப்பேன். பிறகு உங்கள் அப்பாவிடம் கார் டிரைவராக சம்பளத்துக்கு சேர்ந்தனான்” விபரம்; சொன்னான் சுப்பிரமணி*

*“ உனக்கு நீயூட்டன் விதிகள் பற்றி நல்லாக தெரியுமென்றால் அந்த விதிகளோடு சம்பந்தப்பட்ட இந்த பொளதிக கணக்கை எனக்கு உன்னால் விளங்கப் படுத்த முடியமா? இந்தக் கணக்கு டெஸ்டுக்கு வரும் எண்டு நினைக்கிறன்.”*

*“ கணக்கை நான் பார்த்தால் விளங்கப்படுத்த முடியும். “*

*“ அப்ப காரை ஓரமாகக் கோயில் மடத்தடியிலை நிறுத்தி இக்கணக்கை விளங்கப்படுத்து” கிறிஸ்டினா சுப்பிரமணியிடம் வேண்டினாள்;.;*

*சுப்பிரமணியனுக்கு கிறிஸ்ரினா கேட்டது ஒரு சவாலாக அமைந்தது.*

*" அதுக்கென்ன தங்கச்சி" என்று கூறியவாறே காரை கோவில் மடத்தடியில் நிறுத்தினான். கிறிஸ்ரினா கொடுத்த பௌதிக கணக்கைப் பார்த்ததும் அவனுக்கு வினாவுக்குப் பதில் தெரிந்து விட்டது. உடனே கணக்குகிற்கான விடையை தெளிவாக கிறிஸ்ரினாவுக்கு விளங்கப்படுத்தினான். கிறிஸ்ரினா சுப்பிரமணிக்கு அவ்வளவுக்கு விஞ்ஞான அறிவு இருக்குமென ஏதிர்பார்த்திருக்க வில்லை.*

*பௌதிக கணக்கில் ஆரம்பித்த அவர்களிடேயேயான தொடர்பு கல்லூரிக்குப் போகும் வழியில் தினமும் சில நிமிடங்கள் கோவில் மடத்தடியில் விஞ்ஞான பாடங்களில் உள்ள சந்தேகங்களை நிவிர்த்தி செய்யும் சந்தர்ப்பமாக அமைந்தது. காலப் போக்கில் மடத்தடி டியூசன் படிப்படியாகச் சிரித்து பேசித் தொட்டு உரையாடும் அளவுக்கு அவர்களிடையே காதலாக மலர்ந்தது.*

*நாளடைவில் கிறிஸ்ரினா வகுப்பில் அதிக புள்ளிகள் எடுக்கத் தொடங்கினாள். விஞ்ஞான பாடம் படிப்பிக்கும் டீச்சருக்கு ஒரே ஆச்சரியம்.*

*" என்ன கிறிஸ்றினா முன்பு ஐம்பதுக்குக் குறைவாக மார்க்ஸ் எடுத்த நீ இப்போ எண்பது மேலே எடுக்கிறாயே அது எப்படி? டீச்சர் கேட்டாள்.*

*" எனக்குத் தெரிந்த ஆண்டி ஒருத்தி டியூசன் சொல்லி தருகிறா" என்று சொல்லி மழுப்பிவிட்டாள்.*

*கோவில் மடத்தடியில் கிறிஸ்ரினாவும் சுப்பிரமணியனும் அடிக்கடி சந்தித்து பேசுவதைக் கோயில் ஐயர் சிவசர்மா கண்டுவிட்டார். அவருக்கு இரு குடும்பங்களையும் தெரியும். இமானுவேல் ஒரு திவிர கத்தோலிக்கர் என்பதை அவர் அறிவார்.*

*பிரச்சனை பெரிதாக முன் ஒரு நாள் அவர் சுப்பிரமணியனை அழைத்து*

*"இங்கைபார் சுப்பிரமணி நீ இமானுவேல்; முதலியாரிடம் டிரைவராக வேலை செய்வது எனக்குத் தெரியும். அவர் ஒரு விவர கத்தோலிக்கர். நீயோ ஒரு இந்து மதத்தவன்;. நீயும் முதலியாரின் மகளும் சிரித்துப் பேசி பழகுவது எனக்குச் சரியாக படயில்லை. அதனாலை வீண் வில்லங்கம் தான் வரும். உங்களிடையே இந்தக் காதல் தொடர்ந்தால் முதலியாருக்கு நான் உங்கள் காதலைப் பற்றி முறையிட வேண்டிவரும். அதனாலை வரும் விளைவை உனக்குத் தெரியும் தானே. ஊரிலை மதக் கலவரம் கூடத் தோன்றலாம்"என்று எச்சரிக்கை செய்தார்; ஐயர்.*

*ஐயரின் அந்த எச்சரிக்கையால் அவர்கள் சந்தித்து பேசும் இடம் மடத்தடியில்; இருந்து குளத்தடியில் உள்ள ஆலமரத்தடிக்கு மர்றியதே தவிரக் காதல் தொடர்ந்தது.*

ஒரு நாள் வெகு நேரமாகியும் கிறிஸ்ரினா வீடு திரும்பவில்லை. அன்னம்மா கணவனுக்கு முறையிட்டாள்

“ என்னங்க பள்ளிக் கூடம் மூன்று மணிக்கு முடிந்து விடும். மூன்றரைக்குள் வீடு வந்து விடலாம். இப்ப நேரம் ஐந்தரை. சுப்பிரமணி கிறிஸ்ரினாவை இன்னும் ஸ்கூலாலை கூட்டி வரவில்லை. இவர்களுக்கு என்ன நடந்தது என்று யாரையாவது ஸ்கூலுக்கு அனுப்பி கிரிஸ்ரினாவுக்கு என்ன நடந்தது என்று கேளுங்கோவன்” பதட்டத்தோடு அன்னம்மா கணவனிடம் முறையிட்டாள்.

கிறிஸ்ரினாவை தேடி இமானுவேல் ஸ்கூலுக்குப் புறப்படும்; போது கிறிஸ்ரினாவின் சினேகிதி வத்சலா ஒரு கடிதத்தை கொண்டு வந்து அவரிடம் கொடுத்தாள்.

“ வத்சலா யார் கொடுத்த கடிதம்”? இமானுவல் கேட்டார்.

“ உங்கள் மகள் கிறிஸ்ரினா தான் இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொல்லி என்னிடம் தந்தவ” என்று வத்சலா பதில் சொல்லிவிட்டு அவ்விடத்தில் நின்றால் பிரச்சனை எனக் கருதி நிற்காமல் போய்விட்டாள்.

இமானுவேல் கடிதத்தை கவரில இருந்து எடுத்து வாசித்தார்.

“ அன்பான அப்பா, அம்மா சகோதரிக்கு.

என்னை நீங்கள் இனி தேட வேண்டாம். நான் சுப்பிரமணியோடு கொழும்புக்குப் போய் எங்களுக்கு என வாழ்க்கையை அமைத்து வாழப்போகிறோம். நான் சுப்பிரமணியை கன காலம் காதலிக்கிறேன். அவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்ற படியால் எங்கள் காதலை நீங்கள் ஏற்கமாட்டீர்கள். கார் கொடிகாமம் ஸ்டேசனில் நிற்கிறது. சாவியை ஸ்டேசனுக்கு முன்னால் உள்ள முருகன் கபே முதலாளியிடம் கொடுத்திருக்கிறோம் வாங்கிக் கொள்ளுங்கள். ஏங்களுக்குத் தெரியும் நாங்கள் இருவரும் வெவ்வேறு மதமாகையால் அச்சுவேலி கத்தோலிக்க மக்கள் நானும் சுப்பிரமணியும் கணவன் மனைவியாக வாழ ஏற்கமாட்டார்கள். அப்பா எங்கள் செலவுக்கு அலுமாரியில் இருந்து கொஞ்ச பணம் எடுத்துச் செல்கிறேன். அவர் வேலை எடுத்ததும் அந்தப் பணத்தை உங்களுக்கு அனுப்புவார்.

**இப்படிக்கு**

**கிறிஸ்ரினா – சுப்பிரமணியன்**

கடிதத்தை வாசித்ததும் அதிர்ச்சியில் நெஞ்சை பிடித்துக்கொண்டு இமானுவல் கதிரையில் அமர்ந்தார். அவர் கையில் இருந்து கீழே விழுந்த கடிதத்தை எடுத்து வாசித்து அன்னம்மாள் ஓ வென்று அழுதாள்.

''படு பாவி. செல்லம் கொடுத்து வளர்த்தியளே மோசம் செய்து போட்டு ஓடிப்போயிட்டாளே. எங்கடை மனம் நோக வைத்துப் போட்டு நல்லாய் உவள் வாழமாட்டாள்'' என்று திட்டத் தொடங்கினாள் அன்னம்மா. இனத்தவர்கள் கூடி நடந்ததை விசாரித்து எரிகிற நெருப்பிலை எண்ணெயை வார்த்தது போல் பேசத் தொடங்கினார்கள். அநத கூட்டத்தில் ஒருத்தி பொலீசுக்கு போய் முறையிடும் படி ஆலோசனை சொன்னாள்

'' முறையிட்டால் ஒன்றும் நடக்கப் போவதில்லை. இருவரும் மைனர்கள் இல்லை என்று பொலீஸ் சொல்லிப்போடும்'' என்றார் இமானுவேல். வீட்டு ஹாலில் தொங்கிக் கொண்டிருந்த கிறிஸ்ரினாவின் படம் இருந்த இடம் rதிரியாமல் மறைந்தது.

'' இனி எப்படி இமானுவேல் ஊரிலை கத்தோலிக்க மக்களிடையே மரியாதையோடு வாழ முடியுமா?. இனி எப்படி இவள் லட்டீசியாவுக்கு கலியாணம் பேசமுடியும்?. அக்கா டிரைவரோடை ஓடிப்போனவள் என்ற கெட்ட பெயர் இவள் திருமணத்துக்கு தடையாக இருக்குமே'' அன்னலட்சுமி கண்ணீர் விட்டு கவலைப் பட்டாள்.

****

வருடங்கள் ஐந்து உருண்டோடின. இமானுவேலின் செல்வம் குறையத் தொடங்கியது. வயல் காணியையும், காரையும் விற்றார். பயத்தில் லட்டீசாவை மேலே படிக்க விடவில்லை. சில்லாலை, இளவாலை போன்ற கத்தோலிக்க ஊர்களில் இருந்து லட்டீசாவுக்கு பேசி வந்த திருமணங்கள் தமக்கை ஒரு இந்து மத டிரைவரோடு ஓடிப்போனவள் என்று கேள்விபட்டு

தடைப்பட்டன. தனக்குத் திருமணம் வேண்டாம். தான் கன்னியாஸ்திரீயாக போகப் போறன் என்று பெற்றோரை வற்புறுத்தினாள் லட்டீசா. அந்த நேரம்; அந்தோனியார் கோவில் பாதிரியாரின் தூரத்து உறவுப்யையனான சூசைப்பிள்ளை லட்டீசாவை மணமுடிக்க பாதிரியார் மூலம் விருப்பம் தெரிவித்தான்.

ஒரு நாள் ஜோசப் பாதிரியார் இமானுவேலை சேர்ச்சுக்கு அழைத்து

'' இமானுவேல் உன் மகளுக்கு அந்தோனியார் வழிகாட்டி விட்டார். எனது தூரத்து சொந்தக்காரப் பையனான சூசைப்பிள்ளை நல்ல பிள்ளை. துபாயிலை மெக்கானிக்காக வேலை செய்கிறான் அவனுக்கு கிறிஸ்ரினா சுப்பிரமணி காதல் பற்றி தெரியும்;;. அவர்கள் தான் அவனுக்கு துபாயிலை மெக்கானிக் வேலை எடுத்துக் கொடுத்து நல்ல சம்பளத்தில் வேலை செய்கிறான்'' என்றார் ஜோசப் பாதிரியார்.

'' என்ன பாதர் சொல்லுறியள். லட்டீசியாவுக்கு மாப்பிள்ளை தானாவே கேட்டு உங்களிடம் வந்து சொன்னான் என்கிறியளா''?

'' ஓம்., சுப்பிரமணி தனக்குச் செய்த பெரிய உதவிக்கு இது பிரதி உபகாரமாக தான் செய்ய வேண்டும் என்கிறான் சூசைப்பிள்ளை''

*"அப்ப கிறிஸ்ரினா துபாயிலையா இருக்கிறாள்."?*

*" ஓம் ஒரு டிரான்ஸ்போர்ட் கம்பனியில் சுப்பிரமணி மனேஜராக இருக்கிறான்.*

*வடமராட்சியில் இருந்து மத வேற்றுமை பாராமல் பத்து பேருக்கு துபாயிலை தன் கொம்பனியிலை டிரைவர் வேலை எடுத்து கொடுத்திருக்கிறான்"*

*" அப்ப கிறிஸ்ரினா"?*

*"அவளும் துபாயிலை ஸ்கூல் ஒன்றில் டீச்சராக வேலை செய்கிறாள். சுப்பிரமணி தம்பதிகளுக்கு இரண்டு பிள்ளைகள் என்று சூசைபிள்ளை எனக்கு சொன்னான். நீர் என்ன சொல்லுகிறீர்.? லட்டீசாவை சூசைப்பிள்ளைக்கு திருமணம்; செய்து வைக்க உமக்கும் அன்னலட்சுமிக்கும் சம்மதமா? சீதனம் ஒன்றும் கொடுக்கத் தேவையில்லை. ஆனால்…".*

*" ஆனால் என்ன பாதர்"?*

*" திருமணம் முடிந்த பிறகு துபாய்க்கு லட்டீசாவை, சூசைப்பிள்ளை கூட்டிக் கொண்டு போய் விடுவான். சம்மதம் தானே"?, பாதர் இமானுவலைக் கேட்டார்.*

*சற்று, வினாடி மூக்கில் கை வைத்து யோசித்து விட்டு " இந்தத் திருமணத்துக்கு எனக்கும் அன்னம்மாவுக்கும் பூரண சம்மதம் பாதர். இந்த சேர்ச்சிலை திருமணம் உங்கள் ஆசியோடு நடக்க வேண்டும்" என்றார் இமானுவேல்;*

*சேர்ச்சில் இருந்து வீடு திரும்பிய இமானுவேல் செய்த முதற் காரியம் ஸடோர் ரூமுக்குள் தூசி படர்ந்து கிடந்த கிறிஸ்ரினாவின் படத்தைத் தூசி தட்டி ஹால் சுவரில் மாட்டியது.*

## *கதை 20*

## *தையல்காரி தையல்நாயகி*

*மட்டுவில் இலங்கையின் வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒரு விவசாய கிராமம். சாவகச்சேரி நகரில் இருந்து கிட்டத்தட்ட 3 மைல் தொலைவில் உள்ள வரலாற்றுப் பழைமை கொண்ட ஊர். இங்கு மிகவும் புகழ் பெற்ற பன்றித்தலைச்சி அம்மன் கோவில் அமைந்துள்ளது. அம்பாளின் ஆலயம் 1750ஆம் ஆண்டுப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டதாக ஆலயத்தின் மூலஸ்தானத்தின் பின்புறமாக பித்தளையில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் சான்று பகர்கின்றன. ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்கள் நீராடுவதற்கு வசதியாக ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் 100 அடி நீளம் அகலம் உடைய தீர்த்தக் கேணி அமைந்துள்ளது. அங்கு பொங்கல் பொங்கி அம்பாளுக்கு நிவேதித்து வரும் அடியவர்களிற்கும் வழங்கி இஷ்ட சித்திகளைப் பெறுவர். முற்காலத்தில் அம்பாள் மட்டுவில் பகுதியில் இயற்கை வனப்பு நிறைந்த கிராமத்தில் உறைந்து பல அற்புதங்களையும் அருளாட்சியையும் வழங்கி வந்ததாக வரலாறுகள் கூறிவருகின்றன.*

*இவ்வாலயத்தில் பறையடிக்கும் பக்தன் ஒருவன் தனது குலத்தொழிலான புலைத்தொழிலையும் செய்து வந்தான். அன்றொருநாள் அவனெறிந்த கூரிய ஆயுதம் இலக்குத் தவறியோ அல்லது திருவருட் செயலாகவோ பசு ஒன்றின் மீது பட்டது. உடனே அப்பசு துடிதுடித்து இறந்தது. அம்மன் மீது அளவற்ற பக்தி கொண்ட அந்த பக்தன் வருந்தி, பின்னர் தெய்வத்தின் துணை இருக்கிறதே என்ற துணிவோடு அந்தப் பசுவை ஆலயத்திற்கு தென்கிழக்கு பகுதியில் புதைத்து விட்டான்.*

*நடந்த சம்பவத்தை எப்படியோ தெரிந்து கொண்ட மாட்டுச்சொந்தக்காரன், பக்தன் மீது நடவடிக்கை எடுத்தான். பசுக்கொலை புரிந்த பாதகத்திற்காக தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பயந்த பக்தன் தனக்கு அபயம் அளிக்கும்படி அன்னையிடம் வேண்டினான். அன்றிரவு அடியவனின் கனவில் முதிய விதவைககோலத்தில் காட்சி கொடுத்த அம்மை, நாளைய தினம் பன்றி எச்சங்களையே புதைத்ததாகச் சொல்லச் சொன்னதாகவும், மாட்டுத்தலை புதைக்கப்பட்ட இடத்தில் பன்றித்தலையே கிடைத்ததாலும், தேவிக்கு பன்றித்தலைச்சி என்ற பெயர் ஏற்பட்டதாக மரபுரைகள் சொல்கின்றன. தனது பக்தனுக்கு கிழக்கோலத்தில் கனவில் காட்சி கொடுத்த காரணத்தாற் போலும் அன்னையைப் பற்றிப் பேசும் போது "கிழவி' எனக் குறிப்பிட்டுப் பேசுவோர் மட்டுவிலில் இன்றும் வாழ்கிறார்கள்.*

இவ்வளவு பிரசித்தம் பெற்ற அம்மன் கோவில் பொங்கலுக்கு முக்கியமாக மட்டுவிலில் விளைந்த ருசியான கத்திரிக்காய் கறி சமைத்து, அம்மனுக்கு படைப்பது வழமை. மட்டுவில் கிராமத்தில் பன்றிதலைச்சி அம்மன் கோவில் பொங்கலுக்கு பல கிராமங்களில் இருந்து மக்கள் வருவார்கள். மட்டுவில் பல மாவீரர்கள் பிறந்த கிராமம்.

அம்மன் கோவிலில் பூசாரிக்கு உதவியாக இருந்தவன் முத்துராசா. கோவிலில் இருந்து கிடைத்த வருமானத்தில் தன் குடும்பத்தை நடத்திவந்தான் முத்துராசா.

. அவனின் மனைவி தையல்நாயகி தையலுக்கு கெட்டிக்காரி. அந்த ஊர் வாசிகள் பலர் அவளிடமே தங்கள் ஆடைகளைத் தைப்பது வழக்கம். அதில் வரும் வருமானமும் இரு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தை நடத்த தையலுக்கு உதவியது. மூத்த பிள்ளை செல்வன். அவனுக்கு இரு வருடங்களுக்குப் பின் பிறந்தவள் செல்வி .

செல்வன் விளையாட்டுகளில் சிறந்து விளங்கினான். குத்துசண்டை, உயரம்பாய்தல், ஓட்டம் ஆகியவற்றில் அவன் படிக்கும் போது பரிசுகள் வாங்கினவன். தந்தையைப்போல் ஆறடி உயரம். திடகாத்திரமான உடம்பு. நினைத்தை சாதிப்பவன். சிறுவயது முதல் தமிழ்ப்பற்று உள்ளவன். அவனது நோக்கம் தன் சாதனை படைத்து ஊருக்கு காட்டவேண்டும் என்பதே. தனது பெயர் ஊர் வரலாற்றில் பதிவாகவேண்டும் என்பதே. அவன் படிப்பில் கவனம் செலுத்தவில்லை. பதினோராம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டான்

அவனுக்கு பல கூட்டாளிகள். தையல்நாயகியும் முத்துராசாவும் அவனைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. அவனது நண்பன் சீலன், வல்வெட்டித்துறையை பிறப்பிடமாக க் கொண்டவன். விடுதலை புலிகள் இயக்கத்தோடு அவனுக்கு தொடர்பு இருந்தது.ஒரு நாள் அவன் செல்வனை பார்த்து,

"நண்பா உன்னைப்போல் உடலமைப்பு உள்ள இளம் வாலிபர்கள் தமிழுக்காக போராட இயக்கத்து அவசியம் தேவை. நீ சம்மதித்தால் உன்னை இயக்கத்தில் சேர்த்துவிடுகிறேன். எனக்கு இயக்கத்தில் முக்கிய பதவியில் உள்ள சிலரை தெரியும். என்ன சொல்லுகிறாய் செல்வா?, சீலன் நண்பனைக் கேட்டான். செல்வனுக்கு எப்போது சீலன் தன்னை இயக்கத்தில் சேர கேட்பான் என்று இருந்தது. உடனே இயக்கத்தில் சேர பெற்றோரின் அனுமதி இல்லாமல் சேர சம்மதித்து விட்டான் .

பெற்றோர் எவ்வளவோ தடுத்ததும் தமிழ் இனத்துக்காக நான் என்னைத் தியாகம் செய்ய வேண்டும் என்று செல்வன் சேர்ந்தான்.

காலப்போக்கில் இயக்கத்துக்கு செல்வனின் தாய் ஒரு தையல்காரி எனத் தெரிய வந்தது. அதனால் செல்வன்மூலம் தேவையான சீருடைகளை இயக்கத்துக்கு தைப்பதற்கு எவ்வளவோ தையல்நாயகியை கேட்டும் அவள் முதலில் மறுத்து விட்டாள். போலீஸ் அறிந்தால் தனக்கு பிரச்சனை வரும் என்ற பயம் அவளுக்கு.

"அம்மா உன்னை சும்மா தைக்க சொல்லவில்லை. இயக்கம் உனக்கு பணம் தரும் அம்மா. யோசித்து பார். செல்வியின் கல்யாணத்துக்கு பணம் வேண்டாமா?

தையலின் பொல்லாத காலம், அவளின் கணவன் முத்துராசாவை இயக்கத்துக்கு உதவியதாக போலீஸ் கைது செய்து கொழும்புக்கு கூட்டிப்போனது போனது தான். அதன் பின் அவனின் பேச்சே இல்லை. உயிரோடு இருக்குறானோ தெரியாது. குடும்பத்தை நடத்த தையலுக்கு வருமானம் போதவில்லை. வேறு வழியில்லாமல் சீருடை தைக்க ஒப்புக் கொண்டாள்.

செல்வி ஏ லெவலோடு நேர்ஸ் வேலைக்கு சேர்ந்தாள். பல இடங்களில் இருந்து அவளுக்குத் திருமணம் பேசிவந்தாலும் சீதனம் போதாமையால் கலியாணம் முற்றாகவில்லை

இயக்கத்தில் செல்வன் சேர்ந்த பின், ஒருதடவை மட்டுமே வீட்டுக்கு வந்தான். அவனது பேச்சு முற்றிலும் மாறுபட்டு இருந்தது. காட்டிக்கொடுக்கும் துரோகிகளைஅழிக்க வேண்டும். போலீசை இல்லாமல் செய்யவேண்டும் என்றெல்லாம் பேசினான்

செல்வனுக்கு விரும்பிய சுறாபுட்டும் முட்டைபொரியலும் தையல் செய்து கொடுத்தாள்; இரு நாட்கள் வீட்டில் இருந்துவிட்டு இயக்கத்தில் இருந்து ஒரு அவசர அழைப்பு வந்ததும்

"அம்மா நான் பூநகரி போருக்கு போறன் உயிரோடு திரும்பி வருவேனோ தெரியாது. தங்கச்சியின் கலியாணத்துக்கு என்னைப் பார்த்துக் கொண்டு இருக்காதே. நல்ல இடத்திலை பேசி வந்தால் செய்துவிடு" என்று சொல்லி போனவன் சில மாதங்களாக திரும்பி வரவில்லை.

செல்வனுக்கு இயக்கத்தில் பதவி உயர்வு கிடைத்து கரும்புலியாக மாறிவிட்டான் என்று தையல் கேள்விப்பட்டதும் இனி அவன் திரும்பிவரமாட்டான் என மனதுக்குள் நினைத்து கவலைப் பட்டாள்.

"கரும்புலியானால் உயிரை எப்போதும் தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்பது உண்மையா செல்வி", தையல் மகளைக் கேட்டாள்.

"அம்மா எதுக்கு கவலைப்படுகிறாய்.நீ அண்ணாவை பற்றி பெருமைப்படவேண்டும். நம் ஈழ விடுதலைக்காக உயிரைத் துட்சமாக மதித்து செயல் படுகிறான் " என்றாள் செல்வி.

" எனக்குக் கொள்ளி வைக்க அவன் ஒருவனே எனக்கு வாரிசாக இருக்கிறான். அவன் உயிருக்கு அம்மனே ஒன்றும் நடக்கக்கூடாது" அம்மன் இருக்கும் பக்கத்தை நோக்கி கைகூப்பிக் கும்பிட்டாள் தையல்.

"செல்விக்கு மீசாலையில் பேசிவந்த திருமணம் நல்ல ஜாதகப் பொருத்தம். மாப்பிள்ளை ஒரு ஆசிரியன். அவனுக்கு திருமணமாகாத அக்கா. அவளுக்கு சீதனம் கொடுக்க ஒரு

இலட்சம் நன்கொடையாக கேட்கினம். நீங்கள் கொடுக்க சம்மதித்தல் நான் பேசி முடித்து போடுவேன்.எனக்கு தரகர் காசு பத்தாயிரம் தந்தால் போதும். என்ன சொல்லுகிறியள் “? தரகர் தம்பிப்பிள்ளை கேட்டார்.

தையலால் உடனே தரகருக்கு பதில் சொல்லமுடியவில்லை. சின்னம்மாவிடம் சீட்டு பிடித்து பத்தாயிரம் மட்டுமே அவளிடம் இருந்தது. மிகுதி பணத்துக்கு எங்கை போவது?. தையல் யோசித்தாள் .

அவள் நினைவுக்கு தாய் மாமன் ஓவர்சியர் நடராசர் வந்தார். அவரிடம் கேட்டால் என்ன.? அவரிடம் போய் தயக்கத்தோடு தையல் கேட்டாள் அவர் கையை விரித்துவிட்டார்.

என்னசெய்வது என்று யோசித்தபடி இருந்த தையலுக்கு செல்வன் ஒரு பெரிய பையோடு வந்த போது சந்தோசத்தைக் கொடுத்தது.

"என்னடா செல்வன் சொல்லாமல் கிள்ளாமல் திடீரென்று வந்திடாய் " தையல் மகனைக் கேட்டாள்.

" எனக்கு ஒரு முக்கிய காரியம் செய்ய மேலிடம்கட்டளை இட்டு இருக்குது அம்மா. நான் உடனே கொழும்புக்கு போகவேண்டும். அதுதான் உங்கள் எல்லோரையும் பார்த்திட்டு போக வந்தனான்", செல்வன் பதில் சொன்னான்.

" செல்வா, தங்கச்சிக்கு ஒரு நல்ல இடத்திலை கலியாணம் பேசி வந்து இருக்குது. நன்கொடையாக ஒரு இலட்சம் கேக்கினம் . நீ மூன்று வருசமாக இயக்கத்திலை இருக்கிறியே. சம்பளம் இல்லாமல் சேவை செய்கிறாய் இயக்கத்திலை கேட்டு அந்த பணத்தை வாங்கித் தாவான்."

" என்ன விசர் கதை கதைகிறாய் அம்மா ?.நான் போகிற முக்கிய காரியத்துக்கு இயக்கம் பணம் தந்திருக்கு. அதிலை தொடமுடியாது.உண்டை நடராசா மாமாவை கேட்டுப்பார். அவர் தருவார்"

“அதென்ன அப்படி முக்கிய காரியம். எனக்குச் சொல்லேன்” .

“அதெல்லாம் சொல்லுகிற காரியம் இல்லை அம்மா. அது பற்றி இப்ப பேசாதே” செல்வன் உறுதியாக பதில் சொன்னான் .

"நடராசர் மாமாவை கேட்டுப்பார்த்தன் அவர்' கையை விரித்திட்டார்” தையல் சொன்னாள்.

"என் உயிர் போனாலும் இயக்கத்து பணத்திலை மட்டும் தொடமாட்டேன். நான் இயக்கத்தில் சேரும் போது சத்தியம் செய்து கொடுத்தனான். வாக்கு தவறமாட்டேன் அம்மா. தங்கச்சிக்கு நீ தினமும் கும்பிடும் அம்மன் வழிவிடுவா. எனக்கு போக நேரமாகிது. இரண்டுபேர் எனக்காக காத்துக்கொண்டுநிக்கினம். நான் வாறன். செல்வி நீ ஒன்றுக்கும்

யோசிக்காதே. எது நடக்கவேண்டுமோ அது நல்லதாகவே நடக்கும் " செல்வன் பதிலை எதிர் பார்க்காமல் சென்றன்.

******

ஒரு கிழமைக்குள் வந்த செய்தி தையலையும் செல்வியையும் திகைக்கவைத்தது.

‘‘தமிழ் இனத் துரோகியான பிரபல அமைச்சர் தற்கொலைத் தாக்குதலுக்கு கொழும்பில் பலியானார். தற்கொலையாளியின் உடல் அடையாளம் காணமுடியாது சிதைந்து விட்டது. கொலையாளி விடுதலை புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என பொலிஸார் சந்தேகப் படுகிறார்கள் ‘‘

செய்தியை வாசித்து தாயுக்கு சொன்னாள் செல்வி. அவள் மனம் அண்ணனின் தியாகத்தை நினைத்து பூரிப்பு அடைந்தது . செய்தி கேட்ட தையல், தன் கிழிந்த மனதை தன் தையல் மெஷினில் தொடர்ந்து தைக்கத் தொடங்கினாள் .

சம்பவம் நடந்து மூன்று நாட்களில் சீலன் தையல் வீட்டுக்கு வந்தான்,

"மாமி செல்வனுக்கு நடந்தது கேள்விப்பட்டுஇருப்பியளே . செல்வன் மாவீரனாயிட்டான். இயக்கத் தலைவர் செல்வனின் தியாகத்தை பாராட்டினார். நாளை அவனுக்கு மட்டுவில் அம்மன் கோவில் வீதியில் மௌன அஞ்சலி கூட்டம் இயக்கம் நடத்த இருக்கிறது..

‘‘மக்கள் திரண்டு வரப்போகுது "

" என்ன கூட்டம் வந்தாலும் அவன் உயிரோடு வரப்போறானே" தையல் கண்களில் கண்ணீர் மல்க சொன்னாள் .

"மாமி செல்வன் தமிழ் இனத்துக்கு செய்த தியாகத்துக்கு உங்கள் குடும்பத்துக்கு இரண்டு இலட்சம் ரூபாய் கொடுக்கச் சொல்லி தந்தவர் . இந்தாருங்கோ பணம் ",சீலன் ஒரு கவறை தையலிடம் கொடுத்தான் . அவளால் நம்ப முடியவில்லை

****

## *கதை 21*

## *முத்து வளவு*

*யாழ்ப்பாணத்தில் இருந்து வடக்கே ஆறு மைல் தூரத்தில் காங்கேயன் துறைக்கு போகும் பாதையில் அமைந்த கிராமம் சுன்னாகம். சுண்ணாம்பு கற்கள் உள்ள பூமியில் கிராமம் அமைந்த படியால் ஊர் பெயர் வந்ததுக்கு ஒரு விளக்கம் உண்டு. ஒரு காலத்தில் இக்கிராமத்தில் மலையாளிகள் வசித்தபடியால் மயிலினி என்ற பெயரும் அவ்வூருக்கு இருந்தது. நன்நீருக்குப் பிரபல்யமான கிராமம் என்ற படியால் மரப் பீப்பாயுக்குள். நீர்தேக்கி ரயிலில்கொழும்புக்கு அனுப்பிய காலமும் உண்டு. அத்தகைய நல் நீர் சுற்றுபுறக் கிராமங்களில் இருப்பதால் அங்கு காணி விலை அதிகம்*

*மலேசியாவில் பலகாலம் வேலை செய்து , செல்வந்தராக வந்து, சுன்னாகத்துக்கு கிழக்கே புத்தூருக்குப் போகும் பாதையில், ஒரு மைல் தூரத்தில் உள்ள கிராமமான ஊரெழுவில், நாற்பது பரப்பில் சிவந்த மண் உள்ள நிலம் வாங்கி, ஐந்து அறை வீடு கட்டினவர் பொன்னுத்தம்பிப் பிள்ளை அவர்கள். எதை நட்டாலும் பசுமையாக வளரும் பூமி என்றபடியாலும் பொன்னுத்தம்பி பிள்ளை காணிக்கு உரிமையாளர் என்பதாலும் அதற்கு "பொன்னுவளவு" என்ற பெயரை ஊர்வாசிகள் வைத்தனர். பொன்னுத்தம்பியின் தந்தை உயர் வேளாளச் சாதியைச் சேர்ந்த செல்லத்தம்பி முதலியார், மணியகாரராக இருந்தவர். பிரித்தானியர் ஆட்சியின் போது கிடைத்த பட்டம் முதலியார். ஆறு பிள்ளைகளுக்கு தந்தையான அவர் பல காணிகளுக்கு சொந்தக்காரர். அதுவுமல்லாமல் அவர் மயிலினி சிவன் கோவிலுக்கும், முருகன் கோவிலுக்கும் தர்மகர்த்தவாக இருந்தவர். பொன்னுத்தம்பி பிள்ளை, அவரின் மூத்த மகன். மலேசியாவில் ஸ்டேஷன் மாஸ்டர் வேலை கிடைத்து ஈபோவுக்கு போய் பணம் சம்பாதித்தவர். செல்லத்தம்பி முதலியாரின் மறைவுக்கு தர்மகர்த்தா பதவி பொன்னுத்தம்பிக்குப் போய் சேர்ந்தது. தந்தைபோல் பொன்னுத்தம்பியாரும் சாதி பாகுபாடு காட்டுபவர். அவர் ஒருவரே சுன்னாகத்தில் ஒஸ்டீன் ஏ 40 கார் சொந்தமாக வைத்திருந்வர். அவர் வீதியில் நடந்து போனால் சைக்கிளைவிட்டு இறங்கி வழிவிட்டு போவார்கள்.*

*பொன் வளவில் உள்ள கிணற்றுத் தண்ணீருக்கு தனி சுவை உண்டு. செழித்து வளர்ந்த மா, பலா. நெல்லி, நாவல் வாழை ஈரப் பிலா மரங்களுக்கு பொன் வளவில் குறைவில்லை. உயர் சாதி மக்களைத் தவிர்த்து அவர்களுக்கு வேலை செய்யும் குடிமக்களும்,. கள் இறக்குவோரும். கூலிவேலை செய்வோரும் அக் கிராமத்தில் வாழ்ந்தனர்.*

*பொன்னுத்தம்பி குடும்பத்துக்கு பரம்பரை பரம்பரையாக வேலை செய்து வந்தவன் செல்லனும் இப்போது வேலை செய்பவன் செல்வனின் ஐம்பது வயதுடைய மகன்*

சின்னன் என்ற சின்னத்துரையும். சின்னன் ஆறடி உயரம். திடகாத்திரமான உடல். பனை மரத்தில் கள் இறக்குவது, விறகு வெட்டுவது, காணியில் உள்ள மரங்களை பராமரிப்பது, வளவில் உள்ள ஆடு, மாடுகளைக் கவனிப்பது, வேலி அடைப்பது, ஆறு மாதத்துக்கு ஒரு தடவை கிணறைக் கழுவி சுத்தப் படுத்துவது சின்னனின் வேலைகள். பொன்னுத்தம்பி வளவில் வேலை செய்வதை பெருமையாக கருதியவன். பொன்னுத்தம்பியாரின் மனைவி அன்னம்மாவின் நம்பிக்கைக்கு பாத்திரமானவன். பொங்கல் தீபாவளிக்கு சின்னாவுக்கு பொன்னுத்தம்பி குடும்பத்தில் இருந்து புது ஆடைகள்கிடைக்கும். அதுவுமல்லாமல் கண்டியில் தேயிலைத் தோட்டத் துரையாக இருக்கும் அன்னம்மாவின் அண்ணன் செல்வராசாவுக்கு அவன் மேல் தனிப் பிரியம். லீவில் ஊரெழு வரும்போது அவர் சின்னன் கேட்காமலே பணம் கொடுப்பார்.

"சின்னா நாளைக்கு எண்டை செல்வா அண்ணாவும் குடும்பமும் கண்டியிலை இருந்து ஒருகிழமை லீவிலை தீபாவளிக்கு வருகினம். அவர் சுத்தம் பார்க்கிறவர் என்று உனக்கு நல்லாய் தெரியும்.. தினமும் இரண்டு தடவை குளிப்பார். அவருக்கு பனங் கள்ளு என்றால் நல்ல விருப்பம். அதாலை நாளைக்கு மறந்திடாமல் கிணத்தைக் கழுவி சுத்தம் படுத்திப் போடு. அதோடை அடி வளவிலை உள்ள பனை மரத்திலை ஐயாவுக்கும் எண்டை அண்ணருக்கும் கள் இறக்கி கொடுக்க மறந்திடாதே. சாப்பாட்டுக்கு அண்ணாரின்டை மனுசியின் தாய் தந்தை, சகோதரி குடும்பம் தீபாவளிக்கு இங்கை வருகினம். கொட்டிலில் உள்ள கிடாயை நீ தான் வெட்ட வேண்டும். மறந்துடாதே என்ன?

" சரி அம்மா . போன வருசமும் தீபாவளிக்கு அவர் வந்தபோது பங்கு இறைச்சி இளையவனிடம் வாங்கிக் கொண்டு வந்து தந்தனான். அது அவ்வளவு நல்ல இறைச்சி இல்லை. அவன் கொழுப்பு அதிகம் போடவில்லை. ஐயா எனக்கு குறைப்பட்டுச் சொன்னது நினைவு இருக்குது" என்றான் சின்னன்.

"அதுக்குத்தான் போனவருசமே கிடாய் வாங்கி இந்த தீபாவளிக்கு வெட்ட விட்டனான். அதோடை கன சனம் சாப்பாட்டுக்கு வருகுது." பொன்னுத்தம்பியின் மனைவி அன்னம்மா சொன்னாள்.

" இந்தமுறை கிடாய் வெட்டக்கை இரத்தம் எல்லாம் சிந்தாமல் பிடித்துத் தாறன். உங்கடை அண்ணாவுக்கும், ஐயாவுக்கும் வறை வறுத்து குடுங்கோ. அவையளிண்டை உடம்புக்கு நல்லம். இருவருக்கும் இரத்தக் கறி எண்டால் நல்ல விருப்பம்."

"சரி நீசொன்னபடி செய். சமையலுக்கு விறகு முடியப்போகுது. அடிவளவுக்குள்ளை இருக்கிற பிலா மரகுத்திகளை சின்ன துண்டுகளாக வெட்டிப் போட்டுப் போ. வீட்டைப் போகக்கை அவள் தேவியை நான் சொன்னதாக வரச்சொல்லிப் போட்டுப் போ. இடியப்பத்துக்கும் புட்டுக்கும் மா இடிக்கவேணும்" அன்னம்மா சின்னனுக்கு ஞாபகப்படுத்தினாள்

" சொல்லுறன் அம்மா. " தலையை சொறிந்து கொண்டு சின்னன்' நிற்பதைக் கண்ட அன்னம்மா

"ஏன்டா தலையை சொரிந்து கொண்டு நிற்கிறாய். என்ன வேண்டும் உனக்கு"?

" சரியாக தண்ணி விடாய்குது ஏதும் கொஞ்சம் தண்ணி ஏதும் தாறியளே" சின்னன் தாழ்ந்த குரலில் கேட்டான்.

" அந்த வேலியிலை தொங்குற சிரட்டையை எடு. நான் ஊத்தின தேத்தண்ணி இருக்கு தாரன்" பதில் சொல்லி விட்டு குசினிக்குள் அன்னம்மா சென்றாள். தேத்தண்ணியோடு திரும்பிவந்த அன்னம்மா சின்னன் மேல் தன் கைபடாமல்அவன் நீட்டிய சிரட்டைக்குள் ஊற்றினாள். நிலத்தில் ஒரு கருப்பட்டி துண்டை வைத்தாள். கருப்பட்டியை கடித்தவாரே சிரட்டையில் இருந்த தேத்தண்ணியை உறிஞ்சிக் குடித்தான் சின்னன்

தேத்தண்ணி குடித்து முடித்து சின்னன் போகமுன் " சின்னா நன்று சொல்ல மறந்திட்டன் நாளைக்கு வரைக்கே உண்டை மருமகன் பாலனையும் உதவிக்கு கூடிக்கொண்டு வர மறந்திடாதே என்ன?"

"நாளைக்கு பள்ளிக்கு அனுப்பாமல்அவனை வேலை இருக்கு வா எண்டு கூட்டிக் கொண்டு வாறன் அம்மா"

" அது சரி இப்ப அவன் எத்தினாம் வகுப்பு படிக்கிறான்" ?

"அதையேன் அம்மா கேட்கிறியல். தான் அன்டனிமுத்து போலப் படித்து பட்டம் பெற்று டீச்சர் ஆகவேணுமாம்"

" கத்தோலிக்கனாக மதம் மாறிய உண்டை பெரியப்பா மகன் அன்டனிமுத்து தானே பாலன் சொல்லுற டீச்சர்? அவன் தான் அம்மா பாலனைப் பழுதாக்கிறான். எங்கடை சாதி படித்து பெரிய உத்தியோகம் பார்க்க உயர் சாதிசனங்கள் விடமாட்டினமாம். அதுக்கு தன்னைப்போல மதம்மாறி படிக்க வேண்டுமாம். எப்படி இருக்கு அவன்டை கதை. எங்கடை பரம்பரை, ஐயாவிண்டை பரம்பரைக்கு வேலை செய்து வருகிறோம். அதாலை குடி மகன் என்ற பெயர் எங்களுக்கு.அது இப்ப காலத்துபெடியங்களுக்கு விளங்குது இல்லை அம்மா" சின்னன் கவலையோடு சொன்னான்.

" சரி சரி நீ அவனிடம் நல்ல அன்பாகப் பேசிக் கொண்டு வா என்ன.? இந்தா நாளைய கூலி" பணத்தை சின்னன் கையில் கொடுக்காமல் நிலத்தில் அன்னம்மா வைத்தாள்

" சரி அம்மா அப்ப நான் நாளைக்கு விடிய எட்டு மணிக்கு பாலனோடை வாரன்", பணத்தை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு சின்னன் சென்றான்.

*******

*மறு நாள் காலை சொன்ன நேரத்துக்கு சின்னனும் பாலனோடு வந்ததும் முதலில் இருவரும் சேர்ந்து விறகை வெட்டி போட்டு, அவனும் பாலனும் கிணற்றை துப்பரவாக்க தொடங்கினார்கள்'. முதலில் பாலன் துலா மிதிக்க சின்னன் பெரிய பட்டையின் உதவியோடு கிணற்று நீரை இறைத்தான்.*

*"பாலா கிணற்றுக்குள்ளை சரியான பாசி இருக்கு நான் இறங்கிப் பாசியை சுத்தம் செய்து பட்டையிலை நிற்ப்பிறன். நான் சொன்னதும் நீ பட்டையை மேலை இழு" மருமகனுக்கு கட்டளை இட்டபின் கிணற்றுக்குள் இறங்கி பாசியை சுத்தப்படுத்த தொடங்கினான் சின்னன். பாசியால் அடைக்கபட்ட நீர் ஊற்றுகளின் தடைகள் நீக்கப்பட்டதால் தண்ணீர் குபு குபு வென்று வரத்தொடங்கியது. கடுமையாக வெயிலில் வேலை செய்ததால் சின்னனின் வியர்வை சிந்தி கிணற்று நீரோடு கலந்தது.*

*" மாமா வடிவாக கிணற்றை சுத்தம் செய்து போட்டாய். சரியாக களைத்துப் போனாய் இனி மேலே வா. நான் போய் சேர்ந்த பாசி குப்பைகளை அடி வளவிலை கொட்டிப் போட்டு வாறன்" பாலன் மாமனுக்கு சொன்னான்*

*" கொஞ்சம் பொறு. நான் இந்த கொண்டீஸ் எண்ட இரசாயன மருந்தை தண்ணீர்சுத்தமாக இருக்க கலந்துபோட்டுவாறன்" சின்னன் மருமகனுக்குச் சொன்னான்.*

*கிணற்றை சுத்தம் படுத்த இருவருக்கும் ஒரு மணி நேரம் எடுத்தது.*

*இருவரும் களைத்து போனார்கள்.*

*"மாமா எனக்கு சரியாக தண்ணி விடாய்குது. கொஞ்சம் கிணற்றிலை தண்ணி அள்ளி குடிக்கட்டே"? பாலன் மாமனை கேட்டான்.*

*" எடேய் என்ன கதைக்கிறாய்? நாங்கள் கிணற்றிலை தண்ணி அள்ளி குடிக்கிறதை அம்மாண்டால் சத்தம் போடுவா""*

*ஏன் மாமா நாங்கள் ,இந்த கிணற்றிலே தாகத்துக்கு தண்ணி அள்ளி குடித்தால் என்ன குற்றம்?'*

*"நாங்கள் கீழ் சாதி மக்கள் உயர் சாதியினர் வீட்டு கிணற்றிலை தண்ணீர் அள்ளி குடிக்கக்கூடாது. இது தான் இந்த ஊர் முறை"*

*பாலன் கேக்கட்டம் விட்டு சிரித்தான்.*

*" ஏன்டா சிரிக்கிறாய்"?*

*" இல்லை மாமா. நீ கிணற்றுகுள்ளை இறங்கி வேலை செய்த போது உண்டை வியர்வை சிந்தி கிணற்று நீரோடை கலந்து விட்டது. அந்த நீரைத்தானே இந்த வீட்டுக்காரர் குடிக்கப் போகினம் அது துடக்கு இல்லையா." பாலன் யதார்த்தமாக கேள்வி கேட்டான்.*

சின்னனால் பதில் சொல்ல முடியவில்லை

*****

## *கதை 22*

## குடிமகனின் மகன்

*1966 ஆண்டில் நான் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றபின்., சிறீ லங்கா தொலை தொடர்பு திணைக்களத்தில் சிரேஷ்ட பொறியியலாளராக உத்தியோகம் கிடைத்து வேலை செய்த காலகட்டத்தில், எனக்கு அறிமுகமான பல இன நண்பர்கள் அதிகம். அதற்குக் காரணம் நான் தமிழ் ஆங்கிலம், சிங்கள மொழிகளைச் சரளமாகப் பேசுவேன். அதோடு எல்லோருடனும் அன்பாகப் பழகும் குணம் உள்ளவன். அப்போது திருமணமாகாத நான் தங்கியிருந்தது கொழும்புக்கு அருகேயுள்ள வெள்ளவத்தையில், சம்மரி என்று அழைக்கப்படும் மூன்று அறைகளைக் கொண்ட வாடகைவீட்டில். ஒரு அறைக்குள் இரண்டுபேராக சம்மரியில் வாழ்ந்த நான் உட்பட ஆறு பேரில் நால்வர் அரசு சேவையிலும், இருவர் தனியார் ஸ்தாபனங்களிலும் வேலை செய்தவர்கள்.*

*ஒவ்வொரு சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் சங்கு நாயர் என்ற மளையாளச் சமையல்காரன் சம்மரிக்கு வந்து உணவு தயாரிப்பான். மற்றைய நாட்களில் கடைகளில் தான் நாங்கள் சாப்பிடுவோம்.*

*சனி ஞாயிறு தினங்களில் ஒவ்வொருவரும் எங்களின் நண்பன் ஒருவனை விருந்துக்கு அழைக்கலாம். எனது மோட்டார் சைக்கிளை ரிப்பெயர் செய்வதற்கு சிரிபாலா என்பவனின் கராஜுக்கு எடுத்துச் சென்ற போது அங்கு வேலை செய்யும் அறிமுகமான மெக்கானிக்; தான் செல்வராசா என்பவன். அவனை "பண்டா" என்ற பட்டப் பெயர்வைத்து செல்லமாக எல்லோரும் அழைப்பார்கள். தமிழனாக இருந்தும், சிங்களம் சரளமாக பேசியபடியால் அவனை எல்லோரும் பண்டா என்ற பெயரை இலங்கையின் பிரதமாராக இருந்த பண்டாரநாயக்கா என்பரின் நினைவாக அவனுக்கு நண்பர்கள் வைத்தது அந்த அடைப்பெயர்.*

*பண்டா எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும், முடியாது என்று சொல்லாமல் செய்வான். நான் அப்போது வைத்திருந்த 3.5 ஹொண்டா மோட்டார் சைக்கிளைப் பராமரிப்பது பண்டாவின் பொறுப்பு. அதைத் தினமும் துடைத்து பளீச் என்று மின்னும் விதத்தில் பலர் ரசிக்கும் படி வைத்திருப்பான். அவன் சேவைக்காக நான் அவனுக்கு சிறுதொகையை மாதம் மாதம் கொடுத்து வந்தேன். அவனுக்கு நிரந்தர வேலை என்று ஒன்றுமில்லை. ஏதோ ஒரு மோட்டார் சைக்கில் கராஜில் சில நேரங்களில் உதவியாளனாக வேலைசெய்தான். அதில் கிடைக்கும் வருமானம் அவனுக்குப் போதுமானதாக இருக்கவில்லை.*

''என்ன பண்டா இப்படி உத்தியோகம் இல்லாமல் எப்படி தொடர்ந்து இருக்கப்போகிறாய்? நான் ஒரு நாள் அவனைக் கேட்டேன்.

அதற்கு அவன் '' தம்பி, நான் இளம் வயதில் படிக்கவேண்டிய நேரம் படிக்காமல் கூட்டாளிகளோடு விளையாடித் திரிந்தேன். படித்திருந்தால் எனக்கு உத்தியோகம் கிடைத்திருக்கும். எனக்கு தெரிந்தது மோட்டார் சைக்கிள் திருத்துவதும், டிரைவர் வேலையும் தான்'', என்றான் பண்டா.

******

நான் அரசினால், பயிற்சிபெற இரு வருடங்கள் இங்கிலாந்து சென்று திரும்பிய பின் என் திருமணத்துக்குப் பண்டாவை அழைக்கத் தேடினேன், அவன் கிடைக்கவில்லை. பண்டா வேலை செய்த காராஜில் போய் விசாரித்தேன்.

''ஐயா, பண்டா ஒரு வருஷத்துக்கு முன்பே ஓமானுக்கு டிரைவர் வேலை கிடைத்துப் போய்விட்டான் என்றான் கராஜ் உரிமையாளன் சிரிபாலா. எனக்கோ அதைக் கேட்டதும் மனதுக்குள் சந்தோஷம். ''எங்கிருந்தாலும் பண்டா நல்லாக இருக்கட்டும் என மனதுக்குள் வாழ்த்தினேன். அதோடு எங்கள் நட்பு முடிந்துவிட்டது என நினைத்தேன். ஆனால் எங்கள் நட்பு திரும்பவும் ஒரு நாள் திரும்பும் என நான் எதிர்பார்த்திருக்கவில்லை. திரும்பவும் பண்டாவை ஐந்து வருடங்களுக்குப் பின், நான் ஓமானுக்கு வேலை கிடைத்து என் குடும்பத்தோடு போனபோது சந்திப்பேன் என நான் எதிர்பார்க்கவில்லை. அதுவும் நான் மீன் கடைக்கு மீன் வாங்கச் செற்றிருந்தபோது திரும்பவும் அச் சந்திப்பு ஏற்பட்டது. பண்டா, தன்னோடு வேலை செய்யும் ஒருவரோடு மீன் கடைக்கு மீன் வாங்க வந்திருந்தான்.

''என்ன பண்டா எப்படி இருக்கிறாய். கண்டு வெகுகாலம்'', என்றேன்.

''ஏதோ கடவுள் புண்ணியத்தில் எனக்கு ஓமானில் டெய்லர் வுட்ரோ கொந்துராத்து ஸ்தாபனத்தில் டிரைவர் வேலை கிடைத்தது. இங்கு வந்து நான்கு வருடங்களாகிவிட்டது. இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவை யாழ்ப்பாணம் போய்வருவேன். எனது இரு சகோதரிகளையும்; திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். என் அப்பாவை வயது வந்த காலத்தில் தொடர்ந்து வேலை செய்யவேண்டாம் என்று சொல்லிநிறுத்திட்டேன். நான் ஒவ்வொரு மாதமும் அனுப்பும் பணம் அவர்கள் வாழப் போதுமானது''.

''பண்டா, உன் நல்ல மனசுக்கு கடவுள் உனக்கு நல்லவழி காட்டிவிட்டார். அது சரி உன் அப்பா என்னவாக இருந்தார்'' நான் பண்டாவைக் கேட்டேன்.

''சலவைத்தொழிலாக இருந்தவர். யாழ்ப்பாணத்தில் உள்ள கந்தர்மடத்தில் அவரைத் தெரியாத வீடுகள்இல்லை''. யாழ்ப் பாணம், கந்தர்மடத்தைச் சேர்ந்த சலவைத் தொழிலாளி தன் அப்பா என்று பண்டா கூறியவுடன்.

*"பண்டா அவர் பெயர் என்ன"? என்னையறியாமலே என் வாய் கேட்டுவிட்டது,*

*"என் அப்பா பெயர் அண்ணாமலை. என்பாட்டனார் பெயர் சின்னமலை அவர்கள் பரம்பரையாக சலவைத்தொழில் செய்துவந்தவர்கள். குடிமகன் என்று நல்ல மரியாதை என் அப்பாவுக்கு பல வீடுகளில் இருந்தது" பண்டா சொன்னான்.*

*எனக்கு "குடிமகன்" என்ற வார்த்தை நான் கேட்காத புதிய வார்த்தையாக இருந்தது. அதன் அர்த்தத்தை பண்டாவிடம் கேட்டேன்.*

*"குடிமக்களை பஞ்சமர் என்று அழைப்பார்கள். அதில் வைவண்ணான் என்ற சலத் தொழிலாளி, அம்பட்டன் என்ற சவரத்தொழிலாளி, நளவர், பள்ளர், பறையர் ஆகிய ஐந்து சாதியினர் உள்ளடங்குவார்கள். இவர்கள் ஐவருக்கும் வேளாளச் சாதி மக்களின் வீடுகளில் நடக்கும் வைபவங்களில் முக்கிய பங்குண்டு. இது ஊர் வழக்கம். திருமணத்துக்கு மணமக்களை வரவேற்கும் போது வெள்ளைத் துணி விரிப்பது முதற் கொண்டு சாவு வீடுகளில்; நடக்கும் கிரியைகளில்; அவர்களுக்கு முக்கிய பங்குண்டு. திருமணத்தின் போது வீட்டு வாசலில் இரு வாழைமரங்கள்; குலைகளோடு கட்டப்பட்டிருக்கும்.; திருமணம் முடிந்தவுடன், வாசலில் உள்ள வாழைமரத்தின்; வாழைக் குலைகள் அவ்வீட்டு குடிமக்களான வண்ணானுக்கும், அம்பட்டனுக்கும் போய் சேர்வது மரபு. அதோடு மரண வீடுகளில் பறைமேளம் அடிப்பது அவ்வீட்டார் குடிமகனான பறையனின் உரிமை. இது மரபுவழிவந்த தேசவழமை", பண்டா விபரம் சொன்னான்.*

*பஞ்சமர் பற்றிய முழு விபரங்களை எனக்கு பண்டா சொன்னபோது எனக்கு அது புதுமையாக இருந்தது. அப்படியானால், தேசவழமை சட்டம் யாழ்ப்பாணத்தில் சாதிவேற்றுமைக்குத் துணைபோயிருக்கிறதா? என்றது என் மனம்.*

*" அவன் சொன்ன விபரங்கள் என்னை திகைக்க வைத்துவிட்டது, காரணம் கந்தர்மடத்துக்கு அருகாமையில உள்ள எங்கள் நல்லூர் வீட்டுக்குப் பரம்பரை பரம்பரையாக சலவைத் தொழில் செய்பவர்கள் அண்ணாமலையும், சின்னாமலையும் என்று என் அம்மா எனக்குச் சொன்னது என்நினைவுக்கு வந்தது. நான் எனக்கு பண்டாவின் தகப்பனை என் பெற்றோருக்கு தெரியும் என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை. சோசலிஷ கொள்கையில் நம்பிக்கை உள்ள நான், சாதி வேற்றுமையை வெறுப்பவன். குடிமகனின் மகனோடு என்நட்பு இருந்ததையிட்டு எனக்குள் மகிழ்ந்தேன்.*

*ஓமானில் விடுமுறை தினங்களில் நாம் இருவரும் கடற்கரை சீப் (Seeb) என்ற கடற்கரையோரக் கிராமத்துக்குச் சென்று மீன் வாங்கி வந்து சமைத்துச் சாப்பிடுவோம். பண்டாவே கொண்டு வந்த மீன்களைத் துப்பரவு செய்து, வெட்டி சமைப்பதற்கு என்மனைவியிடம் கொடுப்பான். அதுவுமல்லாமல் சமையலுக்குத் தேவையான உதவிகளைச் செய்வான். நாங்கள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவோம் சில*

*சமயங்களில் என்மகளுக்குப் பரிசு பொருட்ளைப் பண்டா வாங்கி வருவான். நான் எவ்வளவோ தடுத்தும் கேட்க மாட்டான். காலப்போக்கில் பண்டா என் குடும்பத்தோடு ஒருவனாகிவிட்டான். அவன் பூர்வீகத்தைப் பற்றி என் மனைவிக்கும், மகளுக்கும் சொல்ல நான் விரும்பவில்லை. சொல்லி இருந்தாலும் அவர்கள் அதை கவனத்தில் எடுக்க பட மாட்டார்கள்*

*****

*நான் ஒரு வருடம் ஓமானில் வேலை செய்தபின் துபாய்க்கு வேலை கிடைத்துபோன பின்னர், எனக்கு பண்டாவோடு இருந்த தொடர்பு இல்லாமல் போய்விட்டது. சில வருடங்களுக்குபின் நான் என் குடும்பத்தோடு நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழாவுக்குச் சென்றிருந்தபோது என் மகள் பெரியவளானாள். அவளுடைய சாமத்திய சடங்கைத் தெரிந்த ஊர் சனங்களை அழைத்து பிரமாதமாக நடத்த வேண்டும் என்பது என் அக்காவினதும் அண்ணனிதும் விருப்பம்.. எனக்கு அதில் துளி கூட விருப்பமிருக்கவில்லை. வைபவத்துக்கு மகளுக்குச் சேலை வாங்க நான் ராஜ்கோபால் சேலைக் கடைக்குப் போய் இருந்த போது பண்டாவை சந்திப்பேன் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை. தனது இரு சகோதரிகளோடு சேலை வாங்க பண்டா வந்திருந்தான். தன சகோதரிகளை என் குடும்பத்துக்கு அறிமுகப்படுத்தினான்.*

*“என்ன பண்டா திரும்பவும் பல வருடங்களுக்குப் பின் உன்னைச் சந்திப்பதில் மிகவும் சந்தோஷம். இப்பவும் நீ ஓமானிலா வேலை செய்கிறாய்”? நான் பண்டாவைக் கேட்டேன்.*

*“இல்லை தம்பி. நான் இப்ப யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வந்து இரண்டு வருடங்களாகிவிட்டது”.*

*“ அப்ப இப்ப யாழ்ப்பாணத்திலா வேலை”?*

*“நான் இப்ப மூன்று லொறிகள் வாங்கி சாமான்களை கொழும்புக்கு கொண்டு போய் வரும் பிஸ்னஸ் செய்கிறேன். அதோடு கார், மோட்டார் சைக்கில் திருத்தும் கராஜ் வைத்திருக்கிறன். மூன்று பேர் என் கடையில் வேலை செய்கிறார்கள். என் சகோதரிகளும் எனக்கு உதவி” என்றான் பண்டா.*

*“ எனக்கு கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது பண்டா” என்றேன்.*

*என் மகள் பெரியவளானதையும், சாமத்திய சடங்கு வைபவம் ஒன்று வைக்க தீரமானித்ததாக அவனுக்குச் சொன்னேன்.*

*“ கேட்க சந்தோஷமாக இருக்கு. உங்களுக்கு ஏதும் உதவி தேவை என்றால் தயங்காமல் கேளுங்கள். என்னிடம் புது பேஜோ 404 கார் ஒன்று உண்டு. அதை நீங்கள் யாழ்ப்பாணத்தில் நிற்குமட்டும் பாவிக்கலாம்” என்றான் பண்டா பெருமையோடு. என்னால் அவன் சொன்னதை நம்பமுடியவில்லை.*

*" பண்டா, நீ அவசியம் என் மகளின் சாமத்தியச் சடங்கு வைபவத்துக்கு வந்து என் குடும்பத்தோடு சேர்ந்து கோண்டாடி, உணவருந்தி செல்ல வேண்டும். இனி எப்ப உன்னை சந்திப்பேனோ எனக்குத் தெரியாது" என்றேன்.*

*சாமத்தியச் சடங்கு நடக்க இருக்கும் நாள், நேரம், இடம்; ஆகிய விபரங்களையும் அவனுக்குச் சொன்னேன்*

*" எங்கள் வீடு எங்கு இருக்கிறது என்று உனக்குத் தெரியுமா"?*

*" தெரியும் தம்பி." என்றான் சுருக்கமாக.*

*" அப்ப நான் உன்னை காலை பதினொன்று மணியளவில் எதிர்பார்க்கிறேன்" என்றேன் நான்.*

*"தம்பி இதோ கார் சாவி .நீங்கள் யாழ்ப்பாணம் இருக்கு மட்டும்; வைத்திருங்கள்", என்ற கார் சாவியை என்னிடம் தந்தான். என்னால் மறுக்க முடியவில்லை.*

******

*என் மகளின் சாமத்திய சடங்கிற்கு கந்தர் மடத்தில் உள்ள பல குடும்பங்கள் வந்திருந்தார்கள். என் அக்கா யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாக பல வருடங்கள் வேலை செய்தபடியால், அவவுக்கு பலகுடும்பங்களைத் தெரிந்திருந்தது. என் அண்ணாவுக்கும் பல குடும்பங்களைத் தெரியும். என் அக்காவும் அண்ணாவும் பழமையில் ஊறியவர்கள். சாதி, சனம், முறை பார்ப்பவர்கள். எனது முற்போக்குக் கொள்கையை அவர்கள் அவ்வளவுக்கு வரவேற்பதில்லை. என் குடும்பத்துக்கு, சாமத்திய சடங்கிற்கு வந்திருந்த ஒரு சில குடும்பங்களை மாத்திரமே தெரியும்.*

*என் மகளை கிணற்றடியில் குளிப்பாட்டி வீட்டுக்கு மேளத்தோடு அழைத்து வரும் போது வெள்ளைத்துணி விரித்து அழைத்து வரப்பட்டாள்;. அதை வழமையாகச் செய்யும் குடிமகன் அண்ணாமலைக்குப் பதிலாக எனக்கு அறிமுகமாகாத ஒரு குடிமகனே வெள்ளை விரிக்கும் கிரியைகளைச் செய்தான்.*

*அதைக்கண்ட நான், "என்ன அக்கா வெள்ளைத் துணி விரிக்கும் வண்ணான் எனக்குத் தெரியாத முகமாய் இருக்கிறதே. இப்போது உங்கள் குடும்பத்துக்கு புது வண்ணான் போலத் தெரிகிறது.? என்றேன் ஒன்றும் தெரியாதவன் போல்.*

*"அதை ஏன் கேட்கிறாய் தம்பி. இப்ப அண்ணமாலை வண்ணான் வேலை செய்வதில்லை. அது அவன் மகன் அவனுக்கு இட்ட கட்டளையாம். நாலு காசு அண்ணாமலையின் குடும்பத்துக்கு வந்துவிட்டது. கல் வீடு கூட கட்டி வசதியாக வாழ்கிறான். ஆனால் தன் தொழிலை எங்கள் குடும்பத்துக்கு தன் தூரத்துச் சொந்தக்காரப் பையன் பொன்னுத்துரை*

செய்வான் என்று சொன்னான். நாங்களும் அதை சரியென்று சம்மதித்தோம்'' என்றாள் என் அக்கா.

''அப்படியா. யார் குத்தி அரிசி ஆனாலும் சரிதானே அக்கா'' என்றேன் சிலேடையாக.

''அது சரி நீ ஆருடைய புது விலை உயர்ந்த காரைப் பாவிக்கிறாய்''?

'' அக்கார் எனது நீண்ட காலம் நண்பனான பண்டா என்ற செல்வராசாவினது. பல காலம் ஓமானில் டிரைவராக வேலை செய்து? சம்பாதித்து, இப்போ சொந்தத்தில் மூன்று லொறிகளும்,; ஒரு கார் ரிப்பையர் செய்யும் கராஜ் வைத்திருக்கிறான். அவனும் கந்தர்மடம் தான்''.

'' எனக்கு இப்போ நினைவுக்கு வருகுது, அண்ணாமலை சொன்னவன் தன் மகன் செல்வராசா ஓமானில் டிரைவராக வேலை செய்து சம்பாதித்து இப்போ சொந்தத்தில் பிஸ்னஸ் செய்கிறான் என்று. மகன் கட்டளைப்படி தான் வண்ணான் வேலை செய்வதில்லை என்று. நீ சொல்லும் செல்வராசா அவனோ தெரியாது'', அக்கா என்னைக கேட்டாள். அவவுக்கு நான் அண்ணாமலையின் மகனோடு நட்பு வைத்திருப்பது பிடிக்கவில்லை என்று அவள் பேச்சில் இருந்து தெரிந்து. அவளோடு என் அண்ணாவும் சேர்ந்து கொண்டார்.

'' தம்பி. சாமத்திய சடங்குக்கு கந்தர்மடத்தில் வாழும் உயர்சாதி சனங்கள் பல பேர் வந்திருக்கினம். அவர்களுக்கு நீ ஒரு வண்ணானின் மகனோடு நட்பாயிருக்கிறாய் என்று அறிந்தால்; என்ன பேசுவினம்? எங்கள் குடும்ப கௌரவத்துக்கு இழுக்கு வந்து விடும்'' என்றார் கோபத்தோடு.

'' அண்ணா உங்களுக்குத் தெரியும் எனக்கு சாதி வேற்றுமை காட்டுவது பிடியாது என்று. காலத்தோடு சாதி பார்ப்பது மறைந்து வருகிறது. உங்களுக்கும், அக்காவுக்கும் என் நண்பன் பண்டாவைப் பிடிக்காவிட்டால் எனக்கும் பிடிக்கக் கூடாது என்பதில்லை. பண்டா என் மகளுக்கு ஒரு இரத்தினக் கல் பதித்த தங்க மோதிரம் பரிசாக கொண்டு வந்திருக்கிறான். எண்டை மகளை சிறு வயது முதற் கொண்டே ஓமானில் அவனுக்கு தெரியும். பண்டா சாமத்திய சடங்குக்கு வந்து ஊர் சனங்களோடு இருந்து விருந்து சாப்பிடுவதில் என் குடும்பத்துக்குப் பூரண சம்மதம்'' என்றேன் நான் உறுதியாக.

''நீ அழைத்து விருந்துக்கு வந்திட்டான் உன் நண்பன். ஆனால் ஒன்று மட்டும் சொல்லுகிறன் அவன் எல்லோரோடும் ஒன்றாக சபையில் இருந்து சாப்பிடுவதை நானும் உன் அண்ணாவும் அனுமதிக்க மாட்டோம்'', என் அக்கா திடமாகச் சொன்னாள். எனக்கு அது சவாலாக அமைந்தது,

'' என்ன அக்கா சொல்லுகிறீர்கள்? இந்த சாமத்திய சடங்கு முழுவதுக்கும் பணம் செலவு செய்தது என் குடும்பம். அதனால் எனக்கு, என் நண்பனுக்கு என் விருப்பப்படி சபையில்

அமர்த்தி விருந்து கொடுக்கும் உரிமை இல்லையா? இது என்ன நியாயம்”?, நான் என் குரலை உயர்த்திப் பதில் அளித்தேன்.

எனது தர்க்கத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் போய்விட்டது என் சகோதரங்களுக்கு.

“ நீ என்ன செய்ய வேண்டுமானாலும்; உன் விருப்பப்படி செய் “ என்று கோபத்தோடு சொல்லிவிட்டு, என்னோடு மேலும் தர்க்கம் செய்யாமல் அவ்விடத்தை விட்டு; அண்ணரோடு அக்கா போய்விட்டாள்.

நான் நேரே பண்டாவிடம் போய் செம்பும் தண்ணியும் கொடுத்து, “பண்டா வாரும் நாங்கள் இருவரும்; ஒன்றாகச் சபையில் இருந்து சாப்பிடுவோம்” என்றேன்.

பண்டா, நானும் எனது சகோதரங்களும் பேசியதைக் கேட்டோ என்னவோ

“தம்பி எல்லோரும் சாப்பிட்ட பிறகு நான் சாப்பிடுகிறேன்”, என்றான்.

அப்போது அங்கு வந்த என் மனைவி “பண்டா உமக்கு விருப்பமான உருளைக்கிழங்கு துவையலும், முருங்கக்காய் குழம்பும் செய்து வைத்திருக்கிறோம். ஆனால் இண்டைக்கு உமக்கு பிடித்த மீன் கறி செய்யவில்லை. நீர் மகளுக்கு கொடுத்த சிவப்பு இரத்தினக் கல் பதித்த மோதிரம் அழகாக இருக்கிறது. அவளுக்கு நல்லாக பிடித்துக்கொண்டது. எழும்பி வாரும் எங்களோடு சாப்பிட. நீர் எங்கள் குடும்பத்தின் ஸ்பெசல் விருந்தினர்”, என்றாள். பண்டாவால் எங்கள் குடும்பத்தின்; வேண்டுகோளை மறுக்கமுடியவில்லை. நான் கொடுத்த தண்ணீர் செம்பை புன்னகையோடு வாங்கி, கால் கை கழுவப் போனான். பல கண்கள் எங்களை உற்றுநோக்கிக் கொண்டிருந்தன.

*****

## *கதை 23*

## *என் அப்பு ஆச்சி*

*புலம் பெயர்ந்த இளம் தமிழ் சமுதாயம் தமது பெற்றோரை மம்மி, டடி என்று அழைக்கும் காலம் இது. அவர்களைக் குறை சொல்ல முடியாது. அவர்கள் வாழும் பல் இனச் சூழல் அது. படிக்கும் கல்லூரியில் சக மாணவர்கள் தங்கள் பெற்றோரை அழைக்கும் முறையைப் பார்த்து அதைப் பின்பற்றுகிறார்கள் . மம்மி என்ற வார்த்தைக்கு எகிப்திய பிரமிட்டில் வேறு அர்த்தம் உண்டு*

*எமது கிராமப் புற ஊர்களில் நமது முன்னோர்கள் கலாசாரத்தோடு பின்னிய சில நெறிமுறைகளைக் கடைப்பிடித்தனர் . நான் செல்லமாக என் அப்பாவை "அப்பு" என்றும் அம்மாவை "ஆச்சி" என்றும் அழைப்பேன். என் அப்புவுக்கு எண்பது வயதாகியும் நான் அவரை அழைக்கும் விதம், நான் கனடாவுக்குப் பல வருடங்களுக்கு முன் புலம் பெயர்ந்தும் மாறவில்லை.*

*என் பெற்றோரின் பூர்வீகம் யாழ் குடாநாட்டில் உள்ள சப்த தீவுகளில் ஒன்றான அனலைதீவு. நான் யாழ் இந்துக் கல்லூரியில் படிக்கும் போது என்னை மாணவர்கள் "தீவான்" என்று அழைப்பதை நான் கணக்கில் எடுத்ததில்லை. காரணம் அவர்கள் வசிப்பது இலங்கைத் தீவில்.*

*ஒரு காலத்தில் தீவான், மட்டக்களப்பான், வன்னியான், திருகோணமலையான் என்ற பிரதேசவாதம் யாழ் குடாநாட்டில் சாதி வேற்றுமையோடு தலை தூக்கி நின்றது . விடுதலைப் புலிகளின் வருகை அதில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. காரணம் மாவீரர்கள் எல்லாத் தமிழ் ஈழப் பிரதேசங்களில் இருந்து வந்தவர்கள் .*

*என் அப்புவைப் பற்றி நான் சொல்லமுன் என் தீவைப் பற்றிச் சொல்வது அவசியம்.*

****

*அனலைதீவு சப்த தீவுகளில் ஒன்றாகும். பாக்கு நீரிணைக் கடல் ஏழு கடல் என வழங்கப்படுகிறது. ஆதலினால் அக்கடலினால் சூழப்பட்ட தீவுகளும் சப்த தீவுகள் எனப் பெயர் பெற்றன. ஒல்லாந்தர் இத்தீவிற்கும் மற்றத் தீவுகளுக்குப் பெயர் சூட்டியது போன்று தமது நாட்டின் ஞாபகமாக ரொட்டர்டம் (Rotterdam ) எனப் பெயரிட்டு அழைத்தனர். அனலைதீவு, எழுவை தீவுக்கும், நயினாதீவுக்கும் இடையில், நயினாதீவுக்கு அண்மையில் அமைந்துள்ளது. இத் தீவு ஊர்காவற்துறைக்குத் தெற்கேயும் நயினாதீவுக்கு வடக்கேயும் அமைந்துள்ளது. பல நூற்றாண்டு காலமாக அனலை தீவு, நெடுந்தீவு, நயினாதீவு மக்களிடையே குடும்பத் தொடர்புண்டு. ஊர்காவற்றுறைக்கு தென்திசையில், சுமார் 7*

மைல் தூரத்தில் அமைந்திருக்கும் அனலைதீவு மூன்றரை மைல் நீளமும், ஒன்றரை மைல் அகலமும் கொண்டு வடக்கு தெற்காய் நீண்டு கிடக்கிறது. கடல் குமுறி வரும் காலங்களில் இத் தீவினை அழிவிலிருந்து பாதுகாக்க இயற்கையாகவே கற்பாறைகள் அணையோன்று அமைந்துள்ளது. அலைகள் ஊருக்குள் புகாமால் இருக்கும் அணையைக் கொண்ட தீவாகையால் அணை + அலை + தீவு = அனலைத் தீவு எனப் பெயர் பெற்றதென விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு பொருத்தமான விளக்கமும் கூட. இன்னொரு சாரார் ஒரு புதுமையான விளக்கத்தைக் கொடுத்துள்ளார்கள். நயினாதீவுடனும், எழுவைதீவுடனும். அணைந்து இருப்பதினால் இத்தீவிற்கு அப்பெயர் வந்திருக்கலாம் என்பது சிலரின் கருத்து

.

நீர்வளமும். வற்றாத நன்னீரும், பற்பல மண்வளமும், பயிர் வளமும் நிறைந்த தீவு இது. அனல் காற்று வீசும் தீவாயிருப்பின் பாலைவனமாகத் தோற்றமளித்திருக்கும்.

நயினார் குளம், ஐயனார் குளம் என்ற பெயர்களுடன் பல நன்னீர் குளங்கள் உண்டு. அக்குளங்களை அனலைதீவு வாசிகள் விவசாயத்துக்கு நீர்பாய்ச்சப் பாவிப்பார்கள். பொன் விளையும் பூமியும் நன்னீரும் இருப்பதினால் அவ்வூர்வாசிகள் வெளிப்பிரதேசங்களை உணவுக்காக நம்பிவாழவில்லை. ஆனால் காலப் போக்கில் ஈழ யுத்தம் காரணமாகக் கல்வி, தொழில். பாதுகாப்பு நிமித்தம் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ளனர். அதில் நானும் ஒருவன் .

****

அனலைதீவுவாசிகள் நீண்ட ஆயுள் உடையவர்கள். இதற்குக் காரணம் அசுத்தப்படாத சுற்றாடலில் வாழ்ந்ததினால் மட்டுமன்றி கடினமான விவசாயம் செய்த உழைப்பினால் ஆரோக்கியமான உடல் நலம் கொண்டவர்கள் அவர்கள்;. கவலையற்ற தன்னம்பிக்கையுள்ள வாழ்க்கையும் ஒரு காரணமாகலாம். அதோடு கூட அங்குள்ள மூலிகை வகைகளும் ஒரு காரணமாகயிருக்கலாம். இத்தீவிற்கு எக்காலத்தில் மக்கள் வந்து குடியேறினார்கள் என்பதை திட்டவட்டமாக கூறமுடியாது. ஆனால் மற்றைய தீவுகளுடன் தொடர்பு இருந்தபடியால் நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு வழியாக மக்கள் வந்து குடியேறியிருக்கலாம் என்பது ஒரு ஊகமாகும். இறுப்பிட்டிக்கும் அனலைதீவுக்கும் இடையே உள்ள கடல் வரண்டு தரையாக காட்சியளித்த காலங்களில் மேய்ச்சலுக்கு தமது கால்நடைகளை அனலைதீவிற்கு அனுப்பி வந்தனர் இறுப்பிட்டி மக்கள். பின்னர் அக்கால்நடைகளின் கொம்புகளிலும், கால்களிலும் உள்ள மண்ணின் தரத்தைக் கண்டு வியந்து, மக்கள் ஏழுமலை நாச்சியார் கோயிலடியில் குடியேறியிருக்கலாம். இன்றும் அனலைதீவு மக்களுக்கும் இறுப்பிட்டி மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு.

அப்படி தமிழ் நாட்டில் உள்ள இராமநாதபுரத்தில் இருந்து வந்து குடியேறினவர்கள் எனது அப்புவின் மூதாதையர்.

அப்புவின் முன்னோர் ஒரு காலத்தில் இராமநாதபுரத்தில் இருந்து வந்து அனலை தீவில் குடியேறிய இந்து சமயவாதிகள்.

என் அப்புவின் தந்தை சுப்பையா நூற்றி மூன்று வருடங்கள் வரை வாழ்ந்தவர்.

என் அப்புவுக்கு இப்போ வயது எண்பது .இன்னும் பல் விழவில்லை. கூனல் இல்லை. பொல்லு பிடிக்காமல் இளந்தாரி போல் நடப்பார். அதிகமாக வெறும் மேலுடன், வேட்டி அணிந்து தான் நடப்பார்.பழைய முறைப் படி ஒரு துணியில் கோவணம் கட்டுவார். அதை அவரே தோய்த்து உலர வைப்பார். வாயில் சுருட்டு இருக்கும் அவர் விரும்பி குடிப்பது பனம் கள்ளு. அவருக்கு விருப்பமானது ஒடியல் கூல். என் கந்தையா அப்பு, காதில் கடுக்கன் போடுவார் . தலைமயிரை சீவி குடும்பி வைப்பார். அதனால் அவரை "குடும்பி கந்தையர்" என்று அடைப் பெயர் வைத்து ஊர்வாசிகள்அழைப்பர் . வேடிக்கை என்னவென்றால் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் வாலிபர்கள் கூட இப்போது காதில் தோடு போட்டு, குடும்பி வைக்கிறார்கள் . சிலர் மூக்கு, நாக்கிலும் குத்துகிறார்கள்.

என் அப்புவுக்கு அவரின் பெற்றோர் முதுசமாக விட்டுச் சென்ற சொத்துகள் அதிகம் . அனலைதீவில் வயல் காணிகள், ஒரு பூர்வீக நாற் சாரம் வீடு . புங்குடுதீவில் இரண்டு கடைகள். நெடுந்தீவில் ஒரு வீடு .எட்டாம் வகுப்போடு என் அப்பு படிப்பை நிறுத்திக் கொண்டார். அவருக்கு ஆங்கிலம் பேசவராது . தமிழ் எழுத வராது. ஆனால் கணக்கு பார்க்கத் தெரியும். ஊரில் மனக் கணிதத்தில் அவருக்கு நிகர் அவர் தான். அவரை ஒருவரும் காசு விசயத்தில் ஏமாற்ற முடியாது. அவருக்கு ஞாபக சக்தி அதிகம். பல வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள் எல்லாம் அவர் நினனைவில் இருக்கும் .. அல்செய்மார் வியாதி பற்றி என் ஊர்வாசிகள் கேள்வி பட்டது குறைவு. அப்பு மருந்து குளிசைகள் பாவித்தது கிடையாது. அவருக்கு நீரழிவு வியாதி, இரத்த அழுத்தம் , இருதய நோய் என்று ஒன்றும் கிடையாது. அவர் வைத்திய சாலைக்குப் போனதை நான் கண்டதில்லை. அதே போல் தான் என் ஆச்சியும்.

ஊர்வாசிகளுக்கு என்அப்பு கடன் கொடுப்பார் ஆனால் குறித்த காலத்தில் காசை குறைந்த வட்டியோடு வாங்கி விடுவார்.

அப்புவுக்கும் ஆச்சிக்கும் செல்லையா என்ற நான் ஒரு வாரிசு மட்டுமே. நான் அப்புவுக்கு ஆச்சிக்கும் செல்லம். நான் கேட்பதை வாங்கி கொடுத்து விடுவார்கள் .

என் அப்பு நல்ல நீச்சல்காரன். நான் தீவு வாசி என்பதால் எனக்கு அவசியம் நீந்தத் தெரிய வேண்டும் என்று நீந்தக் கற்றுக் கொடுத்தார் தான் படிக்க வில்லை என்ற குறை அப்புவின் மனதில் இருந்தது அதனால் நான் ஆங்கிலம் படித்து பெரும் உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பது என் அப்புவின் ஆசை.

“அந்த கோதாரி விழுவான் போர்த்துகேயக்காரன் எங்கட தீவுக்கு வந்து சனங்களை வேதக்காரராக மாற்ற முடியவில்லை” என்று என் அப்பு பெருமையாகச் சொல்லுவார், அவருக்கு வேதக்காரர் மேல் ஒரு வெறுப்பு. அதனால் நான் இந்துக் கல்லூரியில் படிக்க வேண்டும் என்பது அவர் கொள்கை . சில அனலைதீவு வாசிகளின் மகன்மார் போல் என்னையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அப்பு சேர்த்தார். கல்லூரி போர்டிங்கில் இருந்து படித்து, கொழும்பு பல்கலைக் கழகம் சென்று பொறியியலில் பட்டம் பெற்றேன். என் அப்பு தான் நினைத்தை சாதித்து விட்டதை பெருமையாக சொல்லி ஊரிலை சொல்லி தம்பட்டம் அடிப்பார். நான் கொழும்பில் வேலை செய்யும் போது லீவில் ஊருக்குப் போனால் என்னோடு சேர்ந்து பனம் கள்ளு. நண்டு, இறால் பொரியலோடு குடிப்பார். கடலில் நீந்துவார். நாங்கள் இருவரும் வயல் காணிகளை சுற்றி வருவோம். அப்போது அவரைக் கண்டதும் சிலர் தங்கள் தலையில் கட்டிய சால்வை எடுத்து மடித்து தமது

அக்குளுக்குள வைத்து மரியாதை கொடுப்பதைக் கண்டேன் நான் ஊருக்குள்ளே சொந்தத்துக்குள் திருமணம் செய்ய வேண்டும் என்பது என் அப்புவுக்கும் ஆச்சிக்கும் ஆசை

.

என் அப்பு ஒருபோதும் ஆச்சியை அவவின் பெயர் சொல்லிக் கூப்பிட்டதில்லை . மெய்யே அல்லது இங்காரும் என்றும், சில சமயம் குஞ்சு என்று கூப்பிடுவார். ஆச்சியும் அவரை உங்களைத்தான் அல்லது மெய்யே என்று கூப்பிடுவாள் .

என் ஆச்சி முத்தம்மா நல்ல சிவலை. நாலாம் வகுப்பு வரை படித்தவ. ஜாதகம் பார்ப்பாள் . அதை அம்மாச்சியிடம் இருந்து கற்றவ. சீட்டு பிடிப்பதில் கெட்டிக்காரி. ஆச்சியின் காதில் பெரும் இரு தங்கத் தோட்டு குண்டலங்கள் ஊஞ்சல் போல் தொங்கும். அவள் மூக்கில் வைர மூக்குத்தி வேறு. பதினாறு வயதில் என் அப்புவை திருமணம் செய்தவ. ஒரு கலியாண வீட்டில் என் ஆச்சியை என் அப்பு கண்டு அவவின் அழகிலும், நிறத்திலும், சிரிப்பிலும் மயங்கி ஆச்சியின் பெற்றோரிடன் பெண் கேட்டு போனவர் என் அப்பு. தூரத்து சொந்தக்காரனும், சொத்துக்காரனும் என்பதால் என் அப்புவுக்கு அவர்கள் தங்கள் மகளைக் கொடுக்கத் தயங்கவில்லை. அதோடு அப்புவின் பெரியப்பாவின், மருமகனின், தம்பியின் மகள் என் ஆச்சி. ஊரிலை திருமணங்கள் எல்லாம் சுற்றி சுற்றி சுப்பரின் கொல்லைக்குள் தான் நடக்கும் . ஆச்சி ஒரு போதும் அப்புவை எதிர்த்துப் பேசியது இல்லை. சமையல் கூட அவரை கேட்டுத் தான் செய்வாள். அவர் சாப்பிட்ட பின் தான் சாப்பிபடுவாள். அது மட்டுமல்ல ஆச்சி ஒவ்வொரு சனிக்கிழமையும் அப்புவுக்கு தலையில் நல்லெண்ணை வைத்து முதுகிலும் பூசி அடி வளவிலை கிடாரத்திலை சுடு தண்ணீர் வைத்து குளிப்பாட்டி விடுவாள். பகலுக்கு முத்தனிடம் கூறு பொட்ட கிடாய் இறைச்சி கொழுப்பும் இரலுடன் வாங்கி ஊர் அரசி சோறுடனும் இரசம், கத்தரிக்காய் கறியோடு சமைத்து கொடுப்பாள். அந்த சனிக்கிழமையை நான் எதிர் பார்த்து இருப்பன். அவளுக்கு வீட்டுக்கு உதவிக்கு ஒருவரும் இல்லை ஆச்சிக்கு பல் விழவில்லை. கூனல் இல்லை.

கழுத்தில் எப்போதும் தாலிக் கொடியும் கையில் இரண்டு சோடித் தங்க காப்புகள் இருக்கும். அவளும் கொண்டை வைத்திருந்தாள். அவளுக்கு நான் ஒரே ஒரு மகன் . அனலைதீவுவாசிகள் நீண்ட ஆயுள் உடையவர்கள். இதற்குக் காரணம் அசுத்தப்படாத சுற்றாடலில் வாழ்ந்ததினால் மட்டுமன்றி கடினமான விவசாயம் செய்த உழைப்பினால் ஆரோக்கியமான உடல் நலம் கொண்டவர்கள் அவர்கள், கவலையற்ற தன்னம்பிக்கையுள்ள வாழ்க்கையும் ஒரு காரணமாகலாம். அதோடு கூட அங்குள்ள மூலிகை வகைகளும் ஒரு காரணமாகயிருக்கலாம். இத்தீவிற்கு எக்காலத்தில் மக்கள் வந்து குடியேறினார்கள் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனால் மற்றைய தீவுகளுடன் தொடர்பு இருந்தபடியால் நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு வழியாக மக்கள் வந்து குடியேறியிருக்கலாம் என்பது ஒரு ஊகமாகும். இருபிட்டிக்கும் அனலைதீவுக்கும் இடையே உள்ள கடல் வரண்டு தரையாகக் காட்சியளித்த காலங்களில் மேய்ச்சலுக்கு தமது கால்நடைகளை அனலைதீவிற்கு அனுப்பி வந்தனர் இறுப்பிட்டி மக்கள். பின்னர் அக்கால்நடைகளின் கொம்புகளிலும், கால்களிலும் உள்ள மண்ணின் தரத்தைக் கண்டு வியந்து, மக்கள் ஏழுமலை நாச்சியார் கோயிலடியில் குடியேறியிருக்கலாம். இன்றும் அனலைதீவு மக்களுக்கும் இறுப்பிட்டி மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு. அப்படி தமிழ் நாட்டில் உள்ள இராமநாதபுரத்தில் இருந்து வந்து குடியேறினவர்கள் எனது அப்புவின் மூதாதையர்.

அப்புவின் முன்னோர் ஒரு காலத்தில் இராமநாதபுரத்தில் இருந்து வந்து அனலைத் தீவில் குடியேறிய இந்து சமயவாதிகள் .

என் அப்புவின் தந்தை சுப்பையா நூற்றி மூன்று வருடங்கள் வரை வாழ்ந்தவர்.

அப்பு ஆசை பட்டப்படி நான் அரசில் என்ஜினியராக கொழும்பில் நான் வேலை செய்த காலத்தில் , 1983 ஆண்டில் நடந்த இனக் கலவரத்தின் பின் புலம் பெயர்ந்து கனடா சென்றேன் அப்புவுக்கும் ஆச்சிக்கும் நான் கனடா போனது விருப்பம் இல்லை . ஆச்சி தன் தம்பி மகள் செல்வியை எனக்குச் செய்து வைக்க திட்டம் போட்டிருந்தாள். சொத்து வெளியில் போகக் கூடாது என்பதும் , சாதி சனம் பற்றி விசாரிக்கத் தேவை இல்லை என்பன முக்கிய காரணங்கள். அவர்களின் ஆசையைத் தீர்க்காமல் நான் கனடாவுக்குப் புலம் பெயர்ந்து விட்டேன் அங்கு எனக்கு நல்ல உத்தியோகம். நல்ல சம்பளம். விலை உயர்ந்த இடத்தில் சொந்தத்தில் வீடு. கார் . என் ஊரில் உள்ள அப்புவின் பூர்வீக நூறு வருட நாற்சார வீட்டைத் திருத்தி பெரிய மாடி வீடாக கட்டஅப்புவுக்கும் நான் காசும் கடிதமும் அனுப்பியபோது எனக்கு ஒரு கடிதத்தோடு காசு திரும்பி வந்து விட்டது.

“விசர்க் கதை எழுதாதையடா நானும் உன் கொம்மாவும் உயிரோடு இருக்கும் மட்டும் இந்த வீட்டிலை உன்னை கை வைக்க விட மாட்டேன்” என்று ஊர் வைத்திலிங்கம் வாத்தியைக் கொண்டு என் கடிதத்துக்குப் பதில் போட்டார். எனக்குத் தெரியும் என் அப்புவின் பிடிவாதக் குணம் . நான் என் திட்டத்தை கை விட்டேன்

என்னைக் கனடாவிலிருந்து திரும்பி வந்து கெதியிலை செல்வியை திருமணம் செய்து தங்களுக்கு ஒரு பேரனையோ பேத்தியையோ பெற்றுத் தரும் படி கடிதத்தில் எழுதியிருந்தார்.

நான் கனடாவில் உள்ள என் ஊர்க்காரர்களோடு பழகுவதைத் தவிர்த்தேன் காரணம் அவர்கள் அப்புவுக்கு நான் கனடாவில் என்னோடு வேலை செய்த கத்தோலிக்க வெள்ளைக்காரி ஒருத்தியைக் காதலித்து திருமணம் செய்ததாக எழுதிப் போடுவார்கள் என்ற பயம் வேறு.

என் மனைவி சில்வியாவுக்கு அப்புவின் கடிதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னேன் . அவள் அதைக் கேட்டு " டார்லிங் செல்லா நானும் நீங்களும் உங்கள் ஊருக்குப் போய் ஏன் பிரச்சனையை விலைக்கு வாங்குவான் உங்கள் அப்புவும் ஆச்சியும் நீங்கள் ஒரு கத்தோலிக்க வெள்ளைக் காரச்சியை தங்களுக்கு தெரியாமல் திருமணம் செய்தது தெரியாமல் இருக்கட்டும். அப்போ தான் அவர்கள் இன்னும் பல வருடங்கள் வாழ்வார்கள்" என்றாள்.

அந்த சமயம் வந்த என் மகள் ஜெசிந்தா "டடி எனக்கு ஸ்கூல் லீவு விட்டாச்சு. எப்போது உங்கள் ஊருக்குப் போய் உங்கள் டடியையும் மம்மியையும் பார்ப்பது. ஐ லவ் டு சீ மை கிராண்ட் பேரண்டஸ் *(I love to see my grandparents)* "? என்று கேட்டாள்.

என்னால் அவளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

*****

. .